மலேசிய பல்லின மக்களின்

வாழ்வியல் நெறி

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (பிஎச்.டி.,)

பட்டத்திற்காகப் பகுதி நிறைவாக அளிக்கப் பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

அ. குப்புசாமி

பதிவு எண்-1293/2015

நெறியாளர்

முனைவர். கரு. முருகன்,

தமிழ் உயராய்வு மையம்,

தமிழ்த்துறை,

ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி.

தேவகோட்டை.

அழகப்பா பல்கலைக்கழகம்

தேசிய நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத்தர

மதிப்பீட்டில் A+(CGPA:3.64) தகுதி பெற்றது.

காரைக்குடி - 630 003

டிசம்பர் - 2018

அ. குப்புசாமி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி,
தேவகோட்டை – 630 303.

நாள் : 18/12/2018

ஆய்வாளர் உறுதிமொழி

"மலேசிய பல்லின மக்களின் வாழ்வியல் நெறி" என்னும் தலைப்பிலான இவ்வாய்வேடு அழகப்பா பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி தமிழ்த் துறையில் முழு நேர முனைவர் பட்டத்தின் ஒரு பகுதியாக அளிக்கப் பெறும் இவ்வாய்வு என் சொந்த முயற்சியில் உருவானதாகும். இவ்வாய்வேடு இதற்கு முன் எந்தப் பட்டத்திற்கும் சமர்ப்பிக்கப்படவில்லை என உறுதியளிக்கிறேன்.

(அ. குப்புசாமி)
ஆய்வாளர்.

18/12/18

உறுதிக் கையொப்பம்
முனைவர். கரு. முருகன்,
தமிழ் உயராய்வு மையம், தமிழ்த்துறை,
ஸ்ரீ சேவுகன் அண்ணாலை கல்லூரி,
தேவகோட்டை – 630 303.

முனைவர். கரு. முருகன்,

தமிழ் உயராய்வு மையம்,

தமிழ்த்துறை,

ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி,

தேவகோட்டை – 630 303.

நாள் : 18-12-2018

நெறியாளர் சான்றிதழ்

"மலேசிய பல்லின மக்களின் வாழ்வியல் நெறி" என்னும் தலைப்பிலான இவ்வாய்வேடு அழகப்பா பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி தமிழ்த் துறையில் முழு நேர முனைவர் பட்டத்தின் ஒரு பகுதியாக அ. குப்புசாமி தன் ஆய்வுக் காலத்தில் ஆய்வு நிகழ்த்தி வழங்கியதாகும். இவ்வாய்வேடு இதற்கு முன் வேறு எந்தப் பட்டத்திற்கும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் இவ்வாய்வேடு அவர் தம் சொந்த முயற்சியில் உருவானது எனவும் சான்றளிக்கிறேன்.

(முனைவர். கரு. முருகன்)
முனைவர் கரு. முருகன்
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை - 630 303
சிவகங்கை மாவட்டம்

இடம் : தேவகோட்டை

நாள்: 18-12-2018

துறைத்தலைவர்
18-12-2018
தமிழ்த்துறை
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை.

முதல்வர்

PRINCIPAL,
SREE SEVUGAN-ANNAMALAI COLLEGE,
DEVAKOTTAI.

முன்னுரை

உலகில் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே பண்பாடு பழக்கவழக்கங்கள், மரபுகள் என உண்டு. பல்லின மக்கள் கொண்ட மலேசியாவும் இப்பொருண்மையைக் கொண்டுள்ளது. மலேசியாவில் வாழும் பல்லின மக்களில் மலாயர், சீனர், இந்தியர் குறிப்பாகத் தமிழர் வாழ்வியல் நெறிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மலேசியா 13 மாநிலங்கள் கொண்டது. மேற்கு மலேசியாவில் 11 மாநிலங்களும் கிழக்கு மலேசியாவில் (போர்னியோ தீவில்) 2 மாநிலங்களும் உள்ளன. நாட்டின் தலைநகர் கோலாலும்பூர். கிழக்கு மலேசியாவில் கடல் டாயாக்குகள், தரை டாயாக்குகள், கடசான்கள் வாழ்கின்றனர். இவர்கள் (உட்பிரிவுகள் அதிகம்) சிறுபான்மையினராக இருக்கின்றனர்.

மலாயர் நெடுங்காலத்திற்கு முன்பே இந்தோனேசியாவிலிருந்து குடியேறியவர்கள் ஆதலால் இந்தோனேசியர்களின் மொழி, நாகரிகம், பண்பாட்டுக் கூறுகளை சிறு சிறு மாற்றங்களுடன் பின்பற்றுகின்றனர். சீன சமுதாயத்தினர் சீனாவிலிருந்து குடியேறியவர்கள். எனவே அவர்களின் முன்னோர்களைப் பின்பற்றுகின்றனர். தமிழர்களும் தென்னிந்தியாவிலிருந்து குடியேறியவர்கள். தமிழர்கள் தங்களின் முன்னோர்களைப் பின்பற்றி வாழ்கின்றனர். இம்மூவினங்களும் வெவ்வேறான பண்பாட்டுக் கூறுகளையும், மொழி, கலை, கலாச்சாரங்கள், வழிபாடு, நம்பிக்கைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

மலேசியாவின் பெரும்பான்மை இனங்களாகக் காணப்படும் மலாயர், சீனர், இந்தியர் குறிப்பாகத் தமிழர் ஆகியோர் மொழி, நாகரிகம், பண்பாட்டுக் கூறுகள், சடங்குகள், சமயம், வழிபாடு, நம்பிக்கை, விழாக்கள், பண்டிகைகள் முதலியவற்றால் தனித்தன்மையுடன், வேறுபட்டு நின்றாலும் இவர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இயைந்து வாழ்ந்து வருகின்றனர். இவற்றை

எடுத்துரைத்து, மலேசியாவில் வாழும் பல்லின மக்களின் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வுத் தலைப்பு அறிமுகம்

மலேசியாவின் பல்லின மக்களில் பெரும்பான்மையினராக வாழும் மலாயர், சீனர், தமிழர்கள் பற்றியும் அவர்களின் வாழ்வியல் நெறிகளைப் பற்றி அறிதல் பொருட்டுச் செய்யப்படும் இவ்வாய்வின் தலைப்பு **"மலேசிய பல்லின மக்களின் வாழ்வியல் நெறி"** என்பது ஆகும்.

ஆய்வின் நோக்கம்

மலேசியாவில் வாழ்ந்து வரும் மலாயர், தமிழர், சீனர் ஆகிய மூவினங்கள் அவ்வந்த காலகட்டத்தில் மேற்கொண்ட கலை, பண்பாடு, நாகரிகம், வழிபாடும் நம்பிக்கையும், உணவு, உடை, உறைவிடம், தொழில், ஆகியவற்றை அறிந்து கொள்வதோடு தற்காலத்தில் அவர்களிடம் காணப்படும் மாற்றங்களையும் கண்டறிவது ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வு எல்லை

இவ்வாய்வின் எல்லையாக, மலேசியாவின் பெரும்பான்மை இனங்களான மலாயர், சீனர், தமிழர் வாழும் பகுதிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. குறிப்பாகத், தீபகற்ப மலேசியாவின் முக்கிய மாநிலங்களான சிலாங்கூர், பேரா, கிளந்தான், ஜோகூர் ஆகியன இவ்வாய்வின் எல்லைகளாகும்.

கருதுகோள்

இவ்வாய்வின் கருதுகோள் மலேசியாவின் மூவின மக்களாகிய மலாய், தமிழர், சீனர்கள் இவர்களது வாழ்வியல் நெறிகளை ஒப்புநோக்குவது ஆகும். இவற்றின் வழியே மூவினமும் கலந்து ஒரே தேசத்தில் ஒரே ஆளுமையின் கீழ் வாழுகின்றபொழுது இவர்களின் வாழ்வியல் கூறுகளான உணவு, உடை,

கலை, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றில் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கும் நிலைப்பாடு உள்ளது என்பதையும் இவ்வாய்வு கருதுகோளாகக் கொண்டு செய்யப் பெற்றுள்ளது.

முதன்மை ஆதாரங்கள்

ஆய்விற்கு உட்படுத்தப்படும் குறிப்பிட்ட பகுதியில் வாழும் பல்லின மக்களின் வாழ்வியல் குறித்தப் புத்தகங்கள், தகவலாளிகள் வழி திரட்டிய செய்திகள் ஆகியன முதன்மை ஆதாரங்களாகும்.

முன்னோடி ஆய்வுகள்

இவ்வாய்வின் முன்னோடி ஆய்வுகளாகப் பின்வருவன அமைகின்றன. ஜானகிராமன் மாணிக்கம் எழுதிய "மலேசிய இந்தியர்களின் இக்கட்டான நிலை" என்ற நூலும், இவர் எழுதிய "தி மலேசியன் இந்தியன் பர்காட்டன் ஹிஸ்டிரி அப் தி கோலானியல் எரா " என்ற நூலும், இரா. குறிஞ்சி வேந்தன் எழுதிய "மலாயா தமிழர் சரித்திரம்" என்ற நூலும், சுவாமி சத்யானந்தா எழுதிய "மலாயா சரித்திரம்" என்ற நூலும் முன்னோடி ஆய்வுகளாக அமைகின்றன.

துணைமை ஆதாரங்கள்.

மலேசியாவின் பல்லின மக்களைப் பற்றிய கட்டுரைகள், ஏற்கனவே வெளிவந்துள்ள நூல்கள், வரலாற்று ஆய்வேடுகள், இலக்கியங்கள், இணையதளத் தரவுகள், அரசு தகவல் இலாகா மூலம் பெறப்படும் தரவுகள் ஆகியன துணைமைச் சான்றாதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன.

ஆய்வின் அணுகுமுறைகள்

இவ்வாய்வில் களஆய்வு அணுகுமுறையும், விளக்கமுறை அணுகுமுறையும், சமூகவியல் அணுகுமுறையும், சமுதாயவியல் அணுகுமுறையும், வரலாற்று அணுகுமுறையும் கொணடு இவ்வாய்வானது ஆராயப்பட்டுள்ளது.

இயல் பகுப்பு

"மலேசிய பல்லின மக்களின் வாழ்வியல் நெறி" என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை,

1. மலேசியாவின் பல்லின மக்களும் புலம்பெயர்ப்பும்.
2. பல்லின மக்களின் மொழிகளும் கலாச்சாரங்களும்.
3. வழிபாட்டு முறைகளும் விழாக்களும்.
4. மூத்தோர் குல மரபும் நம்பிக்கைகளும்.

என்பனவாகும். இவ்வியல் பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு.

இயல் 1. மலேசியாவின் பல்லின மக்களும் புலம்பெயர்ப்பும்

'மலேசியாவின் பல்லின மக்களும் புலம்பெயர்ப்பும்' என்னும் முதல் இயலானது தீபகற்ப மலேசியாவில் மக்கள் சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே நெகிரிதோசு பழங்குடியினர் வாழ்ந்து வந்ததாகச் சான்றுகள் பகர்கின்றன. அவர்களுக்குப் பின்னர் நெடுங்காலத்திற்கு முன்பே மலாயர் இந்தோனேசியாவிலிருந்து மலேசியாவில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். கி.பி முதலாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து இந்தியர்களும் பதினைந்தாம் நூற்றாண்டில் சீனாவிலிருந்து சீனர்களும் வணிகர்களாகவும் குடியேற்றக் காரர்களாகவும் வந்து இந்நாட்டிலேயே தங்கிவிட்டனர். நாடு விடுதலை அடைவதற்கு முன் ஆட்சி புரிந்த ஆங்கிலேயர் ஆட்சியின் போது இந்தியாவிலிருந்து இலட்சக் கணக்கான இந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்கள் தீபகற்ப மலேசியாவிற்குக் கொண்டு வரப்பட்டு (முன்பு மலாயா என்று அழைக்கப்பட்டது) காடுகளை அழித்து ரப்பர் தோட்டங்கள் ஏற்படுத்த ஆங்கிலேயர்களால் குடியேற்றப்பட்டனர்.

இயல் 2. பல்லின மக்களின் மொழிகளும் கலாச்சாரங்களும்

'பல்லின மக்களின் மொழிகளும் கலாச்சாரங்களும்.' என்னும் இரண்டாவது இயலில் தீபகற்ப மலேசியாவில் பிரதான இனங்களான மலாயர், சீனர், தமிழர்களை மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆகவே இம்மூவினங்களின் மொழியைப் பற்றி முதலில் அறியவிருக்கிறோம். மலாயர்களிடையே பல உட்பிரிவுகள் இருப்பினும் பொதுவாக மலாய் மொழியைப் பயன்படுத்துகின்றனர். மலாய் மொழி பெரும்பாலும் இந்தோனேசிய மொழியைப் போன்றதே. உச்சரிப்பில் சிறிது மாறுபட்டிருக்கும். சீனர்களிடையேயும் பல பிரிவினர் அவரவர் தாய் மொழியைப் பேசினாலும் அனைத்துச் சீனர்களுக்கும் பொதுவான மொழி மாண்டரின். மாண்டரின் கல்வி மொழியாகவும் திகழ்கிறது. மலேசியத் தமிழர்களிடையே பல உட்பிரிவுகள் இருப்பினும் அனைவரும் தவறாமல் தமிழ் மொழியையே பேசுகின்றனர். மூவின மக்கள் பேசும் மொழிக்கேற்ப நாட்டில் மூன்று மொழிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

பல இன மக்கள் வாழும் நாடு ஆதலால் பல வகையான கலாச்சாரத்தைக் கொண்டிருப்பதில் வியப்பில்லை. ஒவ்வொரு இனத்தவரும் அவரவர் கலையைப் பேணிக்காத்து வந்தாலும் தற்கால வாழ்வுச் சூழ்நிலைக்கேற்ப மாறிக் கொண்டிருக்கின்றனர் என்பதை மறுக்க முடியாது.

இயல் 3. வழிபாட்டு முறைகளும் விழாக்களும்

வழிபாட்டு முறைகளும் விழாக்களும் என்னும் மூன்றாவது இயல் மலேசியாவின் அதிகாரப்பூர்வமான சமயம் இசுலாம் என அரசால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. மலாயர் அனைவரும் சட்டப்படி இசுலாமியர் ஆவர். இருப்பினும் மற்ற இனத்தவர்கள் அவரவர் சமயங்களைச் சுதந்திரமாகப் பின்பற்ற சட்டம் அனுமதிக்கிறது. ஏறத்தாழ நாட்டின் மக்கள் தொகையில் 61 விழுக்காட்டினர் இசுலாம் சமயத்தைக் கடைப்பிடிக்கின்றனர். மலேசிய நாட்டில் பொதுவாக சமயத்தை அடிப்படையாகக் கொண்டு பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. எல்லா இனத்தைச் சேர்ந்த இசுலாம் சமயத்தவர்கள் நோன்புப் பெருநாளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். சீனர்கள் புத்த சமயம், தாவோ சமயம் மற்றும் வைதீக சமயங்களைப் பின்பற்றுகின்றனர். சீனர்கள் அனைவரும் சீனப் புத்தாண்டை மிக விமரிசையாகக்

கொண்டாடுகின்றனர்.இந்து தமிழர்கள் கொண்டாடும் முக்கியப் பண்டிகை தீபாவளிப் பெருநாள் ஆகும்.

இயல் 4. மூத்தோர் குல மரபும் நம்பிக்கைகளும்

மூத்தோர் குல மரபும் நம்பிக்கைகளும் என்னும் நான்காவது இயல் நாட்டின் மூவினங்களின் மூத்தோர் பின்பற்றிய மரபுகளை இளையோர் பின்பற்றி வருகின்றனர். எல்லா இனங்களிலும் சிலர் பழையதை மறந்து புதுமையை விரும்புவது இயல்பேயாகும். மலாய்க்காரர்கள் வீட்டுக்குள் நுழையும்போதும் பள்ளிவாசல் போன்ற புனித இடங்களுக்குள் செல்லும்போதும் காலணியைக் கழற்றி விட்டு உள்ளே செல்வர். சீனர்கள் வணக்கம் கூறும் போது ஜப்பானியர்களைப் போல சற்று குனிந்து கூறுவர். ஆண்கள் கைகுலுக்கிக் கொள்வார்கள். பெண்களுடன் கை குலுக்குவதும் உண்டு. தமிழர்களின் பழக்க வழக்கங்கள் இந்நவீன காலத்திலும் விட்டுவிடாமல் பின்பற்றப்பட்டு வருகின்றன. இரு கைகளையும் சேர்த்து வணக்கம் கூறப்படுகிறது. ஆண்களிடையே கைகுலுக்குதல் வழக்கத்தில் உண்டு. பெண்களோடு கை குலுக்குதல் மிகக் குறைவு.

இவ்வாய்வேட்டின் பக்க மிகுதியைக் கருத்தில் கொண்டு, குறைக்கும் நோக்கில், கருத்துகள் சில இடங்களில் சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆய்வு முடிவுரையில் நான்கு இயல்கள் வழியாகப் பெறப்பட்ட முடிவுகள் தொகுத்து உரைக்கப்பெற்றுள்ளன.

ஆய்விற்கு கொள்ளப்பட்ட முதன்மை ஆதாரங்களும் துணை ஆதாரங்களும் துணைநூற்பட்டியலில் இடம் பெற்றுள்ளன. பின்னிணைப்பில் தகவலாளிகளின் கொடுக்கப்பட்டுள்ளன.

இயல். 1

மலேசியாவின் மக்களும், புலம் பெயர்ப்பும்

உலக நாடுகளில் வாழும் ஒவ்வோர் இனத்திற்கும் தனித்தனியே பண்பாடு, பழக்க வழக்கங்கள், மரபுகள் உண்டு. மலேசியா மக்களும் இப்பொருண்மையைக் கொண்டுள்ளனர். அவர்களில் மலாயர், சீனர், இந்தியர் ஆகிய மூன்று இனத்தோரும் கலந்து வாழும் நாடாக மலேசியா விளங்குகிறது. இந்நாட்டில் மூன்று இனத்தோர் வாழ்ந்துவரும் அவர்களின் பரவலை இவ்வியல் எடுத்துரைக்கிறது.

மலேசியா நாட்டின் எல்லை

மலேசியா, ஆசியா கண்டத்தின் தென்கிழக்கில் அமைந்துள்ளது. மலேசியா மேற்கு மலேசியா, கிழக்கு மலேசியா என்ற வகைப்பாட்டினை உடையதாகும்.

மேற்கு மலேசியா

மேற்கு மலேசியா அல்லது தீபகற்ப மலேசியா, வடக்கே தாய்லாந்து, தெற்கே சிங்கப்பூர், கிழக்கே தென் சீனக்கடல், மேற்கே மலாக்கா நீரிணைக்கு இடையில் மலேசியா அமைந்திருக்கிறது. மேற்கு மலேசியாவின் மூன்று பக்கங்களிலும் நீராலும் வடக்கில் மட்டும் கிரா பூசந்தி எனும் ஓர் ஒடுங்கிய நிலப்பாகத்தினாலும் சூழப்பட்டுள்ளது. மூன்று பக்கங்களும் கடல் சூழப்பட்டிருப்பதால் இங்கு வந்த அந்நியர்கள் எல்லாரும் கடல் மார்க்கமாக வர நேர்ந்தது.

கிழக்கு மலேசியா

கிழக்கு மலேசியா அல்லது போர்னியோ மலேசியாவிலுள்ள சாபா, சரவாக் மாநிலங்கள் மட்டும் போர்னியோ தீவில் அமைந்துள்ளன. மலேசியா பதின்மூன்று மாநிலங்களையும் மூன்று கூட்டரசுப் பிரதேசங்களும் கொண்டது. மலேசியாவின் பரப்பளவு 330,435 சதுர கிலோ மீட்டர் ஆகும். மலேசியா மலை

வளம், மழை வளம், கனி வளம், மண் வளமும் மிக்க நாடாகத் திகழ்கின்றது. எல்லைகளின் அடிப்படையாக மலேசியா நாட்டினை இயற்கை வளத்தின் அடிப்படையில் மலேசியாவைப் பகுக்க முடிகின்றது.

இயற்கைப் பகுப்பின் அடிப்படையில் மலேசியா

மலேசியா இயற்கை வளம் மிகுந்த நாடு. மலேசியாவை மூன்று இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு

1. மேற்குக் கரைச் சமவெளி,
2. கிழக்குக் கரைச் சமவெளி,
3. மத்திய மலைப்பிரதேசம்

என்பன மலேசியாவின் இயற்கை வளம் கருதிய பகுப்புகளாகும். அவை பற்றிய குறிப்புகள் பின்வருமாறு,

மேற்குக் கரைச் சமவெளி

மேற்குக் கரைச் சமவெளி சற்று அகலமானது. இங்கிருந்து பல நதிகள் பாய்கின்றன. இப்பகுதி நீர் வளமும் நிலவளமும் மிகுந்து காணப்படுகின்றது. இங்கு மக்கள் நெருக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. இப்பகுதிகளில் ரப்பர், எண்ணெய்ப்பனைத் தோட்டங்கள், ஈயச் சுரங்கங்கள், தென்னந்தோப்புகள், கொக்கோ தோட்டங்கள் மற்றும் அன்னாசித் தோட்டங்கள் நிறைந்துள்ளன.

கிழக்குக்கரைச் சமவெளி

கிழக்குக் கரைச் சமவெளி சற்று குறுகலானது. இருப்பினும் நதிகள் பாயும் பகுதிகள் செழிப்பானவையாகும். இப்பகுதியில் மக்கள் தொகை சற்றுக் குறைவு. நெல் வயல்கள், ரப்பர் தோட்டங்கள் உள்ளன. ஈயச் சுரங்கங்கள் குறைவாகவே உள்ளன.

மத்திய மலைப் பிரதேசம்

மலேசியாவின் மத்திய பகுதி வடக்கிலிருந்து தெற்கு வரை மலைத்தொடர்கள் அமைந்த காட்டுப் பிரதேசமாகும். காடுகளில் யானை, புலி,

காட்டெருமை, மான், மரை, கரடி, குரங்கு, காட்டுப் பன்றி, செந்நாய் முதலிய மிருகங்கள் வாழ்கின்றன. பலவகை பறவைகள், கண்ணைக் கவரும் வண்ணத்துப் பூச்சிகள், விதவிதமான பாம்புகள், பல்வகைப் பூச்சிகள் இங்கே காணப்படுகின்றன. ரப்பர், எண்ணெய்ப்பனை, நெல், கொக்கோ, அன்னாசி முதலியன விளைபொருள்களாகும். ஈயம், பாக்சைட், சிறிதளவு இரும்பு முதலிய கனிப் பொருளும் கிடைக்கின்றன. முக்கியத் துறைமுகங்களாகப் பினாங்கும் கோலகிள்ளானும் விளங்குகின்றன. மலேசியாவிலுள்ள நதிகள் ஆழமற்றதாக இருப்பதால் கப்பல்கள் போக்குவரத்து இல்லை.

மலேசியாவின் மக்கள் தொகை

மலேசியா மக்கள் தொகை நெருக்கமுடைய நாடாகும். அதன் "தற்போதைய மக்கள் தொகை 30,753,476"[1] என்ற அளவினதாகும். தீபகற்ப மலேசியாவில் மலாயர், சீனர், இந்தியர் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். கிழக்கு மலேசியாவில் கடல் டாயாக்குகள். தரை டாயாக்குகள், கடசான்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். நாட்டின் தலைநகரம் கோலாலும்பூர் ஆகும்.

மலேசியாவில் வாழும் மக்கள் இனத்தவர்கள்

மலேசியாவில் மலாயர், சீனர், இந்தியர் மூன்று இனத்தவரும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களைத்தவிர பூர்வீகக் குடியினரும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களைப் பற்றிய குறிப்புகள் பின்வருமாறு.

நீகிரோவர்கள்

"முதலில் தென்கிழக்காசியாவிலும் மலாயாவிலும் வசித்தவர்கள் நீகிரோவர்களாவர். இவர்களுக்குச் சீமாங்கியர் அல்லது பங்கனியர் என்னும் பெயர்களும் வழங்குகின்றன. இவர்கள் இந்தியாவிலுள்ள ஆதிக்குடிகளின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். செமாங்கியர் மற்றொரு பூர்வ குடிகளோடு கலப்பு

[1]. www. Population of Malaysia இணையதளத்தின் கணக்கீட்டின் படியானது.

மணம் செய்திருக்கிறார்கள். சக்கேயரிடமிருந்து ஊதுகுழல் ஆயுதத்தை அறிந்திருக்கிறார்கள்."[2] என்ற குறிப்பின் வழியாக மலேசியாவின் பூர்வீகக் குடிகள் பற்றி அறிந்து கொள்ளமுடிகின்றது.

மானிட வர்க்க ஆராய்ச்சிக்காரர்கள் மேற்சுட்டிய பூர்வீகக் குடிகளை பொலிநீஷியர் என்றும் கூறுவர். "இவர்களுடைய வம்சத்தார் இப்போது பேரா, பஹாங், கிளந்தான், மடகாஸ்கார், பிலப்பைன், வட ஆஸ்திரேலியா, அந்தமான் தீவுகள் முதலிய இடங்களில் காணப்படுகிறார்கள்."[3] என்ற குறிப்பும் இதனை உறுதி செய்யும். இவர்கள் மலேசியாவில் சுமார் 2,000 என்ற அளவில் இன்று வசித்துவருகின்றனர். இவர்கள் மலைகளிலும் காடுகளிலும் வாழ்கின்றனர்.

பரண்கள்மீது இலைகள் மூடப்பட்டு இலைகளுக்குக் கீழே கம்புகள் அடுக்கி அவற்றின் மேல் உறங்குகின்றனர். இவர்களுக்கென நிரந்தரமான வீடுகள் கிடையாது. இரவில் தீ மூட்டிக் கொள்வார்கள். போக்குவரத்துக்காகப் படகு அல்லது வேறெந்த வாகனங்களைப் பயன்படுத்துவதில்லை. காடுகளில் கிடைக்கும் காய், கனி, கிழங்கு, பறவைகள், மிருகங்களை உணவாகக் கொள்கின்றனர். கற்களைச் செதுக்கியும் தேய்த்தும் ஆயுதங்களைச் செய்து கொள்கின்றனர். இவர்களின் பிரதான ஆயுதம் வில்லும் அம்புமாகும். உணவுகளைச் சேமித்து வைப்பதில்லை. கூட்டங் கூட்டமாக நாடோடிகளாக வாழ்வார்கள். பெண்கள் கற்பில் சிறந்தவர்கள். இவர்கள் இயற்கையின் ஆற்றல்களாக விளங்கும் இடியையும் மின்னலையும் வணங்குவர். இவற்றிற்கு அஞ்சி சமாதானப்படுத்தத் தங்கள் கெண்டைக்காலின் முன்புறத்திலிருந்து இரத்தம் எடுக்கிற நிலையில் ஒரு சடங்கும் இவர்களிடம் நிலவி வருகிறது. இவர்களுள் வட்டத் தலையும் நீண்ட தலையும் உடைய இரண்டு பிரிவினர்கள் உண்டு.

---

[2]. சுவாமி சத்தியானந்தா .ஜெ - மலாயா சரித்திரம், ப.17

[3]. மேலது, ப.17

சக்கேயர்

மலேசியாவில் சக்கேயர் என்ற மற்றொரு பூர்வீகக் குடியினரும் வாழ்ந்து வருகின்றனர். "சக்கேயர் அல்லது செனாயர் என்பவர்கள் யூனானிலிருந்தும் மலைப்பிரதேசங்களிலிருந்தும் வந்து மலாயாவில் குடியேறியவர்கள் மங்கோலிய-இந்தோநேசிய வம்சத்தவர்கள்; மங்கலான மஞ்சள் நிறமுடையவர்கள்."[4] என்ற குறிப்பு வழியாக, சக்கேயர் என்ற இனத்தாரைப் பற்றி அறிந்து கொள்ளமுடிகின்றது. "சக்கேயர்கள் பேசும் மொழி இந்தோசீனாவைச் சேர்ந்த 'மொன் அன்னம்' மொழியாகும். சீமாங்கியரைவிட அழகிலும் உயரத்திலும் நிறத்திலும் சிறந்தவர்கள்"[5] என்ற குறிப்பும் இங்கு அறியத்தக்கது.

இவர்களுக்குத் தலை நீண்டும் முடி சுருண்டும் காணப்படும். இவர்கள் தங்கள் உடலில் பச்சை குத்திக் கொள்வார்கள். இவர்களின் முக்கிய ஆயுதம் நீண்ட மூங்கிலால் ஆன ஊதுகுழல் ஆகும். இவர்கள் ஊசி போன்ற மரக்குச்சியில் விஷம் தடவி ஊதுகுழலின் நுனியில் வைத்து, மூச்சை இழுத்து ஊதுகுழலின் அடியில் வாயால் ஊதி மிருகங்களையும் பறவைகளையும் தாக்கிக் கொல்வர். இவர்கள் மரத்தூண்கள் மீது கம்புகளை அடுக்கி மேலே ஓலைகளைப் போட்டுத் தங்கள் வீடுகளாக்கிக் கொள்வார்கள். இவர்கள் பெரும்பாலும் நதிக் கரையோரங்களில் வசிப்பார்கள். இவர்கள் ஏறக்குறைய 20,000 என்ற அளவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பேரா, பகாங், சிலாங்கூர் மாநிலங்களில் வசிக்கிறார்கள். மேட்டுப் பகுதிகளில் நெற்பயிரும், சமவெளிகளில் கரும்பு, வாழை, சோளம், புகையிலை பயிரிடுகிறார்கள். இவர்கள் கூட்டங் கூட்டமாக வாழும் பழக்கமுடையவர்கள். ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைவன் ஒருவன் உண்டு. இவர்கள் வாழுமிடத்தில் உணவு முடிந்துவிட்டால் வேறு இடங்களுக்கு மாறிச் செல்வார்கள். சக்கேயர் பேய்களுக்கும், பலவித நோய்த் தேவதைகளுக்கும் பயந்தவர்கள். அவற்றை

---

[4]. ந. வீரப்பன், மலாய தமிழர்கள், ப.18

[5]. மேலது, ப.19

நெருங்கவிடாமல் தடுப்பதற்கு வீட்டின் வெளிப்புறத்தில் காய்ந்த தேன்கூட்டையும் துவாரங்களிட்ட தேங்காய் ஓடுகளையும் கட்டித் தொங்கவிடுவார்கள். இவர்கள் இறந்தவர்களின் பிரேதக் குழிகளின் மேல் உணவும் ஆயுதங்களும் வைப்பார்கள். இப்படிச் செய்வதால் இறந்தவர்களின் ஆவி இறந்தவர்கள் மேல் உலகைச் சீக்கிரம் அடைவார்கள் என்பது சக்கேயர்களின் நம்பிக்கையாகும். இவர்கள் மந்திரத்தில் நம்பிக்கை மிகுந்தவர்கள். மாந்திரிகன் இறக்கும் தருவாயில் பழகிய புலி ஒன்று வந்து அவன் உடலைக் கிழித்து அவனுடைய உயிரை விடுவிக்கும் என்ற நம்பிக்கை சக்கேயர்களுக்கு உண்டு. கிராமங்களையடுத்து இருக்கும் சக்கேயர்கள் படிப்படியாக நாகரிகம் பெற்று வருகின்றனர்.

ஆதிமலாயர்

"மூன்றாவதாக ஜக்கூனியர் அல்லது ஆதிமலாயர். இவர்கள் யூனானின் வடமேற்கு மலைப் பிதேசத்திலிருந்து வந்தவர்கள். மங்கோலிய - இந்தோநேஷியா வம்சத்தைச் சேர்ந்தவர்கள். அநேகர் கடலில் படகு வீடுகளில் வசிக்கின்றனர். முன்னாட்களில் இந்திய, சீன வணிகர்கள் ஜக்கூனியர்கள் உதவியால் காடுகளிலுள்ள கற்பூரம், சாம்பிராணி, பிசின்கள் முதலிய பொருள்களைப் பெற்றார்கள்."[6] என்ற குறிப்பு வழியாக இவர்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

இவர்களது வகுப்பார் நகிரி செம்பிலான், தென் பகாங், ஜொகூர், சுமத்திரா போன்ற இடங்களில் காணப்படுகிறார்கள். கல், கட்டை போன்ற ஜடப்பொருள்களிலும் தேவதைகள் இருப்பதாக நம்புவார்கள் இந்து தெய்வங்களையும் நம்புகின்றனர். ஜக்கூனியர் உடலில் இந்தியர்களுடைய உடற் கூறுகளின் அமைப்பும் பொலினீஷியரது உடற் கூறுகளின் அமைப்பும் காணப்படுகின்றன. இதனால் முன் கூறப்பட்ட இரு இனத்தவர்களுக்கும் இடையே பண்டைக் காலத்தில் கலப்பு ஏற்பட்டிருக்க வேண்டுமென

---

[6]. சுவாமி சத்தியானந்தா, மலாயா சரித்திரம், ப.24

ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஜக்கூனியர்களில் அநேகருக்கு உருண்டைத் தலையும், மிருதுவான முடியும் உண்டு. இவர்கள் ஒருவிதமான கொச்சை மலாய் மொழி பேசுகின்றனர். ஆற்றங்கரையோரங்களிலும் மறைவான கடற்கரையோரங்களிலும் வசிக்கின்றனர். சிறிய அளவில் விவசாயம், மீன் பிடித்தல், வேட்டையாடுதல் ஆகியவை இவர்களது தொழிலாகும். இவர்களுக்கும் தலைவர்கள் உண்டு. இவர்களது வீடுகள் குத்துக் கட்டைகளின் மேல் கட்டப்பட்டு கூரைகள் புல்லாலும் அத்தாப்பாலும் (ஒருவகை ஓலை) மூடப்பட்டிருக்கும். முற்காலத்தில் இவர்களில் பெரும்பாலோர் கடற் கொள்ளையர்களாக இருந்தனர். இப்பொழுது அவர்களுக்கு 'ஓராங் லவுட்' (ஓராங் = ஆள், லாவுட் = கடல், கடல் மனிதர்) என்னும் பெயர் வழங்கப்படுகிறது. ஏனெனில் அநேகர் கடலில் படகு வீடுகளில் வசிக்கின்றனர். முன்னாட்களில் இந்திய, சீன வணிகர்கள் ஜக்கூனியர்கள் உதவியால் காடுகளிலுள்ள கற்பூரம், சாம்பிராணி, பிசின்கள் முதலிய பொருள்களைப் பெற்றார்கள்.

மலாயர்கள்

மலேசியாவில் தற்பொழுது அதிகமாக வாழும் இனத்தவர் "மலாயர்கள் ஆவர். மலாயர்களும் ஜக்கூனியர்களும் ஒரே பாரம்பரியத்தவர்கள். இவர்கள் யூனானிலிருந்து கி.மு 2000 ஆண்டளவில் வந்தவர்கள் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். முதலில் இந்தோ சீனாவின் மெகொங், மீனாம் நதிகளின் பள்ளத்தாக்குகளிலும், இந்தோ சீனாவிலும் குடியேறினர். பின்னர் கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் சுமத்தரா, ஜாவா முதலிய இடங்களை அடைந்தனர். அவ்விடங்களிலிருந்து ஒரு பகுதியினர் மலாய் (மலை நாடு) நாட்டில் வந்து குடியேறினார்கள்."[7] என்கிறார் ஜானகிராமன் மாணிக்கம்.

[7] . ஜானகிராமன் மாணிக்கம், மலேசிய இந்தியர்களின் இக்கட்டான நிலை, ப. 159.

மலாயர்கள் பயன்படுத்தி வந்த நாற்கோணமான வாய்ச்சிகளும் (ஒருவகை பாத்திரம்), கயிற்றுக் கோடுகளினால் சித்தரிக்கப்பட்ட பானைகளும் தென் சீனா, இந்தோ சீனா, சுமத்திரா, ஜாவா ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மலாயர்கள் நெல், வாழை, தென்னை, சோளம், கரும்பு, புகையிலை, வெற்றிலை முதலியவற்றைப் பயிரிடக் கற்றிருந்தனர். இவர்கள் நெல், சோளம் ஆகியவற்றிலிருந்து ஒரு வகைப் பானத்தைக் காய்ச்சினார்கள். படகு செலுத்தவும், மீன் பிடிக்கவும், வேட்டையாடவும் இவர்களுக்குத் தெரிந்திருந்தது. மூங்கில் கழிகளாலான பொறிகளைக் கொண்டு மீன் பிடித்தார்கள். ஜக்கூனியர்கள் போல குத்துக் கட்டைகளின்மீது வீடுகள் கட்டி வாழ்ந்தனர். தற்காலத்திலும் கிராமத்து மலாயர்கள் வீடுகள் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. இவர்கள் வீடுகளின் தளத்துக்கும் பக்க சுவர்களுக்கும் மூங்கிலை உபயோகித்தனர். மேலும் இவர்கள் மூங்கிலைக் கட்டும் வேலைகளுக்குப் பிரம்பு நார் பயன்படுத்தினர். இவர்கள் பன்றி, எருமை, ஆடு, மாடு முதலிய மிருகங்களை வளர்த்தனர். இவர்கள் மரவுரிகளாலான உடை அணிந்தனர். இவர்கள் ஆயிரம் வரையிலான எண்மானம் அறிந்திருந்தனர். இவர்கள் நட்சத்திரங்கள் பற்றிய அறிவு ஓரளவு அறிந்திருந்தனர். மலாயர்களது மண்டை ஓடுகள் செமாங்கியர், சக்காயர், ஜக்கூனியர்களின் மண்டை ஓட்டைக் காட்டிலும் உருவத்தில் பெரியது ஆகும்.

தங்களுக்கு முன்னிருந்த செமாங்கியர், சக்கேயருடனும், பின்னர் வந்த இந்தியர், சீனர், தாய்லாந்துக்காரர்கள், பூகிஸ்காரர்கள், அராபியர், ஐரோப்பியர் ஆகியோருடனும் இரத்தக்கலப்பு ஏற்படுத்திக் கொண்டார்கள். இதனாலேயே, மலாயர்களில் பலருக்கு உடல் உறுப்புத் தோற்றங்கள் பலவிதமாக வாய்த்திருக்கின்றன. இந்தியர், சீனர், ஜாவானியர், பூகிஷ்காரர்கள், அராபியர், ஐரோப்பியர் ஆகியோர்களிடமிருந்தே நாகரிக முறைகளைக் கற்றுக் கொண்டனர். மலாயர்கள் இந்தியர்களிடமிருந்தே விவசாயம், வணிகம், நாணயப் புழக்கம், இரும்பு, வெள்ளி, தங்கம் இவற்றின் பயன்பாடு, ஆடை நெய்தல், வீடுகள் கட்டுதல், படகுகள் கட்டுதல், அரசியல் முறைகள் முதலியவற்றைத் தெரிந்து கொண்டார்கள். மலாயர்கள் பேசும் மொழியில்

அந்நிய சொற்கள் பல கடன் வாங்கியவையே. கடந்த சுமார் 600 ஆண்டுகளாக அராபியரிடமிருந்து இசுலாமிய சமயத்தையும் ஜாவி (உருது மொழி எழுத்துகள்) எழுத்துக்களையும் பெற்றார்கள். ஆடவரும் பெண்டிரும் பாரம்பரிய சம்பிரதாயம் உடையவர்கள். மலாயர்கள் கிராம வாழ்க்கையை விரும்புகின்றனர்.

மலாய்க்காரர்களின் புலம்பெயர்வு

மலாய் என்பதன் பொருள்

மலாய் எனப்படும் இனம் தனி ஒரு பகுதியிலிருந்து மலேசியாவுக்கு வந்து குடியேறிய மனிதர்களைக் கொண்டதன்றது.இவ்வினம், இந்தோநேசியர், பூகிஸ், பயனீஸ், ஜாவானியர், ஆச்சீனியர், மினாங் முதலிய இனங்களை உள்ளடக்கிய கலப்பு இனமாகும். இன்றும் பல மலாய் இனத்தவர்கள் தாய்லாந்து, பிலிப்பின்ஸ், சிங்கப்பூர், இந்தோனேசியா, மியான்மார், ஸ்ரீலங்கா, மடகாஸ்கார், ஓசியானியா ஆகிய நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். "மலாய் இனத்தவர் இந்தோனேசியாவில் பரவி, அங்கிருந்து மலாயாவில் வந்து குடியமர்ந்தனர்."[8] என்று ஜே.எம்.குல்லிக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

"மேற்கு சமத்திராவில் மினங் கபாவ் என்ற மலாய் இன மக்கள் ஐம்பது இலட்சத்துக்குமேல் வாழ்கிறார்கள். சுமத்திராவின் கால் பகுதி நாடு பாடாங் (மேட்டுப் பூமி) பகுதி. மலை நாட்டு மக்களான இவர்கள் பாண்டிய மீனவக் கலப்பினமான சம்பிரிங் ஆவர். கிழக்கு முக சுமத்திராவில் 'மலையூர்' அல்லது ஜம்பி என்ற இடம் உண்டு. மலாய் இனத் தோற்றம் என்ற நூலில் சுவட்டன்ஹாம் என்ற ஆங்கிலேயர், ஓரளவு இதனைக் கூறியிருப்பது நம்பத்தக்கதாக இருக்கிறது. சுமத்திரா பலம்பாங் மாநிலத்தில் 'சிறுத்தாங் மகா மேரு' என்ற மலையிலிருந்து ஓடும் மலாய் நதியின் பெயரில் மலை அல்லது மலாய் என்ற சொல் பிறந்தது. இச்சொல் தமிழ்ச்சொல். முதன் முதலில் தென்னிந்திய குடிநுழைவு இங்கு வந்தது. அது மல்லியா அல்லது மலையா

[8]. குறிஞ்சி வேந்தன். இரா., மலாயா தமிழர் சரித்திரம், ப.69

என்றும் ஆகியது. இந்த இனம் ஏற்பட்ட இவ்வாறான சூழலில் 'ஓராங் மிலாயு' அல்லது மலாயர் என்று ஆகிவிட்டது."[9] என்று கூறப்படுகிறது.

மலாய்க்காரர்களின் குடியமர்வு வரலாறு

மலேசியாவின் முதல் குடியேற்றக்காரர்கள் செமாங் நெகிரிட்டோஸ் இனத்தவர்கள் ஆவர். இவர்கள் 50,000 ஆண்டுகளுக்கு முன்பே கிழக்காப்பிரிக்காவிலிருந்து தென்கிழகாசியாவுக்குப் புலம்பெயர்ந்து படிப்படியாகத் தென்கிழக்காசியா தீவுகளில் பரவினர். பாபுவா நியூகினி, முதல் தாஸ்மேனியா தீவு வரை குடியேறினர். மலாயர்கள் தோற்றத்தில் பாபுவா நியூகினி, மற்றும் ஆஸ்திரேலியா பூர்வ குடிகளை ஒத்திருக்கின்றனர். இவர்கள் ஆஸ்திரோனேசியர்கள் என்றழைக்கப்படுகின்றனர். உண்மையில் மலாய்க்காரர்களின் பூர்வீகம் தென் சீனாவாகும் .

கி.மு.1600 முதல் கி.பி.600 வரையிலான கால கட்டத்தில், பசிபிக் தீவுகளான பிஜி, தோங்கா, சமோவா, மற்றும் ஹாவாய்தீவுகள் வரையுள்ள தீவுகளில் வாழ்ந்தவர்களை ஆஸ்திரோனேசியர் என்று அழைக்கப்பட்டனர். இவர்களில் ஒரு சிறு பிரிவினர் மடகாஸ்கார் தீவுக்குச் சென்றனர். இவர்களை பொலினீசியர் என்றழைக்கப்பட்டனர். இங்கே வாழ்ந்த மக்கள் தென்கிழக்காசிய மலாய்க்காரர்களைப் போன்ற தோற்றமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். கி.மு.500 - கி.பி.500 கால கட்டத்தில் தென் கிழக்காசியாவின் மூன்று பெரும் பகுதிகளான கம்போடியா ஸ்ரீவிஜயா (இப்போதைய சுமத்திராவிலுள்ள பலெம்பாங்) மற்றும் கிழக்கு ஜாவா ஆட்சிகளைத் தவிர்த்து மலாய் இனத்தவர்கள் தங்களுக்கென பேரரசையோ தனி நாகரிகத்தையோ உருவாக்கவில்லை. அவர்கள் சிறு சிறு தீவுகளில் குடியேறினர். பெரிய நிலப்பரப்புகளும் தொலைவிலிருந்தன. ஆதலால் ஒரு பேரரசை அமைப்பதற்கான தேவையும் இல்லாமற் போயிற்று. ஆங்காங்கே உள்ள தீவுகளில் வசித்து வந்தவர்களை சமூகத்தலைவர்கள் அல்லது சிறிய

[9]. வீ.நடராஜன் - சோழன் வென்ற கடாரம், பூஜாங் பள்ளத்தாக்கு, ப.27

சிறிய அரசர்களால் ஆளப்பட்டு வந்தனர். இதற்கு மொலுக்கஸ் தீவுகளையும் பசிபிக் தீவுகளையும் சான்றாகக் கூறலாம். இத்தீவுகளிலிருந்த பெரும்பாலான மலாய் இனத்தவர்கள் வேட்டைக்காரர்களாயிருந்தனர்.

கி.மு 500 - கி.பி.1500 கால கட்டத்தில் இரண்டு பெரும் பேரரசுகளான கம்போடியாவும் கிழக்கு ஜாவாவும் வீழ்ச்சி அடைந்த பின்னர்தான் மலாய் இன மக்கள் தொகை அதிகரிக்கவே படிப்படியாக வேளாண்மை சமூகமாக மாறினர். இந்தோனேசியாவோடு ஒப்பிடும்போது இந்தோனேசிய தீவுகளின் எரிமலையிலான மண் வளம் மலாயா தீபகற்பத்தில் இல்லை. இருப்பினும் சிறு சிறு வேளாண்மை குழுவினர் பேரா நதி, பகாங் நதி, மூடா நதி, மூவார் நதி, திரங்கானு நதி, கிளந்தான் நதி போன்ற ஆற்றோரப் பகுதிகளில் விவசாயம் செய்து வந்தனர்.

"ஸ்ரீ விஜயா பேரரசின் இந்தோனேசியா சுமத்திரா தீவின் பலெம்பாங மாவட்ட இந்து இளவரசர். பலெம்பாங் மாவட்டத்தினை ஆண்ட மன்னரின் மகளை மணந்து கொண்டார். பலெம்பாங்கை அடைய புரட்சி செய்ததால் அங்கிருந்து அவர் நாடு கடத்தப்பட்டார்."[10] சயாமியரின் கட்டுப்பாட்டிலிருந்த துமாசிக்கை (சிங்கப்பூர்) ஆண்டு வந்த ஸ்ரீ விஜயாவின் மற்றொரு இளவரசரான நீல உத்தமனிடம் அடைக்கலம் நாடி வந்தார். வந்த சில நாள்களிலேயே ஆட்சியாளரைக் கொன்று துமாசிக்கைத் தன்வசப்படுத்தி கி,பி.1389 முதல் கி.பி 1398 வரை ஆட்சிபுரிந்தார். அப்போது துமாசிக் சயாமியரின் கட்டுப்பாட்டில் இருந்ததனால் சயாமியப் படைகள் வந்து பரமேசுவரனைத் தோற்கடித்தன.

தன் ஆதரவாளர்களோடு மலாயாவின் மேற்குக் கரை வழியாக மலாக்காவிற்கு அருகிலுள்ள மூவாரிலுள்ள பெர்த்தாம் ஆற்றங்கரையில்

---

[10] ."Asalnya Parameswara adalah seorang putera raja dari Palembang, sebuah kerajaan di Sumatra Melaka telah menjadi sebuah Pelabuhan yang maju dan masyhur" Janakey Raman Manickam - The Malaysian Indian, p.68

கவலையோடு ஒரு மரத்தடியில் தங்கியிருந்தார். அந்நேரத்தில் வியப்பூட்டும் ஒரு நிகழ்வு நடந்தது. ஒரு சருகுமானை வேகமாகத் துரத்தி வந்த நாய்கள் குறிப்பிட்ட ஓர் இடம் வந்ததும் நின்று பின் வாங்கின. சருகுமான் நாய்களை எதிர்க்கத் தொடங்கியது. ஒரு நாயைக் காலால் உதைத்து ஆற்றில் தள்ளியது. இதைக் கண்ட பரமேசுவரன் வியப்புற்று இவ்விடம் ஏதோ ஒரு சக்தி கொண்டதாக இருக்க வேண்டும் என்று நம்பினார். அங்குள்ளவர்களிடம் தான் தங்கியிருந்த மரத்தின் பெயரை வினவினார். பக்கத்திலிருந்த அவன் ஆதரவாளன் ஒருவன், அது "மலாக்கா மரம்" என்றான். இவ்விடம் சருகுமானுக்கும் கூட மிகுந்த பலத்தைக் கொடுக்கிறதென்று எண்ணி பரமேசுவசுவரன் அவ்விடத்தைச் சுற்றித் தன் ஆதரவாளர்களோடு குடியிருப்பை நிறுவினான். மலாக்கா என்பதற்கு இன்னொரு விளக்கமும் கூறப்படுகிறது. "முற்காலத்தில் மலாக்கா துறைமுகத்துக்கு அராபிய வணிகர்கள் வருவதுண்டு. அராபியர்கள் அவ்விடத்தை "மலாக்காட்" என்று அரபு மொழியில் அழைத்தனர். மலாக்காட் என்றால் சந்தை என்று பொருளாகும். நாளடைவில் மலாக்கா என்றாயிற்று."[11].

மலாக்கா தொடக்க காலத்தில் ஒரு மீன்பிடி கிராமமாக இருந்து வந்தது. பரமேசுவரன், மலாக்கா நீரிணை வழியாக வாசனைத்திரவியத் தீவுகளுக்குச் செல்லும் முஸ்லிம் வணிகக் கப்பல்களைக் கொள்ளையடிக்கும் கடற் கொள்ளையர்களுக்குத் தலைவனாக இருந்து பின்னர் மலாக்கா ஆட்சியாளரானார். சுற்றிலும் உள்ள இடங்களைப் படிப்படியாகத் தன் வசமாக்கிக் கொண்டு 1402 இல் மலாக்கா என்னும் நாட்டை நிறுவினார். வர்த்தகத் துறைமுகத்தை வளப்படுத்தி வெளிநாட்டவர் வந்து வணிகம் செய்யச் செய்தார். உள் நாட்டிலிருந்த மலாய்க்காரர்களும் கடல் நாடோடிகளாக இருந்த மலாய்க்காரர்களும் மலாக்காவில் குடியேறினர். இவர்

[11]. சுவாமி சத்தியானந்தா, மலாயா சரித்திரம் ப. 17

காலத்தில் மக்கள் இந்து சமயத்தையும் பௌத்த சமயத்தையும் பின் பற்றினர். மலாயாவில் தோன்றிய முதல் மலாய் இராஜ வம்சம் பரமேசுவரன் மூலம் தொடங்கப்பட்டது. சீன, இந்திய, அரேபிய வணிகர்கள் வரத் தொடங்கினர். வர்த்தகம் விரிவடைந்து மலாக்கா செழித்து விளங்கிற்று. மலாக்காவைச் சுற்றியுள்ள பஹாங் மாநிலத்தையும் பேரா மாநிலத்தையும் பிற மாநிலங்களையும் மலாக்காவோடு இணைத்து மலாக்காவை ஒரு பேரரசாக நிருமானித்தார்.

மலாய் இனத்தவர்களில் "ஜாவானியரின் மலாயா குடியேற்றக் கால கட்டம் கி.பி,1880 முதல் கி.பி.1940 வரையாகும். மூன்றாயிரத்திற்கு மேற்பட்டோர் மலாயாவின் மேற்குப் பகுதியில் குடியேறினர். கி.பி. 1939 இல் இவர்கள் பதினோராயிரமாக அதிகரித்தனர். ஜாவா தீவின் மதுரா, செமராங், பகுதியிலிருந்து இவர்கள் ஜோகூர், சிலாங்கூர், பேரா ஆகிய மாநிலங்களில் குடியேறினர். 1889-இல் சிலாங்கூரில் குடியேறியவர்கள் நானூறு பேர். இந்தோனேசியாவிலேயே அதிகமானோர் ஜாவா இனத்தவர்கள். அவர்கள் பேராக் மாநிலத்திலுள்ள தெலுக் இந்தான், சிலாங்கூரிலுள்ள சபாக் பெர்ணம், கிள்ளான், கோல லங்காட், கோலசிலாங்கூர் பகுதிகளில் பெரிய கிராமப் பகுதிகளை உருவாக்கி வாழ்ந்தனர். இவர்களைப் போலவே வட சுமத்திராவின் மேடான் பகுதியிலிருந்தும் இங்கு வந்து குடியேறிய மினாங்காபாவ் மலாய்க்காரர்கள் மேடான் கிராமப் பகுதிகளை அமைத்துக் கொண்டனர். சுமத்திராவின் வடமேற்குப் பகுதியிலிருந்து ஆச்சேனியர்கள் பதினைந்தாம் நூற்றாண்டில் மலாக்காவில் குடியேறினர்."[12] என்ற கருத்து மலாய்க்காரர்களின் பரவலைக் காட்டுவதாக உள்ளது.

மலாயா தீபகற்பத்தின் செழுமையும் மலாக்கா சுல்தான்களின் திறமையான ஆட்சியும் மலாயாவை சுற்றியுள்ள இடங்களிலிருந்து

[12]. மு.ந.வீரப்பன், மலாயத் தமிழர், ப.18

மலாய்க்காரர்கள் மலாயாவுக்கு அலை அலையாக குடியேறத் தொடங்கினர். மலாயா தீவுக் கூட்டங்களுக்கிடையே வர்த்தக செயல்பாடுகள் தொடங்கின.

<u>கிழக்கு மலேசியா எனப்படும் சரவாக், சபா மாநிலம்</u>

சரவாக் மாநிலம், போர்னியோ தீவின் தென் மேற்கில் அமைந்துள்ளது. சரவாவின் நியா குகையில் காணப்பட்ட சான்றுகளின்படி 35,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் இங்கு வாழ்ந்து வந்திருப்பது தெரிய வருகிறது. மேலும் நியா குகையில் தோண்டியெடுக்கப்பட்ட மனித எலும்புகள் 10,000 ஆண்டுகள் பழமை வாய்ந்தனவாக இருக்கிறதென்று புதைபொருள் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். "10,000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தென் சீனாவிலிருந்து மக்கள் போர்னியோ தீவுக்குக் குடியேறினர். இக்குடியேற்றத்தில் சரவாக், சாபா மாநிலங்களும் அடங்கும். பின்னொரு கால கட்டத்தில் மலாயா தீவுகளும் போர்னியோ தீவும் தென்சீனாவில் இருந்து அலை அலையாக வந்த மக்களால் குடியேறப்பட்டனர். இவர்கள் பல பிரிவினர்களாக இருந்தனர். சற்றுக் குட்டையான கறுப்பு நிற நெகிரிட்டோஸ் மக்கள் காடுகளின் உட்பகுதிகளில் வேட்டைக்காரர்களாகவும் உணவுப் பொருட்கள் தேடுபவர்களாகவும் இருந்தனர். ஆற்றங்கரையோரம் நெல் பயிர் செய்து வந்த மலாய்க்காரர்கள் ஓரளவு நெகிரிட்டோஸ்களைப் போன்று காணப்பட்டனர்."[13] "சரவாக் மாநிலத்தில் ஆறு முக்கிய இனத்தவர் வசிக்கின்றனர்.

1. இபான் (இவர்கள் கடல் டாயாக்கள் என அழைக்கப்படுகின்றனர்)
2. இபான் மக்கள் இந்தோனேசியாவின் கலிமந்தானிலுள்ள காப்புவாஸ் பள்ளத்தாக்கிலிருந்து பதினாறாம் நூற்றாண்டில் குடியேறினர்.
3. சீனர்,
4. மலாயர்,
5. பிடாயு,
6. மிலானாவ் மற்றும் ஒராங் உளு.

---

[13]. இணையதள தகவலின் படி.(people of sarava sabha)

இவர்களோடு மேலும் சில சிறு சிறு குழுவினர் கெடாயான், காயான், கென்யான், ஜாவானியர், பூகிஸ், மூருட் மற்றும் இந்தியர்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர்."[14] சபா மாநிலத்தில் மக்கள் குடியேற்றம் சுமார் 20,000 - 30,000 ஆண்டுகளுக்கிடையில் தோன்றியிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. டார்வெல் குடா, திங்காயு நதிக்கரைக்குப் பக்கத்திலுள்ள மாடாய் பத்தரோங் குகையில் நடத்தப்பட்ட ஆய்வில் அகழ்வாராய்ச்சியாளர்கள் கல் ஆயுதங்களைக் கண்டுபிடித்தனர். அங்கு வாழ்ந்த மக்கள் ஆஸ்திரேலிய பழங்குடியினரைப் போல இருந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. அங்கு வாழ்ந்த மக்கள் காணாமற் போனதற்கான காரணம் அறியத் தெரியவில்லை. "2003ஆம் ஆண்டு அகழ்வாராய்ச்சியாளர்கள் லாகாட் டாட்டு மாவட்டத்திலுள்ள மான்சுலில் பள்ளத்தாக்ககைக் கண்டுபிடித்தனர். இக்கண்டுபிடிப்பால் சபாவின் வரலாறு 235,000 ஆண்டுகளிலிருந்து தொடங்குவதாகக் கூறுகின்றனர். 5000 ஆண்டுகளுக்கு முன் தென் மங்கோலியாவிலிருந்து சபாவுக்கு முதல் மக்கள் புலம் பெயர்வு ஏற்பட்டது. இதற்கு ஆதாரமாகச் செம்போனா, புக்கிட் தெங்கோராக் அகழ்வாய்வாளர்கள் புகழ் பெற்ற மண்பாண்டங்கள் செய்யுமிடத்தைக் கண்டுபிடித்தனர்."[15] புலம்பெயர்ந்த இந்த மங்கோலியர்களே கடசான் டூசுன், மூருட், ஓராங் சுங்கை ஆகிய இனத்தவர்களாக இப்பொழுது வாழ்ந்து வருவதாக ஆய்வாளர்கள் எஸ்.ஜி.தான் மற்றும் தாமஸ் ஆர். வில்லியம்ஸ் ஆகியோர் நம்புகின்றனர்.

7 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீவிஜயா பேரரசின் ஒரு பகுதியாக விஜயபுரம் வடமேற்கு போர்னியோவில் (இப்போதைய மலேசியாவின் சபா மாநிலம்) இருந்ததாகக் கூறப்படுகிறது. பின்னர் 9ஆம் நூற்றாண்டில் போ நீ என்னும் முதல் இராச்சியம் ஏற்படுத்தப்பட்டது. இந்த செய்தி தைப்பிங் ஹுவானயு ஜி என்னும் புவியியல் ஆய்வு ஆவணம் கூறுகிறது.

---

[14]. அரசு தகவல் இலாக அமைச்சு, மலேசியா, துண்டு பிரசுரங்கள்.

[15]. மகாதீர் பின் முகமட், மலாய்க்காரர்களின் இக்கட்டு நிலை, ப.19

இப்பூர்வ குடிகள் தவிர இந்தியர், சீனர் போன்றோர் மலோய நாட்டிற்குப் புலம் பெயர்ந்து வந்துள்ளனர். இவர்களின் தமிழர்கள் புலம் பெயர்ந்தநிலையை வரலாற்று அடிப்படையில் பின்வரும் பகுதி தக்க சான்றுகளுடன் எடுத்துரைக்கின்றது.

மலேசியாவில் தமிழர்களின் பரவல்

"தீபகற்ப மலேசியாவிற்கும் (நாட்டு விடுதலை 31.08.1957க்கு முன்பு மலாயா என்று அழைக்கப்பட்டது) இந்தியத் துணைக் கண்டத்திற்கும் இடையிலான தொடர்பு மிகவும் பழமையானது. மலாயாவுக்கும் பழந்தமிழகத்திற்கும் கி.மு.500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்பு இருந்து வந்துள்ளது."[16] என்பதை அரசரத்தினம் போன்ற வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இதனை உறுதி செய்ய, இலக்கியச் சான்றுகள், அகழ்வாய்வுச் சான்றுகள், பண்பாட்டுச் சான்றுகள் ஆகியன உதவுகின்றன.

மலாயா - தமிழர்களின் தொடர்பு-இலக்கியச் சான்றுகள்

"மலாயாவைப் பற்றி வடமொழிப் புராணங்களும் தமிழ் இலக்கியங்களும் பதிவு செய்து வைத்துள்ளன. தொல்பழங்கால முதலே தமிழகத்துடனும் இந்தியாவின் வடபகுதியுடனும் தொடர்புடையதாக இந்நாடு இருந்துள்ளது. கி.மு. 200 ஆம் ஆண்டிலேயே தமிழர்கள் மலாயாவில் குடியேறத் தொடங்கி விட்டனர் என்று சீனாவின் காலவழிச் செய்திக் கோவை தெரிவிக்கிறது."[17] வடமொழி வேதங்கள், 'கௌடில்யரின்' அர்த்த சாஸ்திரம், புத்த ஜாதக இலக்கியங்கள், இலங்கை வரலாற்றைக் கூறும் மகாவம்சம் ஆகிய நூல்களிலும் மலாயா பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இக்குறிப்புகள் வழியாகவும் இந்தியர்களின் தொடர்பு பண்டைக்காலத்திலே மலேயாவிற்கு இருந்து, வந்துள்ளதை அறியமுடிகின்றது.

---

16. புலியூர் கேசிகன் தெளிவுரை, கலிங்கத்துப்பரணி, ப.110

17. வீ. நடராஜன், சோழன் வென்ற கடாரம் (பூஜாங் பள்ளத்தாக்கு), ப.35

"மலாயா தீபகற்பகத்துக்கு முதன்முதலாக இந்தியர்கள் வந்தது கி.பி. முதலாம் நூற்றாண்டில் என்று வரலாற்றாவணங்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் வணிகர்கள். இவர்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலிருந்து (கோரமண்டலம்) வந்தனர். இவர்கள் மலாயா தீவுகளுக்கும் தீவின் பிறபகுதிகளுக்கும் பெருமளவில் வரத் தொடங்கினர். நூலாடைகள், இரும்புக் கருவிகள், சிறு மணிகள், பசை போன்றவற்றையும் காடு சார்ந்த பொருட்கள் மற்றும் தங்கத் துகளையும் பண்டமாற்று விற்பனை செய்தனர். அவை பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் அகச் சான்றுகளாய் ஆங்காங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன."[18] என்ற கருத்தும் இந்தியர்களின் வருகைக் காலத்தைக் காட்டுவதாக உள்ளது. தமிழ் வணிகர்களின் பார்வை சுவர்ணபூமி என அழைக்கப்படும் மலாயா பக்கம் திரும்பியது. தமிழகக் கடற்கரையிலிருந்து நேர் கோட்டில் மலாயா அமைந்திருந்ததும் தமிழர்கள் வருவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. இதனால் மலாயாவின் துறைமுக நகரங்களுக்குப் பெருமளவிலான தமிழர்கள் பயணிக்கத் தொடங்கினர்.

<u>கடாரம், காழகம், கெடா</u>

மலேசியாவின் பழைய பெயர் கடாரம் என்பதாகக் கொள்ளமுடிகின்றது. இன்றைக்குக் கெடா என அழைக்கப்படும் மலேசியாவின் வடமேற்குக் கரையோரத்தில் அமைந்துள்ள பகுதி பண்டைய நாளில் கடாரம், காழகம் என அழைக்கப்பெற்றுள்ளது. கடாரம் பற்றிய பல குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இவ்விலக்கியச் சான்றுகள் தமிழர்கள் மலேயாவுடன் தொடர்புடையவர்கள் என்பதைக் காட்டுகின்றன.

"ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெளிய ஈண்டி
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகின்"[19]

---

[18]. ஜானகிராமன் மாணிக்கம், மலேசிய இந்தியர்களின் இக்கட்டான நிலை, ப.42

[19]. புலியூர் தேசிகன் (உ.ஆ), பட்டினப் பாலை, அடிகள் 185 - 193

என்ற பட்டினப்பாலை அடிகளில் ஈழம் என்று இலங்கையும் கடாரம் என்று மலேசியப் பகுதியும் சுட்டிக்காட்டப்பெற்றுள்ளன. "காழகம் என்பது கடாரத்தைக் குறிக்கும் என்று குறிக்கிறது மதுரைப் பேரகராதி."[20] "சேந்தன் திவாகரம், 'கடாரம் என்னும் தேயம்"[21] எனக் குறிப்பிடுகின்றது. "நச்சினார்க்கினியரும் காழகம் என்பது மலாயாவைக் குறிப்பதாகக் கூறுகிறார்."[22]

சோழர்களின் வெற்றியைக் கூறும் கல்வெட்டுக்களின் மெய்க்கீர்த்திகளில் கடாரம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. "செயங் கொண்டாரின் கலிங்கத்துப் பரணியில்,

களிறு கங்கைநீர் உண்ண, மண்ணையில்
காய் சினத்தொடே கவ்வு செம்பியன்,
குளிறு வெண் திரைக் குரைக் கடாரமும்
கொண்டு மண்டலம் குடையுள் வைத்தும்."[23]

என்று கடாரம் குறிக்கப்படுகிறது. முதலாம் இராஜேந்திரச் சோழன் (கி.பி 1012 - 1044) படையெடுத்து வந்து லங்கா சுக்கா, கடாரம் (மலேசியாவிலுள்ள கெடா மாநிலம்), சாவகம் (ஜாவா) போன்ற இடங்களைத் தங்கள் ஆட்சியின் கீழ் நிலைநிறுத்தினான் என்ற வரலாற்றுக் குறிப்பும் இங்கு நோக்கத்தக்கது.

மலாயா - தமிழர்களின் தொடர்பு- பிற சான்றுகள்

மலாயா, இந்தோனேசியா, போர்னியோ, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட கருவிகள், இதர பொருட்கள் முதலியவற்றை ஆய்ந்த

---

20. மதுரைப் பேரகராதி ப. 615

21. இராமசாமி. பி. டாக்டர். மலேசியத் தோட்டத் தொழிலாளர் வாழ்வும் போராட்டங்களும், ப. 44.

22. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், ப. 36

23. செயங்கொண்டார், கலிக்கத்துப்பரணி, பாடல் 203

ஆய்வாளர்கள், இரு நாடுகளுக்கிடையிலான தொன்மையானத் தொடர்புகளை உறுதி செய்கின்றனர். இரா.தண்டாயுதத்தின் ஆய்வுகளின் வழியாக இக்கருத்தினை, ‘‘1840 ஆண்டில் மலேசியாவின் கெடா, வெல்லஸ்லி ஆகிய மாநிலங்களில் புதைபொருள் ஆராய்ச்சியை மேற்கொண்ட ஜேம்ஸ் லோ என்பார் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இப்பகுதிகளில் இந்தியர் குடியேறி வாழ்ந்ததற்கான சான்றுகளாக் கண்டறிந்துள்ளார். 1937ஆம் ஆண்டில் டாக்டர் குவார்ட்ச் வேல்ஸ் என்பார் மேற்கொண்ட ஆராய்ச்சிகளும் இதனை உறுதி செய்கின்றன. இக்காலப்பகுதிகளில் ஏற்பட்ட தொடர்புகளும் குடியேற்றங்களும் வளம் மிக்க நாகரிகத்தின் ஓர் உயர்ந்த நிலையிலேயே ஏற்பட்டிருக்க வேண்டும் என வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்."[24]‘‘கி.பி.நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் சைவ, வைணவ, புத்த சமயச் சார்புள்ள அரசுகள் கெடா, வெல்லஸ்லி மாநிலங்களை ஒட்டிய பகுதிகளில் நிலைத்திருந்தன. இப்பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கோயில்கள், சிற்ப இடிபாடுகள் ஆதாரங்களாகத் திகழ்கின்றன. கிரந்த மொழியில் அமைந்த சொற்கள் செதுக்கப்பட்ட புத்தரின் சிற்பப் படிமங்கள் கிடைக்கப்பட்டுள்ளன.”[25] என்ற குறிப்பு தொல்பொருள் சான்றுகள் வழி இரு நாடுகளுக்கான தொடர்பினை உறுதி செய்கின்றன.

“கெடா பகுதிக்கு தமிழர்களில் பெரும்பாலோர் காஞ்சிபுரம் பகுதியிலிருந்து ஆறாம் நூற்றாண்டில் வந்துள்ளனர். இவர்களின் ஆதிக்கம் தென்கிழக்காசியா முழுவதும் பரவியிருந்தது. என உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரை தெரிவிக்கின்றது.”[26] “கி.பி. 775-இல் மலாயாவிலிருந்த பல்வேறு சிற்றரசுகளையும், கம்பூச்சியா, சம்பா (வியட்னாம்) போன்ற நாடுகளையும் வென்ற ஸ்ரீவிஜய பேரரசு மன்னர்கள் அவற்றைத் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். இச்செய்திகளை மலாயா-சாவகக் கல் வெட்டுகள்

---

[24] . தண்டாயுதம் இரா., தற்கால தமிழ் இலக்கியம் பக்.106, 107

[25] . நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், ப. 37

[26] . பூபாலன் க - மலேசியாவில் தென்னிந்தியத் தமிழர்கள். ப.207

விரிவாகத் தெரிவிக்கின்றன."[27] இதே காலகட்டத்தில் தமிழகத்தில் சோழப் பேரரசு வலிமை மிக்கதாயிருந்தது. அச்சோழப் பேரரசின் திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், ஆனைமங்கலச் செப்பேடுகளும் ஸ்ரீவிஜயப் பேரரசு பற்றிய தகவல்களைத் தருகின்றன. இத்தொடர்புகள் இருநாடுகளின் தொடர்பினைக் காட்டுவனவாக உள்ளன.

லீயிடன் பெரிய செப்பேடு

"மாமன்னன் முதலாம் இராஜராஜன் வழங்கிய அறத்தினை அவன் மகன் இராஜேந்திரன் தாமிரசாசனம் செய்ததை விளக்குகிறது. நாகப்பட்டினத்தில், முதலாம் இராஜராஜன், தன் ஆட்சிக்கு உட்பட்ட, கடல் கடந்த தூரகிழக்கு நாடான ஸ்ரீவிஜய நாட்டுத் தலைவனும், ஆவணம் நிறைவேற உ ஆண்டுகளும் கஉ நாட்களும் கடந்தன இவ்வாணை அவன்மகன் இராஜேந்திர சோழன் காலத்தில் தாமிரசாசனமும் செய்யப்பட்டுள்ளது என ஆனை மங்கலச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன."[28] என்ற குறிப்பும் இங்குக் குறிக்கத்தக்கது. இன்றைய சுமத்திரா-ஜாவா, "கெடா - (கிடாரத்தை ஆளும் சைலேந்திர குல அரையனான மாற விஜயதுங்க வர்மன், தன் தந்தையின் பெயரால் எடுப்பிக்கின்ற, சூடாமணிபன்ம விகாரம் என்னும் பௌத்தர் வழிபாட்டுத் தலத்திற்கு, வேண்டும் நிவந்தங்களுக்கு சத்திரிய சிகாமணி வளநாட்டு ஆனைமங்கலம் எனும் ஊரில் நிலம் தொண்ணூற்றேழு இரண்டுமா முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் அரையே இரண்டு மாவினால் இறைக் கட்டின காணிக்கடன் நெல், எண்ணாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது முக்கலனே இரு தூணிக்கறுணி ஒரு நாழியும், தன் ஆட்சியின் ஆண்டு உகவது. நாள் தொண்ணாற்று ஆறில் தலைநகர் தஞ்சையில் இருந்த புரம்படி மாளிகை 'ராஜஸ்ரியன்' தெற்கு மண்டபத்தில் எழுந்தருளி இருந்தவாறு. பள்ளிச்சந்த இறையிலியாக வரியிலிட்டுக் கொடுத்த தானம்அளி ஆணையைவிவரிக்கும் ஆவணமாகும் ஆவணம் நிறைவேற உ ஆண்டுகளும் கஉ நாட்களும் கடந்தன

---

[27] . குறிஞ்சி வேந்தன் இரா., மலாயா தமிழர் சரித்திரம், பக்.12, 13

[28] . மைக்கேல் ஸ்டென்சன், புலம் பெயர்ந்த தமிழர்கள்,மலேசியா, ப. 41

இவ்வாணை அவன்மகன் இராஜேந்திர சோழன் காலத்தில் தாமிரசாசனமும் செய்யப்பட்டுள்ளது."[29]என ஆனை மங்கலச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. இக்கூற்றின் வழி இரு நாட்டுத்தொடர்பு உறுதியாகின்றது.

சோழர்களின் வருகை

"பிற்காலச் சோழர்களில் புகழ் பெற்றவர்கள் முதலாம் இராசராசனும் அவர் மகன் முதலாம் இராசேந்திர சோழனுமாவர். இராசேந்திர சோழனின் முற்பகுதி காலம் வரை ஸ்ரீவிஜயப் பேரரசுடன் நல்லுறவு நீடித்திருந்தது. இராசேந்திர சோழனின் இவ்வெற்றி குறித்து, "கங்கைகொண்ட சோழன் மலாயாவில் கடாரத்தையும் ஆண்டான். அவன் அமைத்த விஜயா பேரரசு 2000 சதுர மைல் கொண்டது. இந்தோநேசிய தீவுக் கூட்டத்தையும் உள்ளடக்கியது."[30] என்று சர்மா குறிப்பிடுகின்றார்.

அவனின் பிற்பகுதி ஆட்சிக் காலத்தில் (கி.பி.1025) மலாயா மற்றும் அதைச் சுற்றியுள்ள தீவுகளைக் கொண்டுள்ள ஸ்ரீவிஜயப் பேரரசின் மீது போர் தொடுத்து வென்றான். தமிழ் இலக்கியங்களிலும் கல் வெட்டுகளிலும் வியந்து கூறப்படும் "கடாரம் வென்ற சோழன்" என்பது இந்தப் படையெடுப்பேயாகும். வலிமை வாய்ந்த கப்பற்படையைக் கொண்டு மலாயாவிலிருந்த கடாரம் முதல் சுமத்திரா, மற்றும் அதனைச் சுற்றியிருந்த பத்துக்கு மேற்பட்ட நாடுகளை இப்போரில் வீழ்த்தியுள்ளான். இராசேந்திர சோழனின் இவ்வெற்றி குறித்து, 'கங்கைகொண்ட சோழன்' மலாயாவில் கடாரத்தையும் ஆண்டான். அவன் அமைத்த விஜயா பேரரசு 2000 சதுர மைல் கொண்டது. இந்தோனேசிய தீவுக் கூட்டத்தையும் உள்ளடக்கியது."[31] என்று சர்மா குறிப்பிடுகின்றார்.

---

29 . நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், ப. 36

30 . சர்மா எஸ்.எஸ் - கடல் கடந்த தமிழர்களின் கவின்கலைகள். பக்கம் 109

31 . சர்மா, எஸ். எஸ்., கடல் கடந்த தமிழரின் கவின் கலைகள், 8ஆவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 220,

கங்கை கொண்ட சோழன் விஜய பேரரசை ஆட்சிபுரிய ஆங்காங்கே தன் ஆதரவாளர்களை நியமித்தான். இத்தகைய ஆட்சியாளர்களின் வழிவந்தவர்களில் திரிமூர்த்தி திரிபுவனன் மகனே நீல உத்தம சோழன் ஆவான். இவனே சிங்கபுரத்தை (தற்போதைய பெயர் சிங்கப்பூர்) உருவாக்கியவன் ஆவான்.

· நீல உத்தம சோழன் ஆட்சி செய்த சிங்கப்பூருக்கு வடக்கே மலேசிய தீபகற்பத்தின் தென் மாநிலமான ஜோகூரில் 'கோத்தாகெலாங்' எனும் காட்டுப் பகுதியில், சுமார் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் (கி.பி.650) செதுக்கப்பட்டது என நம்பப்படும் சோழர் காலத்துக் கல்வெட்டு ஒன்று ஆற்றின் படுகைகளில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் "ஸ்ரீவிஜய பேரரசால் கட்டப்பட்ட கோட்டையை கி.பி. 1377ஆம் ஆண்டு இராஜேந்திர சோழனால் அழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கோத்தா கெலாங்கி கோட்டையை பண்டைக் காலத்தில் 'தம்பரலிங்கா கோட்டை' என அழைக்கப் பட்டதாகவும் ஆய்வுக் குழுவினர் தெரிவித்தனர்."[32] என்று மலேசிய நண்பன் நாளிதழில் ஆய்வாளர் கணேசன் கூறுகிறார். இராசேந்திரனக்குப் பிறகு அவன் மகன் வீர ராசேந்திரன் கி.பி.1068-ஆம் ஆண்டில் கடாரத்தின் மீது படையெடுத்து வெற்றி கொண்டான். மலாயா (கடாரம்) மீது சோழர்களின் ஆதிக்கம் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு மேல் நிலைத்திருந்தது. பிற்காலத்தில் குலோத்துங்கன் சோழன் ஆட்சியில் (கி.பி. 1070 - 1118) கடாரத்துடன் நல்லுறவு நீடித்ததாக லெய்டன் செப்பேடுகள் வழி அறிய முடிகிறது.

கி.பி.12ஆம் நூற்றாண்டில் கடாரம், சுமத்திரா உள்ளிட்ட பகுதிகளைக் கொண்டு ஸ்ரீவிஜய பேரரசு சைலேந்திரர்கள் தலைமையில் வலுப்பெறத் தொடங்கியது. கி.பி.13ஆம் நூற்றாண்டில் கடாரம் மீண்டும் தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டது. சோழர்களுக்குப் பின் தலையெடுத்த பிற்காலப்

[32] . ஆய்வாளர் கணேசன், "மலேசிய நண்பன்" நாளிதழ் திகதி 18.2.2017

பாண்டியப் பேரரசின் மன்னன் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் கடாரத்தைக் கைப்பற்றியதாகத் தெரிகிறது.

இவ்வாறு சோழ அரசர் காலத்தில் கடாரம் அவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட ஒரு பகுதியாக விளங்கியுள்ளது. பாண்டிய அரசியலிலும் கடாரம் சிறப்பிடம் பெற்றுள்ளது.

"ஜடாவர்மன் சுந்தர பாண்டியன், சுமத்திரா மன்னனை எதிர்த்துப் போரிட்டுக் கொன்றதாகவும், அதனால் கடாரம் சுந்தர பாண்டியனால் கைப்பற்றப்பட்டதாகவும், கி.பி.1264-இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றின் மூலம் அறிகிறோம்."[33] என்று குறிஞ்சி வேந்தன் குறிப்பிடுகின்றார். இச்சான்று பாண்டிய அரசின் கடாரத் தொடர்பைக் காட்டுவதாக உள்ளது. "கி.பி. 1400 முதல் கி.பி.1511 வரை நீடித்த மலாக்கா பேரரசை தோற்றுவித்தவன் பரமேசுவரன். இராசேந்திர சோழனின் பரம்பரையில் தோன்றியவர் பரமேசுவரன்."[34] என்று "செஜாரா மிலாயு" சான்று காட்டி டேவ்ஹட்டி, க.த.திருநாவுக்கரசு போன்றோர் கூறுகின்றனர். சுமத்திராவிலுள்ள பலேம்பாங்கில் வாழ்ந்த பரமேசுவரன் உள்நாட்டில் நிகழ்ந்த குழப்பங்கள் மற்றும் தன் மாமனாரின் வெறுப்பு போன்றவற்றிற்கு ஆளாகி நாடு கடத்தப்பட்டான். கி.பி. 1390இல் துமாசிக் வந்தடைந்தான். சயாமியரின் ஆட்சியின் கீழிருந்த துமாசிக்கை ஆண்டு வந்த நீலஉத்தமனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். சயாமிய மன்னனின் கோபத்துக்கு ஆளானதால் சயாமியப் படை பரமேசுவரனை துமாசிக்கிலிருந்து துரத்தப்பட்டதால் பரமேசுவரன் மலாக்கா வர நேரிட்டது.

தமிழகத்தின் சோழ அரசர்களுடன் பரமேசுவரனும் அவனுடைய சந்ததியினரும் நல்லுறவை வளர்த்துக் கொண்டனர். பரமேசுவரனின் குடிமரபு

---

[33] . குறிஞ்சி வேந்தன் இரா - மலாயா தமிழர் சரித்திரம் - பக்கம் 16

[34] . திருநாவுகரசு, க.த., தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, ப.302

முதலாம் இராசேந்திர சோழனால் தோற்றுவிக்கப்பட்டது என காலவழி செய்திக் கோவையான செஜாரா மிலாயு கூறுகின்றது. இவ்வாறு அரசர்கள் காலத்தில் கடாரம் தமிழகம், இந்தியாவுடன் தன் தொடர்பைத் தொடர்ந்துள்ளது.

<u>வணிகத் தொடர்பு</u>

பரமேசுவரன் சீனாவுடனும் இந்தியாவின் மேற்குக் கரை (கேரளா - சேர) அரசுகளுடனும் நல்லுறவை வளர்த்து மலாக்கா துறைமுகத்தில் வணிகம் நடைபெறச் செய்தான். அராபியர்களும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து அதிக எண்ணிக்கையிலான வணிகர்களும் மலாக்காவில் வர்த்தகம் புரிந்தனர். தமிழகத்திலிருந்து வணிகர்கள் மலாக்கா நோக்கி வந்த வண்ணம் இருந்தனர். தமிழர்களின் வாணிபம் சிறப்பான இடத்தைப் பிடித்திருந்தது என்று கூறலாம். தமிழ் வணிகர்கள் தங்கி இருந்த பெரிய ஊர்களில் தமிழர்களின் குடியிருப்புகள் இருந்தன. அவற்றை பெக்கான் கிலிங், தஞ்சோங் கிலிங், கம்போங் கிலிங் என்று அழைத்தனர். 'சிட்டி' என்று அழைக்கப்பட்ட தமிழ் வணிகர்கள் வசித்த பகுதிகள் மலாக்காவின் அழகான, செல்வம் மிகுந்த பகுதியாக விளங்கின என்று போர்த்துக்கீசியப் பயணியின் குறிப்புகளை மேற்கோள் காட்டி ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

"மலாயா தீவுக் கூட்டங்களில் இசுலாமிய மயமாக்குதல் வேறூன்றத் தொடங்கிய காலகட்டத்தில் இந்தியர்களும் மலாக்காவுக்கு வரத் தொடங்கினர். பெரும்பாலானஇந்தியர்கள் வணிகர்களாவர்பெரும்பாலோர் வேலைக்குச் சம்பளம் பெற்றுக் கொண்டு எளிய வாழ்க்கையை மேற் கொண்டனர். கணிசமானோர் நாட்டின் இதர பகுதிகளிலும் சிங்கப்பூரிலும் வாழ்ந்தனர்."[35] மலாக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகம் நன்கு

[35] . "Whenthe Islamisation process of the Malay archipelago was taking root, the Indians were also arriving in Melaka during this period. These Indians were mostly traders……Most of them are wage earners and lead a simple life. A handfull of them are living in other parts of the country (outside Malacca) and also in Singapore". (Janakey Raman Manickam - The Malaysian Indian - Forgotten History of the colonial Era. Sweat, blood, tears. Page 73-74)

வளர்ச்சியடைந்தபோது இந்திய வணிகர்கள் மலாக்காவில் சொந்தக் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டனர் என்பது இசுலாமியர்கள் மலாயா வந்த நிலையைக் காட்டுவதாக உள்ளது.

இவர்களில் மலாக்கா சிட்டிகள், சூலியர் தமிழ் முஸ்லிம்களில் பெரும்பாலோர் சோழ மண்டலத் துறைமுகங்களான நாகூர், நாகப்பட்டினம், தொண்டி, முசிறி ஆகிய பட்டினங்களிலிருந்து வருகை புரிந்து, மலாக்காவுடன் வணிகம் புரிந்தனர். இவர்களை "சோலியா முஸ்லிம்கள்" என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் சோழ நாட்டைச் சேர்ந்தவர்களாதலால் சோழியர் முஸ்லிம்கள் என்றும் பின்னர் சூலியர்' என்றும் அழைக்கப்பட்டனர். பெரும்பாலான இந்திய வணிகர்கள் இங்கு வந்து, சொந்த நிறுவனங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அவற்றில் முக்கியமானது சொந்த காவல் படையைக் கொண்ட தென்னிந்திய மாநகராட்சி எனப்படும் "மணிக்கிராமம்" (மாணிக்கப் பட்டணம்) ஆகும். இக்குறிப்பு மலாயாவில் இசுலாமியர்கள் பரவலைக் காட்டுவதாக உள்ளது.

இந்தக் கால கட்டத்திலிருந்த இந்திய முஸ்லிம்கள் உள்ளூர் பெண்களை மணந்து கொண்டனர். எனவே அவர்கள் ஜாவிபெக்கான் என்று அழைக்கப்பட்டனர். இதன் நிமித்தம் தனிப்பட்ட கலாச்சார பாரம்பரியம் தோன்றியது. இச்சமயத்தில் சிறந்த மலாய் இலக்கிய கர்த்தாவாக முன்ஷி அப்துல்லா தோன்றினார். பெற்றோர் வழி அராபிய, தமிழ், மலாய் மொழிகளைத் திறம்படக் கற்றிருந்தார். சிட்டிகள் பரமேசுவரன் மலாக்காவை நிறுவியபோது மலாக்காவுக்கு வந்தனர். சிட்டி சமூகத்தினர் அரசாங்க பணியாளர்களாகவும் தோட்டத் தொழிலாளிகளாகவும் பிரிட்டீஷ்காரர்களால் கொண்டு வரப்பட்டனர் என்றும் அவர்கள் லேவாதேவி தொழில் செய்பவர்கள் என்ற கூற்று உண்மையல்ல. இவர்கள் மலாக்கா நீரினைப் பகுதியில் பிறந்த இந்துக்களாவர். மலாக்கா சிட்டிகளின் மூதாதையர்கள் தமிழ் நாட்டிலுள்ள கோரமண்டலத்திலிருந்து வந்தவர்கள். மலாக்காவ்வில் வாழ்ந்த மக்களில் கடல் வாழ் மலாய்க்காரர்கள், ஜாவானியர், சீனர் ஆகியோர்களை மணந்து ஒரு

தனிப்பட்ட புதிய கலாச்சாரத்தை ஏற்படுத்தினர். போர்த்துக்கீசிய ஆவணப்படி மலாக்கா சுல்தான்கள் ஆட்சியில் ஏறக்குறைய 300 முதல் 400 வரையிலான சிட்டிகள் வாழ்ந்து வந்தனர்.கி.பி.1511ஆம் ஆண்டு மலாக்கா ஆட்சி போர்த்துக்கீசியரிடம் வீழ்ந்ததால் சிட்டிகளின் தாயகத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

சிட்டீஸ் என்ற இந்து வணிகர்கள் (பொது)

மலாக்காவிற்கு வந்த மலாக்கா 'சிட்டீஸ்' என்போர் இந்து வணிகர்கள் ஆவர். சிட்டிகளைப்பற்றி மற்றொரு கருத்தும் நிலவுகிறது. மலாக்காவிலுள்ள "காஜா பெராங்" தொடக்கத்தில் தமிழ் நாட்டில் பட்டு ஆடைகளுக்குப் புகழ் பெற்ற காஞ்சிபுரத்தையே "கஞ்சபீடம்" என்று அழைத்தனர். கணிசமான சிட்டிகளின் பூர்வீகம் காஞ்சிபுரம் ஆகும். தொடக்கக் காலத்திலும் போர்த்துக்கீசியரிடம் மலாக்கா வீழ்ந்தபோதும் மலாக்காவின் அபிவிருத்திக்கு வணிகர்களின் பங்களிப்பு அளப்பரியதாயிருந்தது. நயினா சாட்டு அல்லது நயினா சிட்டி என்பவர் போர்த்துக்கீசிய ஆட்சியில் "பென்டஹாரா" முதலமைச்சர் அந்தஸ்து பதவி வகித்தார். இவர் காலத்தில்தான் மலாக்கா நகரத்தின் முதல் நாணய பரிமாற்றமும் நடைபெற்றது·

இறுதியில் அரசியல் மாற்றம், கால மாற்றம் ஆகியவற்றால் சிட்டிகள் காஜாபெராங்கில் கம்போங் தூஜோ என்ற இடத்தில் தங்கி நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளாக மாறினர். இவர்கள் இந்துக்களாதலால் பல ஆலயங்களைக் கட்டினர். அவற்றுள் பொய்யாத விநாயகர் மூர்த்தி ஆலயம் மிகவும் பழமை வாய்ந்தது. 1781ஆம் ஆண்டு கட்டப்பட்ட இவ்வாலயம் நாட்டிலேயே மிகவும் பழமை வாய்ந்ததாகும்·

வணிகம் பொருட்டு வந்த தமிழ் வணிகர்கள் தங்களின் குடும்பங்களைக் கூட்டி வரவில்லை. உள்ளூர்ப் பெண்களை மணம் செய்து கொண்டு வாழத் தொடங்கினர். இவ்வாறு அவர்கள் தமிழகத்தில் ஒரு குடும்பம், மலாக்காவில் ஒரு குடும்பம் என இரு குடும்பத் தலைவர்களாக இருந்தனர். உள்ளூர்

மனைவிக்குப் பிறந்த குழந்தையின் தந்தை தமிழனாக இருந்தாலும் தாய் மலாய்க்காரி ஆதலால் மலாய் மொழி மட்டுமே பேசத் தெரிந்தவர்களாக இருந்தனர். இவர்கள் வழி வந்த மரபினர் இன்றும் மலாக்காவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களை 'மலாக்கா சிட்டி' என்று அழைக்கின்றனர். இவர்கள் இந்து தமிழ்ப் பெயர்களைக் கொண்டு இந்து சமயத்தைத் தழுவுகின்றனர்.

மலாக்கா செட்டி (சிட்டி)

தமிழ், தமிழன் என்ற அடையாளங்களோடு குறிப்பிட்டுச் சொல்லும் எண்ணிக்கையிலானவர்கள் மலாக்கா செட்டியார்கள். இவர்களின் மூதாதையர் தமிழ் நாட்டைச் சேர்ந்த வியாபாரிகளாவர். நானூறு ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் நாட்டிலிருந்து மலாக்கா நோக்கி வந்து கொண்டிருந்த வணிகக் கப்பல் 'பேராக்' என்ற இடத்திற்கு அருகே கடலில் மூழ்கியதாகவும் உயிர் தப்பியோர் நீந்தி மலாக்கா கரையேறினர் என்பது இங்கு வழங்கி வரும் செய்தியாகும். இவர்களில் தமிழ் சமூகத்தினர் பலர், செட்டியார், படையாச்சி, பிள்ளை, நாயக்கர் எனப் பல தமிழ்ச் சமூகத்தினர் இருந்தனர். தமிழ்நாட்டிற்குத் திரும்புவதற்கு கப்பல் எதுவும் வராததால் வேறு வழியின்றி மலாக்காவிலேயே வாழ வேண்டியதாயிற்று. அக்காலத்தில் மலாக்காவில் வாழ்ந்த பல இனப் பெண்களை மணந்து கொண்டனர். மணப் பெண்ணை சைவ நெறியுடன் வாழச் செய்தனர். கலப்பு மணத்தில் பிறந்த பிள்ளைகளை மலாக்கா செட்டிகள் என அழைக்கப்பட்டனர். மலாக்கா செட்டியார்கள் மலாக்கா வர்த்தகத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். மலாக்காவில் போர்த்துக்கீசிய - டச்சு ஆட்சியின்போது முக்கிய வாணிபச் சக்தியாக விளங்கினர். இதனால் இவர்களுக்கு 'கபிடான்' என்ற பதவியும் விருதும் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். கால ஓட்டத்தில் மொழி, உடை, முதலியவற்றில் மாற்றங்கள் நிகழப்பட்டாலும் இன்றும் சைவ நெறிமுறைகளுக்கேற்ப மலாக்கா செட்டியார்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

மலாக்கா மலாய் அரசர்களின் ஆட்சியில் மட்டுமின்றி போர்த்துக்கீசியர் மற்றும் டச்சுக்காரர் ஆட்சியின்போதும் தமிழ் முஸ்லிம்கள் மிகுந்த செல்வாக்குடனும் அரசின் நன்மதிப்புப் பெற்றவர்களாகவும் திகழ்ந்தனர்.

நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள்

ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் பெரும் எண்ணிக்கையினர் பினாங்கிலும் மலாக்காவிலும் குடியேறினர். அவர்கள் தங்களின் வணிக நடவடிக்கையில் சிறந்து விளங்கினர். 'நகரத்தார்' என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றனர். ரப்பர் தோட்டங்கள், ரப்பர் தொழிற்சாலைகள், ஈய வணிகம், ஆபரணங்கள், பட்டாடைகள் வணிகம் ஆகிய துறைகளில் இவர்களது பங்களிப்பு மிகுதியாகவே இருந்தது. அவைமட்டுமின்றி 'லேவா தேவி' (வட்டி) தொழிலும் செய்து பெரும் செல்வத்தை ஈட்டுபவர்களாகவும் இருந்தனர். நகரத்தார் வணிக அடிப்படையில் மலாயவிற்குப் பலர் வருகை புரிந்துள்ளனர். இதன்பின் ஆங்கிலேய ஆட்சியில் மலாயாவில் ஏற்பட்ட மக்கள் பரவலாக்கம் பற்றிய செய்திகள் பின்வருமாறு,

ஆங்கில ஆதிக்கமும் மலாயாவும்

பதினைந்தாம் நூற்றாண்டு முதல் ஆசிய நாடுகளுக்கு ஐரோப்பியர் வரத் தொடங்கினர். இவர்கள் படிப்படியாக ஆசிய நாடுகள் பலவற்றைத் தங்கள் வசமாக்கினர். இந்தியாவும் மலேசியாவும் (முன்னாளில் மலாயா) ஆங்கிலேயர் ஆட்சியில் அடிமைப்பட்டு இருந்தன. அக்கால மலாயாவை மேம்படுத்த இந்தியர்கள் குறிப்பாகத் தமிழர்கள் உடல் உழைப்புத் தொழிலாளர்களாக மலாயாவுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

மலாயாவை தங்கள் வசம் வைத்திருந்த ஆங்கிலேயர்கள் அக்கால மலாயா நாட்டின் வளத்தை நன்கு அறிந்திருந்தனர். சயாம் (தாய்லாந்து), பர்மா போன்ற நாடுகளின் தாக்குதலுக்கு அஞ்சிய கெடா மாநில சுல்தான் (அரசர்) அப்துல்லா முகாரம் ஷா நாட்டைக் காப்பதற்காக உதவும் பொருட்டு கி.பி.1786ஆம் ஆண்டு பினாங்குத் தீவை, ஆங்கிலேயரின் தளமாகப்

பயன்படுத்திக் கொள்ள சர் பிரான்சிஸ் லைட் என்னும் ஆங்கிலேயருக்கு பணம் பெற்றுக் கொண்டு குத்தகை அடிப்படையில் அனுமதி வழங்கினார். சர் பிரான்சிஸ் லைட் பினாங்குத் தீவை மேம்படுத்த முற்பட்ட வேளையில் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர்.

"தாய்நாட்டிலிருந்து தோட்டப்புறங்களுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள், கூலி என்ற சொல்லால் அடையாளப் படுத்தப்பட்டனர். அதே மண்ணிற்குச் சென்ற கூலித் தமிழரின் கண்ணீர்க் கதைகள், அவ்வரலாற்றில் கனத்த எழுத்துகளாய்ப் புதைந்து கிடக்கின்றன."[36] என்ற ஆய்வாளரின் கருத்து இங்குக் கொள்ளத்தக்கது. தொழிலாளர் தேவையைப் பூர்த்தி செய்ய, இந்தியாவில் ஆங்கிலேயர்களை எதிர்த்த போரளிகளும், இந்திய குற்றத் தண்டனைக் கைதிகளும் நாடு கடத்தப்பட்டு இத்தீவுக்குக் கொண்டுவரப்பட்டனர். இவர்களில் தமிழர்களின் எண்ணிக்கை மிகுதியாகவே இருந்தது.

'கி.பி.1796 இல் இந்தியாவில் அந்தமான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஆயுட்காலச் சிறைக்கைதிகள் 700 பேர் பினாங்கில் குடியேற்றப்பட்டனர். தமிழகத்தில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிட்ட மருது பாண்டியர்களின் பரம்பரையினரும் போர்ப்படை வீரர்கள் 72 பேரும் பினாங்குத் தீவுக்கு 1802 இல் நாடு கடத்தப்பட்டனர். பினாங்கு மற்றும் சிங்கப்பூர் பகுதிகளில் சாலைகள், பாலங்கள், துறைமுக விரிவாக்கம் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றை இக்கைதிகள் உருவாக்கினர். இந்நிலையில் 1805ஆம் ஆண்டு இந்தியர்களின் எண்ணிக்கை 772 பேர்களாகவும் பின்னர் 1860ஆம் ஆண்டில் 4063 பேர்களாகவும் உயர்ந்திருந்தது.

தமிழர்களின் புலம்பெயர்வு

தமிழர்களின் மலாயா புலம்பெயர்வு குறித்துப் பல தகவல்கள் ஆவணங்களில் காணப்படுகின்றன. குடியேற்றங்கள் நிரந்தர மற்றும்

[36] . குறிஞ்சி வேந்தன். இரா., மலாயா தமிழர் சரித்திரம், ப.75

தற்காலிகமான என்னும் இரண்டு அடிப்படையில் அமைந்துள்ளன. அவர்களில் சொந்த ஊரில் வேளாண்மைத் தொழிலை விட்டு வந்தவர்களும், வாணிபத்திற்காக வந்தவர்களும், குறிப்பிட்ட காலம் மட்டும் அங்குச் சென்று உழைத்துவிட்டு மீண்டும் தங்கள் ஊருக்கே திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

மலாயாவில் கோலக் கிள்ளான், பினாங்கு துறைமுகத்தில் தரை இறங்கும் தமிழ் கூலி மக்கள் தடுப்பு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இத்தடுப்பு முகாம்கள் கூலித் தொழிலாளர்களால் நிரம்பி வழிந்தன. கப்பலில் வந்திறங்கிய தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டன. மலேரியா நோய் வராமலிருக்க முன்னெச்சரிக்கையாக 'கொய்னா' மருந்து கொடுக்கப்பட்டது. தொற்று நோய் பரவாமல் தடுப்பதற்காகக் கிருமி நாசினி கலந்த நீரில் மூழ்கி எழுந்திருக்கச் செய்தனர். தடுப்பு முகாம்களில் 800பேர் தங்க வேண்டிய இடத்தில் 2000 பேருக்கும் மேல் தங்க வைக்கப்பட்டனர். நோய் தடுப்பு முயற்சிகள் பயனளிக்கவில்லை. தடுப்பு முகாம்களில் காலரா போன்ற தொற்று நோய்கள் பரவி பலர் உயிரிழந்தனர். 65 தடுப்பு முகாம்களிலும் தங்க வைக்கப்பட்ட தொழிலாளர்கள் செல்ல வேண்டிய தோட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்நிலை கவலை அளிக்கக் கூடியதாக இருந்தது.

தமிழர்கள் 'கூலிகள்' ஆன நிலை

தமிழர் குடியேற்றம் நூறாண்டுகளுக்கு மேல் நடைபெற்று வந்தது. இதனால் உள்நாட்டிலும் பன்னாட்டு அளவிலும் குறிப்பிடத்தக்க பல தாக்கங்களை ஏற்படுத்தின. தொடக்கக் காலங்களில் புலம் பெயர்வு பஞ்சம், வறுமை, சாதி, வேளாண்மை வீழ்ச்சி ஆகியவை காரணங்களாக இருந்தன. மலாயாவில் தமிழர்கள் தம் கண்ணீரும் செந்நீரும் சிந்தி இரவு பகல் பாராது உழைத்தனர். அவர்களது பொருளாதாரம் சற்று மேம்பட்டது. தாங்கள் ஈட்டிய பொருளைக் கொண்டு தாயகம் திரும்பி புதிய வாழ்க்கையைத் தொடங்கினர். இது பிற சமூகத்தினரிடையே தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக

மற்ற சாதியினரும் குடியேற ஆவல் கொண்டனர். அது மட்டுமின்றி குடும்பப் பிரச்சனைகள், குழப்பங்கள் காரணமாக ஏற்படும் மன அழுத்தங்களிலிருந்து விடுபட்ட குடிபெயர்ந்தவர்களும் உண்டு.

தமிழ்நாட்டிலிருந்து மலாயா தோட்டப்புறங்களுக்கு குடிபெயர்ந்த தமிழர்கள் "கூலி" என்ற சொல்லால் கேவலமாக அடையாளப் படுத்தப்பட்டனர். தமிழர்கள் மட்டுமின்றி குடிபெயர்ந்த அனைத்துச் சமுதாயத்தினரையும் ஒட்டுமொத்தமாக அனைவரையும் கூலிகள் என்று உலகத்தில் ஆதிக்க இனத்தவரால் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனால் இப்பொழுது கூட சில ' மேட்டுக்குடி' மக்கள் தமிழர்களைக் கூலி என்றழைக்கின்றனர். ஆங்கிலேய 'காலனி' நாடுகளுக்கு தமிழர்கள் உள்ளிட்ட இந்தியர்களை அனுப்புவது 'கூலி வாணிகம்' என்று குறிப்பிடப்பட்டது. அதிகாரப்பூர்வமான ஆவணங்கள் பலவற்றிலும்கூடத் தமிழர்கள் கூலி என்னும் சொல்லாலேயே குறிப்பிடப்பட்டுள்ளனர். வறுமையால் ஆட்கொள்ளப்பட்டு ஒரு பிடி சோற்றுக்காகத் தனியாகவும் குடும்பங்களோடும் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் ஓடி வந்த தமிழர்களைச் சுமந்து சென்ற கப்பல்களும் கூலிக் கப்பல்கள் என்றே அழைக்கப்பட்டன. தோட்டங்களில் வேலை செய்த தமிழர்களுடன் உரையாட ஆங்கிலேயர்களுக்குப் பேச்சுத் தமிழ் நூல் உருவாக்கப்பட்டது. அந்நூலுக்குக் கூட 'கூலித் தமிழ்' என்றே பெயர்.

இவ்வாறு குடியேறியவர்களின் எண்ணிக்கை தோட்டத் தொழில் துறைக்குப் போதுமான ஆள்பலத்தை வழங்கவில்லை. இதனால் தோட்ட முதலாளிகளும் ஆங்கிலேய அரசும் பல்வேறு வகைகளில் தொழிலாளர்களைப் பெரிய எண்ணிக்கையில் குடியேற்ற முனைந்தனர். ஆகவே தென் இந்தியத் தொழிலாளர்கள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் "சஞ்சிக்" கூலிகளாகக் கொண்டு வரப்பட்டனர். "ஜஞ்சி"என்ற மலாய்ச் சொல்லின் திரிபு சஞ்சி என்றாயிற்று. இதன் பொருள் ஒப்பந்தம். 'சஞ்சிக் கூலி' என்றால் ஒப்பந்தத் தொழிலாளர் என்பதாகும். தென் இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்ட

தமிழ் தொழிலாளர்கள் சஞ்சிக் கூலிகள் - ஒப்பந்தக் குத்தகைத் தொழிலாளர்கள் ஆவர்.

"கண்காணி" முறையில் இந்தியத் தொழிலாளர்கள் 1938ஆம் ஆண்டு வரை அதிக எண்ணிக்கையில் மலாயாவிற்குக் கொண்டு வரப்பட்டனர். ஒருவர் கண்காணி தகுதியைப் பெறக் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது குறிப்பிட்ட தோட்டத்தில் பணிபுரிந்திருக்க வேண்டும். அவர் தென் இந்தியராக இருப்பதும் அவசியமாகும். தோட்ட நிர்வாகம் மற்றும் ஆங்கிலேய அரசின் அனுமதி பெற்று இந்தியாவில் உள்ள தங்களது கிராமங்களுக்குச் சென்று தேவையான தொழிலாளர்களை மலாயாவுக்குக் கொண்டு வந்தனர். இவை தமிழ் மக்களின் பரவலாக்கம் கீழ்மை வயப்பட்டதைக் காட்டுவனவாக உள்ளன.

<u>கண்காணிகள்</u>

ஆங்கிலேய அரசின் முனைவர்களாகவும் கண்காணிகளாகவும் (கங்காணி என்று திரிந்தது) தமிழ் நாட்டுக் கிராமங்களுக்குச் சென்று மக்களைக் கவர்ச்சிப் பேச்சால் கவர்ந்தனர். மலாயாவில் வேலை மிக எளிது; உட்கார்ந்த இடத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்; ரப்பர் மரத்தில் பணம் காய்க்கும்; சீனிக்குக் காக்காய் ஓட்டும் வேலைதான் என்றெல்லாம் இனிக்க இனிக்கப் பேசி மக்களைக் கவர்ந்தனர். கல்வியறிவு இல்லாத கிராம மக்கள் தாங்கள் வறுமையிலிருந்து விடுபட்டால் போதும் என்பதை எண்ணியதால் கண்காணிகளையும் முகவர்களையும் நம்பினர்.

"சீனிக்குக் காக்காய் ஓட்ட - கூட்டிக்கினு வந்த
கறுப்புச் சட்டைக் கதிர்வேலு கங்காணி...
ஒருதட்டு அப்பத்துக்கு ஒருதட்டு வெள்ளின்னு சொன்ன
கறுப்புச் சட்டைக் கதிர்வேலு கங்காணி...
வாழப்பழத்துக்குக் குரங்கோட்ட கூட்டிக்கினு வந்த

கறுப்புச் சட்டைக் கதிர்வேலு கங்காணி... "[37]என்ற நூலில் பாடுகின்றார்.

'மலாயா சொர்க்க பூமி' என்ற கனவுகளை மனத்தில் தேக்கி இன்பமான கற்பனைகளோடு வந்தவர்களை வரவேற்றவை கொடிய விலங்குகளும் கொன்று மாய்க்கும் 'மலேரியாக்' காய்ச்சலுக்கும், ஒளி புக முடியாத அடர்ந்த காடுகளுமே. காட்டு விலங்குகளுக்கு அஞ்சி, மனித விலங்குகளுக்கு நடுங்கி, ஒரு புதிய நாட்டைச் சமைக்க வேண்டிய பணி தமிழர்களுடையது என்ற பொறுப்பு அவர்கள் தலையில் விழுந்த போது தள்ளாடினர். நடுங்கிப் பயந்தனர். கண்காணிகளில் சிலர் தாங்கள் மலாயாவுக்குக் கூட்டிக் கொண்டு வந்த தமிழ்த் தொழிலாளிகளை சற்றும் மதிக்காமல் அடிமைகள் போல் நடத்தினர்.

ஆங்கிலேய முதலாளிகளுக்கு ஆதரவாக நடந்து கொண்டனர். தமிழ்த் தொழிலாளர்களின் குறைகளைக் களைவதற்கு ஆதரவாக நடந்து கொள்ளவில்லை.குடியிருப்புகள் சாதி வாரியாய்த் தனித்தனியாய் அமைக்கப்பட்டிருந்தன. மலாயாவுக்கு வந்த தொழிலாளர்களை ஆங்கிலேயர் மனிதராய் மதிக்கவில்லை. அவர்களை ஆடு மாடுகள் எனக் கருதினர். ஒப்பந்தக் கூலிகளாக வந்த பலர் உழைப்பால் உருக்குலைந்த நிலையிலும், முதுமையால் தளர்வுற்ற நிலையிலும் தென் இந்தியாவிலுள்ள தங்கள் கிராமங்களுக்குத் திரும்ப அனுப்பப்பட்டனர். தமிழர்களின் மிகுந்த உழைப்பாலும் உயிர் தியாகத்தினாலும் மலாயா நாட்டின் ஆங்கிலேயர் தோட்டங்கள் செழித்தன. ஆனால் தமிழர்களின் வாழ்க்கை செழிக்கவில்லை.

அரச சமுதாயமாக, வணிக சமுதாயமாக மலாயவில் வளர்ந்த தமிழ்ச்சமூகம் கூலி என்ற இழிநிலைக்குத் தள்ளப்பட்ட பின்னணி மலாய வரலாற்றில் வருத்தம் தரத்தக்க நிலைப்பாடாக உள்ளது.

---

[37]. முரசு நெடுமாறன், மலேசிய தமிழ்க் கவிதைக் களஞ்சியம்.ப.335

இரண்டாவது உலக மகா யுத்தமும் தமிழர்களில் துயர் நீங்கா நிலையும்

(1939 முதல் 1945 வரை)

1941ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் மலாயாவை ஆங்கிலேயரிடமிருந்து ஜப்பானியர் கைப்பற்றினர். ஜப்பானியரால் சீனர்கள் பெருந்துன்பத்துக்கு ஆளாயினர். இந்தியர் நேரடியாகத் துன்புறுத்தப்படவில்லை. மாறாக ஜப்பானியர் இந்தியர் மேல் மதிப்புக் கொண்டிருந்தனர். காந்தியடிகள் மீதும் நேதாஜி மீதும் அவர்கள் வைத்திருந்த மரியாதையே காரணமாகும். இருப்பினும் தமிழர்களின் வாழ்க்கை முறையில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. மாறாக ஜப்பானிய இராணுவத்தால் தமிழர்கள் சொல்ல முடியாத துன்பத்திற்கு ஆளாயினர். ஐப்பானியர் இராணுவம் அப்பாவித் தமிழர்களுக்குச் செய்த சொல்லொனா கொடுமைகள் பற்றி இங்கிலாந்து லிவர்பூல் ரஸல் பிரபு பின்வருமாறு கூறுகிறார்.

"பெண்களும் குழந்தைகளும் கட்டப்பட்டுப் பல மணி நேரம் வெயிலில் வைக்கப்பட்டனர். ஆண்களும் பெண்களும் வயது வேறுபாடின்றி வார்த்தைகளால் சொல்லமுடியாதவாறு அநாகரிகமாக நடத்தப்பட்டனர். ஆசிய தொழிலாளர் நலப் பிரிவின் பொறுப்பாளர் மேஜர் கூடோ விசாரணையில், பாலியல் கொடுமை, தரக்குறைவான தாக்குதல் போன்ற குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டன. இரவு மதுபானம் அருந்தும் நிகழ்வில் விருந்தினர்களை மகிழ்விக்கும் பொருட்டு பெண்கள் நிர்வாணமாக நடனமாட வைத்து பின்னர் பாலியல் தொல்லை கொடுத்ததால் ஒரு பெண் சில வாரங்கள் கழித்து இறந்து விட்டாள்."[38] என்பதான நிகழ்வுகள் நடைபெற்றன.

மேஜர் கூடோவின் ஊழியர் ஒனொடர்ஸ் விசாரணையின்போது, பத்தொன்பது வயது பெண்ணை பாலியல் கொடுமை செய்து கூலித் தொழிலாளிகள் பலரையும் அப்பெண்ணுக்குப் பாலியல் கொடுமை செய்யத்

[38]. ஜானகிராமன் மாணிக்கம், மலேசிய இந்தியர்களின் இக்கட்டான நிலை, ப. 173.

தூண்டும்படியான செயல்பாடுகளும் நடந்துள்ளன. இவ்வாறான கொடுமைகள் ஆங்காங்கே அரங்கேறின. ஜப்பானியர்களின் ஆட்சி காலத்திலும் தமிழ் மக்கள்,பெண்கள் நிலை மிகத் தாழ்ந்திருந்தத என்பதை இவை காட்டுகின்றன.

மரண இரயில் பாதை - சயாம்

தாயலாந்தில் (சயாம்) காஞ்சனபுரியிலிருந்து தென் பர்மாவின் மோல்மின் வரை மரண இரயில்பாதை என்று வரலாற்று ஆசிரியர்கள் வருணிக்கும் தொடர் வண்டிக்கான 415கிமீ தூரப் பாதை அமைக்கத் தமிழர்களுக்கு அதிக சம்பளம் தருவதாக ஆசை வார்த்தைகள் கூறி வலுக்கட்டாயமாக மலாயாவிலிருந்து ஆயிரக்கணக்கானோர் கொண்டு செல்லப்படடனர். "சயாம் - பர்மா மரண தொடர் வண்டிப் பாதை மற்றொரு வரலாற்றுப் பூர்வ சான்றாதாரமாகும். கட்டுமானத்தின்போது உயிர் நீத்த 7,000 போர்க் கைதிகள் காஞ்சனபுரி போர் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்." [39]

தாய்லாந்து மரண இரயில்வே கட்டுமானத்திற்கு ஆங்கிலேய, ஆஸ்திரேலியா. நியூசிலாந்து போர்க்கைதிகள் 60,000 பேர் மரணத் தொடர்வண்டிப் பாதை அமைக்க ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் அடைந்த கொடுமைகள் வார்த்தைகளால் சொல்ல முடியாது. ஒரு ஆங்கிலேயப் போர்க்கைதியான ரோகன் ரிவட் தமிழர்கள் இருந்த கூடாரங்களைப் பற்றி, "ஆயிரக்கணக்கான ஆசியர்களுக்கு ஆசை வார்த்தைகள் கூறி கொண்டுவரப்பட்ட மலாயா தமிழர் தொழிலாளிகள் இருந்த கூடாரங்களில் மாதந்தோறும் கலரா நோய்க்குப் பலியானவர்கள், பட்டினியால் இறந்தவர்கள் பலர். தமிழர் கூடாரங்களில் இருந்த பிரிட்டிஷ் மருத்துவ அதிகாரியின் கூற்றுப்படி 100,000 முதல் 250,000 பேர்களுக்குக் கூடுதலான தொழிலாளர்கள் தொடர்வண்டிப் பாதையில் இருந்தனர். பலர் சம்பளம் வாங்காமலேயே

[39] "The death Railway of Siam-Burma is another historical evidence ……..The Kanchanapuri War Cemetery holds the remains of almost 7,000 of the POWs who died during the bridge construction- Janakey Raman Manickam - The Malaysian Indian - Forgotten History , Page 229"

புதைக்கப்பட்டனர். எண்ணிக்கையை மறைப்பதற்காக ஒரு குழியில் ஏழு பேர் புதைக்கப்பட்டனர். சரியான உணவின்றி பட்டினியால் வேலை செய்யத் தெம்பு இல்லாமல் இருந்தனர். காட்டுமிராண்டித்தனமாக இரத்தத்தைப் பிழிந்தெடுத்தனர். வேலை செய்ய முடியாத தமிழர்கள் உணவும் நீருமின்றி மரக்கிளைகளில் விடப்பட்டனர். இறுதியில் மிகவும் மெலிந்து கீழே விழுவர். மற்றும் பலர் கட்டப்பட்டு கம்பியால் அடித்தும் நெருப்பால் சுட்டும் துன்புறுத்தப்பட்டனர். துன்புறுத்த என்னென்ன வழிகள் ஜப்பானியர் மனத்தில் தோன்றியதோ அதை அவர்கள் பின்பற்றினர்." [40]

கஷ்டப்பட்டு வேலை செய்தால் தண்டனை இல்லாமல் இருக்கலாம். இல்லையெனில் தண்டனை நிச்சயம் என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர் ஜப்பானியர். 415 கி.மீ தொடர்வண்டிப் பாதையை அமைக்க ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் ஆகும் என்று திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் மனித உரிமை மீறி கொடுமை செய்யப்பட்ட தொழிலாளிகள் சில வேளைகளில் பதினாறு மணி நேரம் வலுக்கட்டாயமா வேலை செய்து 415 கி.மீ. தூரத் தொடர் வண்டிப் பாதை பதினாறு மாதங்களில் முடிக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்து உயிருடன் மலாயா திரும்பியவர்கள் சில ஆயிரம் பேர்களே ஆவர். தற்சமயம் தமிழர்களில் பெரும்பாலோர் ரப்பர், எண்ணெய்ப்பனை தோட்டங்களில் வேலை செய்கின்றனர்.அவர்களுடைய பிள்ளைகளும் அதே தோட்டத்தில் வேலைசெய்ய வழிவகை செய்யப்பட்டது. தமிழர்கள் கிராமத்திலிருந்து வந்தவர்களாதலால் அவர்களைத் திருப்திப்படுத்த தோட்டத்தில் ஒரு கோயில் கட்டிக் கொள்ள அனுமதித்தனர். தோட்டப்புறத் தமிழர்கள் அந்நாளில் வேலைக்குச் செல்வது, உண்டு உறங்குபவர்களாகவே இருந்தனர். தமிழ் நாட்டில் வறுமை நிலையிலிருக்கும் பொழுது எப்படி இருந்தார்களோ

---

[40]. ஜானகிராமன் மாணிக்கம், மலேசிய இந்தியர்களின் இக்கட்டான நிலை, ப. 184

அவ்வாறே மலாயா தோட்டங்களிலும் இருந்தனர். மலாய நாட்டு விடுதலைக்குப் பின்னர் தமிழர்களின் வாழ்க்கை முறையில் மாற்றம் அடைந்தது.

மலாய விடுதலைக்குப் பின் தமிழர்களின்நிலை

மேம்பாட்டுத் திட்டத்திற்காக தோட்டங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டதால் தோட்டப்புற மக்கள் புலம்பெயர்ந்து பட்டணங்களுக்குப் படையெடுத்தனர். பட்டணத்திற்கு வந்த தமிழர்கள் பலர் சாதாரண உடல் உழைப்புத் தொழிலாளர்களாக இருக்கின்றனர். ஏனையோர் சிறு வணிகர்கள், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், கடை உரிமையாளர்கள், கடைச் சிப்பந்திகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சிறு சிறு தொழில் அதிபர்களாகவும் இருக்கின்றனர். சிறுபான்மையினர் உழவுத் தொழில் புரிகின்றனர். மற்ற இனங்களின் வளர்ச்சியை ஒப்பிடும்போது தமிழர்கள் மிகவும் பின் தங்கியே இருக்கின்றனர் என்றால் மிகையில்லை.

தமிழர்கள் மலேசியாவில் புலம்பெயர்ந்த நாளிலிருந்து நாட்டின் இன்றைய வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்த பங்கு அளப்பரியது. மலேசிய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். மலேசிய நாட்டுப் பிரதமர் டத்தோ ஸ்ரீ நாஜிப், "நாட்டின் நிர்வாகம், அரசு சேவை, வர்த்தகம், கேளிக்கை, கல்வி, உணவு உற்பத்தி, வேளாண்மை, ஆகிய துறைகளில் இந்தியர்களே எப்போதும் முன்னணி வகித்து வந்துள்ளனர் என்பதால், இந்நாட்டின் மேம்பாட்டில் மலேசிய இந்தியர்கள் ஒரு முக்கியமான பங்கினை ஆற்றி வந்துள்ளனர்"[41].என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இவ்வாறு தமிழர்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் மலாயவுடன் தொடர்புடையவர்களாக இருந்துள்ளனர். இருப்பினும் இவ்வரலாற்றுத் தொடர் காலத்தில் மெல்ல தமிழர் உரிமை இழப்பும் தெரியவருகிறது.

---

[41] . "மலேசிய நண்பன்" , நாளிதழ் திகதி, 18.2.2017

சீனர்களின் புலம்பெயர்வு

மலேசிய சீனர்கள் என்று குறிப்பிடப்படுவோர் பல பிரிவினர்களைக் கொண்ட சீன சமூகத்தினர். அவர்களின் தாயகமான சீன நாட்டிலிருந்து வந்து மலேசியாவில் குடியேறியவர்கள். பொதுவாகச் சீனர்கள் என்றால் எல்லா பிரிவினர்களைக் கொண்ட சீன சமூகத்தைக் குறிக்கும். மலேசியாவில் வாழும் பெரும்பான்மை சீன சமூகத்தினர் முன்னோர்கள் வம்ச வழிவந்த 'மின்' இனத்தவர்கள.

இவர்கள் ஹாக்கியன், தியுச்சு, ஹாய்னான், ஹாங் ஹு வா, இறுதியாக மின் டோங் ஆவர். இவர்களை அடுத்து இரண்டாவது பிரிவினர் யூ சீனர்கள் இவர்களை காண்டனீஸ், குவாங் சாய் என இரு சமூகத்தைச் சார்ந்தவர்கள். அடுத்து ஹாக்கா பிரிவினர்களை வூ மக்கள் என்றும் வட சீனர்கள் என்றும் இரு பிரிவினர்களாவர். இவர்களில் பெரும்பாலோர் 19ஆம் நூற்றாண்டுக்கும் 20 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட கால கட்டத்தில் மலாயாவுக்குப் புலம் பெயர்ந்தவர்கள்.

பண்டையக் காலத்திலேயே சீனர்கள் மலாயாவுக்கு வந்திருக்கக்கூடும். சீனர்கள் மலாயாவுக்கு வர்த்தகம் செய்வதற்காகவே வந்தார்கள். "கி.பி.502 - கி.பி 556 ஆண்டளவில் எழுதப்பெற்ற லியாங் சரித்திரம் சீன சாசனம் அக்காலத்தே மலாயாவின் வடக்கிலிருந்த 'லம் - யா - சி' அல்லது லங்காசுகம் என்ற நாட்டைப்பற்றிக் குறிப்பிடுகின்றது. லங்காசுகத்தின் மன்னர்கள் அக்காலத்தில் நான்கு தடவைகள் தம் நாட்டுப் பிரதிநிதிகளைச் சீனாவுக்கு அனுப்பியதாக மேற்கூறப்பட்ட சாசனம்தெரிவிக்கின்றது. மலாயாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் வணிகத் தொடர்பு ஏற்பட்ட பின்பேகண்டோன், புக்கியன், ஹைனான் முதலிய இடங்களிலிருந்து ஏராளமான சீனர் மலாயாவுக்கும் மலேஷியாவிற்கும் வந்து குடியேறினார்கள்".[42]

---

[42]. தகவலாளி பெயர் ஆர். இராமன், தலைவர் மலேசிய தமிழ் இலக்கியக் கழகம், கோலாலம்பூர்

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ விசய பேரரசு வீழ்ச்சியடைந்த பின், அதன் தலைநகரான பலெம்பாங்கில் வசித்து வந்த சீனர்கள் தங்களை வலிமை பொருந்திய கூட்டமாக அமைத்துக் கொண்டு நீண்ட காலம் வசித்து வந்தனர். அவர்களுக்கு லியாங் தான் மிங் என்ற தலைவன் சீன மக்களை வழி நடத்தினான். இவன் சீனாவின் கண்டோன் பகுதியிலிருந்து வந்தவன். இவன் ஒரு கடல் கொள்ளைக்காரன். ஸ்ரீ விஜயாவின் வீழ்ச்சிக்குப் பின்னர் சுமார் 200 ஆண்டுகள் பலெம்பாங் சீனரது ஆக்கிரமிப்பிலேயே இருந்து வந்திருக்கிறது.

கி.பி 1405 முதல் 1430 வரை 25 ஆண்டுகள் சீன கடற்படைத் தளபதி செங் ஹோ பத்தாயிரம் படை வீரர்கள் கொண்ட கப்பல்களுடன் ஏழு தடவை தென் சீனக் கடலிலும் இந்துமகா சமுத்திரத்திலும் ஆப்பிரிக்கக் கிழக்குக் கரையிலும் பயணித்திருக்கிறான். "கி.பி 1459இல் அவர்கள் நட்பறவு கொண்டிருந்தனர். சுல்தான் மன்சூர் ஷா சீனாவுக்கு தூதுவர்கள் மூலம் பரிசுப் பொருள்களை அனுப்பி வைத்தார் .....மலாக்கா மலாயர்களோடு அவர்கள் நட்புறவு கொண்டனர். அவர்கள் சிறப்பான வர்த்தகம் புரிந்தனர். இதன் வழி அவர்கள் செல்வச் செழிப்புடன் திகழ்ந்தனர்."[43]

கி.பி 15ஆம் நூற்றாண்டில் மலாக்கா சுல்தான் மன்சூர் ஷா என்பவருக்குச் சீன பேரரசர் ஒரு தோணி நிறைய ஊசிகள், அனுப்பியதாகவும் அதற்குப் பிரதிபலனாக மன்சூர் ஷா சீனப் பேரரசருக்கு ஒரு தோணி நிறையச் சவ்வரிசி அனுப்பியதாகவும், அதோடு தன் பிரதிநிதிகள் சிலரையும் மன் சூர் ஷா அனுப்பியதாக அக்காலத்து மலாய் வரலாறுகள் செப்புகின்றன. சீனப் பேரரசரின் அரண்மனையிலுள்ள ஏழு வாயில்களைக் கடந்து கொலு மண்டபத்துக்குள் நுழைந்தனர். அவர்களுக்கு மரியாதைக்காகச் சேகண்டிகள்

[43]. Pada tahun 1459 Sultan Mansor Syah pula menghantar utusan ke negeri Cina membawa beberapa banyak hadiah. .....Hubungan mereka dengan orang Melayu Melaka sangat mesra. Mereka juga bergiat dalam perdagangan. Dengan ini Melaka bertambah kaya dan makmur. -Janakey Raman Manickam ,The Malaysian Indian. P.23"

முழங்கின. சீனப் பேரரசர் கண்ணாடிச் சிவிகையுள்ளே அமர்ந்திருந்தார். மலாக்காவிலிருந்து சென்ற மலாய்ப் பிரதிநிதிகள் மரியாதை செலுத்திவிட்டு திரும்பும்பொழுது ஹங் லீ போ என்ற சீன இளவரசி ஒருத்தியை மன்சூர் ஷாவுக்கு வெகுமதியாகப் பெற்று வந்தார்கள். இளவரசியோடு 500 சீன உயர் அதிகாரிகளும் மலாக்காவுக்கு வந்து குடியேறினார்கள்.

மலாக்காவைப் போர்த்துக்கீசியர் ஆட்சி செய்தபோது கி.பி.1512 முதல் 1515 வரை மலாக்காவில் வசித்து வந்த தாம்பையர்ஸ் என்ற போர்த்துக்கீசிய எழுத்தாளர், "மலாக்காவிலுள்ள சீனர்கள் திருடுவார்கள். அவர்கள் நேர்மையானவர்கள் அல்லர். அவர்கள் சாதாரண பொது மக்களே"[44] என்று குறிப்பிடுகின்றார். அவர் கூற்றுப்படி அந்நாட்களில் சீனர்களுக்கும் மலாயர்களுக்கும் கலப்பு மணம் நடப்பதை மலாயர்கள் பின்பற்றும் இசுலாம் சமயம் தடை செய்யவில்லை. கலப்பு மணச் சடங்குகள் சீன வழக்கப்படியே நடந்தன. பின்னர் மலாயர்கள் தங்கள் இசுலாமிய சமயத்தில் உறுதியாக இருந்து வந்தபோது கலப்புத் திருமணம் நிறுத்தப்பட்டது. இவ்விதக் கலப்பினின்றே 'பாபா'என்ற புதிய இனம் தோன்றியது. இந்த கலப்பினத்தார் சீன நடையுடை பாவனைகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றைப் பின்பற்றி வருகின்றனர். ஆனால் சீன மொழி பேசுவதில்ல. சீன ஹொக்கியான் மொழி கலந்த சிதைவான மலாய் மொழி பேசுகின்றனர். இதிலிருந்து ஹொக்கியான் இனத்தைச் சேர்ந்த சீனர்கள்தான் முதன் முதல் மலாயாவுக்கு வந்திருக்க வேண்டும் என்க கருத வேண்டியுள்ளது. இவர்கள் சீனாவின் ஆமோய் என்ற இடத்திலிருந்து வந்தவர்களாவர். பல இடங்களிலிருந்த பல இனத்தைச் சார்ந்த சீனர்கள் மலாயாவிற்கு வந்து குடியேறினார்கள்.

---

[44]. சுவாமி சத்தியானந்தா, மலாயா சரித்திரம், ப. 47

சைலேந்தியர் காலத்திலும் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்திலும் மலாயாவில் செல்வச் செழிப்போடு திகழ்ந்திருந்த கடாரத்துடன் சீன வணிகர்களும் யாத்திரிகர்களும் தொடர்பு கொண்டிருந்தனர். அதுமட்டுமின்றி பரமேசுவரன் மலாக்கா பேரரசை நிறுவி மலாக்கா துறைமுகத்தை வணிக மையமாக மாற்றினார். இக்கால கட்டத்தில் சீனாவை ஆண்ட மிங் சக்கரவர்த்தி யூங் லோ தென் கிழக்காசிய மண்ணைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் பொருட்டு பெரும் கப்பற் படைகளை அனுப்பி வைத்தார். அவற்றில் ஒரு கப்பல் படை இன் சிங் தலைமையில் கி.பி.1403 ஆம் ஆண்டு மலாக்கா வந்து சேந்தது. அச்சமயம் பரமேசுவரன் சயாமியரின் தாக்குதலை எதிர் நோக்கி இருந்தான். ஏனெனில் பரமேசுவரன் சயாமியப் படையால் சிங்கப்பூரிலிருந்து துரத்தப்பட்டவன். எனவே பரமேசுவரனுக்குப் பலமான பாதுகாப்புத் தேவைப்பட்டது. சயாமியரின் தாக்குதலிலிருந்து மலாக்காவுக்குப் பாதுகாப்பு வழங்கினால் சீனச் சக்கரவர்த்தி யூங் லோவுடன் அணுக்கமான உறவு வைத்துக்கொள்ளத் தன் விருப்பத்தை வெளிப்படுத்தினான். கி.பி.1405 இல் பரமேசுவரன் தன் தூதுவர்களை சீனாவுக்கு அனுப்பி நடைமுறையிலான ஒப்பந்தம் கையெழுத்தானது.

கி.பி. 1409 ஆம் ஆண்டு சீனாவின் கப்பற்படைத் தளபதி செங் ஹோ மலாக்கா வந்தான். விலை மதிப்புமிக்க பரிசு பொருட்களைப் பரமேசுவரனுக்கு அளித்து, மலாக்கா ஒரு இராச்சியம், அதன் அரசர் பரமேசுவரன் என்றும் மலாக்கா அரசின் பாதுகாப்புக்குச் சீனா உத்தரவாதம் அளிப்பதாகவும் பிரகடனம் செய்தான். கி.பி. 1411ஆம் ஆண்டு பரமேசுவரன் சீனாவுக்கு நல்லெண்ண உறவினை வளர்த்துக்கொள்ளப் பிரயாணம் செய்தான். பீக்கிங்கிலிருந்த சீனச் சக்கரவர்த்தி யூங் லோவைச் சந்தித்தான். இப்பொழுது சிங்கப்பூரிலிருந்து ஓடி வந்த பரமேசுவரன் சயாமியரின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருந்ததால் மலாக்காவைப் பலப்படுத்துவதில் தன் முழு கவனத்தைச் செலுத்தினார்.

பரமேசுவரன் மகன் சுல்தான் மனசூர் ஷா சீனப் பயணத்தின்போது மிங் சக்கரவர்த்தி இளவரசி ஹங் லீ போவை மணக்க விரும்பினான். கி.பி,1459இல் சீன இளவரசி ஹங் லி போ சுல்தானைத் திருமணம் செய்துகொள்ளச் சீன 500 உயர்நிலை இளம் அதிகாரிகளும் வேலைக்காரிகளாக சில நூறு பேர்கள் கொண்ட குழுவினரும் மலாக்கா வந்தனர். சுல்தான் விரும்பியபடி திருமணம் நடந்தேறியது. சீன இளவரசி ஹங் லி போவுடன் மலாக்காவுக்கு வந்த சீனக் குழுவினர் மலாக்காவிலுள்ள புக்கிட் சீனா என்னும் இடத்தில் குடியேறினர். இவர்களில் பலர் உள்ளூர் பெண்களை மணந்து வாழத் தலைப்பட்டனர். சீனர்கள் உள்ளூர் மக்களை மணந்து கொண்டதால் ஒரு கலப்பு இனம் தோன்றியது. அவர்களில் ஆண்களைப் பாபா என்றும் பெண்களை நோன்யா என்றும் அழைக்கப்படுகின்றனர். சீன மலாய் கலாச்சாரங்களுடன் காணப்படும் இம்மக்களை இன்றும் மலாக்காவில் காணலாம். இப்போது இவர்கள் மலாய் மொழியை சரளமாகப் பேசுவர். பெண்கள் மலாய்ப் பெண்கள் உடையான பாஜுகெபாயா அணிகின்றனர்.

மலாயாவில் ஈயம் எடுப்பதில் சீனர்கள்

"மலாயா நீண்ட காலமாகவே ஈயக் கனிவளத்திற்குப் பெயர் பெற்றுத் வந்துள்ளது. மலாயாவைச் சுற்றியுள்ள வணிகர்கள் மட்டுமின்றி வெகு தூரத்திலிருந்த மற்ற நாடுகளிலிருந்தும் வந்தனர். கிண்டாவில் ஐரோப்பியர் நடத்தி வந்த ஈயச் சுரங்கங்கள் மூலம் ஈயம் உற்பத்தி செய்ய அதிகப் பொருட்செலவு ஏற்பட்டதால் 1886இல் பாப்பான் என்ற இடத்திலிருந்த இரண்டு ஐரோப்பிய ஈயச் சுரங்கங்கள் ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் இலாபகரமாயில்லாத்தால் சீனர்களுக்கு விற்க வேண்டியதாயிற்று. சீனர்கள் அதே ஈயச் சுரங்கத்தில் தாங்கள் ஈயம் எடுக்கும் முறையின் மூலம் அதிக உற்பத்தி செய்து இலாபகரமாக நடத்தினர்."[45] ஈயத் தொழில் மேம்பாட்டிற்குச்

[45]. Malaya had been known for her tin since the early days. Traders came to Malaya not only from neighbouring countriesbut also from far away countries……. In Kinta the Europeans found that their methods of production were too expensive and the two European mines, which began operations in 1886 at Papan, had to be sold to the Chinese five years lateras they were running at a great loss. Under Chinese

சீனர்களின் பங்கு அதிகமாகவே இருந்தது என்பதற்குச் சான்றுகள் காணக்கிடைக்கின்றன. இருப்பினும் சீனர்களின் வருகைக்கு முன்னர் ஈயம் எடுக்கும் தொழில் மலாய்க்காரர்களிடமே இருந்தது. 1824க்குப் பிறகு சீனர்கள் லுக்கூட், சுங்கை உஜோங் ஆகிய இடங்களில் ஈயம் எடுக்கத் தொடங்கினர். சீனர்கள் புதிய தொழில் நுட்பத்தைக் கையாண்டனர். ஈயக் குட்டைகளில் சங்கிலித் தொடர் பம்ப் முறையால் ஈயக்குட்டைகளில் வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்த்தனர். அரசாங்கத்திடமிருந்து சலுகை விலையில் ஈயம் உள்ள நிலங்களைப் பெற்றனர். கிண்டாவில் ஐரோப்பியர்களுக்குச் சொந்தமான ஈயக் கப்பல் முறையால் ஈயம் எடுப்பது அதிக செலவானதால் ஈய உற்பத்தி இலாபகரமாக இல்லை. குறுகிய காலத்தில் சீனர்களின் ஈயத் தொழில் விரிவடைந்து இலாபகரமாக இருந்ததால் அதிகமான தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். எனவே சீனாவிலிருந்து அதிகமான தொழிலாளர்களைக் கொண்டு வந்தன.

சீனாவில் ஏற்பட்ட போதைப் பொருள் யுத்தத்திற்குப் பின்னர் சீன மக்களின் குடியேற்றம் மலாயாவின் பக்கம் திரும்பியது. இவர்களில் பெரும்பாலோர் ஈயச் சுரங்கங்களில் வேலை செய்தனர். மற்றவர்கள் விவசாயத் தொழிலாளர்களாக இருந்தனர். மரவள்ளிக் கிழங்கு பயிரிடல், மிளகு உற்பத்தி, காப்பி மற்றும் கரும்புத் தோட்டங்களில் கூலித் தொழிலாளர்களாக வேலை செய்தனர். காடுகளில் கிடைக்கும் பிரம்பு, மூங்கில் சம்பந்தப்பட்ட தொழிலிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

1850ஆம் ஆண்டுகளில் பெரிய அளவிலான சீனக் குடியேற்றக்கார்ர்கள் வரத் தொடங்கினர். இவர்களில் வணிகர்களைவிடக் கூலித் தொழிலாளர்களே அதிகமாக இருந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளுக்கு ஈயத்தின் தேவை அதிகரித்தது. இந்நாடுகள் மலாயாவிலிருந்து அதிக அளவில்

---

methods, the same mines became very productive and profitable. . -Janakey Raman Manickam ,The Malaysian Indian. P.40”

ஈயத்தை இறக்குமதி செய்தன. இதனால் ஈய உற்பத்தித் தொழில் விரிவடையத் தொடங்கியது. 1880ஆம் ஆண்டு பேரா மாநிலத்தில் லாருட், கிண்டா பகுதிகளிலும் சிலாகூர் மாநிலத்திலும் ஈயம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. 1898 இல் ஈயத் தொழிலின் வளர்ச்சி உச்சக் கட்டத்தை அடைந்தது. தொழிலாளர்களின் ஊதியம் கவர்ச்சிகரமாக இருந்ததால் சீனத் தொழிலாளர்களின் புலம்பெயர்வு ஊக்கமுடையதாக இருந்தது. 1874இல் 100,000 பேர்களுக்குக் குறையாத சீனர்கள் மலாயாவுக்குப் புலம் பெயர்ந்தனர். கி.பி1880- கி.பி1890க்கும் இடையில் ஆண்டுக்கு.150,000 சீனர்கள் வந்தனர். 1920களில் இவ்வெண்ணிக்கை ஆண்டுக்கு 300,000 பேர்களுக்கு மேல் உயர்ந்தது. ஈயம் பற்றிய சிறு தொகுப்பு ஒன்றினைக் காண்போம்.

தங்கத்திற்கும் ஈயத்திற்கும் பெயர் பெற்ற மலாயாவில் பல நூற்றாண்டுகளாக ஈயம் எடுக்கப்பட்டு வந்தது. 1848இல் பேரா மாநிலத்திலுள்ள லாருட்டில் அதிக அளவில் ஈயம் இருப்பதைக் கண்டுபிடித்து ஈயத் தொழிலை விரிவுபடுத்தியவர் 'லாங் ஜாஃபார்'. ஈய வளமிகுந்த லாருட்டில் தன் நிலத்தில் ஈயம் எடுக்கச் சீன ஈயச் சுரங்கத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டார். சீன ஈயத் தொழிலதிபர்கள், வணிகர்கள் ஆகியோரைத் தன் நிலத்தில் ஈயம் எடுக்க ஊக்குவித்தார்.

மலாயாவில் ஈயத் தொழில் சீனத் தொழிலாளிகளின் ஆதிக்கம் அதிகம் என்றே கூற வேண்டும். எனவே சீனாவிலிருந்து அதிகமான தொழிலாளிகள் வரத் தொடங்கினர். உலக நாடுகளில் ஈயத்தின் தேவை அதிகரித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மலாயா உலகத்திலேயே அதிகமான ஈய உற்பத்தி நாடாகத் திகழ்ந்தது.

இவ்வாறு சீனர்கள் தொழில் கருதி, செல்வம் கருதி மலாயாவிற்கு வந்துள்ளனர்.

தொகுப்புரை

மலேசியா பல்லினக் குழுக்கள் வாழும் நாடாகும். இந்நாட்டில் மலாயர்க்காரர்கள், தமிழர்கள், சீனர்கள் ஆகிய மூவினத்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களைத் தவிர சில பூர்வீகக் குடியினரும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் முக்கியமானவர்கள் நீகிரோவர், சக்கேயர், ஆதி மலாயர் என்பவர்கள் ஆவர். இவர்களில் நீகிரோவர், சக்கேயர் ஆகியோர்கள் முறையே தென்கிழக்கு ஆசியாவிலிருந்தும், மங்கோலிய இந்தோநேசிய நாடுகளிலிருந்தும் குடிபெயர்ந்துள்ளனர். இவர்களைத் தவிர மலாயர், ஆதிமலாயர் ஆகியோர்களும் பூர்வீகக்குடிகளாக வாழ்ந்து வருகின்றனர். சீனர்கள் சீனாவில் இருந்தும், தமிழர்கள் தென்னிந்தியாவில் இருந்தும் குடியேறியுள்ளனர். மலாய் இனம் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோநேசியா, மியான்மர், இலங்கை, மடகாஸ்கர் போன்ற பகுதிகளில் இருந்தும் மலேசியாவிற்கு வந்தவர்களாகக் கருதப்பெறுகிறது. சீனர்கள் "வூ" மக்கள் என்றும், வட சீனர்கள் என்ற இரு நிலைகளில் மலேசியாவிற்குப் புலம் பெயர்ந்துள்ளனர். எனவே மலேசிய நாடு பல் இனங்கள் குழுமி வாழும் நாடாக விளங்குகிறது.

தமிழர்களுக்கும் மலேசியாவிற்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் தொடர்பு இருந்துள்ளது. சோழப் பேரரசின்போது இத்தொடர்பு விரிவடைந்தது. வணிகத் தொடர்பினால் இன்னும் தமிழர்களுடனான தொடர்பு நெருக்கம் பெற்றது. ஆங்கிலேய ஆட்சி காலத்தில் தமிழர்கள் கூலித் தொழிலாளர்களாகப் புலம் பெயர்ந்துள்ளனர். அவ்வாறு அவர்கள் பெயர்ந்த நிலையில் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகிப் பின் மெல்ல உரிமை பெற்றுள்ளனர். தற்காலத்திலும் தமிழர்களுக்கு உரிய உரிமை ஓரளவே வென்றெடுக்கப் பெற்றுள்ளது.

மலாய் நாடு விஜய பேரரசாலும், பரமேஸ்வரன் என்ற ஆளுமையாலும் விரிவும் உலகு தழுவிய அறிமுகமும் பெற்றது.

சீனர்கள் பதினான்காம் நூற்றாண்டு முதல் மலாயாவுடன் தொடர்புடையவர்களாக விளங்கியுள்ளனர்.

இவ்வாறு மூன்று இன மக்களும் தத்தமக்கான பாரம்பரியத்துடன், இன அடையாளங்களுடன் மலேசியாவிற்கு வருகை புரிந்து இன்றளவும் இயைபுடன் வாழ்ந்து வருகின்றனர்.

சான்றெண் விளக்கம்

1. www. Population of Malaysia இணையதளத்தின் கணக்கீட்டின் படியானது.
2. சுவாமி சத்தியானந்தா .ஜெ - மலாயா சரித்திரம், ப.17
3. மேலது, ப.17
4. ந. வீரப்பன், மலாய தமிழர்கள், ப.18
5. மேலது, ப.19
6. சுவாமி சத்தியானந்தா, மலாயா சரித்திரம், ப.24
7. ஜானகிராமன் மாணிக்கம், மலேசிய இந்தியர்களின் இக்கட்டான நிலை, ப.159.
8. குறிஞ்சி வேந்தன். இரா., மலாயா தமிழர் சரித்திரம், ப.69
9. வீ.நடராஜன் - சோழன் வென்ற கடாரம், பூஜாங் பள்ளத்தாக்கு, ப.27
10. Janakey Raman Manickam., The Malaysian Indian, Forgotten History of the Colonial Era Swea, ப.68
11. சுவாமி சத்தியானந்தா - மலாயா சரித்திரம் ப.17
12. மு.ந.வீரப்பன், மலாயத் தமிழர், ப.18
13. இணையதளம் (people of sarava sabha)
14. அரசு தகவல் இலாக அமைச்சு, மலேசியா, துண்டு பிரசுரங்கள்.
15. மகாதீர் பின் முகமட், மலாய்க்காரர்களின் இக்கட்டு நிலை, ப.19
16. புலியூர் கேசிகன் தெளிவுரை, கலிங்கத்துப்பரணி, ப.110
17. வீ. நடராஜன், சோழன் வென்ற கடாரம் (பூஜாங் பள்ளத்தாக்கு), ப.35
18. ஜானகிராமன் மாணிக்கம், மலேசிய இந்தியர்களின் இக்கட்டான நிலை, ப.42
19. புலியூர் தேசிகன் (உ.ஆ), பட்டினப் பாலை, அடிகள் 185 - 193 ப.63
20. மதுரைப் பேரகராதி ப.615
21. இராமசாமி. பி. டாக்டர். மலேசியத் தோட்டத் தொழிலாளர் வாழ்வும் போராட்டங்களும், ப.44.
22. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், ப. 36
23. செயங்கொண்டார், கலிக்கத்துப்பரணி, பாடல் 203

24. தண்டாயுதம் இரா., தற்கால தமிழ் இலக்கியம் பக்.106,107
25. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், ப. 37
26. பூபாலன் க - மலேசியாவில் தென்னிந்தியத் தமிழர்கள். ப.207
27. குறிஞ்சி வேந்தன் இரா., மலாயா தமிழர் சரித்திரம், பக்.12, 13
28. மைக்கேல் ஸ்டென்சன், புலம் பெயர்ந்த தமிழர்கள், மலேசியா, ப. 41
29. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், ப. 36
30. சர்மா எஸ்.எஸ் - கடல் கடந்த தமிழர்களின் கவின்கலைகள். ப.109
31. சர்மா, எஸ். எஸ்., கடல் கடந்த தமிழரின் கவின் கலைகள், 8ஆவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப.220
32. ஆய்வாளர் கணேசன், "மலேசிய நண்பன்" நாளிதழ் திகதி 18.2.2017
33. குறிஞ்சி வேந்தன் இரா - மலாயா தமிழர் சரித்திரம் - ப.16
34. திருநாவுகரசு, க.த., தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, ப.302
35. Janakey Raman Manickam., The Malaysian Indian, Forgotten History of the Colonial Era Swea, பக்.73-74
36. குறிஞ்சி வேந்தன். இரா., மலாயா தமிழர் சரித்திரம், ப.75
37. முரசு நெடுமாறன், மலேசிய தமிழ்க் கவிதைக் களஞ்சியம். ப.335
38. ஜானகிராமன் மாணிக்கம், மலேசிய இந்தியர்களின் இக்கட்டான நிலை, ப. 173.
39. Janakey Raman Manickam., The Malaysian Indian, Forgotten History of the Colonial Era Swea, ப.229
40. ஜானகிராமன் மாணிக்கம், மலேசிய இந்தியர்களின் இக்கட்டான நிலை, ப. 184
41. "மலேசிய நண்பன்", நாளிதழ் திகதி, 18.2.2017
42. தகவலாளி பெயர் ஆர். இராமன், தலைவர் மலேசிய தமிழ் இலக்கியக் கழகம், கோலாலம்பூர்.
43. Janakey Raman Manickam., The Malaysian Indian, Forgotten History of the Colonial Era Swea, ப.23

44. சுவாமி சத்தியானந்தா, மலாயா சரித்திரம், ப. 47

45. Janakey Raman Manickam., The Malaysian Indian,
Forgotten History of the Colonial Era Swea, ப.40

இயல் 2

பல்லின மக்களின் மொழிகளும் கலாச்சாரங்களும்

மலேசிய நாடு பல்லின மக்கள் தொகுதி வாழும் சமுதாயமாக விளங்குகின்றது. இந்நாட்டில் மலாயர், சீனர், தமிழர்கள் என்ற மூவினத்தவர்கள் இணைந்து வாழ்ந்து வருகின்றனர். இம்மூவினத்தாரும், ஒருவருக்கு ஒருவர் வேறுபாடான நிலப்பகுதிகளில் இருந்து மலாயாவில் ஒருங்காய் வாழும் குடியேற்ற நிலை பெற்றவர்களாவர். இவர்களின் மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியன வேறுபட்டனவாகும். மலேசியாவில் மலாய் மொழியின் ஒழுங்கு படுத்தப்பட்ட மொழிவடிவமாக மலேசிய மொழி ஆட்சி மொழியாக விளங்கி வருகின்றது. ஆங்கிலம் இரண்டாம் மொழியாக அமைகின்றது. இவற்றைக் கடந்து தமிழ், சீனம் ஆகிய மொழிகளும் இங்குப் பேசப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக மலேசிய மொழி, ஆங்கிலம், தமிழ், சீனம் போன்ற மொழிகள் பேசும் மக்கள் இனத்தவர்கள் வாழும் நாடாக மலேசியா விளங்குகின்றது. இப்பல்லின மக்களின் மொழி நிலை, கலாச்சாரப் பின்னணி பற்றி இவ்வியல் செய்திகளைத் தொகுத்து அமையப் பெறுகிறது.

மலாய் மொழி அல்லது மலேசிய மொழி

மலாயர்களிடையே பல உட்பிரிவுகள் இருப்பினும் பொதுவாக அனைவரும் மலாய் மொழியைப் பயன்படுத்துகின்றனர். மலாய் மொழி பெரும்பாலும் இந்தோநேசிய மொழியைப் போன்றதாகும். இவை இரு மொழிகளுக்குள் உச்சரிப்பில் சிறு சிறு மாற்றங்கள் உள்ளன. மலாய் மொழி ஆஸ்திரனோசியா குடும்பத்தைச் சார்ந்த ஒரு மொழியாகும். இது ஆசியாவின் தென்பகுதியிலுள்ள மலாயா தீவுக் கூட்டப் பிரதேசத்தில் உள்ள இந்தோநேசியா, மலேசியா, புருனை, சிங்கப்பூர், பிலிப்பினஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளில் பேசப்படுகின்றது. இந்தோநேசியா, மலேசியா, புருனை ஆகிய நாடுகளின் தேசிய மொழியாகத் திகழ்கிறது.

மலாய் மொழியை மலாக்கா நீரிணையைச் சுற்றியுள்ள நாடுகளில் நாற்பது மில்லியன் மக்கள் தங்களின் பூர்வீக மொழியாகப் பேசி வருகின்றனர். மலாய் மொழிக்கு வேறு பல பெயர்களும் உள்ளன. பகாசா கெபங்சான் என்னும் மொழி தேசிய மொழி ஆகும். இம்மொழியை பகாசா என்றும் அழைக்கப் படுகின்றது. இம்மொழி, சிங்கப்பூரிலும் புருனையிலும் பகாசா மிலாயு என்றும், மலேசியாவில் பகாசா மலேசியா என்றும், இந்தோநேசியாவில் பகாசா இந்தோநேசியா என்றும் அழைக்கப்படுகின்றது.

மலாய் மொழி வளர்ந்த வரலாறு

மலேசியாவில் 15ஆம், 16ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் மலாக்காவை ஆட்சி செய்த சுல்தான்களின் ஆளுமையில் மலாய் மொழி செல்வாக்குப் பெற்றிருந்தது. பழைய மலாய் மொழியின் பிறப்பிடம் சுமத்திரா தீவாகும். மலாய் மொழியின் உறவு மொழியான மினாங்கபாவ் மொழியும் இங்குதான் தோன்றியது. தென் சுமத்திராவின் தாத்தாங் ஆற்றுப்பகுதிகளில் ஏழாம் நூற்றாண்டு கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டன. அந்தக் கல்வெட்டுகள் 'கெடுக்கான்புக்கிட்' என்றழைக்கப்படுகின்றன. அந்த கல்வெட்டுகளை டச்சுக்கார் எம்.பாட்டர்ன்பெர்க் 29.11.1929 இல் தென் சுமத்திராவில் கெடுக்கான் புக்கிட் என்ற இடத்தில் கண்டெடுத்தார். இக் கல்வெட்டு 45 செ.மீ அகலமும் 80 செ.மீ நீளமும் கொண்ட சிறிய கல் வெட்டாகும். அந்த கல் வெட்டில் மலாய் எழுத்துகளோடு பல்லவர் கால கிரந்த எழுத்துகளும் அமைந்துள்ளன.

மலாய் மொழியின் எழுத்துகளும், அதன் தன்மைகளும்

மலாய் மொழியின் எழுதுமுறை என்பது, உருது மொழி போன்று வலப் பக்கமிருந்து இடப்பக்கம் எழுதுவதாகும். இம்மொழியின் எழுத்துகள் ஜாவி என்று அழைக்கப்படுகிறது. இது மலாய் மொழிக்கான தனித்த எழுத்து வடிவம் ஆகும். இவ்வடிவம் தொடக்கக் காலத்தில் அனைவராலும் பயன்படுத்தப்பட்டது. "தொடக்க கால மலாய் நாளிதழ்களும் ஜாவி எழுத்தில் வெளிவந்தன. அவ்வாறு ஜாவி எழுத்தில் வெளிவந்த நாளிதழ் 'உத்துசான்

மிலாயு' என்பதாகும்."[1] இப்பழைய முறை தவரி ஆங்கில எழுத்தில் மலாய் மொழியை எழுதிடவும், கற்கவும் ஆன முறை ஒன்று உருவானது. இம்முறை கற்கவும் எழுதவும் எளிதாயிருந்ததால் ஜாவி எழுத்துதுருவம் மறையத் தொடங்கியது.

மலாய் மொழியும் அதன் ஆங்கில வடிவமும்

மலாயா ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்த பின்னர் மலாய் மொழிக்குப் புத்துருவம் கொடுக்கப்பட்டது. மலாய்ச் சொற்களை எழுதவும் உச்சரிக்கவும் ஆங்கில எழுத்துகள் பயன்படுத்தப்பட்டன. இம்முறை ஜாவி எழுத்தைவிட மிக எளிதாகவும் விரைவாகவும் எழுதும் நிலையினால் இது பரவலாகியது. தற்பொழுது மலாய் மொழி இலக்கியங்கள், அறிவியல் நூல்கள் இன்னபிற நூல்கள் அனைத்தும் ஆங்கில எழுத்துகளாலான மலாய் எழுத்து நடையில் எழுதப்பெற்று வருகின்றன.

மலேசிய அரசு சட்ட விதி நூற்று ஐம்பத்தியிரண்டில் கண்டுள்ளபடி மலேசிய மொழி நாட்டின் தேசிய மொழியாயிற்று. மலேசிய நாட்டின் தேசிய மொழியாதலால் பிற இன மக்களும் இம் மொழியைக் கற்றுப் பாண்டித்தியம் பெறுகின்றனர். மலாய் மொழி நாளிதழ்கள் பல ஆங்கில எழுத்துகளால் உருவாக்கம் பெற்று வெளிவருகின்றன. ஆங்கிலேயர் காலத்தில் ஆட்சி ஆங்கிலத்தில் நடைபெற்றது போல இப்பொழுது மலாய் மொழியிலேயே ஆட்சி நடைபெறுகிறது. கல்விக் கூடங்களில் மலாய் மொழி கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளது. மலேசிய நாட்டில் ஏழு அரசு பல்கலைக் கழகங்களும் பல தனியார் பலகலைக் கழகங்களும் இருக்கின்றன. வெளி நாட்டு மாணவர்கள் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள், ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இங்குள்ள பல்கலைக் கழகங்களில் பயில்கின்றனர். மலேசிய மொழி நாட்டின் தேசிய மொழியாதலால் அரசு அலுவல்கள் யாவும் மலேசிய மொழியிலேயே நடைபெறுகின்றன. மலாய் மொழி தேசிய மொழியாக

1. . மகாதீர் பின் முகமட், மலாய்க்காரர்களின் இக்கட்டு நிலை, ப.8

இருப்பினும் நிர்வாக வசதிக்காக குறிப்பிட்ட சில துறைகளில் அரசு ஆங்கிலத்தையும் பயன்படுத்துகிறது.

தமிழ்

மலேசியத் தமிழர்களிடையே பல உட்பிரிவுகள் இருப்பினும் அனைவரும் தமிழ் மொழியையே பேசுகின்றனர். இங்கு வாழும் தமிழர்கள், தமிழோடு தேசிய மொழியான மலாய் மொழியும் ஆங்கிலமும் பேசுகின்றனர். மலேசிய நாட்டில் ஐநூற்று இருபத்தாறு தமிழ் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் மொழிவழிக் கல்வியும், மலாயும் ஆங்கிலமும் கட்டாய மொழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. இங்குள்ள தமிழ்ப் பள்ளிகளில் தமிழர்களின் குழந்தைகள் அறுபது விழுக்காட்டினர் பயில்கின்றனர். தேசியப் பள்ளி எனப்படும் மலாய் மொழிப் பள்ளிகளிலும் சீனப் பள்ளிகளிலும் பயிலும் தமிழ் மாணவர்கள் நாற்பது விழுக்காட்டினர். குறைந்தது பதினைந்து தமிழ் மாணவர்கள், தமிழ்ப் பள்ளி அல்லாத மற்ற பள்ளிகளில் இருந்தால் தமிழ் மொழி போதிக்கப்படுகிறது.

தொடக்க நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்போடு தமிழ் வழிக்கல்வி முடிவடைகிறது. தமிழ் இடைநிலைப் பள்ளிகள் இதுவரை நிறுவப்படாத நிலையில் தமிழ் கற்ற மாணவர்கள் இடைநிலைக்கல்வியைக் கற்க மலாய மொழி வழி கற்பிக்கப்படும் பள்ளிகளுக்குத் தம் மேல் படிப்பிற்காகச் செல்ல வேண்டி உள்ளது.

தொடக்கக்கல்வி, இடைநிலைக்கல்வி ஆகியற்றில் ஆங்கிலம் கட்டாயப் பாடமாகும். தமிழ் மொழி பாட நேரத்திலேயே ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. விரும்பினால் பல்கலைக் கழகம் வரை தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கற்கலாம் என்ற நிலையும் இங்கு உள்ளது.

மலேசியாவில் உள்ள தொடக்க நிலை, இடைநிலை, உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தும் அரசாங்கப் பள்ளிகளாகும். மாணவர்கள் கட்டணம் ஏதுமின்றி இலவசமாகவே கல்வியைக் கற்கின்றனர். தற்காலத்தில் பல்கலைக் கழகம் செல்லும் மாணவர்கள் பலர் தமிழப் பள்ளியில் பயின்றவர்கள் என்பது

குறிப்பிடத்தக்கது. தமிழ்ப்பள்ளியிலிருந்து செல்லும் மாணவர்களில் பெரும்பாலானர் தமிழ், மலாய், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் பேசுதல், படித்தல், எழுதுதல் போன்ற பயிற்சிகளைப் பெற்றவர்களாக விளங்குகின்றனர்.

மலேசியாவில் தமிழ் மொழி வளர்ந்த வரலாறு

பதினைந்தாம் நூற்றாண்டில் மலாக்கா பேரரசு பரமேசுவர மகா ராஜாவால் நிறுவப்பட்டபோது பெருமளவில் தமிழக வர்த்தகர்கள் இருந்தனர். எனவே, மலாய் மொழி பெருமளவிலும், தமிழ் மொழி ஓரளவும் புழக்கத்தில் இருந்தன. மலாய்க்காரர்களில் சில அரசு உயர் அதிகாரிகளும் தமிழ் மொழி பேசினர். "தென் இந்தியாவில கிருஷ்ணதேவராயர் விசயநகர் பேரரசை ஆண்டபோது மலாக்காவின் கடற்படைத் தளபதியாய் விளங்கிய ஹங் துவா அரசப் பேராளராய்த் விசயநகரம் சென்று கிருஷ்ணதேவராயரைச் சந்தித்ததாகவும் ஹங்துவா சரளமான தமிழில் பேசியதனைக் கேட்டு மன்னர் வியந்ததாகவும் வரலாறு இயம்புகிறது ."[2] இவ்வாறு கிருஷ்ண தேவராயர் காலத்தில் இருந்தே தமிழ் மலேசியாவில் ஆளுமை பெற்ற மொழியாக வளர்ந்து வந்துள்ளது. இவ்வாறு தமிழ் மொழி தமிழ் மக்கள் பேசும் மொழியாக, பாட மொழியாக மலேசியாவில் அமைந்துள்ளது.

சீன மொழி அல்லது மாண்டரின்

சீன நாட்டு மக்கள் மொழி சீன மொழியாகும் (சீனம்). சீனமே (மாண்டரின்) உலகில் அதிக பயன்பாட்டு மொழியாக இருக்கிறது. "ஏறக்குறைய 130 கோடி மக்கள் சீனத்தைப் பயன்படுத்துகின்றனர். உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒருவருக்குச் சீன மொழியே தாய் மொழியாகும்."[3] சீன மொழிக் குடும்பத்தில், பல வட்டார மொழிகள் உண்டு. மரபு நோக்கில் பத்து வட்டார மொழிகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றுள் பெய்ஜிங்கில் பேசப்படும் வட்டார மொழி மாண்டரின் என்பதாகும். இது சீனர்களுக்கான பொது மொழியாக வழக்கில் உள்ளது. மாண்டரின்

---

2. வீ. நடராஜன், சோழன் வென்ற கடாரம் (பூஜாங் பள்ளத்தாக்கு), ப.19

3. Google en.wikipedia Burning of Books and burying of Scholars- xi

மொழியையே உலகில் வாழும் சீனர்கள் பொது மொழியாகப் பயன்படுத்துகின்றனர். இம்மொழி, அனைத்துச் சீனர்களும் பயன்படுத்தும் வகையில் சற்று எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. இம்மொழியின் எழுத்துகள் பட எழுத்துகளால் ஆனவை. ஒவ்வோர் எழுத்தும் ஒரு சொல்லைக் குறிப்பிடும்.

மலேசிய சீனர்களிடையேயும் பல பிரிவினர் அவரவர் தாய் மொழியைப் பேசினாலும் அனைத்துச் சீனர்களுக்கும் பொதுவான மொழி மாண்டரின் என்பதாக ஆக்கப்பெற்றது. "சீன நாட்டு முதல் பேரரசர் "ஷி ஹுவாங் தி" (கி.மு 259 - கி.மு 210) பிற சீன சமூகத்தினரின் மொழி, இலக்கியம், கலை, கலாச்சாரம் முதலியனவற்றைச் சுத்தமாகத் துடைத்தொழித்தார்."[4] "ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே இனம் என்ற கோட்பாட்டின்படி எல்லாருக்கும் ஒரே பேச்சு மொழி, ஒரே எழுத்து மொழி என்ற நிலையில் மாண்டரின மொழியைப் பிரகடனம் செய்தார். அன்று முதல் சீன சமூகத்தினர்களுக்குப் பொதுவாக மாண்டரின் எழுத்து மொழியாகவும் பேச்சு மொழியாகவும் திகழ்ந்து வருகிறது. மாண்டரினைத் தவிர்த்து வேறு சீன எழுத்து மொழிகள் கிடையா. இருப்பினும் சிற்சில குழுவினர் அவர்களின் தாய் (வட்டார) மொழியையும் பேசி வருகின்றனர். சீனாவின் முதல் பேரரசர் ஷி ஹுவாங் டி மட்டும் இவ்வாறான நடவடிக்கை எடுக்காதிருந்தால் ஐரோப்பா கண்டத்தில் பல நாடுகள் பல மொழிகள் என்பது மோலவும் இந்திய துணைக் கண்டத்தில் பல மொழிகள் இருப்பது போலவும் சீனாவும் இருந்திருக்கும்."[5] என்ற கருத்து இங்கு நோக்கத்தக்கது.

மலேசிய நாட்டில் வாழும் பல பிரிவினரைக் கொண்ட சீன சமூகம் பொதுவாக மாண்டரின் மொழியை உரையாடவும் எழுதவும் பயன்படுத்துகின்றனர். "நாட்டிலுள்ள சீனப் பள்ளிகளில் 95 விழுக்காட்டினர் சீன மாணவர்களும் ஐந்து விழுக்காட்டினர் இந்திய மலாய் மாணவர்களும் கற்கின்றனர்."[6] சீனத் தொடக்க நிலைப் பள்ளிகளில் பாடமொழியாக

---

4. மகாதீர் பின் முகமட், மலாய்க்காரர்களின் இக்கட்டு நிலை, ப.28

5 . சோமசுந்தரன் அரு., மலேசியா, ப.87

6 . மேலது, 88

மாண்டரின் உள்ளது. இதனுடன் மலேசிய மொழியும் ஆங்கில மொழியும் கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்படுகின்றன.

தொடக்க நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்போடு சீனம் (மாண்டரின்) போதனா மொழி முடிவடைகிறது. சீனப் பள்ளி மாணவர்கள் இடைநிலைப் பள்ளிக்குச் சென்று மலாய்ப் போதனா மொழியில் எல்லாப் பாடங்களையும் கற்பர். இவர்களுக்கும் ஆங்கிலம் கட்டாய மொழியாகும். சீன மொழி பாட நேரத்திலேயே கற்பிக்கப்படுகிறது. விரும்பினால் பல்கலைக் கழகம் வரை சீன மொழியை ஒரு பாடமாகக் கற்கலாம். மலேசிய நாட்டில் பல சீன மொழித் தனியார் இடைநிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. சீன மொழயை (மாண்டரின்) மாணவர்கள் விரும்பினால் வெளிநாடுகளில் பல்கலைக் கழகம் சென்று படிக்க வாய்ப்பு உண்டு.

இவ்வாறு மூவின மக்கள் தம் தொடக்கக் கல்வியைத் தத்தம் தாய்மொழியையும் இடைநிலைக்கல்வியை மலாய் மொழியிலும் கற்று வருகின்றனர். விருப்பமுடையோர் தம் தாய்மொழியினைப் பாட மொழியாகப் பல்கலைக்கழக பாட அளவு வரை கற்காலம் என்ற நிலைப்பாடு மலாயாவில் உள்ளது. இதன் காரணமாக இங்கு வாழும் மூவினக்குடிகள் தம் தாய்மொழியுடனான தொடர்பினையும், மலாய் மொழியுடனான தொடர்பினையும் பெற்று வருகின்றனர்.

<u>கலாச்சாரம்</u>

கலாச்சாரம் என்பது பண்பாடு என்ற பொருளில் வழங்கப்படுகிறது. உணவு, உடை, திருமணம், விளையாட்டு, கலை, நடனம், சங்கீதம், நாடகம் போன்ற கூறுகள் இதனுள் அடங்கும். மலேசியாவில் மூன்று கலாச்சாரம் சார்ந்த மக்கள் பிரிவினர் வாழ்ந்து வருகின்றனர். இதன் காரணமாக கலாச்சார இணைவு கொண்ட நாடாகவும் மலேசியா விளங்கி வருகிறது. இந்நாட்டின் கலாச்சாரத் தன்மை என்பது கூட்டிணைவு கொண்டதாக விளங்குகிறது.

மலாய்க்காரர்களின் கலாச்சாரம்

மலாய்க்காரர்களின் கலாச்சாரம் என்பது தனித்த வகையினதாக விளங்கின்றது. இவர்கள் உடை, உணவு, வாழ்வியல் சடங்குகள் போன்றவற்றில் தனித்தன்மையுடன் விளங்குகின்றனர்.

உடை

மலேசியாவில் பல்லின மக்கள் வாழ்ந்தாலும் அவரவர்க்கு தங்கள் பாரம்பரிய உடை முக்கியமானதாகக் கருதப்படுகிறது. மலாயர்கள் தங்களுக்கென தனித்த பாரம்பரிய உடையை அணிந்து வருகின்றனர். அவர்களின் உடையானது பாஜூகுரோங், பாஜூகெபாய, பாஜூமிலாயு என அழைக்கப்படுகிறது.

பாஜூகுரோங்

மலாய் இனப் பெண்கள் 'பாஜூகுரோங்' என்ற இடுப்பிலிருந்து பாதம் வரை அணியும் கைலி (லுங்கி), முழங்காலை மறைக்கும் நீண்ட முழுக்கை, கழுத்துப் பட்டை இல்லாத ரவிக்கை ஆகியவற்றை அணிகின்றனர். இதுவே பெண்களுக்கான பாரம்பரிய உடையாகும். இவ்வுடைகளைப் பல் வண்ணப் பருத்தி, பட்டுத் துணியால் தைத்துக் கொள்கிறார்கள். " மேற்கு மலேசியாவின் கிழக்கு மாநிலங்களான திரங்கானு, கிளந்தான் மாநிலங்களில் வாழும் பெண்கள் 'பாத்தெக்' எனப்படும் தனி வடிவமைப்புக் கொண்ட வண்ண வண்ண ஆடைகளை அணிந்து கொள்கின்றனர். பாத்தெக் துணியில் பெண்கள் பாஜூகுரோங் ஆடையும், ஆண்கள் மற்ற இனத்தவர்கள் உட்பட அனைவரும் மேல்சட்டையும் விரும்பி அணிவார்கள். பெண்கள் பாரம்பரிய உடை உடுத்தும்போது தலையில் முக்காடு அணிவார்கள்.

ஆண்களுக்கான பாஜூகுரோங் மேல் சட்டை முழுக்கை உடையதாகவும் கீழ்ப் பகுதியில் வலமும் இடமும் இரண்டு சட்டைப்பைகள் இருக்கும். கால் சட்டை தளர்ச்சியானதாக இருக்கும். இடுப்பிலிருந்து முட்டிக் கால் வரை 'சாம்பின்' கைலி போன்றதைச் சுற்றிக் கொள்வார்கள். விழாக்கள், பண்டிகை

நாள்கள், பள்ளிவாசலுக்குச் செல்லும்போதும் 'சாம்பினைச்' சுற்றிக் கொண்டு தலையில் சோங்கோக் என்னும் குல்லாவை அணிந்து கொள்வார்கள்."[7] அரசு பணிமனைகளில் வேலை செய்யும் பெண்களும் மலாய் மாணவிகளும் பாஜு குரோங் அணிய அரசு அனுமதி அளித்துள்ளது.

பாஜுகெபாய

பெண்கள் அணியும் மற்றொரு பாரம்பரிய உடை பாஜு கெபாயா என்பதாகும். "உடலோடு ஒட்டியிருக்கும் ஏறக்குறைய பாஜு குரோங் போன்று இவ்வாடை இருக்கும். பெரும்பாலும் மலேசிய விமானப் பணிப்பெண்கள் இதனை அணிந்திருப்பார்கள். மலாயர்கள் இசுலாம் மதத்தைப் பின்பற்றத் தொடங்குவதற்கு முன்னால் 'கெம்பான்' என்னும் ஆடையை அணிந்திருப்பர். 'சாரோங்' என்னும் கைலியை மார்புக்கு மேலே கட்டியிருப்பார்கள."[8]

பாஜுமிலாயு

ஆண்கள் மலாயர் பாரம்பரிய உடையான 'பாஜு மிலாயு' என்பதை அணிகின்றனர். இவ்வகை ஆடையானது மலாய் முழுக் கை மேல் சட்டை, தளர்ச்சியான கால் சட்டை ஆகிய அமைப்பினை உடையது. மேல் சட்டையின் கழுத்துப் பட்டை சற்று இருக்கமானதாக இருக்கும். இந்த உடை பருத்தி அல்லது பட்டால் ஆனதாக இருக்கும். பாஜு மிலாயு அணிந்து 'சொங்கோக்' என்னும் குல்லாவும் அணிகின்றனர். திருமணம் போன்ற நிகழ்வுகளில் ஆண்கள் தலைப்பாகை அணிவர்.

---

7. தகவலாளி லிம் கோ கொக் (முகமது தையற்கடை)தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.

8. தகவலாளி லிம் கோ கொக் (முகமது தையற்கடை)தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.

மேற்சொன்னதன் வாயிலாக, ‘‘பாஜு மிலாயு ஆண்களுக்கும் பாஜு குரோங் பெண்களுக்குமான உடைகளாகும்’’[9] என்பதை உணரமுடிகின்றது. பொதுவாக மலாய்க்காரர்கள் தங்களின் பாரம்பரிய உடைக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். குறிப்பாகப் பள்ளிவாசலுக்குச் செல்லும்போது நூறு விழுக்காட்டினர் பாரம்பரிய உடை அணிகின்றனர். இந்நிலையில் உடை என்பது இனத்தைத் தெரிவிக்கும் பண்பாட்டு அடையாளமாக மலாய்க்காரர்களுக்கு விளங்குகின்றது.

மலாய்க்காரர்களின் உணவு

மலேசியாவில் வாழும் மலாய்க்காரர்கள் இசுலாமியர்கள் ஆதலால் புலால் உணவுவையும் கடல் உணவையும் தாராளமாக உண்கின்றனர். மலாய்க்காரர்கள் அரிசி உணவு (சோறு) உண்கின்றனர். இவர்கள் காய்கறி, மீன், கோழி, வாத்து, ஆடு, எருமை, மாடு, ஆகியவற்றின் இறைச்சியை மிகவும் விரும்பி உண்பர். மலாய்க்காரர்கள் பன்றி இறைச்சியை உண்ணமாட்டார்கள். இசுலாமிய சமய மரபுக்கேற்ப பன்றி இறைச்சி இங்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டவற்றைக் குழம்பு வைத்தும், பொரித்தும் சோற்றுடன் உண்பர். கருவாடு, நெத்திலி ஆகியவற்றைப் பெரும்பாலும் பொரித்து சோற்றுடன் உண்பார்கள்.

மலாயர்களின் விருந்து நடைமுறையில் எல்லா உணவு வகைகளும் ஒரே நேரத்தில் பரிமாறப்படும். மலாய்க்காரர்கள் சாப்பிடுவதற்கு வலக்கையைப் பயன்படுத்துவார்கள். இவர்கள் கரண்டியால் சாப்பிடுவது மிகக் குறைவே ஆகும். கைகளால் சாப்பிடுவது மரியாதைக்குரியதாகவும் பாசத்தை வெளிப்படுத்தும் அடையாளமாகவும் விளங்குகின்றது.

மலாய் உணவு வகைகள்

மலாய்க்காரர்களின் உணவு வகைகள் பலவாகும். இவர்கள் சோறு உணவைப் பல வகைகளில் சமைத்து உண்கின்றனர். “மலாய் உணவு

9. தகவலாளி லிம் கோ கொக் (முகமது தையற்கடை)தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.

வகைகளில் நெய்ச்சோறு , நாசி ஊலாம், நாசிக் கொரங், நாசி கண்டார், நாசி கிராபு , நாசி லெமாக், நாசி கோரிங் பட்டாய, ரென்டாங், சாத்தே, கெத்துபாட், ஐஸ் செண்டோல், பினாங்கு லக்சா, சம்பால் பிலாச்சான், கோரெங் பீசாங், அப்பம் பாலெக், புட்டு பிரிங், ரொட்டி சனாய், ரொட்டி ஜால, புலுட், ஈக்கான் பாக்கார், ஈக்கான் அசாம், பெடாஸ் போன்ற மலாய் உணவு வகைகள் குறிப்பிடத்தக்கது ஆகும்."[10] அவ்வகைகள் பின்வருமாறு.

நெய்ச்சோறு

மலாய்க்காரர்கள், தம் விழா நாட்களில் நெய்ச் சோறு, பிரியாணி முதலிய உணவுகளைத் தயாரித்து உண்டும், வழங்கியும் மகிழ்கின்றனர்.

நாசி ஊலாம்

நாசி ஊலாம் என்பது சமையல் வாசனைத் திரவியங்கள், மூலிகைத் தழைகள், காய்கறிகள் முதலியவற்றை அரிசியுடன் சமைத்துத் தயாரிக்கப்படும் உணவு வகையாகும்.

நாசிக் கொரங்

கடாயில் காய்கறிகள், புலால், நெத்திலி கருவாடு ஆகியவற்றுடன் சோறு இணைக்கப்பெற்றுத் தயாரிக்கப்படும் உணவு வகை நாசிக் கொரங் ஆகும். இதுவும் சிறப்பான உணவு முறையாகும். இதனைப் பிரட்டிய சோறு என்றும் கொள்ளலாம்.

நாசி கண்டார்

நாசி கண்டார் என்ற உணவு வகையானது, வட மலேசியா, பினாங்கு போன்ற இடங்களில் அதிக அளவில் உண்ணப்படுகிறது. இவ்வுணவு வகை மெல்லப் பரவி நாடு முழுவதும் விரும்பி உண்ணப்படும் உணவாகத் தற்போது

---

10. கோக் வா செங், ஷாரிப் உணவகம், தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்

விளங்குகின்றது. பெரும்பாலும் தமிழ் முஸ்லிம்கள் உணவகங்களில் நாசி கண்டார் சோறு கிடைக்கும் என்ற நிலைப்பாடு தற்போது உள்ளது.

நாசி கிராபு

இது நீலநிற சோற்றோடு கருவாடு, பொரித்த கோழி, மீன் அப்பளத்துடன் இணைத்து உண்ணப்படும் சோறு வகையாகும்.

நாசி லெமாக்

அரிசியை தண்ணீருக்குப் பதில் தேங்காய்ப் பாலில் வேக வைத்துச் செய்யப்படுவதே நாசி லெமாக் என்ற உணவு வகையாகும். சோறுடன் மிளகாயும் நெத்திலிப் பொடியும் கொஞ்சம் சீனியும் கலந்த தொக்குடன் இதனைச் சாப்பிட வேண்டும். இது மலாயர், சீனர், இந்தியர் மற்றும் மலேசியாவுக்கு வரும் வெளி நாட்டவர்களும் விரும்பி உண்ணும் உணவாகும்.

நாசி கோரிங் பட்டாய

தாய்லாந்து நாட்டில் பட்டாயா என்ற இடத்திலிருந்து வந்த உணவு ஆகையால் இப்பெயர் கொண்டுள்ளது. இலையில் சுற்றப்பட்ட பொரித்த கோழி, பொரித்த முட்டையுடன் கூடிய பிரட்டிய சோறு இதுவாகும்.

ரென்டாங்

ரென்டாங் உணவின் பூர்வீகம் இந்தோநேசியா சுமத்திராவிலுள்ள மினாங்காபாவ் என்ற பகுதியாகும். இவ்வுணவு மலேசியாவில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பெரும்பாலும் மாட்டிறைச்சி குழம்பு போல இது இருக்கும். இக்குழம்பு விழுதுபோல் இருக்கும். சுவைக்கான பல வாசனைப் பொருள்கள், தேங்காய்ப்பால், சித்திரத்தை முதலியவை கலந்து சமைப்பதால் இது சுவையாக இருக்கும். ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழி இறைச்சியாலும் ரென்டாங் செய்யப்படுகிறது. பெரும்பாலும் விழாக்கள், கொண்டாட்டங்களின்போது இவ்வுணவு பரிமாறப்படும்.

சாத்தே

"சாத்தேயின் பூர்வீகம் இந்தோநேசியாவாகும்."[11] மலேசியா நாட்டில் அனைத்து இனத்தவர்களும் விரும்பி உண்ணும் உணவு இதுவாகும். தொடக்க காலத்தில் சாத்தே மாட்டிறைச்சியால் மட்டுமே சமைக்கப்பட்டது. இன்று கோழி இறைச்சி அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. இறைச்சியை எலும்பு நீக்கிச் சிறு சிறு துண்டுகளாக்கி தென்னை மட்டை ஈர்க்கு போன்ற குச்சிகளில் ஆறு அல்லது ஏழு துண்டுகளைக் கோர்த்து நிலக்கரி அடுப்பில் வாட்டி எடுப்பார்கள். சிறிதளவு சர்க்கரை, மிளகாய், தேங்காய்ப்பால் கலந்த தொக்கில் தொட்டு உண்ணப்படும் உணவு ஆகும்.

கெத்துபாட்

கெத்துபாட் தென்னங் குருத்தோலையால் பின்னப்பட்ட கையடக்க சதுரமான பையில் ஊரவைத்த பச்சை அரிசி அல்லது பச்சை அரிசியை நீண்ட நேரம் நீராவியில் வேகவைப்பர். வெந்த அரிசி நன்றாக அழுத்திப் பிசைந்த மாவுபோலாகும். மேலே மூடியிருக்கும் ஓலையை நீக்கி சதுர வடிவில் சிறு சிறு துண்டுகளாக்குவர். தூள் செய்த வேர்க்கடலை, மிளகாய்த் தூள், சர்க்கரை கலந்த தொக்குடன் இது தயாரிக்கப்பெற்று உண்ணப்படும். நோன்புப் பெருநாள் காலத்திலும் விசேஷ நாள்களிலும் காணப்படும் உணவு ஆகும்.

ஐஸ் செண்டோல்

ஐஸ் செண்டோல் என்பது ஒருவகை பானம் ஆகும். இப்பானம் பல்லின மலேசிய மக்களால் விரும்பி அருந்தப்படுகிறது. கடற்பாசி நூடல், தேங்காய்ப்பால், கரும்புச் சர்க்கரை, பச்சைப் பாண்டான் இலை சேர்ந்த கலவையில் துருவிய பனிக்கட்டி சேர்த்து இது அருந்தப்படும். இதனுள் பாண்டான் இலை பச்சை நிறத்துக்காகவும், வாசனைக்காகவும் சேர்க்கப்படுகிறது.

---

11. கோக் வா செங், ஷாரிப் உணவகம், தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்

பினாங்கு லக்சா

பினாங்கு லக்சா மலேசியாவில் யாவரும் அறிந்த ஓர் உணவு. இது இரண்டு வகைப்படும். நூடுலுடன் குழம்பு, தேங்காய்ப்பால் கலந்ததைக் கரி லக்சா எனப்படும். இது சற்று இனிப்புச் சுவை கொண்டது. மற்றது குழம்பும், புளி, மீன் கலந்ததை அஸ்ஸாம் லக்சா என்றும் கூறுவர். மேலும் சில வகை லக்சா அந்தந்த பட்டணங்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன.

சம்பால் பிலாச்சான்

பிலாச்சான் என்பது மீன், இறால் ஆகியவற்றின் முள்ளை நீக்கிப் பிசைந்து அதன் விழுதை உலர வைத்து கெட்டிப்படுத்தி வைத்துக் கொண்டு பொரித்து தொக்கு சமைத்து சோற்றுடன் உண்ணும் உணவாகும். தற்காலத்தில் இவ்வுணவு, அரசாங்க கண்காணிப்புடன் சுகாதாரமாக பதப்படுத்தப்படுவதால் நீண்ட நாள்களுக்குக் கெடாமல் இருக்கும் நிலையில் தயாரிக்கப்பெறுகிறது.

கோரெங் பீசாங்

வாழைப்பழத்தைப் பொரித்து தயாரிக்கப்படும் உணவு கோரெங் பீசாங் எனப்படுகிறது. பலவகையான வாழைப்பழங்கள் கொண்டு தயாரிக்கப்படும் பஜ்ஜி போன்றதொரு உணவுப் பொருள் இதுவாகும். வாழைப்பழம் மட்டுமின்றி மரவள்ளிக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஆகியவற்றையும் இவ்வாறு பொரித்து உண்ணும் நிலைப்பாடு உள்ளது.

அப்பம் பாலெக்

இது அப்ப வகைப்பட்ட உணவு முறையாகும். வெண்ணெய், சர்க்கரை, சோளம், வேர்க்கடலை கலந்த பலகாரம் இதுவாகும். மலேசிய மக்கள் விரும்பி உண்ணும் பலகாரங்களில் இது முதலிடம் வகிக்கிறது.

புட்டு பிரிங்

இட்டிலி தட்டு போன்ற குழித்தட்டுகளில் தேங்காய் பூ கலந்த மாவை பிட்டு போல வைத்து, ஆவியில் வேகவைக்கப்படும் உணவு முறை இதுவாகும்.

ரொட்டி சனாய்

ரொட்டி சனாய் என்பது தற்பொழுது தமிழ்நாட்டு உணவு வகைகளில் பரவலாக இடம் பெற்றிருக்கும் புரொட்டா என்பதாகும். இது பல இனமக்கள் விரும்பிச் சாப்பிடும் சிற்றுண்டியாகும். பல்லின மக்களின் காலை உணவாக இது விளங்குகிறது. இது இறைச்சிக் குழம்பு, சாம்பாருடன் சாப்பிடப்படும்.

ரொட்டி ஜால

மைதா மாவைக் கரைத்து தோசைக் கல்லில், வலைபோல் மாவு ஊற்றும் அச்சினால் கரைத்த மாவை ஊற்றி சுட்டெடுப்பார்கள். இதுவே ரொட்டி ஜால ஆகும். தொட்டுச் சாப்பிடுவதற்கு மீன் குழம்பும் தொக்கும் உண்டு.

புலுட்

சமைத்த அரிசி பசை போலிருக்கும் உணவு வகை புலுட் ஆகும். இதனை ஆவியில் வேக வைத்து சர்க்கரை, தேங்காய்ப்பால் கலந்து உண்ணும் முறைமை உள்ளது.

ஈக்கான் பாக்கார்

சுட்ட மீனை ஈக்கான் பாக்கார் என்பார்கள். இதனை மிளகாய், மஞ்சள் கலந்த சாற்றில் தொட்டுச் சாப்பிடுவார்கள்.

ஈக்கான் அசாம் பெடாஸ்

காரம், புளி, மீன் என்பது மலாய் மொழியில் ஈக்கான் அசாம் பெடாஸ் என்பர். வழக்கமாகக் கானாங்கெழுத்தி மீனைப் பயன்படுத்துவார்கள். 'மீன், புளி, மிளகாய், தக்காளி, வியட்னாமிய மல்லி கலந்து சமைப்பார்கள்.'

இவை தவிர இன்னும் பல விதமான உணவு வகைகள் மலாய்க்காரர்கள் சமைக்கின்றனர். அரசியும், இறைச்சியும் இவர்களின் உணவில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

மலாய்க்காரர்களின் பாரம்பரிய விளையாட்டுகள்

விளையாட்டுகள் மக்கள் மகிழ்ச்சிக்காக விளையாடப்படுபவை. அவற்றின் வழியாக மக்களின் பண்பாடு, குணங்கள் போன்றனவும் வெளிப்படும். இவ்வகையில் மலாய்க்காரர்களின் பாரம்பரியம் சார்ந்த விளையாட்டுகளாகத் தற்காலத்தில் விளையாடப்படுவனாக இங்கு விவரிக்கப்பெறுகின்றன.

"மலாய்க்காரர்களின் பாரம்பரிய விளையாட்டுகள் 1.செபாக் தக்ரா, 2. பம்பரம், 3. இராட்சத காற்றாடி, 4.பல்லாங்குழி, 5. பத்து ரம்பான், 6.செபாக் பூலு ஆயாம் , 7.கோலி விளையாட்டு, 8. கொண்டா கொண்டி, 9. சோரோக் சோரோக், 10. பாண்டி விளையாட்டு, 11. கால்பந்து, 12 இறகு பந்து – பூப்பந்து, 13.ஹாக்கி விளையாட்டு, 14.ஸ்குவாஷ் விளையாட்டு ஆகும்."[12]

1. செபாக்தக்ரா

செபாக்தக்ரா என்ற விளையாட்டு, இந்தோநேசியா, புரூனை, பிலிப்பைன், தாய்லாந்து, சிங்கப்பூர், புர்மா (பர்மா), லாவோஸ் ஆகிய நாடுகளில் வெவ்வேறு பெயர் கொண்டு விளையாடப்படுகிறது. தற்போது சர்வதேச அளவில் இவ்விளையாட்டுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விளையாட்டு ஏறக்குறைய கைப்பந்து விளையாட்டு போன்றதாகும். இதற்கான பந்து 170 கிராம் முதல் 190 கிராம் எடை வரை அமையவேண்டும். மேலும் இப்பந்து மூங்கில், பிரம்பு பட்டையால் செய்யப்பட்டதாக இருக்கவேண்டும். தற்காலத்தில் நெகிழியாலும் செய்யப்படுகிறது.

---

12. யூசோப்பின் அகமாட் (பள்ளி விளையாட்டுத்துறை ஆசிரியர்) தந்த தகவல், குளுவாங், ஜோகூர்

இவ்விளையாட்டினை விளையாட அணிக்கு மூவர் வீதம் ஆறு பேர் தேவை. வலை கட்டப்பட்டுள்ள உள் மூலையிலிருந்து ஒருவர் பந்தை ஆடுதளத்தின் மத்திக்குச் சற்று பின்புறம் நிற்கும் சக ஆட்டக்காரரிடம் உதைப்பதற்கு ஏதுவாகப் போட வேண்டும். அவர் எதிர் அணிக்கு உயரமான வலைக்கு மேலே உதைக்க வேண்டும், அல்லது தலையால் முட்ட வேண்டும். பந்து எதிர் அணிக்கு அடித்தால் எதிர் அணியினர் பந்து கீழே விழாமல் திருப்பி உதைக்க வேண்டும். கைகளைத் தவிர்த்து பந்தைத் தலை, கால்களால் மட்டுமே அடிக்க வேண்டும். எதிர் அணியினர் பந்தை அடிக்கத் தவறி கீழே விட்டு விட்டால் பந்தை முதலில் அடித்த அணிக்குப் புள்ளிகள் வழங்கப்படும். பந்தை முதலில் அடிப்பவர் அணி, பந்தை கீழே தவறவிட்டால் எதிர் அணிக்குப் புள்ளிகள் வழங்கப்பட்டு ஆட்டம் எதிர் அணிக்குப் போகும். ஆடுபவர் ஒருவர் பந்து கீழே விழாமலிருக்க மூன்று முறை மட்டுமே தட்டி தன்னிடம் வைத்திருக்கலாம். எந்த அணி முதலாக 21 புள்ளிகள் பெறுகின்றதோ அந்த அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படும்.

“செபாக்தக்ரவ்” விளையாட்டு உலக நாடுகளில் விரும்பி விளையாடும் விளையாட்டாக உருவெடுத்துள்ளது. ’இந்தோநேசியா, பிலிப்பைன், கம்போடியா, பர்மா. தாய்லாந்து, வியட்னாம், லாவோஸ் நாடுகளில் விளையாடப்படுகின்றது. சர்வதேச போட்டிகளில் பல நாடுகள் கலந்து கொள்கின்றன.’[13]

2.காசிங் (பம்பரம்)

பம்பர விளையாட்டு பொழுதுபோக்காக மற்ற நாட்களில் விளையாடினாலும் பாரம்பரியமாக நெல் அறுவடைக்கு முன்னர் விளையாடப்படும் விளையாட்டாகும். சாதாரணமாகச் சிறுவர் விளையாடும்

---

13. யூசோப்பின் அகமாட் (பள்ளி விளையாட்டுத்துறை ஆசிரியர்) தந்த தகவல், குளுவாங், ஜோகூர் .

சிறு பம்பரம் முதல் ஐந்து கிலோகிராம் எடையுள்ள பெரிய பம்பரம் வரை விளையாடப்படுகின்றது. பம்பரங்கள் உறுதியான மரம் அல்லது மரவேரினால் செய்யப்படுவனவாகும். பம்பரத்தின் அடிப்பகுதி ஆணி பொறுத்தப்பட்டிருக்கும். பெரிய பம்பரமாயின் அடிப்பகுதி கூர்மையாக்கப்பட்டிருக்கும். பெரிய பம்பரம் விளையாட உடல் வலிமையும் திறமையும் ஒருங்கிணைப்பும் வேண்டும். பம்பரத்தின் அளவுக்கு ஏற்றவாறு பம்பரத்தில் சுற்றி விளையாட மெல்லிய மற்றும் தடித்த கயிறு தேவைப்படும். பம்பரத்தின் அடியிலிருந்து கயிற்றால் இறுக்கமாகச் சுற்றி இலாவகமாக கயிற்றை இழுத்து பம்பரத்தை சுழல விடுவார்கள். பம்பரம் சுழலும்போது தரையிலிருந்து ஒரு பலகையில் அல்லது உலோகத்தட்டுக்கு மாற்றிவிடுவார்கள். மாற்றப்பட்ட பம்பரம் நீண்ட நேரம் சுற்றும் தன்மை கொண்டதாக இருக்கும்.

3. இராட்சத காற்றாடி

முற்காலத்தில் உழவர்கள் தங்கள் பயிரைக் காகம் மற்றும் இதர பறவைகளை விரட்டுவதற்கு 'வாவ்' போன்ற இராட்சதக் காற்றாடியை வயலில் வைத்திருப்பார்கள். அனைத்து 'வாவ்' காற்றாடிகளிலும் மிகவும் பிரசித்திப் பெற்றது பிறை நிலா என்னும் இராட்சத காற்றாடியாகும். இக்காற்றாடி 2.5 மீட்டர் அகலமும் 3.5 மீட்டர் நீளமும் கொண்டது. மற்ற காற்றாடிகளைவிட தனித்தன்மையாகத் திகழ பிறைநிலாக் காற்றாடியைக் கண்ணைக்கவரும் வண்ணத்தில் அழகு படுத்துவர். இத்தகைய வாவ் பட்டங்களில் மலாய்க்காரர்கள் தங்களின் இயல்பான கலை நுட்பத்தை வெளிப்படுத்துவர்.

4. பல்லாங்குழி

தமிழர்கள் விளையாடும் பல்லாங்குழி போன்ற விளையாட்டு இதுவாகும். 15ஆம் நூற்றாண்டில் மலாக்காவுக்கு வணிகம் செய்ய வந்த அரேபிய, இந்திய வணிகர்கள் மூலம் மலேசியாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. இதனைச் சிறுவர் முதல் பெரியோர் வரை விளையாடுவர்.

5. பத்து சிரம்பான்

பத்து சிரம்பான் என்ற ஐந்தாங்கல் போன்ற விளையாட்டு, மலாய்க்காரர்களால் தங்கள் முன்னோர்கள் வழி பரம்பரை பரம்பரையாக விளையாடப்பட்டு வருகிறது. ஐந்து கற்களை பரந்து விழுமாறு வீசியெறிந்து அவற்றில் ஒன்றை எடுத்து மேலே போட்டுப் பிடிக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொன்றாக எடுக்க வேண்டும். கல்லை எடுக்கும்போது மற்ற கற்களில் படக்கூடாது. முதல் சுற்று முடிந்தவுடன் அடுத்து 2, 3, 4 கற்கள் வீதம் எடுத்து முடிக்க வேண்டும். அவரவர் கற்பனைக்கு ஏற்றவாறு விளையாட்டு மாறுபடும். ஒருவர் கற்களை எடுக்கும்போது கல் கீழே விழுந்து விட்டாலோ மற்ற கற்களில் தொட்டு விட்டாலோ மற்றவர் விளையாடுவர். இவ்விளையாட்டு கவனமாகச் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

6.செபாக் பூலு ஆயாம்

செபாக் பூலு ஆயாம் என்ற விளையாட்டு கோழி இறகுகளை உதைத்தல் என்ற நிலையில் விளையாடப்படும் விளையாட்டு ஆகும். மூன்று கோழி இறகுகளை இணைத்து வட்டமான மூன்று தோல் அல்லது சைக்கிள் டியூப்பின் ரப்பர் சேர்த்துப் பிணைத்து கால்களால் மேலே எத்த வேண்டும். இறகு கீழே விழாமல் நீண்ட நேரம் வைத்திருப்பதுதான் இவ்விளையாட்டின் நோக்கம்.

7.கோலி விளையாட்டு

கோலி விளையாட்டு ஏறக்குறைய தமிழ்ச் சிறுவர்கள் விளையாட்டு போன்றே இருக்கும். பெரும்பாலும் கோலியை உருட்டி அடிப்பார்கள்.

8. கொண்டா கொண்டி

"கில்லி விளையாட்டை மலாய்ச் சிறுவர்கள் "கொண்டா கொண்டி" என்று அழைப்பர். தமிழ்ச் சிறுவர்கள் விளையாடுவது போன்றே விளையாடுவர்."[14]

14. யூசோப்பின் அகமாட் (பள்ளி விளையாட்டுத்துறை ஆசிரியர்) தந்த தகவல், குளுவாங், ஜோகூர் .

தமிழர்கள் மலாயாவில் குடியேறித் தங்களின் கலாச்சாரத்தை பின்பற்றியதோடு பிற இனங்களும் சிலவற்றைக் கற்றுக் கொடுத்தனர் என்பதற்கு மேற்கண்ட ஐந்தாங்கல், பல்லாங்குழி, கோலி, கில்லி போன்ற விளையாட்டுகள் மலாய்க்காரர்களின் வாழ்வில் கலந்துள்ளமை வழி தெரியவருகிறது.

9. சோரோக் சோரோக்

மலாய்ச் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு இதுவாகும். தமிழ்ச் சிறுவர்கள் விளையாடும் கண்ணாம்பூச்சி போன்ற விளையாட்டு இதுவாகும். தமிழ்ச் சிறுவர்கள் விளையாட்டைப் போல் சிறு சிறு மாற்றங்களுடன் மலாய்ச் சிறுவர்கள் இதனை விளையாடுவர்.

10. பாண்டி விளையாட்டு

மலாய்ச் சிறுவர் சிறுமியர் ஆடும் விளையாட்டுகளுள் ஒன்று பாண்டி விளையாட்டு ஆகும். தமிழ்ச் சிறுவர் சிறுமியர் ஆட்டம் போன்றதே இந்த விளையாட்டும் ஆகும்.

11. கால்பந்து

மலாய்க்காரர்கள் விரும்பி விளையாடும் விளையாட்டு கால்பந்து விளையாட்டு ஆகும். தேசிய விளையாட்டுக் குழுவில் இரண்டொரு தமிழர்கள் மட்டுமே இடம் பெறுகிறார்கள். சீனர்கள் அபூர்வமாகப் பங்கு பெறுவார்கள்.

12. இறகு பந்து – பூப்பந்து

மலாய்க்காரர்கள் இறகு பந்து விளையாட்டில் ஆர்வம் காட்டி வருகின்றனர். சிடேக் சகோதரர்கள் - மிஸ்பூன் சிடேக், ஜாலானி சிடேக், ரஹ்மான் சிடேக், ரஷிட் சிடேக், ரூஇவ் சிடேக் ஆகியோர் இறகு பந்து விளையாட்டில் முத்திரை பதித்து ஆதிக்கம் செலுத்தி வந்தனர். மிஸ்பூன் சிடேக் தாமஸ் கிண்ணப் போட்டியில் பங்கு பெற்று திறமையை வெளிப்படுத்தியதோடு பல சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் பெற்றவர். ஜாலானி சீடேக் மற்றும்

ரஜிவ் சிடேக் சிறந்த ஒற்றையர், இரட்டையர் விளையாட்டுகளில் சிறந்த விளையாட்டை வெளிப்படுத்தி சர்வதேச விளையாட்டுகளில் வெற்றிப் பதக்கங்களைக் குவித்தனர். ரஹ்மான் சிடேக் சில சர்வதேச போட்டிகளில் வென்று தங்கப் பதக்கங்களை வாகை சூடினார். நூர் இஜுடின் முகமட் ரும்சானி சிறந்த விளையாட்டாளராகத் திகழ்ந்தார். இவர்களுக்குப் பிறகு மலாய்க்கார் இறகு பந்து விளையாட்டாளர்களிடையே தொய்வு ஏற்பட்டது.

13. ஹாக்கி விளையாட்டு

ஒரு காலத்தில் தமிழர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த ஹாக்கி விளையாட்டை இப்பொழுது மலாய்க்காரர்கள் நன்கு விளையாடி வருகின்றனர். தமிழர்களும் சீனர்களும் ஒருவர் அல்லது இருவர் கலந்து கொள்கின்றனர். பெண்கள் குழுவிலும் இதே நிலைதான். தென்கிழக்காசிய போட்டி விளையாட்டுகளில் ஆண், பெண் குழுக்கள் பதக்கங்கள் பெற்றுள்ளனர். ஆசிய விளையாட்டு போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தியுள்ளனர். மலாய்க்காரர்கள் இவ்விளையாட்டில் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றனர்.

14. ஸ்குவாஷ் விளையாட்டு

இவ்விளையாட்டு மலேசிய மக்களை ஈர்த்து வருகின்றது. இதனில் பலர் ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது, தேசிய குழுவில் ஜுலகிஜா பிந்தி அஜான், சித்தி முனிரா ஜுசோ ஆகியோர் அங்கம் பெறுகின்றனர். ஆண்களில் முகமட் நவிஸ்வான் அட்னான் சிறப்பான விளையாட்டாளர். தென்கிழக்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து பதக்கங்கள் பெற்றுள்ளார்.

மலாய் இனத்தவர் தங்கள் பாரம்பரிய விளையாட்டுகளுடன் தற்காலத்திற்கேற்ப கைப்பந்து, கூடைப்பந்து, முதலிய விளையாட்டுகள் விளையாடி வருகின்றனர். சர்வதேச அளவில் ஈடு கொடுத்து விளையாடுமளவுக்குத் திறமை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மலாய்க்காரர்கள் தங்களின் பரம்பரை விளையாட்டுகள், தமிழ் இனத் தொடர்பினால் கிடைத்த விளையாட்டுகள், சர்வதேச விளையாட்டுகள் ஆகியவற்றை விளையாடி வருகின்றனர். சர்வதேச விளையாட்டுகளில் மலாய்க்காரர்களின் விருப்பம், ஈடுபாடு அதிகம் இருப்பதையும் உணரமுடிகின்றது.

மலாய்க்காரர்களின் கலை

மலாய்க்காரர்கள் இயல்பாகவே கலையில் அதிக நாட்டமும் ஈடுபாடும் கொண்டவர்கள். குறிப்பாக நடனக் கலையில் நளினம் வெகுவாக வெளிப்படும். தச்சுக் கலைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்வது கிராமங்களில் காணப்படும் மலாய்க்காரர்களின் வீடுகளேயாகும். இவர்கள் ஓவியத்திலும் சிறந்து விளங்குகின்றனர்.

நடனம்

மலாய்க்காரர்களின் நடனத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். பாரம்பரிய நடனம் என்பது மலாய்க்காரர்களுக்கே உரியது. மேற்கத்திய ஆட்சியாளர்களின் கலாச்சாரத் தாக்கத்தால் ஏற்பட்ட நடனமும் பாரம்பரிய நடனமும் கலந்த கலவை நடனம் என்பது பல்லினக் கலப்பால் ஏற்பட்ட நடனம் ஆகும். "புராதன நடனம் அல்லது அசல் நடனம் இனாங், ஆகிய இரண்டும் பாரம்பரிய நடனப் பிரிவுகளாகும். ஜோகெட், சப்பின் ஆகிய இரண்டு நடனங்களும் புராதனமும் மேற்கத்திய கலாச்சாரமும் கலந்த கலவை நடனங்களுமாகும்."[15] இந்நான்கு வகை நடனங்களும் மலாய்க்காரர்களின் முக்கியமான நடனங்களாகும்.

பாரம்பரிய நடனங்கள்

புராதன நடனத்தின் அசைவுகளும் இசையும் பதினான்காம் நூற்றாண்டு மலாய் அரசர்கள் காலத்தைப் பின்னோக்கிப் பார்க்கச் செய்பவை. இதன்

15. தகவலாளி ரஹ்மான் பின் ரஜிவ் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

பாரம்பரிய இசையும் அபிநயமும் மலாய்ப் பெண்களின் வனப்பை உணர்த்தக் கூடியன. இந்நடனத்தின் தொடக்கமும் முடிவும் பெரிய தாள இசைக் கருவியின் இசை ஒலி எட்டுமுறை ஒலிக்கப்படும். நடனத்தில் பாடப்படும் பாடல்கள் செம்பாவா பாலேக், பாசீர் ரோபோ, திமாங் பான்ஞார் மற்றும் ஸ்ரீ சியாண்டான் போன்ற பாடல்கள் பிரசித்திப் பெற்றவை.

இனாங்

மற்றொரு புராதன நடனம் "இனாங்" என்பதாகும். "இனாங் என்னும் சொல், "மாக் இனாங்" அரச குடும்பத்துப் பிள்ளைகளைக் கவனித்துக் கொள்ளும் பாட்டியைச் - செவிலித்தாயைக் குறிக்கும் சொல்லிலிருந்து வந்தது எனக் கூறப்படுகிறது. இனாங் என்னும் பாடலும் நாட்டியமும் மலாக்கா சுல்தான்கள் ஆட்சிக் காலத்தில் குறிப்பாகச் சுல்தான் மகமுட் ஷா (1488-1511) காலத்தில் இருந்தன. அக்கால கட்டத்தில் அரச நிகழ்வுகளில் குறிப்பாகத் திருமணம் போன்ற நிகழ்வுகளில் இந்நாட்டியம் வழக்கத்தில் இருந்தது."[16] பழைய காலத்தில் அரண்மனை கலாச்சாரத்தைப் பின்பற்றி பெண்களால் மட்டுமே ஆடப்பட்டது. இப்பொழுது ஆணும் பெண்ணும் ஜோடி சேர்ந்து சமூக நிகழ்வுகளில் நடத்தப்படுகின்றன. அதன் புனிதமும் அசைவுகளும் கட்டிக் காக்கப்படுகின்றன.

கலவை நடனம்

ஜோகெட்

"ஜோகெட்" நடனம் "ரோங்கிங்" என்றும் அழைக்கப்படுகிறது. பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மலாய்க்காரர்களுக்கு இந்த நடனம் அறிமுகமானது. இதன் பூர்வீகம் போர்த்துக்கீசியரின் கிராமிய நடனம் போன்றது. கலாச்சார விழாக்கள், திருமண நிகழ்வுகள் மற்றும் சமூக விழாக்களில் இந்நடனம் பெரிதும் ஆடப்பட்டு வருகின்றது. இளைஞர்களும்

16. தகவலாளி ரஹ்மான் பின் ரஜிவ் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

முதியோர்களும் தங்கள் கைகளையும் கால்களையும் விரைவாக அசைத்து ஆடப்படும் நடனம் இதுவாகும்.

"மலாய்க்காரர்கள் மிக நளினமாக ஆடும் "ரோங்கிங்" என்று கூறப்படும் நடனம் மிகப் பழமையான நடனம். ஆணும் பெண்ணும் எதிர் எதிராக நின்று இசைக்கு ஏற்ப ஆடுவர். இந்நடனம் அருகி வருகிறது."[17] நவீன காலத்துக்கு ஏற்றவாறு அவர்களின் கலாச்சாரம் சீரகுலையாமல் நவீன முறைப்படி மலாய் நடனங்களை ஆடி வருகின்றனர்.

சப்பின்

"சப்பின்" நடனம் 15ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மலாயாவில் இஸ்லாம் மதம் பரவும்போது அறிமுகமானது. நாட்டியமும் இசையும் அரேபியர்களால் குறிப்பாகத் தென் ஏமன் நாட்டு வணிகர்களால் கொண்டு வரப்பட்டது. இதன் பூர்வீகப் பெயர் அரேபிய சப்பின் . மலாய்க்காரர்கள் சிறு சிறு மாற்றத்துடன் "சப்பின் மிலாயு" என்று அழைக்கின்றனர். தொடக்கத்தில் அரசு சார்பான நிகழ்வுகளில் இந்நடனங்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு அரண்மனையிலும் தனித்தனியான சப்பின் நடனங்கள் ஆடப்படுகின்றன. 'நடனங்களின் ஒத்திகைகள் சுல்தானின் நேரடிப் பார்வையில் நடத்தப்பட்டன. நாட்டியத்திற்குப் பாரம்பரிய இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன.'[18]

மலாயர்களின் தங்களின் கலைகளை வளர்த்து வருகின்றனர். முக்கிய விழாக்கள், அரசர்களின் முடிசூட்டு விழா, போன்ற நிகழ்வுகளில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் தவறாமல் இடம்பெறுகின்றன. இதனால் அவர்களின் கலைகள் மறக்கப்படாமல் இருக்கின்றன .

17.தகவலாளி ரஹ்மான் பின் ரஜிவ் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

18. மேலது

நடனக்கலை தவிர பிற கலைகளிலும் தேர்ந்தவர்களாக மலாய்க்காரர்கள் உள்ளனர். அவர்களின் கலைகளில் குறிப்பிடத்தக்கன தச்சு வேலைப்பாடுகளும் ஒன்றாகும். அவை பற்றிய செய்திகள் பின்வருமாறு,

தச்சு வேலைப்பாடுகள்

மலாய்க்காரர்கள் மர வேலைப் பாட்டுக் கலைகளில் சிறந்து விளங்குகின்றனர். மலாய்க்காரர்களின் வீடுகளில் உள்ள மரத்தாலான வீட்டு நிலை வாசல் கதவு, மேசை, நாற்காலிகள், அலமாரி போன்றன கலை நுட்பங்களுடன் நேர்த்தியாகவும் அழகாகவும் செதுக்கப்பட்டிருக்கும்.

மலாய்க்காரர்கள் வெள்ளியாலான பொருட்களும் கலை நுட்பத்துடன் நேர்த்தியாகச் செய்வதில் கைதேர்ந்தவர்கள். அவர்களின் கலையழகைக் கிராமங்களில் அவர்கள் வாழும் வீடுகளே பறை சாற்றும். கிளந்தான், திரங்கானு மாநிலங்கள் இக்கலைகளுக்குப் புகழ் பெற்றுத் திழ்கின்றன.

தற்காப்புக் கலை

மலாய்க்காரர்களின் தற்காப்புக் கலை "சிலாட்" எனப்படும். இக்கலைக்குக் கறுப்பு உடையை உடுத்துவர். பல நூற்றாண்டு காலமாக மலாயா தீவுகளில் சிலாட் தற்காப்புக் கலை இருந்து வருகிறது. அனைத்துலக அளவில் இதற்கான போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. சிலாட் தற்காப்பு கலை கற்பதன் மூலம் ஆன்மீகப் பலம் அதிகரிப்பதாகக் கூறுவர். பேரிகை, சேகண்டி இசையுடன் திருமண நிகழ்வு, கலாச்சார நிகழ்வு மற்றும் பிரமுகர் வருகையின்போது தற்காப்புக் கலையை நடத்தி வரவேற்பு நல்குவர்.

வாயாங் கூலிட்

வாயாங் கூலிட் என்பது நிழல்படக் காட்சிக் கலையைக் குறிக்கும் சொல்லாகும். மலாய்க்காரர்கள் இக்கலையிலும் தேர்ந்தவர்களாக விளங்குகின்றனர். நிழல்படக் காட்சிக் கலைகள் கிளந்தான், திரங்கானு மாநிலங்களில் மிகுதியாக நடத்தப்பட்டு வந்தன. பெரும்பாலும் இராமாயணம், மலாய்ப் புராணக் கதைகள் இதன் வழி காட்டப்பட்டன. வாயாங் கூலிட்

நடத்தப்படும் அரங்கம் இருளில் மூழ்கியிருக்க, தோலாலான காட்சிப் படங்களுக்குப் பின்னால் விளக்கு வெளிச்சத்தில் படங்களின் அசைவுகள் நிழல்போலக் காட்சியளிக்கும். பின்னணியில் பாரம்பரிய இசை முழங்கக் கதையை நடப்பது போன்று நிகழ்ச்சி நடத்துனர் கதை கூறுவார். இவருக்குத் "தோக் டாலாங்" என்று பெயர்.

வாயாங் கூலிட் என்னும் இவ்விளையாட்டு ஏறக்குறையத் தமிழ் நாட்டுப் பாவைக் கூத்து பார்ப்பது போல இது இருக்கும். இக்கலை அழிவின் விளிம்பில் இருக்கிறது.

இசை

மலாயர்களின் பாரம்பரிய இசை முக்கிய நிகழ்வுகளான முடிசூட்டுவிழா, நிழல்படக் காட்சி பாரம்பரிய நடனம் ஆகியவற்றில் கேட்கலாம். தற்போது இவற்றை மிஞ்சி, நவீன இசைப் பாடல்கள் அதிகமாக ஆக்கிரமித்துள்ளன. இவர்கள் பல்வகை இசைக்கருவிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். அவை பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு,

காற்றிசைக் கருவிகள்

- செருனை
- பினாய்
- செருலிங்
- லும்பிரிட்

இவற்றில் முன்னது நாகசுரத்தை ஒத்தது. பின்னவை அனைத்தும் புல்லாங்குழல் வகைப்பாட்டினவாகும்.

தோல் இசைக் கருவிகள்

- கெண்டாங் (மத்தளம் போன்றது.)
- கெடோக்
- கெடோம்பாக் (அடி சிறுத்தும் மேல்பாகம் அகன்றும் இருக்கும்)
- மேளம்

- ரெபானா (ஒரு பக்கம் மட்டும் அகன்று இருக்கும் மேளம்)
- கொம்பாங் (கஞ்சிராவைவிட சற்றுப் பெரியது)
- தார் (இதுவும் ஒரு வகை மேளம்)
- ஜிடோர் (இதுவும் ஒருவகை மேளம்)

அசையா இசைக்கருவிகள்

- கோங் (நிலையான பெரிய சேகண்டி)
- கெசி (ஜால்ரா)
- சரோன்
- கெனோங்
- கம்பாங் கையூ
- போனாங்

நரம்பு இசைக்கருவி

ரெப்பாப் (வயலின் போன்ற கருவி)

இக்கருவி வகைப்பாடுகள் மலாய் மக்களின் இசை ஆர்வத்தினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. பெரும்பாலும் தமிழ் சாயல் இவ்விசைக் கருவிகளிலும் தெரிகிறது.

ஓவியம்

இயல்பாகவே கலை உணர்ச்சி மிக்கவர்கள் மலாய்க்காரர்கள். ஓவியத்திலும் சிறந்து விளங்குவதில் வியப்பில்லை. மலாய்க்கார ஓவியர்களில் சிறந்த இடத்தைப் பிடித்தவர் "லாட்" என்று அழைக்கப்படும் முகமட் நோர் காலிட் என்பவர். தொடக்க காலத்தில் பத்திரிகைகளுக்கு வித்தியாசமான "கார்ட்டூன்" படங்கள் வரைந்தார். நாளடைவில் இவரது மாறுபட்ட ஓவியங்கள் மக்கள் மனத்தைக் கவர்ந்தன. இவர் தீட்டிய "கம்போங் பாய்" கிராமத்துப் பையன் ஓவியத் தொகுப்பு மலேசிய மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் புகழ் பெற்ற ஓவியங்களாகும். இவரது மாறுபட்ட ஓவியம் தமிழ்த் திரைப்படத்தையும் விட்டு வைக்கவில்லை. எம்.ஜி.ஆரின் காதல் காட்சிகளை வரைந்து

அவ்வப்போது வெளியிட்டு தமிழ் இரசிகர்களை மகிழ்வித்துள்ளார். சர்வதேச விருதுகளும் பட்டங்களும் பெற்ற ஒரே மலாய்க்கார ஓவியராவார். ஓவியர்களில் குறிப்பிடத் தக்க மலாயர்கள் அவாங் டாமிட், ஏமி ஹாசிம், அமாட் சாக்கி, ராஃபி கனி ஆகியோராவர்.

இவ்வாறு கலை ஆர்வம் மிக்கவர்களாக மலாய்க்காரர்கள் விளங்கி வருகிறார்கள். இவர்களின் கலைத்தன்மை தனித்தன்மை, கூட்டுத்தன்மை என்ற இரு நிலைகளில் அமைகிறது என்பது உறுதியாகின்றது.

பண்பாட்டு நிகழ்வுகள்

மலாய்க்காரர்கள் பல பண்பாட்டு நிகழ்வுகளைப் பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகின்றனர். இவற்றின்வழி அவர்களின் பண்பாட்டுப் பற்று தெரியவருகிறது. குறிப்பாக திருமணத்தில் அதிக அளவிலான பண்பாட்டுக் கூறுகளை மலாய்க்காரர்கள் கொண்டுள்ளனர். அவற்றின் வழி அவர்களின் இனப் பண்பாட்டை இனம் காணமுடிகிறது.

மலாய்க்காரர்களின் திருமணம்

மலாய் சமூகத்தினரின் திருமணம், உறவினர்கள் மற்றும் விருந்தினர்களோடு பெரிய அளவில் ஒரு விழாவாகக் கொண்டாடப்படும் நிகழ்வாகக் காணப்படுகிறது. பாரம்பரியமாக சில நாள்களுக்கு மலாய் சம்பிரதாயப்படி திருமணச் சடங்குகள் நடத்தப்படும்.

'பெர்துனாங்'

"ஒரு திருமணம், வயது முதிர்ந்த மரியாதைக்குரிய நபர் மாப்பிள்ளை வீட்டின் சார்பாக பெண் வீட்டிற்குச் சென்று பெண் வீட்டாரின் குடும்ப பின்னணியை அறிந்து கொள்வார். பெண் மாப்பிள்ளையை விரும்பி ஏற்றுக் கொள்கிறாரா என்பதையும் கேட்டறிந்து கொள்வார். வழக்கமாக அந்தப் பெரியவர் பரிசுப் பொருட்களையும் (ஏறக்குறையச் சீர் எடுத்துச் செல்வது போல்) கொண்டு செல்வார். பெண் மாப்பிள்ளைக்கு ஏற்றவராகத் தெரிந்தால் அந்தப் பெண்ணைத் தன் மாப்பிள்ளைக்குத் திருமணம் செய்ய விரும்புவதாக

முன்மொழிவார். இந்த முன் மொழிதல் பாரம்பரியப்படி மலாய்க் கவிதை ஒன்றின் வழி கூறுவார். இக்காலத்தில் இம்மாதிரியான கவிதை வழி கூறும் முறை மறைந்துவிட்டது. முன் மொழிதலை ஏற்றுக் கொண்டால் திருமண ஒப்பந்தத்திற்கான நாள் நிச்சயிக்கப்படும். திருமண ஒப்பந்தம் 'பெர்துனாங்' என்று அழைக்கப்படும். திருமண ஒப்பந்த நிகழ்வின் போது மணமக்களிடையே பரிசு பொருட்கள் பரிமாறிக் கொள்ளப்படும்."[19] மணமகளுக்குத் திருமணத் தங்கம் 'மாஸ் காவின்' சீதனம் நிர்ணயிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டால் ஆறு மாதங்கள் அல்லது வசதிக்கேற்றவாறு திருமண நாள் குறிக்கப்படும்.

அகாட் நிக்கா திருமணச் சடங்கு

திருமணச் சடங்குகள் இரண்டு நாள்களுக்கு நடைபெறும். முதல் நாள் திருமணச் சடங்கில் முக்கிய அங்கம் பெறுவது 'அகாட் நிக்கா'என்னும் திருமண உறுதி எடுத்துக் கொள்ளும் சடங்கு ஆகும். இந்த முக்கியச் சடங்கு பெரும்பாலும் பெண் வீட்டில் நடைபெறும். இச் சடங்கு பள்ளிவாசலில் அல்லது முஸ்லிம்களுக்கான திருமண பதிவு அலுவலகத்திலும் நடைபெறுவதுண்டு. இந்தச் சடங்கு அதிகாரப் பூர்வமான இமாம் (இஸ்லாமிய மத குரு) அல்லது 'காதி' (இஸ்லாமிய உயர் அதிகாரி) அவர்களால் நடத்தப்படும். முற்காலத்தில் மணமகள் தனி அறையில் இருப்பார். திருமண நற்சான்றிதழில் கையெழுத்திடும்போது மட்டும் வெளியே வருவார். தற்சமயம் 'காதி' திருமணத்திற்கு மணமகளின் சம்மதத்தைக் கேட்பார். தம்பதிகள் இருவரும் கையெழுத்திடுவதற்குமுன் 'காதி' குர்ஆனிலிருந்து புனித வாசகங்களைப் படித்துக் காட்டுவார். மணமகளுக்கு மணமகனின் பொறுப்பு, கடமை ஆகியவற்றைப் பற்றி 'காதி' கூறுவார். மணமக்களின் திருமணம் இதன்வழி உறுதியாகிறது. மணமகன் நிகழ்வுக்கு வந்திருந்தோர் முன்னிலையில் சரியாகவும் தெளிவாகவும் தன் உறுதி மொழியைக் கூறுவார். இதன் பின்னர்

19. தகவலாளி ஹசான் பின் இட்ரிஸ் தந்த தகவல், ரெங்கம், ஜோகூர்.

மணமகனும் மணமகளும் திருமண ஒப்பந்த சான்றிதழில் கையெழுத்திடுவர். திருமண ஒப்பந்த சான்றிதழும் 'மாஸ் கவின்' சீதனம் அல்லது வரதட்சணைப் பொருள், அல்லது ரொக்கமும் முத்திரையிடப்பட்டு வழங்கப்படும். மாஸ் கவின் என்னும் வரதட்சணை கணவன், மனைவியின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதற்கான அடையாளமாகும்.

பெர்சண்டிங் மற்றும் பிற சடங்குகள்

இரண்டாவது நாள் அகாட் நிக்காவிற்குப் பிறகு மணமக்களின் விரல்களிலும் நகங்களிலும் மருதாணி இட்டுக் கொள்ளும் சடங்கு நடைபெறும். மலாய்க்காரர்களின் திருமணத்திற்குப் பாரம்பரிய உடை உடுத்துவார்கள். மணமக்கள் உறவினர்களும் நண்பர்களும் புடைசூழ ஊர்வலமாக மணமகள் வீட்டுக்குச் செல்வார்கள். ஊர்வலத்தில் கொம்பாங் மேளம் கொட்டி, பாட்டு பாடிக் கொண்டே வருவார்கள். பூங்கா மாங்கார் ஏந்தி வருவார்கள். மெல்லிய குச்சில் வர்ண காகிதத்தால் அலங்கரிக்கப்பட்டு ஆறடி உயர கம்பின் உச்சியில் செருகி இருக்கும். கம்பினைத் தூக்கிப் பிடிக்கும்போது தென்னை மட்டை ஓலைத் தொங்குவது போல் இருக்கும். ஊர்வலத்தில் கொம்பாங்கும் பூங்கா மாங்காரும் கண்டிப்பாக இருக்கும்.

மணமக்கள் மணமகள் வீட்டை அடைந்ததும் ஊர்வலம் முடிவடையும். அரியாசனம் போல அலங்கரிக்கப்பட்ட ஆசனத்தில் அரசன் அரசி அமர்ந்திருப்பது போல் மணமக்கள் அமர்வார்கள். மணமகன் அரசர் அணியும் கிரீடம் போன்ற தலைப்பாகை அணிந்திருப்பார். மணமகள் மகாராணி போல் அலங்கரிக்கப்பட்டு இருப்பாள். மணமக்கள் ஒரு நாள் அரசன் அரசியாக இருப்பார்கள். மணமக்களை வந்திருக்கும் பெரியோர்களும் நண்பர்களும் மஞ்சள் அரிசி தூவி பன்னீர் தெளித்து ஆசீர்வதிப்பார்கள். (படம்) மணமக்கள் இருவரும் சேர்ந்து உணவு அருந்துவார்கள். கடந்த காலத்தில் குடும்பப் பெரியோர்கள் முன்னிலையில் மணமகளும் தன் கணவருக்கு முதன்முறையாக தன் கையால் முதல் உணவைப் பரிமாறுவார். ஆனால் இப்பொழுதெல்லாம் மணமக்கள் விருந்தினரோடு சேர்ந்து விருந்துண்பர்.

நவீன இசைக் கச்சேரியுடன் திருமண விருந்து தொடங்கும். விருந்துகள் பெரும்பாலும் வீடுகளிலேயே நடக்கும். வசதி படைத்தோர் மண்டபங்களில் விருந்து நடத்துவார்கள். வருகையாளர்களின் வரும் நேரத்தை அழைப்பிதழில் குறிப்பிட்டிருப்பார்கள். அனைத்து விருந்தினர்களும் ஒரே நேரத்தில் வராமல் அவரவர்க்குக் குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் வருவதால் கூட்ட நெரிசலைத் தவிர்க்க முடிகிறது. விருந்து பிரியாணி, நெய்ச் சோறு, குறைந்த அளவு காய்கறி, ஆட்டுக்கறி, மாட்டுக்கறி, கோழிக்கறி இடம் பெறும். சில நாள்களுக்குப் பிறகு மணமகன் வீட்டிலும் இது போன்ற இரண்டாவதாக பெர்சண்டிங் விருந்து நடைபெறுவது உண்டு. ஆனால், சிறிய அளவில் நடைபெறும்.

கால ஓட்டத்தில் திருமணச் சடங்குகள் மாறிக் கொண்டே வந்தாலும் பெரும்பாலான மலாய்க்காரத் திருமணங்கள் பாரம்பரியத்தை விட்டுக் கொடுக்காமல் கட்டிக் காத்து வருகின்றனர். "மலாய்க்காரர்களின் திருமணத்தில் பாரம்பரிய அடையாளமாகத் திகழ்வது பூங்கா மாங்கார் பூங்கா மாங்கார் வாழ்க்கையின் செழுமையையும் அதிகக் குழந்தைப் பேற்றினையும் வழங்கும் என நம்பப்படுகிறது. சாலைக் குறியீட்டை நட்டு வைத்த சிறு சிறு தூண்கள், விளக்குக் கம்பம், பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டிருக்கும் பூங்கா மாங்கார் திருமணம் நடக்கவிருக்கும் இடத்தை அடையாளம் காட்டுவதற்கும் பயன்படுகிறது."[20] பொதுவாக மலாய்க்காரர்களின் திருமணத்தில் வெற்றிலை மற்றும் மலர் அலங்காரம் மணப்பெண்ணின் கற்பின் அடையாளமாகக் கொள்ளப்படுகிறது. இவற்றை மணமகன் மணமகளுக்குப் பரிசாக வழங்குவார். திருமண விருந்தின்போது மலாய் கலாச்சாரப்படியும் வழக்கப்படியும் மணமக்கள் அதிகம் பேசுவதையோ சிரிப்பதையோ தவிர்க்க வேண்டும். விருந்தினர்கள் மலாய் கலாச்சார உடை உடுத்தி வருவார்கள்.

வசதி படைத்தோர் விருந்துகளை மண்டபம், உணவகம், தங்கும் விடுதி முதலிய இடங்களில் ஆடம்பரமாக நடத்துவார்கள். வசதி குறைந்தோர் வீட்டிலேயே விருந்து நடத்துவார்கள். மலேசியா பல்லின மக்கள் வாழும்

20. தகவலாளி ஹசான் பின் இட்ரிஸ் தந்த தகவல், ரெங்கம், ஜோகூர்.

நாடாகையால் பல இனத்தவர்கள் பல மதத்தினர்கள் வாழ்கிறார்கள். மற்ற இனத்தவர் நடத்தும் விருந்துகளில் கலந்து சிறப்பிப்பார்கள். மலாய்க்காரர்கள் இசுலாமியர்கள் ஆதலால், அவர்களால் நடத்தப்படும் விருந்துகள் இசுலாமிய பாரம்பரியப்படி நடத்தப்படும். இருப்பினும் அவர்களின் நண்பர்களான பிற இன மக்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

பிற இனத்தவர்கள் மலாய்க்காரர்களின் விருந்துக்குச் செல்லும் முன் சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. அவையாவன,

- "மலாய்க்காரர்களின் திருமணத்தில் முக்கியமாக இரண்டு அம்சங்கள் இடம்பெறும். அவை "அகாட் நிக்கா" எனும் திருமணச் சடங்கு நிகழ்வும் பெர்சண்டிங் எனும் விருந்து நிகழ்வுமாகும். அகாட் நிக்கா பள்ளிவாசல், இசுலாமிய திருமண பதிவகம் அல்லது வீடுகளில் நடத்தப்படும் நிகழ்வுக்குச் சிறிய அளவிலான உறவினர்களும் நெருங்கிய நண்பர்களும் மட்டுமே கலந்து கொள்வார்கள். இசுலாமியர் அல்லாதவர்கள் அகாட் நிக்காவில் கலந்து கொள்வதில்லை.
- மலாய்க்காரத் திருமண விருந்துக்கு அதிகமானோர் கலந்து கொண்டால் புதுமணத் தம்பதியர்களும் அவர்களின் பெற்றோர்களும் மகிழ்ச்சி கொள்வார்கள். எனவே, முஸ்லிம் அல்லாத நண்பர்களை விருந்துக்கு அழைக்கத் தவற மாட்டார்கள். முஸ்லிம் அல்லாதோர் அழைப்பிதழில் குறிப்பிட்டதற்கு இணங்க செல்ல விரும்பினால் தங்களுடன் அவர்களின் குடும்ப உறுப்பினர் ஓரிருவரைத் தாராளமாக அழைத்து வரத் தடையில்லை. விருந்து உணவகம், மண்டபம் அல்லது தங்கும் விடுதியில் நடைபெறுமானால் அழைப்பை விடுத்தவரிடம் சந்தேகத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். விருந்து கொடுப்போர் அழைப்பை ஏற்றுச் செல்வது மணமக்களுக்கும் அவருடைய குடும்பத்தினர்களுக்கும் காட்டும் மதிப்பும் மரியாதையும் ஆகும். விருந்து நிகழ்வுக்குப் போக

சாத்தியப்படாவிட்டால் முன்கூட்டியேத் தெரிவித்துவிட வேண்டும்.

- விருந்துக்கு வருபவர்கள் ஆடை அணிவதில் மூன்று அடிப்படை விதிகளைப் பின்பற்றுதல் உசிதம். அதிக ஆடம்பரமின்றி சரியானதாகவும் வசதியாகவும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். சாதாரண நடுத்தரமான ஆடையே போதுமானது. விருந்துக்கு வரும் பெண்கள் மலாய்க்காரராயிருந்தால் மலாய் பாரம்பரிய உடையான 'பாஜூகுரோங்'அணிவது விரும்பத்தக்கது. முஸ்லிம் அல்லாதவர்கள் குட்டை பாவாடை அல்லது முட்டிக் கால்களுக்கு மேல் தெரியும் ஆடைகளைத் தவிர்க்க வேண்டும். அகாட் நிக்காவுக்குச் செல்லும் பெண்கள் முக்காடு அணிந்திருக்க வேண்டும். மலாய் ஆடவர்கள் மலாய் பாரம்பரிய உடையான 'பாஜூ மிலாயு' (மலாய் உடை) தளர்ச்சியான மேல் சட்டையும் கால் சட்டையும் இடுப்பில் முட்டிக் கால்களுக்கு மேல் லுங்கி (கைலி) 'சொங்கெட்' அணிந்து தலையில் குல்லா போட்டுக் கொண்டு செல்ல வேண்டும். இரவு விருந்தானால் சாதாரண ஏற்புடைய ஆடையை அணிந்து செல்லலாம்.
- புதுமணத் தம்பதியர்களுக்கு விருந்தினர்கள் விரும்பிய பரிசுப் பொருட்களை அளிக்கலாம். பெரும்பாலும் உறைகளில் பணம் வைத்தே வழங்குவார்கள். விருந்தினர் தம்பதியர்களின் உறவு அல்லது நெருக்கத்தைப் பொறுத்து பரிசின் மதிப்பும் இருக்கும். விருந்து முடிந்து செல்லும்போது பரிசுகள் மணமக்களிடம் அல்லது அவர்களின் பெற்றோர்களிடம் வழங்குவார்கள்.
- விருந்து தொடங்கிய பின்னர் செல்லாமல், குறிப்பிட்ட நேரத்தில் செல்ல சாத்தியப்படுமானால் சற்று முன்னதாகச் செல்லுதல் வரவேற்கத் தக்கதாகும். கூட்ட நெரிசலைத் தவிர்க்க மணமக்கள் வருகைக்கு முன்னதாக அரைமணி நேரத்திற்கு முன்னதாகச் செல்வது நல்லது.

- விருந்தின் இறுதி வரை இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பும் கட்டாயமும் இல்லை. விருந்து இரவு வெகுநேரம் நடக்கலாம். வழக்கமாக விருந்தினர்கள் சராசரி இரண்டு அல்லது மூன்று மணி நேரம் இருப்பார்கள்.
- விருந்து நடைபெறும் இடத்திற்கு வந்தவுடன் பிரதான வாசல் நோக்கிச் செல்ல வேண்டும். பெரும்பாலும் வளைவு அலங்காரத்துடன் வண்ண மின் விளக்குகளால் பிரகாசிக்கும். அங்கே வரவேற்பாளர்களும் மணமக்களின் பெற்றோர்களும் இருப்பார்கள். விருந்தினர் அவர்களிடம் தன்னை அறிமுகம் செய்து கைகுலுக்கிக் கொள்வார். பெரும்பாலும் பெண்கள் விரும்பினாலொழிய அவர்களிடம் கைகுலுக்கள் தவிர்த்தல் வேண்டும். மென்மையான புன்னகையுடன் தலையை ஆட்டிக் கொள்வார்கள்.
- விருந்து உணவு உண்பதைவிட வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. வேண்டிய நிழற்படங்கள் எடுத்துக் கொள்ளலாம். மலாய்க்கார திருமண வரவேற்பு விருந்தில் பெருமளவு சுவையான உணவுகள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும். விருந்தினர்கள் சுயமாகப் பரிமாறிக் கொண்டு உண்ணலாம். சுயமாகப் பரிமாறிக் கொள்ளும்போது வேண்டிய அளவு உணவு மட்டுமே எடுத்துக் கொள்வதால் உணவு விரயமாவதைத் தவிர்க்க முடிகிறது. நவீன இசைக் கச்சேரியைக் கேட்டு இன்புறலாம். இக்காலத்தில் மேற்கத்தியர்கள் போல் விருந்தின்போது அணிச்சல் வெட்டும் நிகழ்வும் இடம்பெறும்.
- புதுமணத் தம்பதியர்கள் அவர்களுக்கான பிரதான இடத்திலேயே அமர்ந்திராமல் விருந்தினர்களைச் சந்தித்து கலந்துரையாடும் பொழுது அவர்களை நன்றாகப் பார்க்கும் வாய்ப்பு ஏற்படும்.
- விருந்து முடிந்து புறப்படுவதற்கு முன்னர் மறவாமல் 'சலாம் சங்கொக்' என்னும் உறையில் வைத்து பணம் வழங்கும் நிகழ்வு நடக்கும்.'சலாம் சங்கொக்' என்பது பணம் வைக்கப்பட்ட

உறையை உள்ளங்கையில் அடங்குமாறு இரண்டாக மடித்து மணமக்களிடம் வழங்குவார்கள். மணமக்கள் விருந்தின் வேறொரு பகுதியில் இருப்பார்களானால் அவர்களின் பெற்றோர்களிடம் கொடுப்பார்கள். விருந்துக்கு வந்ததற்காக நன்றி கூறி கைகுலுக்குவார்கள்.''[21]

அதேபோல் விருந்தினர்கள் மணமக்களுக்கு வாழ்த்துகள் கூறுவர். வந்திருந்த விருந்தினர்கள் வீடு திரும்பும்போது அழகிய சிறுகூடை அல்லது பையில் அவித்த முட்டை வர்ணம் தீட்டி இனிப்புடன் வர்ணத்தாள்களால் அலங்கரிக்கப்பட்ட பையில் வைத்துக் கொடுத்தனுப்புவார்கள். வருகையாளர்கள் புதுமணத் தம்பதிகளை வாழ்த்திச் செல்வார்கள்.

<u>பரிசுப் பொருள்கள் பரிமாற்றம்</u>

ஆணுக்குப் பெண் பார்த்து திருமணத்திற்கு நிச்சயமானதும் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்குச் சென்று பரிசுப் பொருட்களை வழங்கும் எளியச் சடங்கு நடைபெறும். "பரிசுப் பொருள்கள் மோதிரம், அணிச்சல், பழங்கள் முதலியவற்றோடு பெண்ணுக்கு வரதட்சணைப் பணம் ரொக்கமாக மலேசிய ரிங்கிட் 80 ,800 அல்லது 8000 ஆகக் கொடுக்கப்படும்.''[22]

<u>பூக் குளியல்</u>

திருமணத்திற்கு முதல் நாள், பெண் பூ குளியல் சடங்கு நடைபெறும். மல்லிகை, ரோஜா, செண்பகம் போன்ற மணமிகு மலர்கள் ஏழுடன் வாசனைத் தைலம் கலந்த குளியல் நடைபெறும்.

<u>மருதாணி இட்டுக் கொள்ளுதல்</u>

புதுத் தம்பதிகள் இருவரும் விரல்களின் முன் பகுதியில் மருதாணி இட்டுக் கொள்வர். பெண் உள்ளங்கைகளிலும் அழகாக மருதாணி வைத்துக் கொள்வார்.

[21].தகவலாளி ஹசான் பின் இட்ரிஸ் தந்த தகவல், ரெங்கம், ஜோகூர்.

22. மேலது

மலர்க் கூடை வழங்குதல்

திருமணத்திற்குப் பின்னர் உறவினர்களுக்குப் பல மலர்கள் கலந்த கையடக்கக் கூடையில் முட்டை வைத்து வழங்குவார்கள்.

சடங்குகளைப் பின்பற்றுவதில் உறுதியானவர்களாக மலாய்க்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தம் வாழ்வில் "சடங்குகளைப் பாதுகாக்க உயிரையும் விடுவேன்" என்ற நிலைப்பாடு உடையவர்களாக உள்ளனர். இவ்வாறு மலாய்க்காரர்கள் இசுலாமிய வரையறைகளுடன், பிற இனச் சார்புடன் தமக்கான வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டுள்ளனர். இவர்களின் இவ்வாழ்க்கைமுறை மற்றவர்களுடன் இயைந்து செல்லும் நடைமுறையில் இருப்பது குறிக்கத்தக்கது.

தமிழர்களின் கலாச்சாரம்

மலேயா தமிழர்களின் தாய்நாடான தமிழ்நாடு சிறந்த பாராம்பரியம், கலாச்சாரமும் மிக்க பகுதியாகும். அதன் எச்சங்கள் மலேயா தமிழர்களிடமும் காணப்படுகின்றன. உணவு, உடை, விளையாட்டு, கலை, பழக்க வழக்கம் போன்றவற்றில் மலேயத் தமிழர்களின் தனித்துவம் வெளிப்பட்டுவருகிறது.

தமிழர்களின் உடை

தமிழர் உடைகள், காலம், இடம் ஆகியவற்றின் தேவை, சூழ்நிலை, பொருளாதாரம், சாதி, சமயம் ஆகிய காரணிகளால் வேறுபடுகின்றன. தமிழர்தம் பொதுவான ஆடையாக, ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்குச் சேலையும், சிறுமிகளுக்குத் தாவணி, பாவாடை போன்றவையும் தமிழர்களின் மரபார்ந்த உடைகளாகக் கருதப்படுகின்றன.

இவற்றோடு சுடிதார். பஞ்சாபியப் பெண்கள் உடையும் அணிகின்றனர். ஆடைகள் பட்டு, பருத்தி ஆடைகளாக இருக்கும். கிராமப் பெண்கள் 'சாரோங்' என்று அழைக்கப்படும் லுங்கியும் நீண்ட ரவிக்கையும் அணிவர். நமது பாரம்பரிய உடையை பெரும்பாலும் விசேஷ காலங்களில் பண்டிகைகள், விழாக்கள், கோயில்களில் மட்டுமே காண முடிகிறது. நாகரிக வளர்ச்சி,

பல்லின மக்களின் ஆடைகள் மீது மோகம், பணியிடத்தின் சூழலுக்கேற்ற உடை, அணிவதற்கு வசதியான உடை ஆகிய காரணிகளால் தமிழர்களின் உடை பாரம்பரிய உடையிலிருந்து வேறுபடுகின்றது.

<u>உணவு</u>

தமிழர் சமையல் பல நூற்றாண்டுகளாகத் தென் இந்தியா, இலங்கை மற்றும் பிற நாடுகளில் வசிக்கும் தமிழர்களால் வளர்த்தெடுக்கப்பட்டதாகும். இயற்கையுடனும் காலநிலைகளுடனும் இணைந்த ஒரு நாட்டுப்புறச் சூழலிலேயே தமிழர் சமையல் வளர்ந்தது. பலவகை உணவுகளைச் சுவையுடன் சமைக்க, விருந்தோம்பத் தமிழர் சமையற்கலை வழி சொல்லுகின்றது. பலவகை மரக்கறிகள், சுவையூட்டும் நறுமணம் தரும் பலசரக்குகள், கடல் உணவுகள், கறிவகைகள் தமிழர் சமையலில் இன்றியமையா இடம் பெறுகின்றன.

சோறும் குழம்பும் கறியும் தமிழரின் முதன்மை உணவாகும். குழம்புகளில் பலவகை உண்டு. எடுத்துக்காட்டுக்கு, மரக்கறி குழம்பு, பருப்பு, கீரை வகை, மசியல், மீன்கறி என்பன. பொதுவாகத் தமிழர் உணவுகள் காரம் மிகுந்தவை. தேங்காய், மிளகாய், கறிவேப்பிலை, வெங்காயம், பூண்டு, இஞ்சி உட்படப் பலவகை பலசரக்குகள் குழம்புகளுக்கும் பிற பக்க உணவுகளுக்கும் சேர்க்கப்படுவது வழக்கம். அவற்றோடு இரசம், நெய், தயிர், மோர், ஊறுகாய் முதலியனவும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. பச்சடி, தொக்கு, மசியல் முதலியன தமிழர் உணவில் இடம் பெறுகிறது.

மலாய வாழ் தமிழர்கள் உணவு உண்ணுதலைப் பசியாறுதல் என்று குறிப்பிடுகின்றனர். இவர்களின் காலை உணவாக இட்டிலி, தோசை, ஆப்பம், இடியாப்பம், உப்பு மா போன்ற உணவு வகைகளும் அவற்றிற்குச் சுவையான சட்டினியும் சேர்த்துக் கொள்ளப்படும். இவை மட்டுமின்றி மலேசியத் தமிழர், சீனர், மலாயரிடையே 'பரோட்டா' காலை உணவில் முக்கிய இடம் பிடித்துள்ளது. 'சப்பாத்தி' பஞ்சாபியர் உணவானாலும் தமிழரிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

மதிய நேரத்தில் நெய் சோறு, இறைச்சி பிரியாணி, சைவ பிரியாணி விருந்துகளில் முக்கிய இடம் பெறுகின்றன. தென்னிந்தியர்களான மலையாளிகள், கன்னடர், ஆந்திரர்களின் உணவுகள் மற்றும் வட இந்தியர்களின் உணவுகளும் தமிழர்களின் உணவில் இடம் பெறுவது தவிர்க்க முடியாதது. ஏனெனில் அவர்களும் மலேசியாவில் வாழ்வதால் மற்ற சமூகங்களோடு ஒட்டி உறவாடுகின்றனர்.

தமிழர்களின் உணவுகளில் பலகாரங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. முறுக்கு, ஓமப்பொடி, காராபூந்தி, இலட்டு, ஜிலேபி, பலவகையான அல்வா, வடை, அதிரசம், கடலை உருண்டை போன்று எண்ணிறந்தப் பலகாரங்கள் தமிழர்கள் உணவில் இடம் பெறுகின்றன. தமிழர்களுக்கே சொந்தமான முறுக்கு, வடை, அதிரசமும் மலாய்க்காரர்கள் மிகவும் விரும்பி உண்பர். மலேசியாவில் சீன, மலாய்க்கார சமூகத்தினரிடையே புகழ் பெற்ற உணவாகத் திகழ்வது தமிழர்களின் உணவான இட்டிலி, தோசை, இடியாப்பம் அவர்கள் விரும்பி உண்பார்கள். மலேசியத் தமிழர்களும் மலாய்க்காரர்களின் உணவான 'நாசி லெமாக்' விரும்பி உண்பர். அதே போன்று சீனர்களின் உணவான 'மீ கோரெங்' தமிழர்கள் விரும்பி உண்ணும் உணவாகும். 'சாத்தே' எனப்படும் சுட்ட இறைச்சி. தமிழர்களால் காரம் இனிப்பு கலந்த தொக்குடன் உண்ணப்படும். சுற்றுலாப் பயணிகளும் இவ்வுணவை சுவைக்கத் தவறுவதில்லை. சீனர்களின் உணவைத் தமிழர்கள் விரும்பி உண்கின்றனர். நூடல் பிரட்டல், நூடல் சூப், இனிப்பும் புளிப்பும் கலந்த பன்றி இறைச்சி, கோழி இறைச்சி முதலியவற்றை விரும்புகின்றனர்.

பல்லின மக்களின் குடியிருப்புகள் அருகருகே இருப்பதால் கலந்து உறவாட வாய்ப்புகள் அதிகம். விழாக்காலங்களிலும் வீட்டு விசேஷங்களிலும் கலந்து விருந்து உண்டு மகிழ வாய்ப்புகள் அதிகம். இதனால் பிற இன மக்களின் உணவைச் சுவைக்கின்றனர். ஒவ்வோர் இனத்தினரும் மற்ற இனத்தின் உணவும் அன்றாட வாழ்க்கையில் கலந்து விடுவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. தமிழர்கள் சீன உணவகங்களுக்குச் செல்வதும்

சீனர்கள் தமிழர்கள் உணவகங்களுக்குச் செல்வதும் அன்றாட வாடிக்கையாகத் திகழ்கிறது. இதனால் பல்லின மக்களின் ஒற்றுமை நிலவுகிறது.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு

புலம்பெயர்ந்து மலேசியாவில் குடியேறிய தமிழ் மக்கள் கலை கலாச்சாரம், விளையாட்டு போன்றவற்றில் தாயகமாம் தமிழ் நாட்டைப் பிரதிபலிக்கின்றனர். தமிழரின் பல்வேறு விளையாட்டுகள் மலேசிய தமிழர்களால் விளையாடப்பெறுகின்றன. இங்குக் குறிக்கத்தக்க விளையாட்டுகள் "1. கபடி (சடுகுடு) , 2. கோலி விளையாட்டு, முக்கழியாட்டம், பேந்தா ஆட்டம், 3. சில்லாங் குச்சு (கில்லி), 4. பட்டம் (காற்றாடி), 5. பாரிக் கோடு, 6. ஐந்தாங்கல் ஆட்டம், 7. கிச்சு கிச்சுத் தம்பலம், 8. ஒரு குடம் தண்ணீர் ஊற்றி, 9. பல்லாங்குழி, 10. கண்ணாம் பொத்தி, 11. புலியும் ஆடும், 12. குலை குலையாய் முந்திரிக் காய், 13. பாண்டி விளையாட்டு, 14. பம்பரம்"[23] இவை போல் இன்னும் தமிழகத்தில் விளையாடக் கூடிய பெரும்பாலான விளையாட்டுக்கள் நடைமுறையில் உள்ளன. ஆனால் தரவாளர் கூறியதன் அடிப்படையில் மட்டும் விரிவஞ்சித் தரப்பெறுகின்றன.

1.கபடி (சடுகுடு)

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டு. இவ்விளையாட்டு இன்று உலகளாவிய நிலையில் புகழ்பெற்று வருகிறது. சடுகுடு ஆட்டம் உலகளவில் விளையாடப் பெற்று வருகிறது. மலேசியாவில் இவ்விளையாட்டில் சிறுவர்களும் இளைஞர்களும் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

2.கோலி விளையாட்டு

கோல் என்னும் சொல்லுக்குத் தமிழில் வளைவு என்னும் பொருள் உண்டு. உருண்டு வளைந்த உருப்பொருளை கோலி என்பது தூய தமிழ்ச்

23. தகவலாளியின் திருமதி. கண்ணகி (விவேகானந்தா தமிழ் பள்ளி, பெட்டாலிங் ஜெயா) தந்த தகவல்.

சொல். 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கோலி விளையாட்டை மலேசியத் தமிழ்ச் சிறுவர்கள் ஆடி வந்திருக்கின்றனர். இதனுள் பல வகை உண்டு. அவற்றுள் சிலவகை பின்வருமாறு.

முக்கழியாட்டம்

சுமார் ஒரு மீட்டர் இடைவெளிவிட்டு நேர்க்கோட்டில் மூன்று குழிகள் போட்டு அதில் கோலிகள் போட்டும் அடித்தும் விளையாடுவது இவ்வாட்டம் ஆகும்.

பேந்தா ஆட்டம்

பேந்தா ஆட்டம் சுமார் 50க்கு 30 செண்டிமீட்டர் அளவுள்ள நீள் சதுரம் இரண்டாகப் பிரிக்கப்படும் நடுக்கோடு கொண்டு இவ்வாட்டம் ஆடப்படும். கோலி கோட்டில் நிற்காமல் உருட்டி புள்ளிகள் (பழம்) சேர்ப்பது இந்த விளையாட்டு. பத்து புள்ளிகள் பெற்றவர் பழம் பெற்றவர் எனப்படும். தோற்றவர் கோலியைப் பழம் பெற்றவர் அனைவரும் அடித்துத் தொலைதூரத்திற்கு தள்ளுவார்கள். அங்கிருந்து தோற்றவர் தன் கோலியைத் தன் புறங்கை முட்டியால் பேந்தா நீள் சதுரம் உள்ள இடத்திற்குத் தள்ளிக் கொண்டு வரவேண்டும் என்ற முறையில் இவ்விளையாட்டு ஆடப்பெறுகிறது.

3. சில்லாங் குச்சு (கில்லி)

மலேசியாவில் கில்லி விளையாட்டைச் சிறுவர்கள் “கவுண்டா கவுண்டி” என்று அழைப்பர். மற்ற இனத்தவர்கள் இந்த விளையாட்டை “கொண்டா கொண்டி” என்று கூறுவார்கள். சில்லாங் குச்சு என்னும் ஒரு சிறு குச்சை ஒரு கோலால் தட்டி ஆடும் ஆட்டு சில்லாங்குச்சு எனப்படும்.

4.பட்டம் (காற்றாடி)

பட்டம் ஒருவர் மட்டும் பறக்க விட்டால் அது பொழுது போக்கு. ஒருவருக்கு மேல் ஆடினால் விளையாட்டு ஆகிவிடுகிறது. உடைத்த சீசா துண்டுகளை அரைத்து பசையுடன் கலந்து பட்டம் விடும் நூலில் பூசிக்

கொள்வர். பட்டம் மேலே பறக்கும் போது மற்றவர் பட்டத்தின் நூலை அறுத்துப் பட்டத்தைக் கீழே சாய்ப்பதுதான் இவ்வாட்டம். சிறிய பட்டங்கள் வால் ஒட்டிப் பறக்கவிடுவன. சிறுவர்கள் அப்பட்டத்தில் நூலைக் கட்டி ஓடியும் நின்றும் பறக்க விடுவார்கள்.

5. பாரிக் கோடு.

ஏறக்குறைய நீள் சதுரமான இடம். பக்கத்திற்கு நால்வர் வீதம் ஆடும் ஆட்டம். இது திறந்த வெளியில் அல்லது பொட்டலில் ஆடப்பெறுவது. நான்கு பேர் வீதம் இரு கட்சியாக அமைக்கப்படும். முதலில் ஆடும் குழுவினர் அரங்கின் வெளியே நிற்க, மற்ற கட்சியார் அரங்கின் கோட்டில் நிற்பர். வெளியில் நிற்பவர்கள் அரங்கின் உள்ளே உள்ள அனைத்துக் கட்டங்களையும் கடந்து பின் திரும்பவும் நுழைந்து புறப்பட்ட இடத்திற்கே வரவேண்டும். கட்டங்களைக் கடக்கும்போது கோட்டில் நிற்கும் எதிர் அணியினரிடமிருந்து தப்பிக்கும்போது அவர் கை படாமல் தப்பி அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டும். எதிர் அணியினர் யாரையாவது தொட்டுவிட்டால் ஆடும் அணியினர் கோட்டில் நின்றும் கோட்டிலிருந்தவர்கள் கோட்டுக்கு வெளியே சென்று ஆடத் தொடங்குவர். இவ்விளையாட்டைப் பலவிதமாகத் தமிழ் நாட்டின் வட்டார வழக்கப்படி ஆடுவர்.

6. ஐந்தாங்கல் ஆட்டம்

ஐந்து கற்களைக் கொண்டு ஆடும் ஆட்டம் ஐந்தாங்கல் ஆகும். இதனை ஏழு கற்கள் கொண்டு ஏழாங்கல் ஆட்டமாக ஆடலாம். அவரவர் கற்பனைக் கேற்ப விளையாட்டை மாற்றி ஆடலாம். கற்களுக்குப் பதில் அரிசி, பயறு போன்றவற்றை சிறு சிறு பையில் போட்டு தைத்துக் கொண்டும் ஆடப்படுகிறது.

7. கிச்சு கிச்சுத் தம்பலம்

விளக்குத் திரி அல்லது அந்த அளவிலான ஒரு பொருளை மண்ணுள் வைத்து மறைத்துக் "கிச்சுக் கிச்சு தம்பலம்" என்று சொல்லி எடுக்கும் ஆட்டம் கிச்சு கிச்சுத் தம்பலம் எனப்படுகிறது.

8. ஒரு குடம் தண்ணீர் ஊற்றி

"ஒரு குடம் தண்ணீர் ஊற்றி" என்று தொடங்கும் பாட்டைப் பாடி ஆடும் விளையாட்டு. இவ்விளையாட்டுக்கு நான்கு பேர்களுக்குக் குறையாதிருக்க வேண்டும். இருவர் காவலர்கள் போன்று கைகோர்த்து உயர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கிடையே மற்றவர்கள் ஒருவர் பின் ஒருவராக இடுப்பின் ஆடையைப் பற்றிக் கொண்டு, நுழைந்து செல்கையில் "ஒரு குடம் தண்ணீர் ஊற்றி ஒரு பூப் பூத்தாம், இரண்டு குடம் தண்ணீர் ஊற்றி இரண்டு பூப் பூத்தாம்" என்று பத்து வரை "பத்துக் குடம் தண்ணீர் ஊற்றி பத்துப் பூ பூத்தாம்" என்று பாடிக் கொண்டு கைகோர்த்து நிற்கும் இருவரையும் மாறி மாறி சுற்றிக் கொண்டே இருப்பர். "பத்துக் குடம் தண்ணீர் ஊற்றி" என்ற அடி முடிந்தவுடன், கைகோர்த்து நிற்கும் இருவரும் கையைத் தாழ்த்திக் கடைசியாக வருபவரைப் பிடித்துக் கொள்வர். அப்போது வரிசையிலிருக்கும் முதல் பிள்ளைக்கும் கை கோர்த்து பின்னால் நிற்பவருக்கும் உரையாடல் நடக்கும்.

முதல் பெண்: விடுடா துலுக்கா!

காவலர்: விடமாட்டேன் மலுக்கா!

முதல் பெண்: கணைக்காலில் கை வைத்து, இம்மாம் பொன்
தருகிறேன், விடுடா துலுக்கா!

காவலர்: விடமாட்டேன் மலுக்கா!

இவ்வாறே முழங்கால், இடுப்பு, தோல், தலை, தலைக்கு மேல் கையை உயர்த்திக் காட்டி அவ்வளவு பொன் தருகிறேன் என்றாலும் கைகளை உயர்த்தி

நின்ற காவலன் விடமாட்டேன் என்பான். இறுதியில் கறியும் சோறும் தருகிறேன் என்றதும் விட்டு விடுவான். அரண்மனைப் பூந்தோட்டக் காவலன் முகமதியன். பூப் பறித்த பெண்ணைப் பிடித்துவிட்டதால் அவன் பெற்றோர் எவ்வளவு பணம் தந்தும் ஏற்காமல் கடைசியில் கறியும் சோறும் தருவதாகச் சொன்னவுடன் அப்பிள்ளையை விட்டுவிட்ட செய்தியை நடித்துக் காட்டுவதே இந்த விளையாட்டாகும்.

9.பல்லாங்குழி

பக்கத்திற்கு ஏழு குழிகள் வீதம் பதினான்கு குழிகள் கொண்டு விளையாடும். விளையாட்டு. இதுவாகும். ஒரு குழிக்கு ஐந்து காய்கள் வீதம் பதிநான்குக் குழிகளையும் நிரப்பிக் கொள்ள வேண்டும். குழி வரிசைக்கொருவராக எதிர் எதிராக அமர்ந்து கொள்ள வேண்டும். முதலில் ஆட்டத்தைத் தொடங்குபவர் தன் பக்கத்தில் இருக்கும் ஏதாவது ஒரு குழியிலிருந்து ஐந்து காய்களையும் எடுத்து வலப் பக்கத்துக் குழிகளில் ஒவ்வொன்றாகப் போட்டுக் கொண்டே வரவேண்டும். காய்கள் முடிந்தவுடன் அடுத்த குழியிலிருந்து காய்களை எடுத்து முன் போல ஒவ்வொன்றாகப் போட்டுக்கொண்டு வரவேண்டும். கடைசியாகப் போட்ட குழிக்கு அடுத்த குழி காலியாக இருந்தால் அதற்கடுத்த குழியிலிருக்கும் காய்களை எடுத்து தன்னிடம் வைத்துக் கொள்ளவேண்டும். அதன் பின் எதிரில் அமர்ந்திருப்பவர் தம் வரிசையில் உள்ள ஒரு குழியிலிருந்து காய்களை முன்னர் ஆடியவர் போல ஆட வேண்டும். கடைசியாகப் போட்ட குழிக்கு அடுத்த குழிக்கு அடுத்த இரண்டு குழிகளில் காய்கள் ஏதுமின்றி காலியாக இருந்தால் ஆடுபவர் காய்கள் எடுக்காமலே ஆட்டத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் வரிசையிலுள்ள குழிகளில் நான்கு காய்கள் சேர்ந்தவுடன் அவற்றைப் பசு என்று சொல்லி எடுத்துக் கொள்வர். எட்டு காய்கள் சேர்ந்தவுடன் பழம் என்று சொல்லி எடுத்துக் கொள்வர். இவ்வாறு இருவரும் மாறிமாறி ஆடி வரும்போது எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கும் காய்களை ஒரே வரிசையில் போய்ச் சேர்ந்து விடின் ஆட்டம் நின்றுவிடும். இருவரும் தாம் எடுத்து வைத்துள்ள காய்களை எண்ணுவர். ஒரே வரிசையில் சேர்ந்த காய்களெல்லாம்,

அவ்வரிசையாரைச் சேரும் மிகுதியான காய்களைக் கொண்டவர் வென்றவராவார்.

10. கண்ணாம் பொத்தி

இவ்விளையாட்டு கண்ணாம் பூச்சி என்றும் வழங்கப்படுகிறது. இவ்விளையாட்டுக்குப் பத்துக்குக் குறைவானவர்கள் இருப்பார்கள். ஒருவர் கண்ணைப் பொத்திக் கொண்டு முப்பது, நாற்பது அல்லது ஐம்பது வரை எண்ண வேண்டும். மற்றவர்கள் ஓடிப் போய் ஒளிந்து கொள்வர். கண்களைப் பொத்தியவன் கைகளை எடுத்துவிட்டு இருபது எண்ணிக்கை வரை எண்ணுவதற்குள் ஒளிந்திருப்பவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும். யாராவது ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கண்ணைப் பொத்திக் கொண்டு முன் போல் ஐம்பது வரை எண்ணிவிட்டு கண்களைப் பொத்திய கைகளை எடுத்துவிட்டு ஒளிந்தவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

11. புலியும் ஆடும்

பல பிள்ளைகள் வட்டமாய் கைகோர்த்துக் கொண்டு நிற்க, ஒரு பிள்ளை உள்ளும் மற்றொரு பிள்ளை வெளியேயும் நிற்பார்கள். வட்டத்தின் உள் நிற்கும் பிள்ளை ஆடாகவும் வட்டத்தின் வெளியே நிற்கும் பிள்ளை புலியாகவும் கருதப்படுவர். புலிக்கும் வட்டமாய் நிற்கும் பிள்ளைகளுக்கும் பின்வருமாறு உரையாடல் நடக்கும்.

புலி: சங்கிலி புங்கிலி கதவைத் திற.

பிள்ளைகள்: நான் மாட்டேன் வேங்கைப்புலி.

புலி : வரலாமா வரக் கூடாதா?

பிள்ளைகள் : வரக்கூடாது.

பிள்ளைகள் வழிமறித்தபின், புலியார் வட்டம் பிடித்துக் கொண்டிருக்கும் இரண்டு பிள்ளைகளுக்கிடையில் நுழையப் பார்க்கும். பிள்ளைகள் இடம் விடுவதில்லை பல முறை வட்டத்தைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தபின், புலி

திடுமென்று ஓரிடத்தில் வலிந்து புகும். உடனே ஆடு வெளியில் போக விடப்படும். புலி ஆட்டைப் பிடிக்க வெளியேறும். ஆடு புலியிடமிருந்து தப்பிக்க வட்டத்தின் உள்ளே விடப்படும். இவ்வாறு மாறி மாறி இரண்டொருமுறை நிகழ்ந்த பின், இறுதியில் புலி ஆட்டைப் பிடித்துக் கொள்ளும். பிள்ளைகள் ஆடு, புலியாக மாறி மாறி விளையாடுவர்.

12. குலை குலையாய் முந்திரிக் காய்

பல பிள்ளைகள் வட்டமாக உள்நோக்கி அமர்ந்திருக்க வேண்டும். ஒரு பிள்ளை திரிபோல் முறுக்கிய துணியை கையில் வைத்துக் கொண்டு, "குலை குலையாய் முந்திரிக்காய்" என்று உரக்கக் கூறிக் கொண்டே வட்டத்திற்கு வெளியே பிள்ளைகளுக்கு அருகில் வலமாகச் சுற்றிச் சுற்றி வர வேண்டும். அப்பிள்ளை "குலை குலையாய்" என்று சொல்லுந்தோறும் " நரியே! நரியே! ஓடிவா! என்று கத்திச் சொல்வர். இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, சுற்றி வரும் பிள்ளை திடுதிப்பென திரியை ஒரு பிள்ளையின் பின்னால் வைத்துவிடும். திரி வைக்கப்பட்ட பிள்ளை உடனே கண்டு அதை எடுக்காவிடின், வைத்த பிள்ளை ஒரு சுற்று வந்து, திரி வைக்கப்பட்ட பிள்ளையின் முதுகில் அத்திரியால் ஓங்கி அடிக்கும். அடி வாங்கிய பிள்ளை ஒரு சுற்று ஓடி தான் உட்காந்திருந்த இடம் வந்தவுடன் அடித்த பிள்ளை திரியை அடிவாங்கிய பிள்ளையிடம் கொடுத்துவிடும். திரியை வாங்கிய பிள்ளை, முன்னவர்போல் திரியுடன் சுற்றித் திரியை ஒரு பிள்ளையின் பின்னால் வைக்கும். திரி வைக்கப்பட்டவுடன் பிள்ளை பார்த்துவிட்டால் அப்பிள்ளை திரியை எடுத்துக் கொண்டு திரி வைத்த பிள்ளையைத் துரத்தும். அப்பிள்ளை வலமாகவே ஓடி காலியான இடத்தில் அமர்ந்துவிடும். திரியெடுத்த அல்லது வாங்கிய பிள்ளை "குலை குலையாய்....." என்று சொல்ல மற்றவர்கள் "நரியே! நரியே! ....." என்று பின் சொல்வர். இவ்வாறே ஆட்டம் தொடரும்.

13. பாண்டி விளையாட்டு

சில்லியெறிந்து கட்டத்தைத் நொண்டியடித்துத் தாண்டி விளையாடும் விளையாட்டு. எட்டடி நீளமும் மூன்றடி அகலமும் கொண்ட நீள் சதுரத்தில்

மூன்றுக்கு இரண்டு அடி கட்டங்கள் நான்கு கீறிக் கொள்ளவேண்டும். நான்காவது கட்டத்திற்கு வெளியே உச்சிப் பகுதியில் அரை வட்டம் கீறிக் கொள்ளவேண்டும். இரண்டு அல்லது மூவர் ஆடலாம். ஆடுபவர் முதல் கட்டத்திற்கு வெளியே நின்று சில்லியை முதல் கட்டத்தில் விழுமாறு போட்டு நொண்டியடித்துத் தாண்டி மற்ற கட்டங்களை நொண்டியடித்துத் திரும்பி வரும்போது போட்டிருந்த சில்லியை ஒரு காலில் நின்றவாறே எடுத்து புறப்பட்ட இடத்திற்கே திரும்ப வேண்டும். இவ்வாறே எல்லாக் கட்டங்களுக்கும் செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்யும்போது இரண்டு கால்களும் தரையில் பட்டுவிட்டால் ஆட்டம் இழந்து மற்றவர் ஆட்டம் தொடங்குவார். எல்லாக் கட்டங்களுக்கும் சில்லி போட்டு முடிந்தவுடன் நீள் சதுர அரை வட்டத்திற்குச் சில்லியை வீசுவார். நொண்டியடித்துச் சென்று அந்தச் சில்லியை எடுத்துக் கொண்டு நொண்டியடித்துக் கொண்டே திரும்பினால் அவர் வெற்றியாளராகக் கருதப்படுவார். சில்லி வீசும்போது நீள் சதுரம் மற்றும் அரைவட்டத்திற்கு வெளியே விழுந்தால் அடுத்தவர் ஆடத் தொடங்குவார்.

14. பம்பரம்

பெரும்பாலும் சிறுவர்கள் விளையாட்டு. உறுதியான மரத்தாலும் மரவேராலும் செய்யப்படுவது பம்பரம். பம்பரத்தின் அடியில் ஆணி ஒன்று பிணைக்கப்படும். பம்பரத்தின் அடியிலுள்ள ஆணியிலிருந்து கயிற்றைச் சுற்றி இலாகவமாகக் கயிற்றைத் துரிதமாக இழுத்துவிடப் பம்பரம் சுழலும். சுழலும் பம்பரத்தின் மீது கயிற்றைப் போட்டு அல்லது ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் கொண்டு உள்ளங்கைக்கு மாற்றிச் சுழல விடுவர்.

இவை தமிழர் பாரம்பரியம் சார்ந்த விளையாட்டுகள் ஆகும். இவ்விளையாட்டுகள் தவிர, இறகுப் பந்து, வளைகோல் பந்து, கால்பந்து, கைப்பந்து, மட்டைப்பந்து, ஸ்குவாஷ் போன்ற விளையாட்டுக்களையும் மலேசியத் தமிழர்கள் விளையாடி வருகின்றனர். மேலும் இவ்விளையாட்டில் தேசிய அளவில் முக்கியத்துவமும் பெற்று வருகின்றனர்.

பண்பாட்டு நிகழ்வுகள்

உணவு, விளையாட்டு என்ற வரிசையில் பண்பாட்டு நிகழ்வுகள், சடங்குகள் ஆகியனவும் இனக்குழுவின் அடையாளமாக விளங்கத்தக்கனவாகும். இவ்வகையில் மலேசிய தமிழர்களின் பண்பாட்டு நிகழ்வுகள் அவர்களின் இனக்குழு அடையாளங்களாக விளங்குகின்றன. குறிப்பாக திருமண நிகழ்வுகள் பண்பாட்டுப் பின்புலத்தில் நடத்தப்படுகின்றன.

திருமணம்

தமிழர்களின் திருமணம் பாரம்பரியமாகப் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பெண்ணைப் பெற்றவர்கள் தங்கள் மகளுக்கு ஏற்ற வரனை திருமணத் தரகர், உறவினர் மற்றும் நண்பர்கள் மூலம் விசாரித்தறிவார்கள். அதே போன்று ஆணுக்கும் ஏற்ற பெண்ணை விசாரித்தறிவார்கள். இரு வீட்டார்களும் ஆண், பெண் குடும்பத்தின் பின்னணி, சாதி, வயது, அழகு, கல்வி, உத்தியோகம், அந்தஸ்து ஆகியவற்றைக் கவனத்தில் கொள்கின்றனர்.

பெற்றோர்கள் திருப்தி அடைந்தால் ஆண், பெண் இருவரின் ஜாதகப் பொருத்தம் பார்ப்பார்கள். முதலில் நட்சத்திரப் பொருத்தம் பார்ப்பார்கள். எந்தெந்த நட்சத்திரத்தில் பிறந்த ஆண்களுக்கு, எந்தெந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணின் நட்சத்திரம் பொருந்தும் என்பதைப் பார்ப்பார்கள். "பொருத்தங்கள் பத்து ஆகும் . அவை,

1.தனம், 2.கணம், 3.மகேந்திரம், 4.ஸ்திரி தீர்க்கம், 5.யோணி, 6.ராசி, 7.ராசி அதிபதி, 8.வசியம், 9.ரஜ்ஜு, 10.நாடி ஆகியன."[24] பத்துப் பொருத்தங்களில்

[24]. தகவலாளி கிருஷ்ணமூர்த்தி தந்த தகவல், உலுதிராம், ஜோகூர்.

மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு ஏழு பொருத்தங்கள் சரியாக இருந்தால் திருமணம் முடிக்கலாம் என்பது நம்பிக்கை.

பெண் பார்த்தல்

மாப்பிள்ளைக்குப் பெண் கேட்டு மாப்பிள்ளையின் பெற்றோரும் ஓரிரு பெரியவர்களுடன் பெண் வீட்டுக்குச் செல்வார்கள். போகும்போது வெறுங்கையுடன் செல்லாமல் மங்களப் பொருட்கள் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், மஞ்சள், குங்குமம், பூ மற்றும் தேங்காய் முதலியவற்றை ஒரு தட்டில் வைத்து எடுத்துச் செல்வார்கள். தரகர் ஏற்பாடு செய்திருந்தால் அவரே பேச்சைத் தொடங்குவார். பெண் மாப்பிள்ளையைப் பார்க்க வாய்ப்பளிக்கப்படும். மாப்பிள்ளையும் பெண்ணும் திருமணத்திற்குச் சம்மதித்தால் பெரியோர்கள் அடுத்த கட்ட பேச்சைத் தொடங்குவார்கள். ஒரு சில சமூகத்தினர் வரதட்சணை வாங்கும் வழக்கம் கொண்டிருந்தால் வரதட்சணையையும் பேசுவர். இரு தரப்பினரும் சம்மதித்தால் திருமண நிச்சயதார்த்த நாள் குறிப்பார்கள்.

நிச்சயதார்த்தம்

முன்பு நிச்சயதார்த்த நிகழ்வு பெண் வீட்டிலேயே பெற்றோர், நெருங்கிய உறவினர்கள், முக்கிய நண்பர்களுடன் நடைபெற்றது. ஆனால் இக்காலத்தில் நிச்சயதார்த்த நிகழ்வு ஒரு திருமண நிகழ்வு போன்று மிகவும் ஆடம்பரமாக நடைபெறுகிறது. திருமணத்திற்கு அழைப்பது போல் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைப்பதால் வீடுகளில் நிச்சயதார்த்த நிகழ்வு நடத்தச் சாத்தியப்படாது. பெரும்பாலும் மண்டபம் அல்லது ஆலயங்களில் நடத்தப்படுகின்றன. நிகழ்வு நடைபெறும் இடம் நேர்த்தியாகவும் ஆடம்பரமாகவும் கண்ணைக் கவரும் வண்ணம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இந்நிகழ்வுக்குச் சுவையான விருந்துக்கும் குறைவில்லை.

மாப்பிள்ளை வீட்டார் நிச்சயதார்த்த நிகழ்வுக்கு வரும் பொழுது சீர் கொண்டு வருவது வழக்கம். முன்பெல்லாம் சீர் வரிசைக்கு ஐந்து அல்லது ஏழு தட்டுகள் முக்கியமாக மங்களப் பொருள்கள், இனிப்புகள், பெண்ணிற்கு ஆடை ஆபரணங்கள், பழங்கள் ஆகியவை கொண்ட தட்டுகளாக இருக்கும். தற்போது இருபதுக்கு மேற்பட்ட சீர் தட்டுகள் இடம் பெறுகின்றன. தாம்பாளத் தட்டுகளும் பிரம்புக் கூடைகளும் வித விதமாக அலங்கரிக்கப்பட்டு மங்களப் பொருள்கள், பெண்ணிற்கு ஆடை ஆபரணங்களோடு வித விதமான இனிப்புப் பலகாரங்கள், பலவகையான பழங்கள், மிட்டாய் வகைகள் முதலியவற்றை வைத்துக் கொண்டு வருகிறார்கள்.

நிகழ்வு நடைபெறும் இடத்தின் நுழைவாயிலில் பெண்வீட்டார் மாப்பிள்ளைக்கு மாலை சூடி மங்கள வாத்தியம் முழங்க அனைவரையும் வரவேற்பார்கள். அனைவரும் அமர்ந்த பின் புரோகிதர் பூசை செய்து நிகழ்வைத் தொடங்கி வைப்பார். சில நிச்சயதார்த்தங்கள் புரோகிதர் இன்றி ஒரு பெரியவர் மூலம் நடத்தப்படும். புரோகிதர் அல்லது நிகழ்வு நடத்தும் பெரியவர் நிச்சயதார்த்த பத்திரிகையை வாசிப்பார். இந்நிகழ்வில் பெண்ணின் தாய் மாமனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும். திருமண நிச்சயத்திற்கு அவரின் சம்மதம் கேட்கப்படும். திருமணம் புரிந்து கொள்ளவிருக்கும் ஆண் பெண் இருவரின் சம்மதமும் கேட்கப்படும். திருமணம் புரிந்து கொள்ளவிருக்கும் ஆண், பெண் பெற்றோர்கள் ஒப்புக் கொண்டால் திருமணம் நடைபெறவிருக்கும் நாளை சூழ்நிலைகளுக்கு ஏற்ப பெரும்பாலும் அனைவரின் வசதிக்காகச் சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக் கிழமையைத் தேர்ந்தெடுப்பார்கள். பெண், மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த ஆடை ஆபரணங்களை அணிந்து வந்து சபைக்கு வணக்கம் கூறுவார். பின்னர் சம்பந்திகள் தட்டு மாற்றிக் கொள்ளும் வைபவம் நடைபெறும். சம்பந்திகளின் தட்டுகளில் மங்களப் பொருட்கள், வெற்றிலை, பாக்கு, வாழைப் பழங்கள், தேங்காய் முதலியன இருக்கும். சம்பந்திகள் தட்டு மாற்றிக் கொண்டவுடன் நிகழ்வு முடிவுக்கு வரும். வருகை புரிந்தவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்படும். பின்னர் விருந்து நடைபெறும். விருந்தில் திருமணமாகவிருக்கும் ஆணும்

பெண்ணும் பிரதான மேடையில் அமர்ந்து உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுடன் விருந்துண்பார்கள்.

திருமண ஏற்பாடுகள்

திருமணம் நடத்த மண்டபம் அல்லது ஆலயம் தேர்ந்தெடுக்கப்படும். வசதி படைத்தவர்களுக்குப் பெரிய வீடும் நிலமும் இருக்குமானால் திருமணத்தை வீட்டிலேயே நடத்துவார்கள். திருமணப் பத்திரிகை இரு வீட்டாரும் கலந்து பேசி தனித் தனியாக ஏற்பாடு செய்யாமல் சேர்ந்தே தயாரிப்பார்கள். திருமணத்திற்கு இரண்டு மாதங்கள் இருக்கும் போதே உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் திருமண அழைப்பைக் கொடுக்கத் தொடங்குவார்கள். "மணமகன், மணமகள் வீட்டின் முன் பந்தல் போடுவதற்கு முன் அரசாணைக்கால் ஊன்றும் நிகழ்வு நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாணைக்கால் வளைவுகள் முடிச்சுகள் இல்லாத பந்தல் போடுவதற்கான உயரமானதாக இருக்கும். சுமங்கலிப் பெண்கள் மூவர் அல்லது ஐவர் அரசாணைக்காலை நீராட்டி குங்குமம், சந்தனப் பொட்டிட்டு காலின் உச்சியில் மாங்கொத்து, கல்யாண முருங்கைக் கொத்து, ஒரு மஞ்சள் துண்டு ஆகியவற்றைக் கட்டி, பூசை செய்து குழியில் நடுவார்கள். பின்னர் தென்னை ஓலையிலான பந்தல் போடப்படும்."[25] தென்னை ஓலை பந்தல் போடும் வழக்கம் நாகரிகத்தின் தாக்கத்தால் அருகி வருகிறது. ஆனால் குருத்தோலை கூந்தலும் மாவிலை கட்டுதலும் நடைமுறையில் மாறாதிருப்பது மகிழ்ச்சிக்குரியதே ஆகும்.

பொன்னுருக்குதல் (திருமாங்கல்யம் செய்தல்)

திருமணம் மாங்கல்யம் இல்லாமல் நடைபெறாது. மாங்கல்யம் ஏறினாலொழிய அது முறையான திருமணமாகாது என்பது ஆன்றோர் கருத்து. எனவே கணவன் மனைவியாகப் பல்லாண்டு காலம் செழுமையாக வாழ மாங்கல்யம் நல்ல நாளிலே செய்யத் தொடங்க வேண்டும். நல்ல நாள் பார்த்து

25. தகவலாளி கிருஷ்ணமூர்த்தி தந்த தகவல், உலுதிராம், ஜோகூர்.

பொற்கொல்லரிடம் சென்று மாங்கல்யம் செய்ய ஏற்பாடுகள் செய்வார்கள். முற்காலத்தில் தமிழர்களிடையே பல சமூகத்தவர்கள் அவரவர் வழக்கப்படி மாங்கல்யம் சற்று வேறுபடும். ஒவ்வொரு குலத்திற்கும் வெவ்வேறு வடிவிலும் அளவிலும் செய்யப்பட்டு அதற்கேற்ப பெயரும் பெற்றுள்ளது. ஆமைத்தாலி, பொட்டுத்தாலி, சிறுதாலி, பெருந்தாலி என்பன சில. இக்காலத்தில் பெரும்பாலும் 'பிள்ளையார்' தாலி என்பதையே செய்வார்கள். மணமக்களின் பெற்றோர் விருப்பப்படி பொற்கொல்லர் மாங்கல்யம் செய்த பின்னர் மாங்கல்யத்தை வாங்குவதற்கு நல்ல நாள் பார்த்து சுமங்கலிப் பெண்கள் மங்களப் பொருட்களுடன் சென்று தாலியைப் பெற்றுக் கொள்வார்கள்.

ஆடை ஆபரணங்கள்

மாப்பிள்ளை பெண்ணுக்குத் திருமண ஆடைகள் அவரவர் விரும்பியபடி தமிழர் கலாச்சாரப்படி உடையைத் தேர்ந்தெடுப்பார்கள். திருமணத்தின்போது மணப்பெண் கூறைப்புடவை அணிய வேண்டும். ஆனால் தற்காலத்தில் மிக விளையுயர்ந்தப் பட்டு சேலைகளையே தேர்ந்தெடுக்கின்றனர். மாப்பிள்ளை பட்டு வேட்டி, சட்டை மற்றும் அங்கவஸ்திரம் திருமணத்திற்கு அணிந்து கொள்வார். மாப்பிள்ளை சாதாரணமாக வேட்டி கட்டிக் கொள்வார். ஒரு சிலர் 'பஞ்சகச்சம்' அணிந்து கொள்வார்கள். இக்காலத்தில் மாப்பிளைக்கு வேட்டி அல்லது பஞ்சகச்சம் கட்டத் தெரிந்த ஒருவர் கட்டிவிடுவார். வசதி படைத்தோர் தங்கள் உறவினர்களுக்குச் சீருடை போன்ற பாரம்பரிய ஆடைகளை வழங்குவார்கள்.

அலங்காரம்

திருமண மேடைக்குச் செல்லும் நுழைவாயிலில் இரு பக்கங்களிலும் குலை தள்ளிய வாழை மரங்கள் கட்டப்படும். சிலர் தங்கள் குல வழக்கப்படி இளநீர் குலை, தென்னம்பூ (தென்னம்பாளை) ஆகியவற்றையும் கட்டுவர். வாழையடி வாழையாகக் குடும்பம் தழைக்கவும் தென்னம்பூ, தென்னங்குலை போன்று குழந்தைச் செல்வத்துடனும் பொருட்செல்வத்துடனும் வாழ வருகையாளர்கள் வாழ்த்திக் கொண்டே நுழைவார்கள் என்பது நம்பிக்கை.

நுழை வாயிலுக்கு முன்னும், உள் பகுதியிலும் வளைவு அலங்காரமும் பிரமுகர் வரவேற்புக்கு விரிக்கப்படும் கம்பளமும் போடப்படும். இரவு நேரத் திருமணமாயிருந்தால் மின் விளக்குகளால் மின்னும்படி அலங்கரிக்கப்படும். மணமகனும் மணமகளும் வரும் வாகனங்கள் கவர்ச்சியான விலை மதிப்புள்ள வாகனங்கள் ஏற்பாடு செய்யப்படும்.

திருமண நிகழ்வு

திருமண நாளன்று மணமகன், மணமகள் சார்பாக வருகையாளர்களை இன்முகத்துடன் பன்னீர் தெளித்து மலர், குங்குமம், சந்தனம் அளித்து வரவேற்பார்கள். அவரவர் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப மலர்களாலும் மின்விளக்குகளாலும் அழகாக மணவறை அலங்கரிக்கப்படும். "கிழக்கு நோக்கிய மணவறையில் மாப்பிள்ளையும் மாப்பிள்ளைத் தோழனும் அமர்ந்தவுடன் புரோகிதர் வடக்கு நோக்கி அமர்ந்து பூர்வாங்க கிரியைகளைத் தொடங்குவார். மரபுக்கு மாறுபடாத வகையில் மணவறையின் முன்னால் இரண்டு உயரமான பெரிய குத்து விளக்குகள் தீபம் ஏற்றி வைக்கப்படும். தலைவாழை இலையில் பச்சரிசி பரப்பி அதன்மேல் கும்பம் வைக்கப்படும். கும்பம் என்பது செம்பு அல்லது குடத்தில் நீர் ஊற்றி அதன்மீது மாங்கொத்தும் முற்றிய தேங்காயும் வைப்பார்கள். தேங்காயில் மஞ்சள் பூசி, செம்புக்குச் சந்தனம், குங்குமப் பொட்டிடப்படும். வர்ணம் தீட்டிய மட்கலங்கள் ஒன்றின்மீது ஒன்று வைக்கப்படும். புரோகிதர் முதலில் திருமண நிகழ்வு தடையின்றி நடைபெற விநாயகர் பூசையை நடத்துவார். மூன்று சுமங்கலிப் பெண்கள் அரசங்கிளை நட்டு அதற்குக் காப்பு கட்டுவார்கள். மாப்பிள்ளைக்குக் காப்புக் கட்டப்படும். புனித சடங்கான திருமண நிகழ்வின் போது தீய சக்திகளால் தீமை நடவாமல் நிகழ்வு மங்களகரமாக நடந்தேறக் காப்பு கட்டப்படுகிறது. பிரம்மச்சரிய விரதமிருந்த மணமகனுக்குத் தோசங்கள் இருப்பின் அவை நீங்கும் பொருட்டு மூன்று சுமங்கலிகள் நலுங்கு வைப்பார்கள். மங்களப் பொருள்களான பன்னீர், குங்குமம், சந்தனம், பூரண கும்பம், தீபம், அம்மிக் குலவி, மஞ்சள் கலந்த அரிசி முதலியன நலுங்கில் இடம்பெறும். நலுங்கிற்குப் பின்னர் புரோகிதர் மணமகனுக்குத் திருமண

ஆடையையும் மாலையையும் கொடுத்து அணிந்துவர அனுப்பி வைப்பார். அடுத்து மணப் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்குச் செய்த சடங்குகள் அனைத்தும் நடத்தப்படும். புரோகிதர் மணப்பெண்ணுக்கு கூறைப்புடவையும் மாலையும் கொடுத்து அலங்காரம் செய்து கொண்டு வரும்படி கூறுவார்.''[26]

மணமகன் மணக்கோலத்துடன் மணமகனின் தோழனுடன் சிறுமிகள் அகல் விளக்கு ஏந்த பெற்றோர், உற்றார் உறவினருடன் மங்கள வாத்தியங்கள் முழங்க மணமேடைக்குச் செல்லும் வாயிலை வந்தடைவார். மணமகனின் தோழன் (பெரும்பாலும் மணப்பெண்ணின் சகோதரனாக இருப்பார்) மாப்பிள்ளையின் பாதங்களைக் கழுவி குங்குமம், சந்தனப் பொட்டிட்டு மெட்டி அணிவிப்பார். மாப்பிள்ளை அவருக்குத் தங்க மோதிரம் பரிசளிப்பார். மணமகன் மணவறையில் அமர்ந்தவுடன் புரோகிதர் வேள்வி வளர்ப்பார். மங்களகரமான திருமணம் இனிதே நடைபெற இறைவன் அருள் வேண்டி வேள்வி வளர்க்கப்படுகிறது. மாப்பிள்ளை தன் பெற்றோர்களுக்குப் பாத பூசை செய்வார். மணப் பெண்ணும் மணமகளின் தோழியுடன் (இவர் மணமகனின் சகோதரியாக இருப்பார்) பெற்றோர் மற்றும் உறவினர்களுடன் சிறுமிகள் விளக்கு ஏந்த மங்கள இசையுடன் வந்து மணவறையில் மணமகனின் வலப் பக்கத்தில் அமர்வார். மணப்பெண்ணும் தன் பெற்றோர்களுக்குப் பாத பூசை செய்வார். பின்னர் மணமகளின் தகப்பனார் தன் மகளை மணமகனுக்குக் கன்னிகாதானம் செய்வதாக ஒரு சடங்கு நடத்தப்படும். குறித்த நல்ல வேளையில் மணப்பெண் மாப்பிள்ளையின் இடப்பக்கத்தில் அமர்வார். மணமகன் எழுந்து வடக்கு நோக்கி நின்று இறைவனைத் தியானித்து புரோகிதர் மந்திரம் ஓதிக் கொடுக்கும் மாங்கல்யத்தை இரு கரங்களால் பெற்றுக் கெட்டி மேளம் முழங்க, புரோகிதர் மந்திரங்கள் ஓத, பெரியோர்கள் அட்சதை (மஞ்சள் அரிசி), மலர்கள் தூவ, நாத்தனார் கையில் தீபம் ஏந்த, மணமகன் மேற்குத் திசையை நோக்கித் திரும்பி மணமகள் கழுத்தில் திருமாங்கல்யம் பூட்டுவார்.

---

26. தகவலாளி கிருஷ்ணமூர்த்தி தந்த தகவல், உலுதிராம், ஜோகூர்.

பெரியோர்கள் அட்சதையை மணமக்கள் உச்சியில் மூன்று முறை இட்டு வாழ்த்துவார்கள். மணமக்கள் கையில் கட்டியிருந்த காப்புகளை அவிழ்த்து பவித்திரங்களையும், பெற்றோர் அணிந்திருந்த பவித்திரங்களையும் சேர்த்து வெற்றிலையில் வைத்து புரோகிதர் தட்சணையையும் சேர்த்து புரோகிதரிடம் கொடுப்பார்கள். மணமகன் சார்பில் ஒரு சுமங்கலியும் மணமகள் சார்பில் ஒரு சுமங்கலியும் சேந்து மணமக்களுக்கு ஆரத்தி எடுப்பார்கள். மணமக்கள் மாலை மாற்றும் நிகழ்வு நடைபெறும். மணமக்களுக்கு முதலில் தாய்மாமன் குடும்பத்தினர் தங்கத்திலான பட்டம் கட்டுவார்கள். பின்னர் மற்ற உறவினர்கள் பட்டம் கட்டுவர். நண்பர்களும் உறவினர்களும் மணமக்களுக்கு பணமாகவோ பொருளாகவோ பரிசளிப்பார்கள். மணமக்கள் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் விருந்துண்பர்.

திருமணச் சடங்குகள்

தமிழர் திருமண நடைமுறைகளில் பல சடங்குகள் நடத்தப்படுகின்றன. அவற்றில் குறிக்கத்தக்க சில இங்குச் சுட்டப்படுகின்றன.

1. அம்மி மிதித்தல்

மணமகன் கையால் பெண்ணின் வலக் காலைத் தூக்கி அம்மியில் வைத்து பெருவிரலுக்கு அடுத்துள்ள விரலில் மெட்டி அணிவிப்பார். இந்த அம்மியைப் போல் நிலையாக நின்று கற்புத் தன்மையில் அதாவது கல்லைப் போல் உறுதியாக இருப்பாயாக என்பதாகும். இது பெண்ணுக்குக் கற்பையும் ஆணுக்கு ஒழுக்கத்தையும் புகட்டுகின்றது. தொடர்ந்து அக்னியை வலம் வந்து ஓம குண்டத்தில் ஓமப் பொருட்களையும் நெற் பொரியையும் இடுவார்கள். இரண்டாம் முறை அக்னியை வலம் வரும்போது பெண்ணின் இடக்காலை அம்மியில் வைத்து மெட்டி அணிவிக்கப்படும். மெட்டி அணிந்திருக்கும் பெண்ணைப் பார்க்கும் இன்னொரு ஆடவன் இவள் திருமணமானவள் என்பதை உணர்த்தவே மெட்டி அணிவிக்கப்படுகிறது.

2. அருந்ததி பார்ப்பது

பகலில் நட்சத்திரத்தைப் பார்ப்பதற்கு எவ்வளவு விழிப்புணர்வு வேண்டுமோ அதே போன்று விழிப்புணர்வோடு என் குடும்ப கவுரவத்தைக் காப்பாற்றவும் இருப்பேன் என்பதாகும்.

3. அக்னி வளர்ப்பது

திருமணம் முடித்துக் கொள்ளும் நாம் இருவரும் ஒருவருக்கொருவர் விசுவாசமாகவும் அன்யோன்யமாகவும் இருப்போம். நாம் தவறுகள் செய்தால் இந்த நெருப்பு நம் இருவரையும் சுட்டு பொசுக்கட்டும் என்று பொருள் கொள்ள வேண்டும்.

4. கல்யாண வீட்டில் வாழைமரம் கட்டுவது

வாழை மரம் வளர்ந்து குலை தள்ளுவது தன் ஆயுளை முடித்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு வந்தாலும் கூட அடுத்ததாகப் பலன் தருவதற்குத் தனது வாரிசை விட்டுச் செல்லுமே அல்லாது தன்னோடு பலனை முடித்துக் கொள்ளாது. அதுபோல திருமணத் தம்பதியரான நீங்கள் இருவரும் இந்தச் சமுதாயம் வளர வாழையடி வாழையாக வாரிசுகளைத் தந்து உதவ வேண்டும் என்பதே வாழைமரம் கட்டுவதின் பொருளாகும்.

5. தாலி கட்டுதல்

தாலி, மங்கல அணி என்ற நிலையில் பண்டைய தமிழக்கத்தில் வழக்கில் இருந்துள்ளது. உண்மையாகத் தாலி அணிதலின் பொருள், ஆண்மகனான நான் உன் கழுத்தில் திருமாங்கல்யத்தை அணிவிக்கும் இந்த நேரம் முதல் உன்னைப் பாதுகாக்கும் காவலனாக இருப்பேன் என்பதாகும். தாலி அணிவிக்கும் நிலையில் போடப்படும் மூன்று முடிச்சுகளுக்கும் பொருள் உண்டு. ஒவ்வொரு முடிச்சும் ஒவ்வொரு அடையாளமாகக் கொள்ளப்படுகிறது.

- இந்த மாங்கல்யத்தில் நான் போடும் முதல் முடிச்சு நீ தெய்வத்திற்கும் மனசாட்சிக்கும் கட்டுப்பட்டவள் என்பதைக் காட்டட்டும்.
- இரண்டாவது முடிச்சு குலப் பெருமையை நீ பாதுகாப்பாய் என்பதைக் காட்டட்டும்,
- மூன்றாவது முடிச்சு வாரிசுகளை முன்னின்று காப்பவள் நீயென்று காட்டட்டும் என்பதாகும்.

6. அரசாணைக்கால் (முகூர்த்தக்கால்)

முற்காலத்தில் அரசனுக்கும் திருமண அழைப்பிதழ் அனுப்புவார்கள். அரசன் திருமணத்திற்கு செல்ல முடியாத சந்தர்ப்பங்களில் அவர் தன் ஆணைக்கோலை அனுப்பி வைப்பார். அரசர் ஆணைக்கோல் மருவி அரசாணிக் காலாக மாறிவிட்டது. இன்று பதிவுத் திருமணம் போல் அன்று ஆணைக்கோல் வந்துவிட்டால் அத்திருமணம் அங்கீகரிக்கப்பட்டது. ஆகவே அத்திருமணம் அங்கீகாரம் பெற்றுவிடுகிறது. இதுவே இன்று திருமணப் பந்தலில் கல்யாண முருங்கைக் கிளை, மாவிலைக் கிளை, மஞ்சள் துணி ஆகியவற்றைப் பந்த காலின் (அரசாணைக்கால்) உச்சியில் கட்டி நடுகின்றனர்.

7. அங்குரார்ப்பணம் (முளைப்பாலிகை)

வித்திடுதல் என்று பொருள். திருமணச் சடங்கின்போது சந்திரக் கும்பத்தைப் பூசித்து அதற்கு முன்பாக இருக்கும் மண் சட்டியில் மூன்று அல்லது ஐந்து சுமங்கலிப் பெண்கள் நவதானியம் இட்டுத் தண்ணீர் தெளித்து மலர் சாத்தி பூசை செய்வார்கள். இதன் பொருள் நவதானியம் செழித்து வளர்வது போல இத் தம்பதிகளின் வாழ்வும் செழிப்புடையதாக அமையவேண்டும் என்பதற்காக இப்பூசை செய்யப்படுகிறது. அப்பெண்களுக்கு வெற்றிலையில் பழம், மலர் வைத்து உபசாரம் செய்து அனுப்புவார்கள். அதன்பின் கற்பூரம் காட்டுவார்கள்.

8. காப்புக் கட்டுதல்

திருமணச் சடங்குகள் இனிதே நடைபெற மாப்பிள்ளையின் வலக்கையில் கட்டப்படும் மஞ்சள் நூல் ஆகும். தொடங்கிய நிகழ்வு நிறைவு பெறும் வரை எந்தவிதத் தீட்டுகளோ, இடையூறுகளோ, தீமைகளோ மணமக்களைச் சாராதிருக்க வேண்டிய பாதுகாப்புக் கருதி செய்யப்படுவது. ஒரு தாம்பாளத்தில் அரிசி பரப்பி மஞ்சள் பூசிய தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், காப்பு நூல் வைத்துப் பூசித்து மாப்பிள்ளையின் வல மணிக்கட்டில் காப்பு கட்டுவார்கள்.

10. கன்னிகாதானம்

கன்னிகாதானம் என்பது மணமகளை அவரின் பெற்றோர் மணமகனுக்குத் தாரைவார்த்துக் கொடுப்பதாகும். பெண்ணின் பெற்றோர் மணமகனின் பெற்றோர்க்கும் மாப்பிள்ளையின் பெற்றோர் மணமகளின் பெற்றோர்க்கும் திலகமிட்டு பன்னீர் தெளித்து மரியாதை செய்து கொள்வர். பின்னர் பெண்ணின் வலக்கரத்தில் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சை, தங்கக் காசு அல்லது நடைமுறை நாணயம் ஒன்று முதலியவற்றை வைத்துக் கொடுத்து பெண்ணின் தந்தை இடக்கைக் கீழாகவும் வலக்கை மேலாகவும் சேர்த்து பிடித்து புரோகிதர் வாயிலாக மணமகளின் மூன்று தலைமுறைப் பெயர்களையும் மணமக்களின் பெயர்களையும் உரிய மந்திரங்களுடன் மூன்று முறை சொல்லி இரு வம்சங்களும் தழைக்கவும், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பயன்களையும் பெற வேண்டியும் கன்னிகாதானம் செய்து தருகின்றேன். எல்லாவித செல்வங்களும் பெற்று என் மகளைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொள்வார். மணமகளின் தாயார் நீர் விட்டு தாரைவார்க்கத் தந்தையார் மணமகனின் கையில் ஒப்படைப்பார்.

11. மாலை மாற்றுதல்

மணமக்கள் இறைவனைத் தியானித்து மூன்று முறை மாலை மாற்றிக் கொள்வார்கள். மாலை மாற்றுதலின் பொருள், இருமணம் கலந்து ஒருமனமாக இல்வாழ்க்கையைத் தொடங்குதல் என்பதாகும்.

12. பால், பழம் கொடுத்தல்

திருமணம் முடிந்துவீட்டுக்கு அழைத்துவரப்பட்டு மணமக்களுக்குப் பால், வாழைப்பழம் வழங்குவார்கள். மணமகள் முதலில் மணமகனுக்கு மூன்று முறை ஊட்டுவார். பின்னர் மணமகன் மணமகளுக்கு மூன்றுமுறை ஊட்டுவார். கணவன் மனைவி மறைவில் உணவு கொள்ள வேண்டுமாதலால் திரை ஒன்று முன்னால் பிடிக்கப்படும். முதன் முதலில் தம்பதிகளுக்குக் கொடுக்கும் இனிப்பு உணவு போல வாழ்க்கை இனிமையாக இருக்க வேண்டும் என்று உணர்த்தவே இச்சடங்கு நடத்தப்படுகிறது.

13. கைப்பிடித்தல்

திருமண நிகழ்வின்போது மணவறையின் முன் மணமகன் மணமகளின் கையைப்பிடித்துக் கொண்டு சுற்றி வருவார். திருமணம் என்பது தருமம் செய்வதற்காகவும் சந்ததி விருத்திக்காகவும் செய்யப்படுகின்றது. கைப்பிடித்தல் (பானிக்கிரகணம்) என்றால், 'நீயும் நானும் முதுமை அடைந்து விட்டாலும் கூட ஒருவரை ஒருவர் பிரியாதிருப்போம் என்று கையைப் பிடிக்கிறேன்' என்று கூறி கையைப் பிடித்தலாகும்.

14. ஏழடி நடத்தல்

பெண்ணின் வலக் காலை மணமகன் கைகளாற் பிடித்து ஏழடி எடுத்து வைக்கும்படி செய்ய வேண்டும். ஒவ்வோர் அடிக்கும் ஒவ்வொரு மந்திரம் சொல்லுதல்.

- உன் வாழ்க்கையில் உணவு குறைவில்லாமல் அளிப்பதற்கு இறைவன் உன்னைப் பின் தொடர்ந்து வரட்டும்.
- உடல் வலிமை பெற இறைவன் பின் தொடரட்டும்.
- விரதத்தைப் பின்பற்றும் பொருட்டு உன்னை இறைவன் பின் தொடர்ந்துவரட்டும்.
- சுகமும் மனச் சாந்தியும் கிடைக்க இறைவன் உன்னைப் பின் தொடரட்டும்.

- பசுக்கள், தூயலான பிராணிகள் பின் தொடர்ந்து வரட்டும்.
- சகல செளபாக்கியங்களும் கிடைக்கப் பின் தொடர்ந்து வரட்டும்.
- வாழ்வில் இடம் பெறும் சுப காரியங்கள், வேள்விகள் குறைவின்றி நிறைவேற்ற இறைவன் உன்னைப் பின் தொடர்ந்து வரட்டும்

என்ற நிலையில் ஏழடி நடத்தல் என்பது ஒரு சடங்காக அமைகிறது.

15. கணையாழி எடுத்தல்

மூன்றாம் முறை வலம் வரும்போது கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த குடத்தில் இருக்கும் கணையாழியைத் தேடி எடுக்க வேண்டும். இது மூன்று முறைகள் நடைபெறும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து எடுத்தல் வேண்டும். இது வாழ்க்கையிலும் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

16. அட்சதை (மஞ்சள் அரிசி) தூவல்

அறுகரிசி என்பது முனை முறியாத பச்சையரிசி, அறுகம்புல், மஞ்சள் கலந்த கலவையே ஆகும். பெரியோர் இரண்டு கைகளாலும் அறுகரிசி எடுத்து 'ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றம் முழுமையாய்ச் சூழப் பதினாறு பேறு பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என வாழ்த்தி மணமக்களின் உச்சியில் மூன்று முறை இட வேண்டும்.

17. ஆரத்தி

மணமகன் சார்பில் ஒரு சுமங்கலியும் மணமகள் சார்பில் ஒரு சுமங்கலியும் சேந்து மணமக்களுக்கு ஆரத்தி எடுப்பார்கள். தம்பதிகளுக்குத் தீயசக்தியினால் தீமை ஏற்படாமலும் கண் திருஷ்டி நீங்கும் பொருட்டும் ஆரத்தி எடுக்கப்படுகிறது.

18. கெட்டி மேளம்

தாலி கட்டும் போது கெட்டி மேளம் கொட்டுவது, சபையில் உள்ளோர் யாராவது தும்முதல், அபசகுணமான வார்த்தைகள் பேசுதல் போன்றவை

மணமக்களின் காதிற்கு கேட்கக் கூடாது என்பதற்காகவே கெட்டி மேளம் கொட்டப்படுகிறது. ‘‘சுப முகூர்த்தம் நடைபெறும்போது நல்லதை நினைத்து நல்லதைப் பேசுவது மணமக்களை ஆசீர்வதிப்பது போன்றதாகும்.”[27]

விருந்து

திருமணம் பொது மண்டபங்களில் நடந்தால் சைவ, அசைவ உணவுகள் பரிமாறப்படும். ஆலயத்தில் திருமணம் ஏற்பாடாகியிருந்தால் ஆலய வளாகத்தில் சைவ உணவு மட்டுமே வழங்கப்படும். முன்பு வாழையிலையில் விருந்து நடைபெறும். தமிழர்களின் திருமணம் பெரும்பாலும் பாரம்பரியத்தை விட்டுவிடாமல் வைதீகத் திருமணங்களாகவே இருக்கின்றன. பாரம்பரிய திருமணங்களைத் தவிர்த்து தமிழர்களின் சீர்திருத்தத் திருமணங்கள், மற்றும் திருமுறை ஓதியும், திருக்குறள் ஓதியும் திருமணங்கள் நடத்தப்படுகின்றன.

தமிழர்களின் கலை

இந்தியர்களில் பெரும்பாலோர் தமிழர்களாதலால் தமிழ் கலாச்சாரத்தைப் பின்பற்றுகின்றனர். பரத நாட்டியமும் சங்கீதமும் மரபுசார் கலை வடிவங்களாகக் கட்டிக் காக்கப்படுகின்றன. தெருக்கூத்து மறைந்து போன கலையாகும். அவ்வப்போது நாடகங்கள் நடத்தப்படுகின்றன. ஆடல், பாடல், நகைச்சுவை கொண்ட கலை நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடைபெறுவதுண்டு.

பொற்கொல்லர்கள் தங்கம், வெள்ளி உலோகங்களில் ஆபரணங்கள் கலை நுட்பத்துடன் வடிவமைக்கின்றனர்.

இசை

கர்நாடக சங்கீதம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகின்றது. ஒரு சிலர் மட்டுமே கர்நாடக சங்கீதம் கற்கின்றனர். மக்கள் திரைப்படங்கள் பாடல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அதோடு மேற்கத்திய பாடல்களும் மலாய்ப் பாடல்களும் பாடி வருகின்றனர். மேடைக் கலை

---

27. தகவலாளி டி. காளியப்பன் தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.

நிகழ்ச்சிகள் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன. அதிகமான திரைப்படப் பாடல்கள், மலாய் ஆங்கிலப் பாடல்களும் இடம் பெறுகின்றன.

தமிழர்களின் இசைக் கருவிகள்

தமிழர்களின் இசைக் கருவிகளைப் பொதுவாக மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை நரம்பு இசைக்கருவிகள், காற்று இசைக் கருவிகள், தோல் இசைக் கருவிகள் என்பனவாகும். நரம்பு இசைக் கருவிகள் என்ற நிலையில் வீணை, தம்பூரா, பிடில், சித்தார் ஆகியனவும், காற்று இசைக் கருவிகள் என்ற நிலையில் நாதஸ்வரம், நாயனம், ஒத்து, புல்லாங்குழல், தாரை, கொம்பு, மகுடி, சங்கு, முகர்சிங், சுருதிப் பெட்டி ஆகியனவும், தாள இசைக் கருவிகள் என்ற நிலையில் தவில், உடுக்கை, துடி, வீர முரசு (டமாரம்), தப்லா, பம்பை, மிருதங்கம், உருமி, தப்பு, கடம், நயன தாளம், சரபலகை ஆகியனவும் தமிழர் பயன்பாட்டில் உள்ள இசைக்கருவிகள் ஆகும்.

கோலக்கலை

கோலம் போடுதல் தமிழர்களின் பாரம்பரியக் கலையாகும். பண்டிகைக் காலங்களிலும் முக்கிய நிகழ்வுகளிலும் கோலம் போடப்படுகின்றது. மாக்கோலம் சிறியதாகவும் ரங்கோலி எனப்படும் வர்ணக் கோலம் பெரியதாகப் போடப்படுகின்றன. ரங்கோலி கோலத்தைப் பிற இனத்தவர்கள் விரும்பிப் பார்வையிடுவர். மாக்கோலம் புள்ளி வைத்துக் கோலம் போடுவதற்குப் பதிலாக அச்சினால் கோலப் போடும் முறை வந்துவிட்டது. செயற்கையாக அச்சுக் கோலம் போடுவது ஓவியர் வரைந்த ஓவியத்தைப் பிரதி எடுப்பதற்குச் சமமாகும். கோலம் போடும் கலையைக் கற்று சுயமாகக் கோலம் போடுவதில் தான் மனத் திருப்தி ஏற்படும். "தமிழ்நாட்டில் காலை வேளையில் வாசலில் கோலம் போடும் முறை மலேசிய நாட்டில் இல்லை என்றே கூறலாம்."[28] கோலம் அரிசி மாவினால் போடப்படுகிறது. எறும்பு போன்ற சிறிய

[28]. தகவலாளி திருமதி. சுலோசனா முருகையா தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்

உயிரிகளுக்கு உணவாகப் பயன்படுவதோடு அழகும் கற்பனையும் வெளிப்படுத்துகிறது.

தற்காப்புக் கலை

தற்காப்புக்கலை பயிற்சி பெறுபவருக்கு உடல், மனம், மனவெழுச்சிகள் மற்றும் ஆன்மீக ஆரோக்கியம் போன்ற பல நன்மைகளை விளைவிக்கும். தற்காப்புக் கலைகளில் முறையான பயிற்சிகள் மூலம் ஒருவரின் உடல் நலம், உடல் கட்டு மேம்படுத்தப்படும் என நம்பலாம். வலிமை, சகிப்புத் தன்மை, நெகிழ்வு, இயக்கம் ஒருங்கிணைப்பு முதலியன இவற்றில் அடங்கும். இப்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் முழு உடலையும் செயல்பாட்டில் வைத்திருப்பதோடு முழு தசை மண்டலமும் ஒருங்கிணைந்த செயல் தூண்டப்படுகிறது. உடல் பயிற்சிக்குப் பங்களிப்புக்கு அப்பால், தற்காப்புக் கலை பயிற்சி மனநலத்திற்கான நன்மைகள், சுயமரியாதை, தன்னிறைவு, உணர்ச்சி மற்றும் ஆன்மீக நல்வாழ்வுஆகியவற்றிற்குத் துணையாக விளங்கும்.

சிலம்பம்

"சிலம்பம் விளையாட்டுக்கு 1.68 மீட்டர் நீளமுள்ள கோல் தேவைப்படும். சிலம்ப விளையாட்டாளர்களின் நெற்றி உயரத்துக்கும் கோலை வைத்துக் கொள்வர். மூங்கில், பிரம்பு மற்றும் மரக்கோல் சிலம்ப விளையாட்டில் பயன்படுத்தப்படும்."[29] எதிரியின் ஆயுதத்தைத் தட்டி விடவும் தற்காத்துக் கொள்ளவும், எதிரியைத் தாக்குவதற்கும் கோலை உபயோகிப்பர். மலேசியாவில் சிலம்பம் சற்று வளர்ச்சியடைந்து வருகின்றது. சிலம்பக் குழுக்கள் சில வெளி நாடுகளுக்கும் சென்று தங்கள் திறமையைக் காட்டியுள்ளனர். ஆகஸ்டு 2017 இல் நடைபெற்ற தென்கிழக்காசிய விளையாட்டுப் போட்டியின் திறப்பு விழாவில் சிலம்பம் இடம் பெற்றது

[29]. தகவலாளியின் திருமதி. கண்ணகி (விவேகானந்தா தமிழ் பள்ளி, பெட்டாலிங் ஜெயா) தந்த தகவல்.

குறிப்பிடத்தக்கதாகும். எதிர் காலத்தில் சிலம்பம் சர்வதேச போட்டி விளையாட்டுகளில் இடம்பெறும் என்று நம்பலாம்.

வர்மக் கலை

கையில் ஆயுதமின்றி எதிரியைத் தாக்குவது. பெரும்பாலும் எதிரியின் நரம்புப் பகுதிகளைத் தாக்குவதன் மூலம் செயல் இழக்கச் செய்தல். இக்கலை இப்போது ஆமை வேகத்தில் வளர்ந்து வருகின்றது.

குத்து வரிசை

இந்த தற்காப்புக் கலையில் கைகளும் கால்களும் மட்டுமே பயன்படுத்தப்படும். பகைவரின் தாக்குதலை கைகளால் தற்காத்து காலாலும் கைகளாலும் தாக்குவது. எதிரியிடம் ஆயுதங்கள் இருந்தால் தற்காத்துக் கொள்ள கரங்களும் கால்களும் கொண்டு ஆயுதத்தைத் தட்டி விடுதல் அல்லது கற்ற யுத்திகளால் ஆயுதத் தாக்குதலை முறியடித்தல். இவ்விளையாட்டுக்குப் பொறுமையும் கட்டொழுங்கும் அவசியம்.

மலேசியாவில் தமிழர்களின் கலை வளர்ச்சி நிதானமாகவே இருக்கின்றது. பல இன கலைகள் சில தமிழர்களின் கலைகளில் ஊடுருவி வருகின்றன. தமிழர்களின் கலையை மேலும் வளர்ச்சிப் பெறத் தமிழர் அமைப்புகள் முனைப்புக் காட்ட வேண்டும். தமிழர்கள் கலாச்சாரம் பெருகிய அளவிலும், கலைத் தன்மை உடையதாகவும் உள்ளமை இதன்வழி தெரியவருகிறது.

சீனர்கள்

மலாய்க்காரர்கள், தமிழர்கள் இவர்களுடன் சீனர்களும் தங்கள் மொழி, இனப் பண்பாட்டு அடையாளங்களுடன் மலேசியாவில் வாழ்ந்து வருகின்றனர். பல்லினத்தின் ஒரு பகுதியாக விளங்கும் சீன மக்களும் இயைபுத் தன்மை உடையவர்களாக மற்றவர்களுடன் கலந்து பழகி மலேசிய நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.

சீனர்களின் உடை ஆண்கள் தளர்ச்சியான அரைக் கை மேல் சட்டையை கால் சட்டையின் வெளியே அணிவர். சீனப் பெண்கள் 'சோங்சாம்' எனப்படும் உடையை அணிவர். உடலோடு ஒட்டியிருக்கும் ஒரே ஆடை கழுத்திலிருந்து முழங்கால் வரை அணியப்படும் ஆடை இது. இவ்வாடை பெரும்பாலும் பட்டு ஆடையாக இருக்கும். சீனப் புத்தாண்டின் போதும் மற்ற பிரத்தியேக நாள்களிலும் அணிந்திருப்பதைக் காணலாம். சீனர்களில் பெரும்பாலோர் தங்களின் பாரம்பரிய உடைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றே கூறலாம். இருப்பினும் குறிப்பாகச் சீனப் புத்தாண்டின்போது இளைஞர்களைத் தவிர்த்து சிறுவர் சிறுமியர், வயதானவர்கள் பாரம்பரிய உடை அணிகின்றனர். இளைஞர்கள் மேற்கத்திய உடையையே அணிகின்றனர்.

சீனர்களின் உணவு

சீனர்கள் சோற்றுடன் காய்கறி, இறைச்சி, குறிப்பாகப் பன்றி இறைச்சியும், மீன், 'மீ' எனப்படும் நூடல், காய்கறிகள், இறைச்சி மற்றும் நூடல் கலந்த சூப் விரும்புவார்கள். பதப்படுத்தப்பட்ட காய்கறிகள், கருவாடு முதலியவற்றை விரும்பி உண்பர்.

பாரம்பரிய உணவு

சீனப்புத்தாண்டின் முதல் நாள் புத்த மதத்தினர் சைவ உணவு பரிமாறுவர். தண்ணீரில் வளரும் கறுப்பு நிறப் பாசி வகைக் கீரை உணவு காண்டனிஸ் சீன சமூகத்தினர் (பஃட்சொய்) பரிமாறுவர். பெயருக்கு ஏற்றவாறு செழிப்பான செல்வ வளமிக்கது என்று பொருளாகும். வறுமை நிலையில் உள்ள சீனர்களும் கூட வெந்நீரில் வேக வைத்த கோழி உணவு பரிமாறுவர். மீன் உணவு இன்றியமையாத உணவாக இடம் பெறும். இவை போல், "லீக், ஜாவ் கோக், ஜியோசி, சிறிய மண்பானை கோழிச் சோறு, அமெரிக்க பிரட்டிய

சோறு, ஐஸ் கச்சாங், சீன சோசேஜ், யோங் தவ் ஃபூ, ஹாக்கியான் மீ''[30] என இவைபோல் இன்னும் பிரபலமாகாத உணவு வகைகள் உள்ளன.

1. "லீக்"

நீண்ட வெங்காயம் போன்ற வெள்ளை நிறமும் மேல் பகுதியில் வெளிர் பச்சையாயுமுள்ள ஒரு வகைக் கீரை உணவு பதப்படுத்தப்பட்ட இறைச்சியோடு உண்பர்.

2. "ஜாவ் கோக்"

சமைக்கப்பட்ட மாவு உருண்டையோடு இறைச்சி உண்பர்.

3. "ஜியோசி"

மாவு உருண்டைக்குள் இறைச்சி, காய்கறி வைத்து நீராவியில் வேக வைத்து உண்பர் இதை "ஜியாஸி" என்று அழைப்பர்.

4. "சிறிய மண்பானை கோழிச் சோறு''

ஆவியில் வேகவைத்த இறைச்சி விழுதுடன் சோற்றில் சாறு (Sauce) கலந்து சாப்பிடுவார்கள்.

5. "அமெரிக்க பிரட்டிய சோறு''

சோற்றுடன் காய்கறி, இறைச்சி, மீன் கலந்து பிரட்டியது. உணவகங்களில் விலை சற்று அதிகம்.

6. "ஐஸ் கச்சாங்"

துருவிய பனிக்கட்டியில் பழங்கள், கடல் பாசியாலான ஜெல்லி, சோளம், வண்ணக் கலவையிலான சர்க்கரை கலந்து உண்ணப்படுவது. நாடு முழுதும் எல்லாராலும் விரும்பப்படுவது.

---

30. தகவலாளி எட்டி சோங் தந்த தகவல், ஆ கவ் முழு நிலவு உணவகம், பூச்சோங், சிலாங்கூர்.

7. "சீன சோசேஜ்"

இறைச்சியை அரைத்து 8 அங்குல நீளத்தில் நீண்ட உருண்டையாக்கி சுவைக்கானவற்றைக் கலந்து எண்ணெயில் பொரித்து உண்ணப்படும் உணவு.

8. "யோங் தவ் ஃபூ"

சோயா பரப்பினால் செய்யப்பட்ட உலர்ந்த பட்டை, பச்சை மிளகாய், வெண்டைக்காய், பாகற்காய் ஆகியவற்றை நீளவாக்கில் இரண்டாகப் பிளவுபடுத்தி உள்ளே வஞ்சனை மீன் விழுது வைத்து பொரித்தெடுப்பார்கள். சூப்புடன் புளிப்பு, காரம், இனிப்பு கலந்த சாற்றுடன் உண்ணுவார்கள். இவ்வுணவை இந்தியர்களும் விரும்பி உண்பார்கள்.

9. "ஹாக்கியான் மீ"

மீ என்னும் நூடல் பொரித்து பலவகை சுவை சேர்த்து உண்ணப்படும் உணவை ஹாக்கியன் மீ என்பார்கள்.

<u>சீனர்கள் மிகவும் விரும்பி உண்ணும் இனிப்பு, புளிப்பு உணவுகள்.</u>

"சீனர்கள் விரும்பி உண்ணும் உணவுகளில் இனிப்பு, புளிப்பு கலந்த உணவுகள் மிகவும் பிரபலமானது. அவைகளில் மிகவும் குறிப்பிடத்தக்கன இனிப்பு- புளிப்பு பன்றி இறைச்சி, கோங் பாவ் கோழி, மா போ தோஃபு, வோண்டோன்ஸ், பாலாடை, சௌ மெயின், பீக்கிங் எண்ணெயில் பொரித்த வாத்து, மாண்டரன் ஆரஞ்சு பழம் இவைபோல் இன்னும் சில் உள்ளன."[31]

1. "இனிப்பு-புளிப்பு பன்றி இறைச்சி"

ஆரஞ்சு நிறத்தில் உள்ள இந்தப் பன்றி உணவு மிகவும் சுவையானது. தொடக்கத்தில் இனிப்பு, புளிப்பாக இருந்த உணவு படிப்படியாக பன்றி

31. தகவலாளி எட்டி சோங் தந்த தகவல், ஆ கவ் முழு நிலவு உணவகம், பூச்சோங், சிலாங்கூர்.

இறைச்சிக்குப் பதில் கோழி, மாட்டிறைச்சி அல்லது பன்றி நெஞ்செலும்பு சேர்த்து சமைக்கப்படுகிறது.

2. "கோங் பாவ் கோழி"

துண்டுகளாக்கப்பட்ட கோழி இறைச்சி, சோளமாவு, காய்கறிகள், இனிப்பு, புளிப்பு சாறு, நசுக்கிய பூண்டு சேர்த்து சமைக்கும் உணவு.

3. "மா போ தோஃபு"

இது நூறாண்டு பழமை வாய்ந்த மிகவும் புகழ் பெற்றது. 'மா' என்னும் மிளகு தூளினால் ஏற்படும் வாசனையும் உறைப்பும் கொண்டது. ஒரு வகை தாளிப்பு வகையைச் சார்ந்தது. பால் நிற சோயா தோஃபு (சோயா பருப்பினால் செய்யப்பட்டது), அரைத்த மாட்டிறைச்சி, அரிந்த வெங்காயம் கலந்து சமைக்கப்படும் உணவு.

4. "வோண்டோன்ஸ்"

வோண்டோன்ஸ் பல வடிவங்களில் எளிய முக்கோணமாகக் காட்சியளிக்கும். பிசைந்த மாவின் உள்ளே அரைக்கப்பட்ட பன்றி இறைச்சி வைத்து (கொழுக்கட்டையில் பூரணம் வைப்பது போல்) வேக வப்பார்கள் அல்லது எண்ணெயில் பொரித்தெடுப்பார்கள்.

5. "பாலாடை"

சீனர்களின் பாரம்பரிய உணவான பாலாடை சீனாவில் 1800 ஆண்டு பழமை வாய்ந்தது. அரைத்த பன்றி இறைச்சி, அரைத்த கோழி, அரைத்த மாட்டிறைச்சி, சிறிதாக வெட்டிய காய்கறிகள், ஆகியவற்றைப் பூரணமாக வைப்பார்கள். சிறிது காடி கலந்து பிசைந்த மாவு உப்பி வரும் மெல்லிய தோல் போன்ற மாவினுள்ளே மேற்கண்ட பூரணம் வைத்து ஆவியில் வேக வைத்து அல்லது பொரித்து சாப்பிடுவார்கள். பாரம்பரியமாக சீனப்புத்தாண்டின் முதல் நாள் சாப்பிடுவார்கள்.

6. "சௌ மெயின்"

எண்ணெயில் பொரித்த (நூடுல்) கலவை என்பது இதன் பொருள். பொரித்த 'மீ'யுடன் இறைச்சி வழக்கமாகக் கோழி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி அல்லது இறால், வெங்காயம் முதலியன கலந்து சமைக்கப்படும் உணவு.

7. "பீக்கிங் எண்ணெயில் பொரித்த வாத்து "

பீக்கிங் எண்ணெயில் பொரித்த வாத்து உணவு சீன நாட்டுத் தலைநகர் பெய்ஜிங்கில் வாத்தின் மெல்லிய தோலின் மொறு மொறுப்புடன் கலந்த சுவைக்குப் புகழ் பெற்று உலகளாவிய நிலையில் வரவேற்புப் பெற்றுத் திகழ்கிறது. சமைத்த பின்னர் துண்டு துண்டாக வெட்டப்பட்ட வாத்துடன் அப்பம், இனிப்பு பருப்புச் சாறு, சோயாவுடன் பிசைந்த பூண்டு கலந்து உண்பார்கள். சீனர்கள் உணவை, ஜப்பானியரைப் போன்று இரண்டு குச்சிகளால் உண்கின்றனர். கால மாறுபாட்டுக்கேற்ப தற்பொழுது கரண்டியாலும் உண்கின்றனர். "சீனர்கள் தமிழர் உணவையும் மலாய்க்காரர்களின் உணவையும் சமைக்கக் கற்றுக் கொண்டு உண்கின்றனர்."[32]

8. "மாண்டரன் ஆரஞ்சு பழம்"

சீனப்புத்தாண்டுக்கு ஆரஞ்சுப் பழம் குறிப்பாக "மாண்டரின்" ஆரஞ்சுப்பழம் பிரத்தியேகமானது. இது நல்வாய்ப்புத் தரும் பழம் என்று நம்புகின்றனர்.

சீனர்களின் உணவு நாட்டில் மலாயர்களைத் தவிர்த்து பிற இனத்தவர்களால் குறிப்பாகத் தமிழர்களால் மிகவும் விரும்பத்தக்கதாக இருக்கிறது. மக்களும் சுவையான உணவைத் தேடிச் சென்று விரும்பி உண்பர். இவ்வகையில் சீனர்கள் உணவு விதிவிலக்கல்ல. தமிழர்களைச் சீன

32. தகவலாளி எட்டி சோங் தந்த தகவல், ஆ கவ் முழு நிலவு உணவகம், பூச்சோங், சிலாங்கூர்.

உணவகங்களுக்குச் செல்வதும் சீனர்கள் தமிழர்கள் உணவகங்களுக்குச் செல்வதும் வியப்பல்ல. ஐந்து வயது சீனக் குழந்தையும் காரசாரமான தமிழர் உணவை விரும்பி உண்பது மலேசிய பல்லின கலாச்சாரத்தில் சாதாரணமாகக் காணப்படும் காட்சியாகும்.

சீனர்களின் விளையாட்டுகள்

மலேசிய சீனர்கள் சீன நாட்டிலிருந்து குடியாறியவர்கள். அவர்கள் தங்கள் கலாச்சாரத்தோடு விளையாட்டுகளையும் கொண்டு வந்தனர். சீனர்களின் பாரம்பரிய விளையாட்டுகளையும் ஆடி வருகின்றனர். சிறுவர்கள் விளையாட்டும் பெரியவர்கள் விளையாட்டுகளையும் பாரம்பரியமாக ஆடி வருகின்றனர். "மாஜோங், சதுரங்கம், டாம், மேசைப் பந்து, கூடைப் பந்து, இறகு பந்து (பூப்பந்து), கால்பந்து, ஹாக்கி விளையாட்டு, தடகள விளையாட்டு போன்ற விளையாட்டுகளில் குறிப்பிடத்தக்கன."[33]

1. "மாஜோங்'"

"மா ஜோங்" விளையாட்டு சீனர்கள் விரும்பி விளையாடும் விளையாட்டாகும். "பழங்காலத்தில் இவ்விளையட்டிற்கான நீள் சதுர ஓடுகள், மிருகங்களின் எலும்பாலும் தந்தத்தாலும் ஆன 144 சதுர ஓடுகள் செய்யப்பட்டன. இந்நவீன காலத்தில் உறுதியான "நெகிழியால்" செய்யப்படுகின்றன. சீன எழுத்துகள் மற்றும் சின்னங்களை அடிப்படையாகக் கொண்ட 144 ஓடுகளுடன் விளையாடப்படும். மேசையின் நடுப்பகுதியில் 144 ஓடுகளையும் களைத்துப் போடப்படும். ஓட்டிலுள்ள சீன எழுத்தும் சின்னங்களும் தெரியாமலிருக்கக் கவிழ்துப் போட்டு நன்றாகக் களைத்து விடுவார்கள். மேசையின் நான்கு பக்கங்களிலும் நான்கு பேர் அமர்ந்து ஒவ்வொருவரும் ஒவ்வொன்றாக 13 ஓடுகள் வரை பிறர் பார்க்காத வண்ணம்

33. தகவலாளி தான்கியா ஐக் தந்த தகவல், கோத்தா திங்கி, ஜோகூர்.

வரிசையாக அடுக்குவார்கள். அவரவர் விளையாடும் முறை வந்ததும் தன்னிடமுள்ள தேவையற்ற ஓட்டை நீக்கி புது ஓட்டை எடுத்துக் கொள்ளலாம்.

சீட்டாட்டத்தில் தேவையற்ற சீட்டை போட்டுவிட்டு புதிய சீட்டை எடுத்துக் கொள்வது போலச் செய்வார்கள். விளையாடுபவர் விரும்பினால் நீக்கியது என்ன ஓடு என்பதை உறக்கக் கூறலாம். ஆனால் ஒருவர் 13 ஓடுகளுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது. ஒருவர் வெற்றிபெறும் வரை விளையாட்டுத் தொடரும். யாராவது ஒருவர் 13 ஓடுகளுக்கு மேல் அல்லது குறைவாக வைத்திருந்தால் அவர் ஆட்டம் தடுக்கப்படும். வெற்றிபெறும்போது அவரிடம் 14 ஓடுகள் இருக்கலாம். ஓரே மாதிரியான எழுத்து அல்லது படங்களை இனம் சேர்க்க வேண்டும். இனம் சேர்ப்பதில் மலர்கள், பருவங்கள் கொண்ட பட ஓடுகள் சேர்த்துக் கொள்ளாமல் தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்."[34] பிறகு அவை போனஸ் புள்ளிகளுக்குப் பயன்படுத்தப்படும்.

2. "சதுரங்கம்"

மலேசிய சீனர்கள் சதுரங்க விளையாட்டையும் நன்கு விளையாடி வருகின்றனர். பள்ளிகளில் புறப்பாட நடவடிக்கைகளின் போது இவ்விளையாட்டைக் கற்றுக் கொடுக்கிறார்கள். தேசிய அளவில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

3. "டாம்"

இந்த விளையாட்டைச் சிறுவர்கள் விரும்பி விளையாடுவர். "சதுரமான பலகையில் ஒரே அளவிலான 64 சதுரங்கள் இருக்கும். ஒரு கட்டத்திற்கும் மற்ற கட்டத்திற்கும் இரண்டு ஒரே மாதிரி வண்ண வேறுபாடுகள் இருக்கும். விளையாட 12 காய்கள் வட்ட வடிவினதாக ஒரே வண்ணத்தில் ஒருவருக்கும் மற்றவருக்கு வேறு வண்ணத்தில் 12 காய்களும் வேண்டும். இருவர் எதிர் எதிராக அமர்ந்து கொண்டு சதுர வடிவிலான சதுர வண்ணக் கட்டத்தைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். காய்களைக் குறுக்காக (வடகிழக்கு திசை

34. தகவலாளி தான்கியா ஐக் தந்த தகவல், கோத்தா திங்கி, ஜோகூர்.

போன்று) நகர்த்த வேண்டும். இருவரும் ஒரே வண்ணச் சதுரங்களிலையே விளையாட வேண்டும். காய் நகர்த்தும்போது செல்லும் கட்டம் காலியாக இருக்க வேண்டும். பக்கவாட்டில் நகர்த்தச் சாத்தியமில்லை. அக்கட்டங்கள் வேறு வண்ணத்தில் இருக்கும். மேல்நோக்கித்தான் காய்கள் நகர்த்தப்பட வேண்டும். பின்னோக்கிச் செல்லக் கூடாது. மேல்நோக்கி நகர்த்தும்போது எதிரியின் காய்க்கு அடுத்த கட்டம் காலியாக இருந்தால் எதிரியின் அந்தக் காயைப்பறிமுதல் செய்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் காலிக்கட்டத்திற்கு நகர்த்த வேண்டும். அடுத்தவர் ஆட்டத்தைத் தொடங்குவார். இவ்வாறு ஆடிக் கொண்டே எதிரியின் எல்லையை அடைந்து விட்டால் அவர் அரசராகக் கருதப்படுவார். அதற்கு அடையாளமாக எதிராளி பறித்து வைத்திருக்கும் காயை அரச காய்க்குமேல் மகுடம் சூட்டியதுபோல வைக்க வேண்டும். அரச காய் மேலும் கீழும் எந்தவிடத்திற்கும் போய் காய்களை பறிமுதல் செய்யலாம். எதிரி அவரது எந்த காயையும் நடத்த முடியாது போனால் அவர் தோற்றவராகவும் மற்றவர் வெற்றியாளருமாவர்.''[35]

4. "மேசைப் பந்து"

இவ்விளையாட்டை "பிங் போங்" என்றும் கூறுவார்கள். மலேசிய சீனர்கள் விரும்பி விளையாடும் விளையாட்டு. மற்ற இனத்தவர்கள் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. சர்வதேச ரீதியில் இவ்விளையாட்டு விளையாடப்படுகிறது. "விளையாடும் மேசையின் அளவு 2.74மீட்டருக்கு 1.525 மீட்டர். . மேசையின் நடுவில் குறுக்காக 15.25செ.மீ உயரமான வலை கட்டி கோலிக் குண்டைவிடச் சற்றுப் பெரிதான நெகிழியால் செய்யப்பட்ட பந்தை மட்டையால் அடித்து பந்தை எதிரியால் அடிக்க முடியாமல் செய்ய வேண்டும். பந்து வலைக்கு மேல் சென்று எதிரியின் மேசையில் பட வேண்டும். எதிரி பந்தை அடிக்க முடியாமற்போனால் அடித்தவருக்குப் புள்ளிகள் கிடைக்கும். ஓர் ஆட்டத்திற்கு 21 புள்ளிகள். ஆண்கள் ஐந்து ஆட்டமும் பெண்கள் மூன்று ஆட்டங்களும் ஆட வேண்டும். அதிக ஆட்டங்களில்

35. தகவலாளி தான்கியா ஐக் தந்த தகவல், கோத்தா திங்கி, ஜோகூர்.

வெற்றிபெற்றவரை வெற்றியாளராகக் கருதப்படும்.”[36] இவ்விளையாட்டு ஒற்றையர், இரட்டையர்கள் விளையாடுவர்.

5. “கூடைப் பந்து”

மலேசியாவில் கூடைப்பந்து விளையாட்டும் சீனர்களே பெரும்பாலும் விளையாடி வருகின்றனர். “ஆடுகளத்தின் அளவு 25மீ. நீளமும் 15மீ. அகலமும் கொண்ட தரையில் விளையாடப்படுகிறது. ஆடுகளத்தின் இரு முனைகளிலும் தரையிலிருந்து 3.05 மீ. உயரத்தில் 18 அங்கல விட்டமுள்ள இரும்பு வளையத்தில் நூல் கூடை தொங்கும். இதன் நீளம் 15அங்குலம் அல்லது 18 அங்குலம். நூல் கூடையின் அடிப்பாகம் திறந்திருக்கும். பந்தின் சுற்றளவு ஆண்களுக்கு 75செ.மீ பெண்களுக்கு 72செ.மீ ஆகும். பந்தைக் கையால் எறிந்து எதிரணியின் கூடையில் விழ வைப்பதே நோக்கம். ஓர் அணிக்கு ஐவர் வீதம் இரு அணிகளுக்கும் பத்து பேர் விளையாடுவார்கள். பத்துப் பத்து நிமிடங்களாக நான்கு முறை விளையாட வேண்டும். ஒவ்வொரு பத்து நிமிடங்களுக்கும் சிறிய ஓய்வு தரப்படும். வேகமாக விளையாடும் விளையாட்டாதலால் அணிக்குள் ஒற்றுமையும் புரிந்துணர்வும் வேண்டும். அணியிடம் பந்து இருக்கும்போது எதிர் அணியின் கூடைக்குள் பந்தைப் போடுவதும். எதிர் அணியினர் தங்கள் பக்கம் உள்ள கூடையில் பந்து விழாமல் தடுப்பதும் இவ்விளையாட்டாகும்.”[37] இவ்விளையாட்டுக்குப் பல விதிமுறைகள் உண்டு. அதிக புள்ளிகள் பெற்ற அணி வெற்றியாளராகத் தீர்மானிக்கப்படும்.

6. “இறகு பந்து - பூப்பந்து”

இறகு பந்து விளையாட்டில் மலேசிய சீனர்கள் மிகவும் சிறப்பாக விளையாடுகின்றனர். சர்வதேச போட்டிகளிலும் தங்கள் திறமையை வெளிப்படுத்தி நாட்டுக்குப் புகழ் சேர்த்து வருகின்றனர். “டத்தோ லீ சொங் வே என்பவர் மலேசிய இறகு பந்து விளையாட்டாளர்களில் மிகச் சிறந்த

36. தகவலாளி தான்கியா ஐக் தந்த தகவல், கோத்தா திங்கி, ஜோகூர்.

37. மேலது

விளையாட்டாளர். இவர் உலகத் தர வரிசையில் முதன்மையாகத் திகழ்ந்தவர். தொடர்ந்து 199 வாரங்கள் 21.08.2008 முதல் 14.06.2012 வரை உலகத் தர வரிசையில் முதன்மையாக இருந்து ஒளி வீசியவர். முதன் முதலாக ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இறுதி ஆட்டத்திற்குத் தேர்வு பெற்று வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் மலேசியர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தென்கிழக்கு ஆசியா, ஆசியா, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பலநாடுகள் நடத்திய சர்வதேச இறகு பந்து போட்டிகளிலும் சிறப்பாக விளையாடி தங்கம், வெள்ளிப் பதக்கங்களைக் குவித்து நாட்டுக்குப் புகழ் சேர்த்துள்ளார். உலக இறகு பந்து போட்டிகளில் மூன்று வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளார். நாட்டின் தாமஸ் கிண்ண போட்டி விளையாட்டில் பங்கு பெற்றுள்ளார். பழைய மூத்த விளையாட்டாளர்கள் எட்டி சோங், ங் பூன் பீ - இவர் பஞ்ச் குணாளனுடன் ஜோடி சேர்ந்து 'ஆல் இங்கிலாந்து' இறகு பந்து போட்டியில் பதக்கம் வென்றவர். தான் ஆயிக் ஹுவாங், தான் பூன் ஹியோங் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும்.''[38] இவர்கள் அனைவரும் சீன சமூகத்திற்கும் மலேசிய நாட்டிற்ககும் புகழ் சேர்த்தவர்கள். இப்பொழுதும் இறகு பந்து போட்டிகளில் சீன ஆண், பெண் விளையாட்டாளர்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

7. "கால்பந்து'"

மலேசியாவிலுள்ள மூவினங்களும் கால்பந்து விளையாட்டில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மலேசிய சீனர்கள் விதிவிலக்கல்ல. தேசிய கால்பந்து குழுவில் ஒருவர்கூட இடம்பெறாதது வியப்பைத் தருகிறது. "சோ சிள் ஆன், சன் விங் ஹூங், சிங் ஹொங் ஆயிக், லிம் டியோங் கிம் முதலியோர் கடந்த காலங்களில் சிறந்த விளையாட்டை வெளிப்படுத்தி உள்ளனர்."[39]

---

38. தகவலாளி கிம் சூன் மா தந்த தகவல்,

39. மேலது

8. "ஹாக்கி விளையாட்டு"

ஹாக்கி விளையாட்டில் சீன சமூகத்தின் ஆர்வம் குறைவாகவே இருக்கின்றது. கடந்த காலங்களில் சுவா பூன் ஹுவாட், பூன் ஃபுக் லோக், தை பெங் ஹாய் ஆகியோர் திறமையான விளையாட்டாளர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

9. "தடகள விளையாட்டு"

மரினா சின் என்பவர் 1970 களில் தடகள விளையாட்டில் இராணி என்று அழைக்கப்படுகிறார். "தென்கிழக்காசிய போட்டி விளையாட்டில் ஏழு தங்கப் பதக்கங்கள் பெற்றவராவார். 1976 மற்றும் 1977 ஆண்டுகளில் நாட்டின் சிறந்த பெண் விளையாட்டளராகத் தெரிவு செய்யப்பட்டவர். 400மீ தடை ஓட்டத்திற்றகுத் தேர்வு பெற்ற முதல் மலேசியப் பெண் இவராவார்."[40] இந்தத் தடகள ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

சீனர்கள் பாரம்பரிய விளையாட்டுகளுடன் தற்காலத்திற்கேற்ப கைப்பந்து, ஸ்குவாஷ் முதலிய விளையாட்டுகளும் விளையாடி வருகின்றனர். சீன சமூகம் விளையாட்டுகளில் சிறந்து விளங்க அவர்களின் சிறப்பான பொருளாதாரமும் ஒரு காரணமாகும். பொருளாதாரத்தில் சிறந்து விளங்குவதால் விளையாட்டுத் தளவாடப் பொருட்கள் வாங்குவது அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. அவர்களுக்கு நல்ல ஊக்குவிப்பும் பேருதவியாக இருக்கின்றது. இறகு பந்து விளையாட்டில் பல்லாண்டுகளாக கொடிகட்டிப் பறந்து வரக் காரணம் ஊக்குவிப்பு, இன ஒற்றுமை மற்றும் நல்ல பொருளாதார மேன்மையுமாகும்.

---

40. தகவலாளி லீ ஓங்குன் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

சீனர்களின் கலை

சீனர்கள் கலைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அவைபோல் இக்கலையை நடத்தியும் அடுத்த தலைமுறையினருக்கு உணர்த்தியும் வருகின்றனர். அவற்றுள் சீன ஓப்ரா, சிங்க நடனம், டிரகன், கராத்தே, தேகுவாண்டோ, காலால் உதைத்துக் கையால் குத்துதல் போன்ற கலைகள் சிறப்புப் பெற்றவை. அவையாவன,

1. "சீன ஓப்ரா"

"சீன சமூகத்தினர் அவர்களின் பாரம்பரிய சீன "ஓப்ரா" இயல், இசை, நாடக பாணியில் மேடையில் நடத்தப்படும். ஆண்டுக்கொரு முறை மூன்று நாள்கள் பட்டணங்களில் கடைத் தெருக்களில் மேடையமைத்து நடத்தப்படுகிறது. முகத்துக்கு அரிதாரம் பூசி வண்ண வண்ண பாரம்பரிய உடைகள், தலையில் அணிகள் அணிந்து பழங்கால அரசர் முதல் குடிமகன் வரையிலான ஆடைகளும் அணிந்து நடிப்பார்கள். சீனர்களின் பாரம்பரிய இசைக்கருவிகள் முழங்க இந்த ஓப்ரா நாடகம் நடக்கும்."[41] ஏறக்குறைய தமிழர்களின் தெருக்கூத்து போன்றிருக்கும்.

2. "சிங்க நடனம்"

சீனர்களின் பாரம்பரிய நாட்டுப்புற நடனம் பிரபல்யமானது. சிங்கம் வீரத்திற்கும் உடல் வலிமைக்கும் அடையாளமாகும். அது கெட்ட சக்திகளை விரட்டி மக்களையும் வீட்டு வளர்ப்புப் பிராணிகளையும் பாதுகாக்கும் என நம்புகின்றனர். ஆதலால் சீனர்களின் முக்கியமான நிகழ்ச்சிகள் அல்லது விழாக்களின் போது குறிப்பாக ஒளிக்கூண்டு ஏந்துதலின்போது சிங்க நடனம் தவறாமல் இடம்பெறும். தீய சக்தியை விரட்டி நல்வாய்ப்பினை வரவேற்றுப் பாதுகாப்புக்காக வழிபாடு செய்வார்கள். "சிங்க நடனமாடப் பயிற்சி பெற்ற இருவரும் அணிந்துக்கொள்ள சிங்க உடையும் (பசுத்தோல் போற்றியப் புலி போல) தேவை. சிங்கத்தின் தலைக்கும் முன்னங்கால்களுக்கும் ஒருவரும்,

41. தகவலாளி லீ ஓங்குன் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

அவருக்குப் பின்னால் சிங்கத்தின் பின்னங்கால்களுக்காக மற்றொருவரும் இருந்து ஆடுவர். நடனத்தின் போது பெரிய பேரிகை, சேகண்டி, பெரிய தாளம் கொண்டு பெரிய அளவிலான ஓசை எழுப்புவர். நடனம் ஆடுபவர்கள் சில சமயங்களில் உயரமாகக் குதித்தும் உருண்டும், சாரம் கட்டியதுபோல் நடப்பட்ட 4, 6, 8, 10 அடி உயரமுள்ள தூண்களின் மீது தாவிக் குதித்து நடந்துகொண்டே ஆடுவர். சிங்கம் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு காய்கறிகளைத் தேடி அலைவது போல் காணப்படும். காய்கறிகளுக்கிடையே சிவப்பு உறையில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருக்கும்."[42] சிங்க நடனம் பார்வையாளர்களை மகிழ்ச்சியூட்டும்.

3. "டிரகன்" (கடல் நாக நடனம்)

மலேசிய சீனர்கள் தங்களின் பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து வருகின்றனர் என்பதற்கு அடையாளமாகத் திகழ்வது டிரகன் அல்லது கடல்நாக நடனமாகும். சிங்க நடனம் போலவே இது பெரும்பாலும் பண்டிகைக் கொண்டாட்டங்களின் போது குறிப்பாகச் சீனப்புத்தாண்டின் போது ஆடப்படுகிறது. மக்களுக்கு நல்வாய்ப்பை ஏற்படுத்துவதாக நம்பப்படுகிறது. மேலும் பெரும் வல்லமை, கண்ணியம், ஞானம் மற்றும் சுபிட்சம் உள்ளிட்ட குணங்களைக் கொண்டிருக்கின்றன எனவும் நம்பப்படுகிறது. ஒரு டிரகனின் தோற்றமானது அச்சம் நிறைந்ததாகவும் தைரியம் கொடுப்பதாகவும் இருக்கின்றது.

"டிரகன் (கடல்நாகம்) ஒரு நீண்ட இராட்சத பாம்பின் உடலாகும். இது டிரகனின் தலை மற்றும் வால் துருவங்களில் பல பிரிவுகளை உருவாக்குகிறது. ஒவ்வொரு பிரிவிலும் வளையங்களைப் பொருத்தித் தொடர்வதன் மூலம் அலங்காரத் தலை மற்றும் வால் இணைக்கப்படுகின்றன. பாரம்பரியமாக முற்காலத்தில் மரச் சட்டத்தில் கட்டப்பட்டு மூங்கில் வளையங்கள் இடையிடையே பொருத்தப்பட்டன. தற்காலத்தில் எடையைக் குறைப்பதற்காக அலுமினியம், நெகிழி போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. இரண்டு

42. தகவலாளி லீ ஓங்குன் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

பேருக்குத் தகுந்ததாக 2மீ நீளமுள்ளதும் பலர் ஆடுவதற்காக 25மீ முதல் 35மீ அளவிலானதும் 50மீ முதல் 70மீ வரை நீளமுள்ளதாகவும் இருக்கும். மனித சக்தி, திறமை, பொருட் சக்திக்கு ஏற்றவாறு டிரகன்கள் வேறுபடும்.

டிரகன் என்ற கடல்நாகம் தலை முதல் வால் வரை வண்ணத் துணிகள், வண்ணத் தாள், சிறு சிறு மணிகள், மின் விளக்குகளால் அலங்கரிக்கப்படும். கடல்நாகத்தின் உடல் வளைவுக்கு ஏற்றவாறு 6 அல்லது எட்டு அடி உயரமான இணைக்கப்பட்ட கோலை ஒருவர் பிடித்துக் கொண்டு மேலும் கீழும் உயர்த்தி வளைத்துக் கொண்டு மெதுவாகவும் சற்று வேகத்துடனும் ஓடுவார். மற்றவர்களும் நாகம் வளைந்து செல்வதுபோலச் செய்து கொண்டே நகர்வார்கள். இவ்வாறு செய்வதற்கு ஒருங்கிணைப்பு, திறமை, ஆள்பலம் தேவைப்படும். டிரகனின் வாய் பக்கம் சிறு பந்து வடிவிலான ஒன்றை வைத்துக் கொண்டு போக்குக் காட்டுவார். அப்பந்து முத்துவாகக் கருதப்படும். முத்தை விழுங்க கடல்நாகம் துரத்தும். முத்தை வைத்திருப்பவர் முத்தை விழுங்காமலிருக்க ஏமாற்றுவார். நடனம் நடைபெறும் சில இடங்களில் காய்கறிகளுக்குள் பணமுடிப்பை வைத்திருப்பார்கள். பந்தை (முத்தை) துரத்துவதை விட்டு காயகறியைத் தின்பதுபோல பணமுடிப்பைத் தேடும்."[43]

டிரகனின் அசைவுகள் கடல் அலைகள் போன்ற தோற்றத்தைக் கொடுக்கும். மலேசிய நாட்டில் டிரகன் நடனம் மிகப் பிரசித்திப் பெற்றது. பிற இனத்தவர்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் கண்களுக்கு நல்ல விருந்தாக இருக்கும் ஒரு நடனமாகும்.,

4. "மலேசிய சீனர்களின் தற்காப்புக் கலை"(குங் ஃபு அல்லது வூசூ)

குங் ஃபூ என்ற பெயரை குங் என்றும் ஃபூ என்றும் பிரித்தால் குங் என்றால் திறன் மிக்க வேலை, கடின உழைப்பு, கடின பயிற்சி என்பதாகும். ஃபூ என்றால் நேரத்தைப் பயன்படுத்தல் அல்லது நேரத்தை ஈடுபடுத்தல் என்றாகும்.

43. யூசோப்பின் அகமாட் (பள்ளி விளையாட்டுத்துறை ஆசிரியர்) தந்த தகவல், குளுவாங், ஜோகூர்

இதன்படி குங்ஃபூ என்பது பயிற்சி ,படித்தல், கற்றல், நேரத்தை சக்தி கொண்டு முடித்தல். கடினமும் மென்மையும் கலந்த தற்காப்புக் கலை. கை, முழங்கை, கை முட்டி, உதைத்தல், கால் முட்டி, தலை ஆகிய உறுப்புகளைப் பயன்படுத்தி பகைவனோடு மோதும் தற்காப்புக்கலை ஆகும்.

"சீன மொழியில் குங்கு ஃபூ அல்லது வூசு என்பதன் பொருள் யுத்தக் கலை என்பதாகும். இந்த தற்காப்புக் கலை சீன நாட்டில் நெடுங்காலமாக விளையாடி வந்திருக்கின்றனர். காலம் செல்லச் செல்ல தற்காப்புக் கலையில் பல அபிவிருத்திகளைக் கண்டுள்ளது. இப்பொழுது இக்கலை உலக முழுவதும் கற்கப்பட்டு சர்வதேச ரீதியில் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கலை சீனர்களின் கலாச்சாரமாகவும் பிரதிபலிக்கிறது. இது பாரம்பரிய போட்டி விளையாட்டாகவும் திகழ்கிறது. தற்காப்புக்கும் எதிரியை வீழ்த்துவதற்கும் பல மாதிரியான நுட்பங்களும் விளையாட்டு முறைகளும் கையாளப்படுன்றன."[44]

இக்கலை சண்டையிடுவதற்காக உள்ளது என்றாலும் விளையாட்டாளர்கள் கண்ணியம், கட்டுப்பாடு, பொறுமை, நற்பண்பு, அமைதி ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாகத் திறமைசாலிகள் இவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். கோபம், முரட்டுத்தனம், ஆக்ரோசம் போன்றவற்றைக் கைவிட வேண்டும். இக்கலையைக் கற்போர் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றுகின்றனர்.

இவ்விளையாட்டில் விளையாடும் பாங்குகள் பல என்றாலும் முக்கியமானவை குத்துச் சண்டை, ஆயுதங்களுடன் சண்டையிடுதல், பல சண்டையிடும் முறைகள் உள்ளன. விளையாட்டாளர்கள் மூலாதாரமாக விளங்கும் தற்காப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியமாகும். இவர்கள் உடற்பயிற்சி மூலம் உடலைத் தரம், தகுதி உடைமை மிகுந்ததாக வைத்துக் கொள்ள வேண்டும்.

---

44. யூசோப்பின் அகமாட் (பள்ளி விளையாட்டுத்துறை ஆசிரியர்) தந்த தகவல்,

குளுவாங், ஜோகூர்

5. "கராத்தே"

கையில் ஆயுதமின்றி கரத்தை மட்டுமே பயன்படுத்தி சண்டையிடுவது கராத்தே தற்காப்புக் கலையாகும். இக்கலை சீனாவில் தோன்றினாலும் இப்போது ஜப்பானின் தாயகமாக விளங்குகிறது. "சீன மொழியில் "கரா" என்றால் வெறுமை எனவும் " டே" என்றால் கை எனவும் பொருள் படும். உடல் ரீதியாக ஜப்பானிய நடையில் தற்காப்பை விருத்தி செய்து எதிர்த்துத் தாக்குதல் இவ்விளையாட்டுக் கலையாகும். கராத்தே தற்காப்புக் கலையில் பல மரபு முறைகள் உண்டு. கட்டொழுங்குமுறைப்படி கைகளால் தாக்குதல், உதைத்தல், தடுத்தல், புறங்கை, கால்முட்டி, கட்டிப் பிடித்தல் ஆகியவற்றை ஒருமுகப்படுத்தல். பகைவரின் ஆயுதத்தைப் பறித்து நிராயுதபாணியாக்குதல், கட்டுப்பாடான பயிற்சி."[45] பெரும்பாலான கராத்தே தாக்குதலை விலக்கி முழு பலத்தோடு எதிர்த்துத் தாக்குதலாகும்.

6. "தேகுவாண்டோ"

தேகுவாண்டோ தற்காப்புக் கலையில் கையும் காலும் பயன்படுத்தப்படும். "சீன கொரிய மொழிச் சொற்கள் கலந்த சொற்கள். தே என்பதன் பொருள் உதைத்தல் அல்லது குதித்தல். குவான் என்றால் கை விரல் முட்டு. டோ என்பது வழி அல்லது மூலம். 70 விழுக்காடு உதைத்தும் 30 விழுக்காடு கை நுட்பம் கொண்டும் தாக்குதல்."[46] பாரம்பரியமான கலை, கைகளால் தாக்குதல், உதைத்தல், தடுத்தல், கை முட்டி, கால் முட்டி முதலிய உறுப்புகள் கொண்டு தாக்குதல், தடுத்தல் நடைபெறும்.

7. "காலால் உதைத்துக் கையால் குத்துதல்"

குத்துச் சண்டை தொழில் திறமும், குங்ஃபு வெறுங்காலால் உதைத்தல் மற்றும் கராத்தே தொழில் திறமும் கலந்துள்ள கலையை உதைக்கும் குத்துச் சண்டை என்பர். இம்முறையால் ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடமிருந்து வரும்

45. மேலது

46. மேலது

தாக்குதலை முறியடித்து தற்காத்துக் கொள்ள உதவும். இவ்விளையாட்டின் பூர்வீகம் தாய்லாந்து.

மேலும் பல தற்காப்புக்குக் கலைகளை சீனர்கள் கற்று வருகின்றனர். தங்களது பாரம்பரியக் கலை அழிந்து விடக் கூடாது என்பதற்காக மக்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று வளர்ப்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

ஓவியம்

சீனர்களில் பலர் சிறந்த ஓவியர்களாகத் திகழ்கின்றனர். இவர்களின் திறமைக்கு அடிப்படையாகச் சீனப் பள்ளிகளில் தொடக்கத்திலிருந்தே மாண்டரின் எழுத்துகளைத் தூரிகையால் எழுதக் கற்பிக்கின்றனர். தூரிகைகளைக் கையாளும் முறையை நன்கு தெரிந்திருப்பதால் ஓவியம் வரைய எளிதாகிறது. "சீனர்களில் சைமன் சான், லாவ வாய் லெங், லிம் ஆ செங், லூ ஹூய் நாம் ஆகியோர் குறிப்பிடத்தக்க ஓவியர்களாகத் திகழ்கின்றனர்."[47] நாளிதழ்கள், சஞ்சிகைகள், பதாகைகள், விளம்பரங்கள் முதலியவற்றில் சீனர்களின் கைவண்ணம் மிளிருகிறது.

நடனம்

மலேசிய சீனர்களின் நடனக் கலையின் பூர்வீகம் சீன நாடு ஆகும். சீன வணிகர்கள் மலேசியாவுக்கு வந்தபோது தங்களுடன் தங்கள் நாட்டுக் கலை கலாச்சாரத்தையும் கொண்டு வந்தனர். அவர்களின் பெரும்பாலான நடனங்களில் வளமும் நல்வாய்ப்பும் தரும் கருத்தமைந்தவைகளாக இருக்கும். முக்கிய கொண்டாட்டங்களின்போது இந்நடனங்கள் நடத்தப்படும். மிகவும் பிரசித்திப் பெற்ற சிங்க நடனம் சீனப்புத்தாண்டின்போது கண்டிப்பாக ஆடப்படும். இந்நடனம் ஆடுவதால் தீய சக்திகளை விரட்டி நல்வாய்ப்பினை வரவேற்பதாக நம்புகின்றனர்.

குறிப்பிடத்தக்கச் சீன நடனங்கள் விசிறி நடனம், குடை நடனம், கிராமிய நடனம், நெல் பயிரிடும் நடனம், போன்றவை. நடனங்களை ஆடும்போது

47. தகவலாளியின் பெயர்: சுலைமான் பின் நோங்கிக், ஜோகூர் பாரு, ஜோகூர்.

தங்களின் பாரம்பரிய ஆடைகளை அணிந்து ஆடுவர். ஓரிரு சீனர்கள் தமிழர்களின் பரத நாட்டியத்தையும் கற்றுள்ளனர். சீனர்கள் மலாய் நடனங்களிலும் பங்கேற்பார்கள்.

இசை

சீனர்களின் பாரம்பரிய இசை மங்கி வருகிறது. சீன ஓப்ரா நிகழ்ச்சிகளிலும் இறப்புச் சடங்கின்போதும் பாரம்பரிய இசையைக் கேட்கலாம். நவீன இசையைப் பாடி வருகின்றனர்.

சீனர்களின் இசைக் கருவிகள்

சீனர்களின் இசைக் கருவிகள் ஐந்து வகைப்படும். அவையாவன,

நரம்பு இசைக்கருவி

கம்பி இசைக் கருவி

காற்று இசைக் கருவி,

தாள இசைக் கருவி

முகவீணை (மோர்சிங்) போன்ற இசைக் கருவி முதலியன ஆகும்.

பீபா

நான்கு நரம்புகளைக் கொண்ட தம்புரா போன்ற சீனர்களின் பாரம்பரிய இசைக்கருவி.

லீகுயின்

பீபா இசைக்கருவியைவிடச் சற்று சிறியது. நாட்டுப்புறப் பாடல்களுக்கு மற்ற இசைக் கருவிகளோடு சேர்த்து இசைக்கப்படும் இசைக் கருவி.

சான் சியான்

மூன்று நரம்புகள் கொண்ட வீணை போன்ற இசைக்கருவி. கழுத்துப் பகுதி நீண்டிருக்கும். மரத்தாலான உடற்பகுதி பாம்பு தோலால் மூடப்பட்டிருக்கும். நாட்டுப்புறப் பாடல்களுக்கும் 'ஓப்ரா' இசைக்கும் பயன்படுத்தப்படுகிறது.

ருவான்

பொதுவாக இந்தச் சீனர்களின் பாரம்பரிய இசைக் கருவியை சீன கித்தார் எனப்படுகிறது. இந்த இசைக் கருவியைப் பெரும்பாலும் 'பீக்கிங் ஓப்ரா'நிகழ்ச்சிக்குப் பயன்படுத்துகிறார்கள். இப்பொழுத் நவீன இசைக்கும் பயன்படுத்தப்படுகிறது. இதே இசைக் கருவியைச் சார்ந்த சோங் ருவான், டா ருவான் இசைக் கருவிகளும் மேற்கண்ட வகையைச் சார்ந்தவையே.

யூகின்

சீன மொழியில் யூ என்றால் நிலாவைக் குறிக்கும். நிலாவடிவலான குறுகிய கழுத்துப் பகுதியுடன் நான்கு நரம்புகளைக் கொண்ட இசைக் கருவி. இதுவும் உள்ளூர் ஓப்ரா நிகழ்வுகளுக்கு இசைக்கப்படுகிறது.

கூகின்

சீனர்களின் மிகப் பழமையான கம்பி இசைக் கருவி. இதன் இசை மனமகிழ்வைத் தூண்டக் கூடியது. இந்த இசைக் கருவியை வாசிக்கத் தெரிந்தவர்கள் மிகச் சிலரே. படிப்படியாக மறைந்து வருகிறது.

தாள இசைக் கருவிகள்

சேகண்டி

பலத்த ஓசையுடன் கூடியது. சிறிய அளவிலான சேகண்டியும் உண்டு.

பேரிகை

தோலிசைக் கருவி. பலத்த ஓசையைக் கொடுக்கும். சிங்க நடனம், கடல்நாக நடனம் ஆகியவற்றிற்கு இசைக்கப்படுவன.

தாளம்

பலத்த ஒலியைக் கொடுக்கும். சிறிய அளவிலான தாளமும் உண்டு.

மேலும் பல இசைக்கருவிகளும் புழக்கத்திலிருந்து மறைந்துவிட்டன.

காற்றிசைக் கருவி

தமிழர்களின் சிறிய புல்லாங்குழல் போன்று இல்லாமல் சீனர்களின்புல்லாங்குழல். நீண்டதாக இருக்கும்.

சீனர்களின் தற்காப்புக் கலைகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். சர்வதேச போட்டிகளில் கலந்து வெற்றிகள் பெற்று வருகின்றனர். நடனக் கலைகள் விழாக்காலங்களில் மட்டும் காணப்படுகின்றன. பெரும்பாலான இளைஞர்கள் மேற்கத்திய நடனங்களில் ஆர்வம் காட்டுகின்றனர்.

சீனர்களின் திருமணம்

சீனர்களின் பாரம்பரிய திருமணச் சடங்குகள் எளிமையாக்கப்பட்டுள்ளன. ஆனாலும் வழக்கமான சடங்குகள் திருப்தி அடைந்தாலன்றி ஒரு சீன திருமணத்தை முடிக்க முடியாது. சீன மரபுகளைக் கடைப்பிடிக்க விரும்பும் மலேசிய சீன மணமகள் தேவைக்காக இன்னும் பல வெற்றிகரமான, மகிழ்ச்சியான மற்றும் வளமான வாழ்க்கை அடைவதற்கு சில மரபுகள் பின்பற்றப்படுகின்றன.

1. "மணமகள் தேர்வு"

திருமணமாகாத இளைஞனின் பெற்றோர், தங்கள் மகனுக்கு முன்னர் அறிந்திராத பொருத்தமான பெண்ணைத் தேர்ந்தெடுத்த பிறகு திருமண தரகரை அணுகுவர். எதிர்பாராத வேளைகளில் மணமகன், மணமகள் குடும்பத்தார்களிடையே திருமணத்தின் சாத்தியம் பற்றி விவாதிக்கும்போது

பொதுவான இடையூறுகளைச் சமாளிக்கும் திறன் வாய்ந்தவராகத் தரகர் திகழ்வார்.

2. "பிறந்த திகதி "

தெரிவு செய்யப்பட்ட பெண்ணும், அவள் பெற்றோரும் திருமணத்திற்குத் தடை கூறாவிடில் திருமணத் தரகர் இருவரின் பிறந்தத் திகதிகளைக் கொண்டு மணமாக இருப்போர்களின் நல்ல எதிர் காலத்தை அறிந்து கொள்ள பொருத்தம் பார்ப்பார். பொருத்தம் சாதகமாக இருந்தால் அடுத்து மணமகளின் விலையை (சீதனம்) முன் வைப்பார்கள்.

3. " மணமகளுக்கான சீதனம் "

திருமணத்திற்கான பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஒப்புக் கொண்டபடி சீதனமாக ஆபரணம், ஆடை அணிகள், பணம் முதலியன தரகர் மூலம் மணமகளின் பெற்றோருக்கு அறிவிக்க ஏற்பாடு செய்வர். "சீதனத்தில் விருந்துக்கு எத்தனை மேசைகள் தேவைப்படும் என்பதும் திருமண ஒப்பந்தக் கடிதமும் அடங்கும். திருமணத்தின் மூலம் மணமகளின் பெற்றோர் தங்கள் மகளை வேறொரு குடும்பத்திற்காக இழக்க நேரிடுவதால் அதற்கு நட்ட ஈடாக இந்தச் சீதனம் கொடுக்கும் முறை எனக் கருதப்படுகிறது."[48]

4. "நிச்சயதார்த்தம்"

திருமணத்திற்கான பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடிவுற்ற நிலையில் நிச்சயதார்த்த தேதி அறிவிக்கப்படும். நிச்சயதார்த்தம் வழக்கமாக நடைபெறும் ஒன்று. ஆண் பெண் இருவரும் திருமணம் செய்துகொள்ளவிருக்கின்றனர் என்பதை அறிவிக்கும் ஒரு சடங்கு ஆகும். இது ஓர் எளிமையான சடங்கு. திருமணம்செய்துகொள்ளவிருக்கும் ஆண் பெண் இருவரும் மோதிரம் மாற்றிக் கொள்வார்கள். நெருங்கிய உறவினர்களுடன் விருந்துண்பார்கள்.

---

48. தகவலாளியின் பெயர்: சுலைமான் பின் நோங்கிக், ஜோகூர் பாரு, ஜோகூர்.

5. "திருமணப் பரிசு"

மணமகனின் குடும்பத்தார் பலதரப்பட்ட சுவையான உணவு வகைகள் மற்றும் ஆன்மீக சம்பந்தமான பொருள்களையும் மணமகள் குடும்பத்தாருக்கு அனுப்பி வைப்பார்கள்.

6. "திருமண ஏற்பாடுகள்"

திருமணச் சடங்கு நடைபெறுவதற்கு முன் இரு குடும்பத்தினரும் சீன சந்திர நாள் காட்டியின்படி மணமக்களின் சிறந்த எதிர் காலத்திற்காகப் புனித நாளைத் தேர்ந்தெடுப்பார்கள். சில வேளைகளில் புனித நாளைத் தேர்ந்தெடுக்காமல் மணமக்கள் தங்களுக்கு வசதியான நாளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வர்.

7. "திருமண விழா"

திருமணத்தின் இறுதிச் சடங்கின் போதுதான் மணமகனும் மணமகளும் திருமணம் செய்து கொண்ட தம்பதியராகக் கருதப்படுவர்.

8. " திருமண ஊர்வலம்"

திருமண ஊர்வலம் மணமகள் வீட்டிலிருந்து மணமகன் வீட்டிற்குச் செல்லும். ஊர்வலம் பாரம்பரிய முறைப்படி நடைபெறும். மணமகள் பல்லக்கு போன்ற வாகனத்தில் பாரம்பரிய இசைக் குழுவினர் இசை முழங்க, உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் புடைசூழ மணமகன் இல்லத்திற்குச் செல்வார்கள். மணமகளின் சீதனமாக பணத்தைத் தவிர்த்த விலையுயர்ந்த பொருட்கள் கொண்டு செல்லப்படும்.

9. "மணமகள் வரவேற்பு "

மணமகளின் பெற்றோர் குடும்பத்தினரின் ஊர்வலம் மணமகனின் இல்லத்து வாசல் முன் நிறுத்தப்படும். இங்கே வரவேற்பு சடங்குகள் நிகழ்த்தப்பட்ட பின்னர் மணமகளையும் அவருடன் வந்தவர்களையும் வீட்டின்

உள்ளே வரும்படி மணமகன் குடும்பத்தினர் வரவேற்பார்கள். இத்தகைய ஊர்வலம் சீன மக்கள் இனத்தாரிடையே மாறுபட்டிருக்கும்.

10. "உண்மையான திருமணச் சடங்குகள்"

மணமக்கள் மேற்கு முகமாக நின்று திருமண உறுதி எடுத்துக் கொள்வார்கள். பின்னர் மணமக்கள் அவர்களின் குடும்ப கடவுள் மாணிக்கச் சக்கரவர்த்தி அல்லது கௌதம புத்தரை வணங்கி வழிபடுவார்கள். அதோடு தங்கள் முன்னோர்களையும், பெரியோர்களையும் வணங்குவார்கள். மணமகள், மணமகன் குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் வணக்கம் செலுத்திக் கொள்வார்கள். மணமக்கள் மோதிரம் மாற்றிக் கொள்வார்கள்.

11. "திருமண விருந்து "

சில சீன சமூகத்தினரிடையே திருமணச் சடங்குகளைவிட திருமண விருந்துக்கு முக்கியத்துவம் வழங்குவார்கள். மணப்பெண் தன் பெற்றோர், தன் கணவர், விருந்தினர்களுக்குத் திராட்சை ரசம் அல்லது தேநீர் வழங்குவார்.

"நவீன காலச் சீனர்கள் சிவப்பு, வெள்ளை ஆடைகளைத் திருமண விருந்திற்கு அணிந்து கொள்வார்கள். சீனர்களின் பாரம்பரியப்படி திருமண வரவேற்பு, திருமண விருந்து (திருமண விருந்து ஐந்து அல்லது பத்து வகையான உணவுகள்), இனிப்பு பலகாரங்கள் மற்றும் திருமணச் செலவுகள் அனைத்தும் மணமகள் குடும்பத்தினர் பொறுப்பேற்றுக் கொள்வார்கள். சீனர்களின் பாரம்பரியப்படி இரண்டு தனித்தனியான விருந்துகள் நடத்தப்படும். முதலில் மணமகள் சார்பாக நடத்தப்படும் திருமண விருந்துக்கும் மதுபானத்திற்கும் மணமகளின் தந்தை பொறுப்பேற்பார். அடுத்து மணமகன் வீட்டுச் சார்பாக நடைபெறும் விருந்து சற்று சிறியதாக இருக்கும். இரண்டு விருந்துகளிலும் மதுபானம் தவறாமல் இடம் பெறும். விருந்துகள் மணமக்களின் விரும்பியவாறு நடக்கும்."[49] பெரியோர்களுக்குக் குறிப்பாக தாத்தா பாட்டிமார்கள், பெரியப்பா பெரியம்மா, சிற்றப்பா சின்னம்மா, மாமா அத்தை மார்களுக்கு, தங்களைக்

[49]. தகவலாளியின் பெயர்: சுலைமான் பின் நோங்கிக், ஜோகூர் பாரு, ஜோகூர்.

கணவன் மனைவியாகத் தேர்ந்தெடுத்தற்காக நன்றிக்கு அடையாளமாக இவ்விருந்துகள் நடத்தப்படுகின்றன. அதுமட்டுமின்றி மணமகளின் உறவினர்கள் மணமகனின் உறவினர்களைச் சந்தித்து உறவாட ஒரு வாய்ப்பாகக் கருதப்படுகிறது. மேலும் பெரியோர்களுக்கு மதிப்பும் மரியாதையும் செலுத்துவதாகும். திருமண விருந்துகள் முறைசார்ந்த பாரம்பரியப்படி நடத்தப்படுவதால் மூத்தோர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.

12. "மணமகன் வீட்டு விருந்து"

மணமகளின் பெற்றோர் அனுமதியுடன் மணமகள் மாப்பிள்ளை வீட்டுக்குச் செல்வார். மணமகன் வீடு சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். சீனர்களுக்குச் சிவப்பு நிறம் நல்வாய்ப்பைத் தரும் என்று நம்புவதால் அலங்காரம் பெரும்பாலும் சிவப்பு வண்ணத்திலேயே அலங்கரிக்கப்பட்டிருக்கும். மணமக்களின் ஆடை மங்களகரமாக இருக்கும் என்பதற்காக பெரும்பாலும் சிவப்பு, வெள்ளை, மஞ்சள் நிறமாக இருக்கும். மணமகள் மணமகனின் வீட்டு வாசலை அடைந்த நொடியிலிருந்து அவள் மணமகனின் குடும்ப உறுப்பினராகக் கருதப்படுவார். மணப்பெண் தன் மாமன் மாமியாருக்குத் தேநீர் வழங்கி உபசரிப்பார். தேநீர் வழங்கும் சடங்கிற்குப் பிறகு சீன பாரம்பரியப்படி அவர்களின் திருமணம் உறுதியானதாகக் கொள்ளப்படுகிறது. மணமகன் வீட்டார் சார்பாக விருந்து நடத்தப்படும்.

மணமகனின் வீட்டார் திருமண விருந்தும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. வந்திருக்கும் விருந்தினர்களுக்கு மணமக்களின் பெற்றோர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படும். விருந்தினர்கள் மணமக்களுக்குச் சிவப்பு உறையில் பணம் வைத்து வழங்குவார்கள். ஏனைய பொருட்களும் சிவப்புத்தாளில் மூடப்பட்டு வழங்கப்படுகிறது. விருந்து பதிவேட்டில் விருந்தினர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்வார்கள். விருந்து தொடங்கும். விருந்தில் மதுபானம் முக்கியமாக இடம்பெறும். விருந்தினரோடு மணமக்களும் மதுபானம் அருந்தச் செய்வர். விருந்து ஏறக்குறைய இரண்டு மணி நேரம் நீடிக்கும். விருந்து உணவு வகைகள் பத்துக்கு மேற்பட்டதாக இருக்கும்.

ஒவ்வொரு உணவும் சுடச்சுட சமைத்து ஒவ்வொன்றாகப் பரிமாறுவார்கள். விருந்தினரின் வாழ்த்துதலோடு மணமக்களின் திருமண நிகழ்வு முடிவுறும்.

13. "தேநீர் அருந்தும் சடங்கு"

பாரம்பரிய சீன திருமணங்களில் தேநீர் அருந்தும் சடங்கு முக்கிய இடம் பெறுகிறது. தம்பதிகள் ஒருவர்க்கொருவர் உறுதிமொழி எடுத்துக் கொள்வதற்கு ஈடாகும். இச்சடங்கு பெரிய பட்டணங்களிலும் நகரங்களிலும் பெரும்பாலும் மேற்கத்திய நாகரிகத் திருமணத்தோடு தேநீர் அருந்தும் சடங்குடன் திருமணம் நடந்தேறுகிறது.

"மணமகள் தன் வீட்டை விட்டு கணவன் வீட்டுக்குச் செல்லும் பொழுது அங்கே ஒரு 'நல்வாய்ப்புப் பெண்' - மகராசி சிவப்புக் குடைபிடித்து வரவேற்பார். குடை விரிந்தாற்போல் குடும்பம் தழைக்கட்டும் என்று பொருளாகும். நல்வாய்ப்புப் பெண் என்பவர் நீண்ட நாள்கள் நல்ல கணவனோடு வாழ்ந்து பல குழந்தைகளைப் பெற்று, தன் பெற்றோர்களுடன் சீரும் சிறப்புமான குடும்பத்தைக் கொண்டு வாழ்பவர். உறவினர்கள் அரிசி, பாசிப்பயறு, சிவப்புப் பயறு ஆகியவற்றை மணப்பெண் முன்னால் தூவி ஆசீர்வதிப்பார்கள். சிவப்புக் குடை மணப்பெண்ணைத் தீய சக்திகளிடமிருந்து காப்பாற்றும் என்றும் தூவப்பட்ட தானியங்கள் நல்வாய்ப்பைத் தரும் என்றும் நம்புகின்றனர். புதுமணத் தம்பதியினர் பெற்றோர் முன் மண்டியிட்டு தேநீர் வழங்குவர். தேநீரை 'நல்வாய்ப்புப் பெண்' தயாரித்து குடும்பம் செழிக்கப் புனித வாசகங்களைக் கூறுவார். தம்பதிகள் ஒருவர்க்கொருவர் தேநீரை பரிமாறிக் கொள்வர். மரியாதைக்காக தேநீர் கோப்பையை உயரத் தூக்கிய பின் அருந்துவார்கள். விருந்தினர்களுக்கும் தேநீர் வழங்கப்படும். உறவினர்கள் புதுமணத் தம்பதிகளுக்குப் பரிசாக ஆபரணங்கள் மற்றும் ரொக்கப் பணம் சிவப்பு உறையில் வைத்து வழங்குவார்கள். சீன பாரம்பரிய இசையும் நவீன இசையும் விருந்தினர் கண்களுக்கு விருந்தாக வழங்கப்படும்."[50]

---

50. தகவலாளி எட்டி சோங் தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

சீனர்களின் பாரம்பரிய திருமணச் சடங்குகள் பின்பற்றப்பட்டு வந்தாலும் தற்காலத்தில் பெரும்பாலான சீன இளைஞர்கள் அவற்றை ஓரளவுக்குத்தான் பின்பற்றுகின்றனர். "மேற்கத்திய முறையிலான திருமணத்தை வரவேற்கின்றனர். வீட்டிலுள்ள பெரியோர்களுக்கு மரியாதையின் நிமித்தம் அவர்களின் சடங்குகளுக்கு ஒப்புக்கொண்டு திருமணச் சடங்குகளை நிறைவேற்றுகின்றனர். திருமண விருந்துக்கு ஆடம்பரமாக அதிகச் செலவு செய்வதில் தயக்கம் காட்டுவதில்லை."[51]

சீனர்களின் சடங்குகள்

குழந்தைகளுக்கான சடங்குகள்

குழந்தை பிறந்து முதல் 30 ஆவது நாள் முதல் பிறந்த நாள் அல்லது அதன் "முழு நிலவு" முடிந்ததாகச் சீனர்கள் கருதுகின்றனர். கொண்டாட்டங்கள் மற்றும் கொண்டாட்டங்களின் நடைமுறைகள் மாறுபட்டாலும் 30ஆவது நாளையே முக்கியமாகக் கொண்டாடுகின்றனர். "முழு நிலவு (30ஆம் நாள்) முடிந்ததைக் குறிக்க முதன் முறையாகக் குழந்தையை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் காட்டிப் பரிசுகள் பெற்று மகிழ்வார்கள். பரிசுகள் வேகவைத்த முட்டைகள் சிவப்பு நிறம் கலந்து கொடுக்கப்படும். சிவப்பு வண்ணம் சீனர்களுக்கு நல்வாய்ப்பைக் கொடுக்கும் என்று நம்புகின்றனர். அனிச்சல், சமைத்த கோழி, பன்றி, எலுமிச்சை ஊறுகாய், சுவையான பசையம் அரிசி முதலியவை தவிர்க்க முடியாத அவசியம் கொடுக்க வேண்டியவையாகும். இவை வாழ்க்கையைப் புதுபிக்கும் அடையாளம் எனவும், உருண்டையான முட்டைச் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் வெளிப்படுத்தும் எனவும் நம்புகின்றனர். வந்திருந்த விருந்தினர் குழந்தைக்குப் பரிசு வழங்கத் தவறுவதில்லை. வழக்கமாகத் தங்க நகைகள் அல்லது சிவப்பு உறையில்

51. தகவலாளி எட்டி சோங் தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

ஹாங்பாவ்) பணம் வைத்துக் கொடுப்பார்கள்."[52] சில குடும்பத்தினர் இவ்விழாவை பெரிய உணவகங்களில் இரவு விருந்தாக நடத்துவார்கள்.

குழந்தைக்கு முடி நீக்குதல்

குழந்தையை நீராட்டி, அழகான சிவப்பு புத்தாடை, தங்க நகைகள் அணிவிப்பார்கள். வீட்டிலுள்ள தெய்வ மூர்த்தங்கள், முன்னோர்களின் உருவத்தின் முன் குழந்தைக்கு ஆசீர்வாதம் பெறுவார்கள். இவ்வாறு செய்வதன் மூலம் முன்னோர்களுக்குக் குடும்பத்திற்கு புதுவரவு - குழந்தை பிறந்திருப்பதைத் தெரிவிப்பதாகும். மேலும் குழந்தையைத் தீய சக்தியிடமிருந்து காப்பாற்றும்படி வேண்டிக் கொள்வர்.

பெயரிடு விழா

சீனர்கள் குழந்தை பிறப்பதற்கு முன் உண்மையான பெயரை தேர்ந்தெடுப்பதை நினைத்துப் பார்ப்பதில்லை. அதற்குப் பதில் தவறான ஏதோ ஒரு பெயரை, தேர்ந்தெடுப்பர். அவலட்சணமான மிருகம் ஒன்றால் தீய சக்திகள் தங்கள் குழந்தையைக் கடத்திச் செல்ல அணுகாதென்று நம்புகின்றனர்.

மூவின மக்களும் பாரம்பரிய சடங்குகளை மறவாமல் நடத்தி வருகின்றனர். முன்னோர் செய்தார்கள் என்ற காரணத்திற்காக இப்போதைய சந்ததியினர் பின்பற்றி வருகின்றனர். சில சடங்குகளுக்குக் காரணம் தெரியாமலேயே செய்து வருகின்றனர். இது மக்கள் தங்கள் முன்னோர்களுக்குக் காட்டும் மரியாதையை வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு இனமும் தங்கள் பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் கட்டிக் காத்து வருகின்றனர்.

மலேசிய கலாசாரம்

மலேசிய நாட்டில் மூன்று முக்கிய இனங்களான மலாயர், சீனர், இந்தியர் குறிப்பாகத் தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். ஒவ்வோர்

---

52. தகவலாளி எட்டி சோங் தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

இனமும் தங்களின் தனித் தன்மையான கலாசாரத்தை வெளிப்படுத்தினாலும் பிற இனங்களின் கலாச்சாரத்தை மதிக்கின்றனர். தமிழர்களின் உணவகங்களில் சீனர்களும் மலாயர்களும் உணவு உண்பது சாதாரணமாகக் காணப்படும் காட்சியாகும். ஐந்து வயதுக்குட்பட்ட சீனக் குழந்தைகளும் தமிழர்களின் காரசாரமான உணவை விரும்பி உண்பதைக் காணலாம். மலாயர்களும் தமிழர் உணவகங்களில் உணவைச் சுவைத்து தயிறையும் இரசத்தையும் உண்பதைக் காணும்போது தமிழர்கள் உண்பதற்கும் மலாயர்கள் உண்பதற்கும் வேறுபாடு காணமுடியாததாக இருக்கிறது. இந்துத் தமிழர்களில் சிலர் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் புலால் உண்ண மாட்டார்கள். அவர்களில் பலர் குடும்பத்தோடு சீன சைவ உணவகங்களுக்குச் சென்று உணவு உண்கின்றனர். புலால் உணவை விரும்புவோர்களும் அவ்வப்போது குடும்பத்தோடு சீன உணவகங்களுக்குச் செல்வதைக் காணலாம். மேலும் பெருநாள் காலங்களில் பிற இனத்தவர்களுக்குப் பலகாரங்கள் கொடுத்து மகிழ்வது வாடிக்கையாக உள்ளது. மலாய்க்காரர்கள் தமிழர்களின் பலகாரங்களான முறுக்கு, ஓமப்பொடி, அச்சு முறுக்கு, அதிரசம் போன்றவற்றை சமைக்கக் கற்றுக் கொண்டதோடு அவற்றைத் தமிழர்களுக்கே வழங்குவது தமிழர்களின் கலாச்சாரத்தை எந்த அளவிற்கு அவர்களின் கலாச்சாரத்தோடு இணைத்துக் கொண்டிருப்பது தெளிவாகிறது. சீனர்களும் தமிழர்களின் முறுக்கு, ஓமப்பொடி அச்சுமுறுக்கு முதலியவற்றை மலாயர்களுக்கும் தமிழர்களுக்கும் வழங்குகின்றனர். மலாயர்களின் உணவுகளையும் சீனர்களின் உணவுகளையும் தமிழர்கள் சமைக்கக் கற்றுள்ளனர். உணவில் மலேசிய மயம் இருப்பதைக் காணலாம்.

கி.பி 2ஆம் நூற்றாண்டு முதலே தமிழர்கள் மலேசியாவின் பல பகுதிகளைக் கைப்பற்றி ஆண்டு வந்துள்ளனர். அப்போதைய உள்ளூர் மக்கள் இந்து சமயத்தையும் பௌத்த சமயத்தையும் பின்பற்றினர். தமிழர் கலாச்சாரங்களையும் பின்பற்றத் தொடங்கினர். பின்னாளில் உள்ளூர் மக்கள் இசுலாம் சமயத்திற்கு மாறினாலும் தமிழர் கலாச்சாரங்கள் சிலவற்றை இன்றும் பின்பற்றுகின்றனர். திருமணச் சடங்குகளில் தமிழர்கள் நலுங்கு வைத்தல்,

மஞ்சள் அரிசி தூவுதல், பன்னீர் தெளித்தல், மருதாணி இட்டுக் கொள்ளல் முதலியன இடம் பெறுகின்றன. மலாயர் திருமணத்திலும் மணமக்களுக்குப் பன்னீர் தெளித்தல், கைகளில் பூசுதல், அரிசி தூவி வாழ்த்துதல் மற்றும் மருதாணி இட்டுக் கொள்ளுதல் ஆகியன நடைமுறையில் இருக்கின்றன. வழிபாட்டுத் தலங்கள் போன்ற புனித இடங்களுக்குச் செல்லும்போது காலணிகளைக் கழற்றிவிட்டுச் செல்லுதல், பெரியோர்களைக் கடந்து செல்லும்போது குனிந்து பணிவாகக் கடத்தல் போன்றவற்றை மலாயர்களும் பின்பற்றுகின்றனர்.

மலேசியாவில் சில மாநிலங்களின் சுல்தான்கள் (அரசர்) முடிசூட்டு விழாவில் தமிழர்களின் சடங்குகள் சில நடத்தப்படுகின்றன. கிராமங்களில் உள்ள நாட்டு வைத்தியர்கள் மற்றும் பேயோட்டும் மாந்திரிகன் முதலியோர் தமிழர்களின் இந்துக் கடவுளை வணங்கிய பின்னர்தான் வைத்தியம் மற்றும் பேயோட்டும் நிகழ்வுகளை நடத்துகின்றனர்.

பாரம்பரிய விளையாட்டுகளில் பெரும்பாலானவை தமிழர்களின் விளையாட்டுகளை மலாயர்கள் விளையாடி வருகின்றனர். சிறுவர்கள் விளையாடும் பாண்டி விளையாட்டு, கண்ணாம் பொத்தி, ஐந்தாம் கல் போன்ற விளையாட்டுகளை மூவினச் சிறுவர்களும் விளையாடுகின்றனர். பல்லாங்குழி, பம்பரம் விடுதல், காற்றாடி பறக்க விடுதல் முதலியன மூவினத்தவர்களும் விளையாடுகின்றனர். தமிழர்களின் சில கலாச்சாரங்களை உள்ளூர் மக்கள் ஏற்றுக் கொண்டு பின்பற்றுகின்றனர்.'[53]

மற்ற இனங்களின் கலாச்சாரத்தை மதிப்பதால் மக்களிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வும் நிலவுகிறது. மலேசியாவில் வாழும் மூன்று இன மக்களின் ஒன்றோடு ஒன்று கலந்த கலாச்சாரம் நீடித்து வருகின்றது. இதை மலேசிய கலாச்சாரம் என்றால் பொருந்தும்.

---

53. தகவலாளி எட்டி சோங் தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

தொகுப்புரை

மலேசியா நாடு பல்லினக் குழும மக்கள் நிறைந்து வாழும் நாடாகும். எனவே இந்நாட்டின் கலாச்சாரம், பண்பாடு ஆகியன பல்லினக் குழும நிலையில் ஒன்றுடன் ஒன்று உறவாடி, மகிழ்ந்துப், பின்பற்றி நிற்கும் பொது நிலைப்பாடு உடையதாக உள்ளது.

மலேசிய நாட்டில் மலாய்க்காரர்கள், தமிழர்கள், சீனர்கள் என்ற மூன்று இனத்தவரைக் கொண்டு அமையும் பல்லினக் குழு சமுதாய அமைப்பு நிலவி வருகிறது. இச்சமுதாயத்தில், உடை, மொழி ஆகியவற்றில் மூன்று குழுக்களும் தனித்த நிலைப்பாடு உடையனவாக விளங்குகின்றன.

பள்ளிக்கல்வியில், மூன்று இனத்தவருக்கான தாய்மொழி கற்பிக்கப்படுவது மலேசிய நாட்டின் சிறப்பு நிலைப்பாடாகும். தொடக்கக்கல்வியைத் தங்கள் தாய்மொழியில் கற்கும் வாய்ப்பு மலேசிய மக்களுக்கு உள்ளது. மேலும் தம் தாய்மொழியைக் கற்க விரும்புபவர்களுக்குப் பெருத்த துணையாக மலேசிய அரசு விளங்குகிறது.

மலாயக்காரர்கள், தமிழர்கள், சீனர்கள் ஆகியோர் தத்தம் முன்னோர்கள் கடைப்பிடித்த மரபுசார் கலாச்சார உடையை அணிவதைப் பெரிதும் விரும்புகின்றனர். இவற்றைத் தங்கள் இன விழாக்களின்போது அணிந்து மகிழ்கின்றனர்.

உணவு நிலையில் மூன்று இனத்தவரும் ஒருவர் உணவை, மற்றவர்கள் விரும்பி மகிழ்ச்து உண்ணும், நிலைப்பாடு காணப்படுகிறது. திருமண நாள்களில் இம்மூன்று இனத்தவருக்குள் பெரிதும் தோழமை நிலவி வருகிறது. இதன் காரணமாக பல சடங்குகள் ஒரு இனத்தவரிடம் இருந்து மற்ற இனத்தார்களுக்கு பரவும் நிலைப்பாடு காணப்படுகிறது.

விளையாட்டுகளும் பல்லினக் குழுக்களால் பல்வகை விளையாட்டுகள் விளையாடி வரப்பெறுகின்றன. குறிப்பாகக் காற்றாடி, பம்பரம், கண்ணாமூச்சி , பாண்டி, ஐந்தாம் கல் போன்ற விளையாட்டுகள் மூன்று

இனக்குழுக்களிடத்திலும் இன்று வரை விளையாடப்பெற்று வரப்பெறுகின்றன. சர்வதேச விளையாட்டுகளை அனைத்துக் குழுவினரும் விளையாடும் நிலையில் அங்கும் பொதுமை ஏற்படுகிறது.

திருமணச் சடங்குகளில் தமிழர்கள் நலுங்கு வைத்தல், மஞ்சள் அரிசி தூவுதல், பன்னீர் தெளித்தல், மருதாணி இட்டுக் கொள்ளல் முதலியன இடம் பெறுகின்றன. மலாயர் திருமணத்திலும் மணமக்களுக்குப் பன்னீர் தெளித்தல், கைகளில் பூசுதல், அரிசி தூவி வாழ்த்துதல் மற்றும் மருதாணி இட்டுக் கொள்ளுதல் ஆகியன நடைமுறையில் இருக்கின்றன.

கலை நிலையிலும் மூன்று இன மக்களும் ஒன்று கலந்து கலைகளை வளர்த்து வருகின்றனர். இசைக்கலை, நாடகக்கலை, நடனக் கலை, ஓவியக்கலை போன்றவற்றில் அவரவர் தனித்தன்மைகள் கொண்ட கலைகள் உள்ளன. தற்காலத்தில் இத்தனித்தன்மை கொண்ட கலைகள் சற்று குறைவான நிலையில் புழக்கத்தில் உள்ளன.

மொத்தத்தில் மலேசிய கலாச்சாரம் என்பது மூவினக் கலப்புடைய பொதுமைக் கலாச்சாரமாக விளங்கிவருகிறது.

சான்றெண் விளக்கம்

1. மகாதீர் பின் முகமட், மலாய்க்காரர்களின் இக்கட்டு நிலை, ப.8
2. வீ. நடராஜன், சோழன் வென்ற கடாரம் (பூஜாங் பள்ளத்தாக்கு), ப.19
3. Google en.wikipedia Burning of Books and burying of Scholars- xi
4. மகாதீர் பின் முகமட், மலாய்க்காரர்களின் இக்கட்டு நிலை, ப.28
5. சோமசுந்தரன் அரு., மலேசியா, ப.87
6. மேலது, ப.88
7. தகவலாளி லிம் கோ கொக் (முகமது தையற்கடை)தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.
8. மேலது
9. மேலது
10. கோக் வா செங், ஷாரிப் உணவகம், தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்.
11. மேலது
12. யூசோப்பின் அகமாட் (பள்ளி விளையாட்டுத்துறை ஆசிரியர்) தந்த தகவல், குளுவாங், ஜோகூர்
13. மேலது
14. மேலது
15. . தகவலாளி ரஹ்மான் பின் ரஜிவ் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.
16. மேலது
17. மேலது
18. மேலது
19. தகவலாளி ஹசான் பின் இட்ரிஸ் தந்த தகவல், ரெங்கம், ஜோகூர்.
20. மேலது

21. மேலது

22. மேலது

23. தகவலாளியின் திருமதி. கண்ணகி (விவேகானந்தா தமிழ் பள்ளி, பெட்டாலிங் ஜெயா) தந்த தகவல்.

24. தகவலாளி கிருஷ்ணமூர்த்தி தந்த தகவல், உலுதிராம், ஜோகூர்.

25. மேலது

26. மேலது

27. தகவலாளி டி. காளியப்பன் தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.

28. தகவலாளி திருமதி. சுலோசனா முருகையா தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்

29. தகவலாளியின் திருமதி. கண்ணகி (விவேகானந்தா தமிழ் பள்ளி, பெட்டாலிங் ஜெயா) தந்த தகவல்.

30. தகவலாளி எட்டி சோங் தந்த தகவல், ஆ கவ் முழு நிலவு உணவகம், பூச்சோங், சிலாங்கூர்.

31. மேலது

32. மேலது

33. தகவலாளி தான்கியா ஐக் தந்த தகவல், கோத்தா திங்கி, ஜோகூர்.

34. மேலது

35. மேலது

36. மேலது

37. மேலது

38. தகவலாளி கிம் சூன் மா தந்த தகவல், கோத்தா திங்கி, ஜோகூர்.

39. மேலது

40. தகவலாளி லீ ஓங்குன் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

41. மேலது

42. மேலது

43. யூசோப்பின் அகமாட் (பள்ளி விளையாட்டுத்துறை ஆசிரியர்)

    தந்த தகவல், குளுவாங், ஜோகூர்

44. மேலது

45. மேலது

46. மேலது

47. தகவலாளியின் பெயர்: சுலைமான் பின் நோங்கிக்,

    ஜோகூர் பாரு, ஜோகூர்

48. மேலது

49. மேலது

50. தகவலாளி எட்டி சோங் தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

51. மேலது

52. தகவலாளி பெயர்: தான்கியா ஐக் தந்த தகவல்,

    கோத்தா திங்கி, ஜோகூர்.

53. மேலது

இயல் - 3

வழிபாட்டு முறைகளும் விழாக்களும்

மனித வாழ்க்கை என்பது மொழி, பண்பாடு, நாகரீகம், சமயம், அறம் போன்ற பல கூறுகளால் மதிப்பும், மேன்மையும் உடையதாக வடிவமைக்கப்படுகிறது. நாகரீகம் மிக்க சமுதாயம் என்பது எல்லாரும் எல்லாமும் பெற்று சமத்துவத்துடன் வாழும் நிலைப்பாடு உடையதாகும். இந்த நிலையை அடையப் பல நிலைகளிலும் மனிதக்குலம் முயன்று வருகிறது.

சமயம் என்பது மனிதனைப் பண்படுத்துகிறது. ‘‘தம்மையும் தம்மை இயக்கி நிற்கும் பேராற்றலையும் (இறைவன்) தக்கவாறு உணர்தலும், உணர்ந்ததன் பயனாக அப்பேராற்றலோடு இணைந்து வாழத் தம்மை ஆளாக்கிக் கொள்வதுமே சமயம். சமயம் சமைக்கப்படுவது அதாவது பக்குவப்படுத்திக் கொள்வது”[1] என்பது சமயம் என்பதற்குத் தரப்படும் வரையறையாகும். சமயம் என்பது மனிதக் குலத்தின் தொடக்கம் முதல் ஒருவகை நம்பிக்கையாக இருந்து வந்துள்ளது. தற்போது அது வளர்ந்து, வழிபாடு, சடங்கு, கொள்கை, கோட்பாடு, தத்துவம் போன்றனவோடு வலிமை பெற்று மக்கள் சமுதாயத்தில் திகழ்ந்து வருகிறது.

மலேசியாவிலும் சமய நம்பிக்கைகள் பெருமளவில் உள்ளன. இங்கு வாழும் மலாய்க்காரர்கள், தமிழர்கள், சீனர்கள் ஆகிய மூன்று இனத்தவர்களும் தத்தமக்குள் பல்வேறு சமய நம்பிக்கைகள், நடைமுறைகள் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இந்நிலைப்பாட்டின் வழியாக மலேசிய நாடு கூட்டிணைவு மிக்க சமய நம்பிக்கை உடைய நாடாக விளங்கி வருகிறது. இதனை ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

---

1. கு.சுந்தரமூர்த்தி, சங்க இலக்கியங்களில் சமயநோக்கு, ப. 4

மலேசியா நாட்டின் சமயநிலை

"மலேசியாவின் அதிகாரப்பூர்வமான சமயம் இசுலாம் ஆகும். மலாயர் அனைவரும் இசுலாமியர் ஆவர். இருப்பினும் மற்ற இனத்தவர்கள் அவரவர் சமயங்களைச் சுதந்திரமாகப் பின்பற்றச் சட்டம் அனுமதிக்கிறது. ஏறத்தாழ நாட்டின் மக்கள் தொகையில்

- 61 விழுக்காட்டினர் இசுலாம் சமயத்தையும்
- 19.8 விழுக்காட்டினர் புத்த சமயத்தையும்
- 9.2 விழுக்காட்டினர் கிறிஸ்துவ சமயத்தையும்
- 6.3 விழுக்காட்டினர் இந்து சமயத்தையும்
- 1.3 விழுக்காட்டினர் தாவோ சமயம், கன்பூசிய சமயம் மற்ற சீன சமயங்களையும்
- 1.4 விழுக்காட்டினர் வேறுசமயங்களைப் பின்பற்றுபவர்களாகவும் 0.7 விழுக்காட்டினர் எச்சமயத்தையும் சாராதவர்களாகவும்

உள்ளனர்."[2] இக்கணக்கின்படி மலேசியா பல்லின சமயச் சார்புடன் விளங்கி வருகிறது என்பதை உணரமுடிகின்றது.

குறிக்கத்தக்க விழாக்கள்

மலேசியாவில் திகழ்ந்து வரும் பல்லினக் குழுமக் கலாச்சாரத்தின்படி, இங்கு பல்வேறு சமயம் சார்ந்த மக்களும் தத்தம் சமயம்சார் விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். இவ்விழாக்களைக் கொண்டாடிக் கொள்ள மலேசிய அரசும் ஒப்புதல் தந்துள்ளது. மலேசிய நாட்டில் இசுலாம் சமயத்தவர்கள் நோன்புப் பெருநாளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து பெரிய அளவில் கொண்டாடி வருகின்றனர். சீனர்கள் சீனப்புத்தாண்டைப் பதினைந்து நாள்களுக்குக் கொண்டாடுகிறார்கள். பதினைந்தாவது நாள் 'சாப் கோ மே' என்னும் பண்டிகையைக் கொண்டாடுவார்கள். தமிழர்கள் தீபாவளிப் பெருநாளை பெரிய அளவில் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவர். இந்து சமயம் சார்ந்தவர்கள் கொண்டாடும் தைப்பூசத் திருநாள் இந்நாட்டில் பிரசித்திப்

2. மலேசிய அரசு ஆவணம் தரும் தகவல்கள்

பெற்றதாகும். இவ்விழாவில் சீனர்களும் பங்கேற்பர். இந்து சமய மக்களின் பொங்கல் திருநாள் நாட்டின் பிற இன மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவருகிறது. நவராத்திரி, சிவராத்திரி, மார்கழி பூசை, விநாயக சதுர்த்தி என்று பல வழிபாட்டுப் பண்டிகைகள் இந்துக்களால் கொண்டாடுகின்றன.

இவை தவிர சமயம் சாரா நிலையில் மலேசிய நாட்டின் விடுதலை அனைத்து இன மக்களாலும் மகிழ்வுடன் கொண்டாடப் பெறுகிறது. நாட்டின் எல்லா இன மக்களும் ஆகஸ்டு 31 ஆம் நாளை விடுதலை நாளாகவும் செப்டம்பர் 16ஆம் நாளை மலேசிய தினமாகவும் கொண்டாடுகின்றனர். இவற்றைத் தவிர்த்து மலேசிய நாட்டு ஒன்பது மாநில சுல்தான்கள் (அரசர்), நான்கு ஆளுநர்கள் ஆகியோரின் பிறந்த நாளை அந்தந்த மாநிலங்களில் கொண்டாடுவார்கள். நாட்டின் பேரரசர் பிறந்த நாள் நாடு முழுமையும் அனைத்து மக்களாலும் கொண்டாடப்படுகிறது.

மேற்குறித்த விழாக்கள் மலேசியாவில் பொது நிலையில் சிறப்பாக பெரும்பான்மையாகக் கொண்டாப்படும் விழாக்கள் ஆகும். இவை தவிர சிறுசிறு விழாக்கள் கொண்டாடப்பட்டும் வருகின்றன. இவை பற்றிய செய்திகளை இவ்வியல் தொகுத்து வழங்குகிறது.

மலாய்க்காரர்களின் சமய வாழ்க்கைமுறை

மலேசியாவில் வாழும் மலாய்க்காரர்கள் இசுலாமிய நெறிப்படி வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வெள்ளிக் கிழமைகள் தோறும் தவறாமல் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுகை நடத்துவர். மலேசிய அலுவலகங்களுக்கும் தொழுகைக்காக கூடுதல் நேரம் விடுப்பு வழங்கப்படுகிறது. வெள்ளிக்கிழமைகளில் நாட்டிலுள்ள சிறிய பெரிய பள்ளிவாசல்களில் இசுலாமியர்கள் கூட்டம் நிறைந்திருக்கும். இடம் பற்றாவிடினும் பள்ளிவாசலுக்கு வெளியே இருந்து இசுலாமிய மக்கள் வழிபாடு செய்வர். பள்ளிவாசலுக்குச் செல்ல பெண்களுக்கு அனுமதி இல்லை. எனவே அவர்கள் வீட்டிலேயே தொழுகை நடத்துவர்.

மலாய்க்காரர்களின் இசுலாம் சமய விழாக்கள்

மலேசியாவில் வாழும் மலாய்க்காரர்கள் அனைவரும் உரிய முக்கியமான திருவிழா நோன்புத் திருநாள். இந்நாள் தவிர பிற இசுலாம் சமயம் சார்ந்த விழாக்களையும் இசுலாமியர்கள் கொண்டாடி வருகின்றனர். இவை பற்றிய செய்திகள் பின்வருமாறு.

1.நோன்புப் பெருநாள் ஆகிய ஹரி ராய பூசா

இசுலாம் சமயத்தவர்கள் நோன்புப் பெருநாளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து பெரிய அளவில் கொண்டாடுவர். பெருநாளுக்கு முன் ரமலான் மாதம் பகல் முழுதும் உண்ணாநோன்பு கடைப்பிடித்து வருவர். பட்டணங்களிலும், நகரங்களிலும் பணிபுரிவோர் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பிப் பெற்றோர்களுடனும் உறவினர்களுடனும் குதூகலமாகக் கொண்டாடுவர். நோன்புப் பெருநாளன்று காலையில் பள்ளிவாசல் சென்று விசேஷ தொழுகையில் கலந்துகொள்வர். இந்நாளில் குடும்ப உறுப்பினர்களிடமும் நண்பர்களிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்வர்.

இவ்விழாவின் போது திறந்த இல்ல உபசரிப்பு என்ற நிலையில் விருந்து உபசரிப்பு நடைபெறுகிறது. பெருநாளை முன்னிட்டு, இல்லத்திற்கு வரும் விருந்தினர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று உபசரிப்பார்கள். பல்லின மக்கள் வாழும் மலேசியாவில் மலாயக்காரர்களைத் தவிர்த்துப் பிற மதத்தினர்களான சீனர், இந்தியர் மற்றும் யூரேசியர்கள் இசலாமியர்களான மலாய்க்காரர்கள் வீட்டிற்குச் சென்று பெருநாள் வாழ்த்துக் கூறுவார்கள். அவர்கள் அனைவரையும் தம் விருந்தினர்களாகக் கருதி இசுலாமிய மக்கள் வரவேற்று விருந்தளித்து மகிழ்வர்.

இசுலாம் மலேசிய நாட்டின் அதிகாரத்துவ சமயமாதலால் நாட்டின் பல் இடங்களில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் திறந்த இல்ல உபசரிப்பு நடத்துவார்கள். இவ்விருந்தில் ஆயிரக்கணக்கான பல்லின மக்கள் கலந்து சிறப்பிப்பார்கள். பொதுமக்கள் அரச குடும்பத்தினர்கள், பிரதமர், அமைச்சர்கள் முதலியோரைக் கண்டு கைகுலுக்கச்

சந்தர்ப்பம் ஏற்படும். விருந்தில் மலாய்க்காரர்களின் பாரம்பரிய உணவு பரிமாறப்படும். நெய்சோறு, புலால் உணவு, சாத்தே, என்னும் சுட்ட இறைச்சி, கெத்துப்பாட், தென்னங் குருத்தோலைப் பையில் வேக வைத்த சோறு, காரமும் இனிப்பும் கலந்த தொக்குடன் உண்ணும் உணவு, லேமாங் மூங்கில் குழாயில் போடப்பட்ட அரிசி நெருப்புத் தணலில் வேகவைத்து உண்ணும் உணவு மற்றும் பல பாரம்பரிய உணவு வகைகள் விருந்தில் இடம் பெறும்.

2. ஹஜ் பெருநாள் (ஹரி ராயா ஹஜி)

மலேசிய இசுலாமிய மக்கள் ஹஜ் பெருநாளை தியாகத் திருநாள் அழைப்பார்கள். இப்பெருநாள் இசுலாமிய நாள்காட்டியின்படி 12ஆவது மாதத்தின் 10ஆம் நாள் என்ற நிலையில் கொண்டாடப்படுகிறது. இந்நாள் தென் அரேபியா நாட்டின் புனித மெக்கா நகருக்குப் புனித ஹஜ் யாத்திரை செல்லும் இறுதி நாளைக் குறிக்கும். இசுலாமியர்களின் ஐந்து முக்கிய கடமைகளில் முக்கியமான ஒன்று, வாழ்நாளில் ஒரு முறையாவது மெக்காவுக்குப் புனித யாத்திரை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும்.

இவ்விழாவின் முக்கிய சடங்குகளில் ஒன்று "கொர்பான்" (தியாகம்) செய்வது. இந்நாளில் மனிதன் உண்ணக்கூடிய கால்நடைகளைக் கொன்று இறைச்சியை உறவினர், நண்பர்கள் மற்றும் வசதி குறைந்த மக்களுக்கும் கொடுப்பதைத் தியாகத் திருநாள் என்பர். இசுலாமியர்கள் தங்களிடமிருக்கும் குறிப்பிட்ட விலைமதிப்புள்ளவற்றையும் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்பதை இத்திருநாள் வலியுறுத்துகிறது.

3. முகமது நபி பிறந்தநாள்

இசுலாமியர்களுக்கு முகமது நபி பிறந்தநாள் முக்கியமான கொண்டாட்டமாகும். இந்நாளில் இசுலாமியர்கள் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுகை நடத்தி அதன் பின்னர். பதாகைகள் ஏந்தி ஊர்வலமாகச் செல்வார்கள். இவ்வூர்வலத்தின்வழி இசுலாமியர்கள் தங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்தி நிற்கின்றனர். சமயப் பிரச்சாரக் கூட்டங்களில் இசுலாமிய சமய கருத்துப் பரிமாற்றங்கள் செய்து கொள்வர்.

4. வருடப் பிறப்பு - அவால் முகரம்

இசுலாமிய ஆண்டின் முதல் மாதத்தின் தொடக்க நாளை மலேசியாவில் மலாய் மொழியில் அவால் முகரம் என்றும் மால் ஹிஜ்ரா என்றும் அழைப்பார்கள். "இசுலாமியர் 354 நாள்கள் கொண்ட சந்திர மாத சுற்று நாள்காட்டியைப் பின்பற்றுகின்றனர். மேற்கத்திய நாள்காட்டியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது, 11 நாள்கள் பின்னோக்கிக் குறைந்துள்ளது."[3] இந்நாளில் நாடு முழுதும் உள்ள இசுலாமியர்கள் சமய சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். ஆன்மீகப் பாடல்கள் பாடுவது, சமய சம்பந்தமான கூட்டங்களில் கலந்து கொள்வது மற்றும் ஊர்வலத்தில் கலந்து கொள்வது போன்ற நிகழ்வுகள் நடைபெறும். குறிப்பாகப் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுது இசுலாமியரின் புனித நூலான குரான் புனித வாசகங்களை ஓதுவர்.

இவ்வாறு இசுலாம் சமயம் சார்ந்த வழிபாடுகளை மலேசிய இசுலாமியர்கள் நடத்திக் கொள்கின்றனர். இவ்விழாக்கள் தவிர மலாய் அரசர்களின் முடிசூட்டுவிழா கருதிப் பல விழாக்களை இப்பெருமக்கள் கொண்டாடி வருகின்றனர்.

5. மலாய் அரசர்களின் முடிசூட்டு விழா

மலேசியாவில் ஏற்படுத்தப் பெற்ற இராச்சிய மரபின்படி, பாரம்பரியமாக வரும் அரசு உத்தியோகஸ்தன் ஒருவன்தான் இன்றைக்கும் அரச சின்னங்களைக் கையாளலாம். 'ஸ்ரீநராதி ராஜா' என்பது அவரது பட்டப் பெயராகும். "நகிரிசெம்பிலான் யாங்-டி பெர்துவான்' (அரசர்) பிராமணிய முறைப்படியே பட்டப் பிரகடனம் செய்யப்படுகின்றார். எனவே ஹிந்துக்களுடைய பண்பாடுகள், மலாய்ச் சுல்தான்மார் (அரசர்) முதல் மலாய்ப் பாமரன் ஈறாக, மலாயர்களின் வாழ்க்கையில் படிந்துள்ளன என்பது இங்கு எண்ணத்தக்கது.

---

3. தகவலாளி கல்சோம் பிந்தி அகமட் தந்த தகவல், சிப்பாங், சிலாங்கூர்.

அவரது குடும்பத்தில் யாரும் மாட்டிறைச்சியை உண்பதில்லை. அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிவபெருமானது வாகனமான நந்தியின் ஓக்காளத்திலிருந்து தாம் தோன்றியுள்ளதாகக் கொள்வர். இன்றும் பேரா மாநிலத்தில் அரியணையேறும் வைபவம் நடக்கும்போது ஸ்ரீநாராத் ராஜாதான் பட்டப் பிரகடனம் செய்வார். பிராமணர் மந்திர தீட்சை செய்வது போன்று பிரகடன வேளையிலே மகுடம் சூட்டிக் கொள்ளும்போது ஸ்ரீநராதி ராஜா அரசனது செவியில் அரசனின் இராஜ பரம்பரையின் மூதாதையினருடைய இந்து 'நாமகரணத்தை' உச்சரிப்பார். நெகிரி செம்பிலான் 'யாங்-டி-பெர்துவான்' (அரசர்) பிராமணிய முறைப்படி முடிசூடும் பொருட்டுப் பிரகடனம் செய்யப்படுகின்றார். அப்பொழுது தூதன் ஒருவன் இடக்காலில் நின்று கொண்டு, வல உள்ளங்காலை இட முழங்காலில் மறைத்து, இடக் கையின் விரல் நுனிகளை இடக் கன்னத்திலே கொடுத்து முடிசூடும் பிரகடனம் செய்வான்.

மலாய சுல்தான்களின் (அரசர்களின்) முடிசூட்டு விழாக்களிலே இசுலாமிய சடங்குகள் இன்றைக்கு இருந்தாலும் முன்னைய இந்து சடங்குகளெல்லாம் நடந்தே வருகின்றன. சில மாநிலங்களில் சதுர் (நான்கு) திக்கு அபிஷேகங்கள் நடக்கின்றன. சடங்குகள் முடிந்த பிறகு அரசன் தன் பரிவாரத்தோடு இந்து முறைக்கு ஒப்ப அரண்மனையை வலம் வருகின்றார். பின்னர் குடிமக்களுக்கு தரிசனம் அளிக்கின்றார். பேரா மாநிலத்தில் அவ்வாறு தரிசனம் வழங்கும் சுல்தான் ஒரு இந்து தேவதையைப் போன்று ஆடை ஆபரணங்களாலே தன்னை அலங்கரித்து இருப்பார். "சுல்தானின் தலையணையில் "மின்னல் முத்திரை" (மலாய் மொழியில் = மத்தரை கிலாட்-மத்தரை = முத்திரை, கிலாட் = மின்னல்) என்ற ஒரு சின்னம் மாட்டப்படுகின்றது. இது இந்திரனது வச்சிராயுதத்தின் குறியீடாகக் கொள்ளப்படுகிறது. இன்னும் பேரா சுல்தான் தரிக்கும் கவசத்தின் தோள் பட்டையில் ஆகாய கங்கையிலிருந்து வந்த குத்துவாள் ஒன்று இருக்கும். அதில் மகா தேவன் மகாதேவி இருவரது உருவங்களும் பொறிக்கப் பெற்றிருக்கும். பேரா சுல்தான் முடிசூட்டப் பெற்று அரியணையில் வீற்றிருக்கையில்

ஸ்ரீநராதிராஜா சிதைந்த சமஸ்கிரதத்தில் வாழ்த்து வாசிப்பதுண்டு. நெகிரி செம்பிலான் மாநிலத்தில் இவ்வாழ்த்தின் மலாய் மொழிபெயர்ப்பு முடிசூட்டு விழாவில் வாசிக்கப்படுகிறது. இவ்வாழ்த்தை வாசிப்பவர் இசுலாமிய மதாசாரியல்லர் முன்னைய பிராமணரைப் பிரதிநிதிக்கும் அரசு உயர் உத்தியோகஸ்தன் ஒருவனே வாசிக்கிறான். அவ்வாழ்த்தில் இந்து வேத காலத்து பஞ்ச தேவதைகளும் ஆவாகனம் செய்யப்படுகின்றார்கள். முடிசூட்டு விழா சடங்குகள் நடக்கும்பொழுது சுல்தான்மார் ஒரு யோகி தியானத்தில் இருப்பதுபோல ஆடாமல் அசையாமல் அமைதியாக அமர்ந்திருத்தல் வேண்டும். சுல்தான்களின் முடிசூட்டு விழாச் சடங்கு முடிந்தவுடன் இராமாயணம் சம்பந்தமான பாவைக் கூத்து நடைபெறுகிறது. அதில் கூத்துத் தலைவன் மஞ்சள் சால்வை அணிந்து தன்னை விஷ்ணுவின் அவதாரமாகப் பாவனை செய்து கொண்டு ஜகத் குருவும் நடராஜனுமான சிவனுக்கு அர்க்கியம் (நீரால் செய்யும் உபசாரம்) செலுத்துகிறான்."[4]

இன்னும் பிறப்பு, இறப்பு, திருமணம் முதலிய தருணங்களில் ஓர் இந்து செய்யும் எல்லாச் சடங்குகளையும் மலாயர்கள் செய்து வருகின்றனர். கிராமங்களில் இருக்கும் மலாய் வைத்தியன் மற்றும் மாந்தரிகன் இன்றைக்கு இசுலாமியனாக இருந்தாலும் நோயாளியைப் பிடித்துள்ள பேய்களை ஓட்டுவதற்குச் சிவனையே அழைக்கின்றான். புதுமனை புகுவிழாவிற்கும் பரிகாரங்கள் செய்வதற்கும் கிராம மலாயர்கள் சிவனையே அழைக்கிறார்கள்.

எனவே இந்துப் பண்பாடுகள் மலாய் சுல்தான்மார்கள் முதல் பாமரன் ஈறாக மலாயர்களின் வாழ்க்கையில் இருந்துவருகின்றன. இதன்வழி மலாய் மக்களின் வாழ்க்கைமுறையில் சமய அளவிலும், அரச அளவிலும் தமிழர்களின், இந்துச் சடங்குகளின் பங்களிப்பு உள்ளதை அறியமுடிகின்றது.

---

4. சுவாமி சத்தியானந்தா, மலாயா சரித்திரம், பக் 41-43

சரவாக் மாநிலத்து விழாக்கள்

காவாய் டாயாக் - டாயாக் நாள்

சரவாக், சபா மாநிலங்கள் கிழக்கு மலேசியாவின் மாநிலங்களாகும். இங்குப் பழங்குடி மக்கள் அதிகமாகவும் சீனர், மலாயர் இந்தியர் குறைவாகவும் வாழ்கின்றனர். கிழக்கு மலேசியாவிலுள்ள பழங்குடி மக்களின் முக்கிய விழா 'காவாய் டாயாக்' அல்லது டாயக் நாள் பழங்குடி மக்களைக் கௌரவிக்கும் பொருட்டு பலநாள்கள் கொண்டாட்டமாகும். நகரங்களிலும் கிராமங்களிலும் மிகவும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவார்கள். "டாயக் மக்கள் எனப்படுவோர் இபான், பிடாயு ,கயான், கென்யா, கிலாபிட் மற்றும் மூருட் ஆகியோர் கொண்ட பழங்குடியினர் ஆவர். ஆதியில் இவர்கள் காடுகளில் திரிந்து புதிய மனிதர்களின் தலைகளை வேட்டையாடுபவர்களாக இருந்தனர். ஆனால் இப்பொழுது ஒரேஒரு கோழியின் தலையை வெட்டிக் காவாய் தினத்தன்று நல்ல அறுவடைக்காகப் பலி கொடுக்கின்றனர்.

இவ்விழாவை மகிழ்ச்சிகரமாகவும் ஆர்வமாகவும் கொண்டாடுகிறார்கள். அந்நாளில் வருடம் முழுதும் பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் ஒன்று கூடுவார்கள். இவ்விழாக்களின்போது திருமண வைபவங்களும் ஏற்பாடு செய்யப்பெற்று நடைபெறுவதுண்டு.

கொண்டாட்டங்கள் மே 31ஆம் நாள் மாலை தொடங்கும். இவ்விழாவைக் கெடுக்க வரும் பேராசை கொண்ட ஆவியை - முவாய் அந்து ருவா துரத்துவதற்குப் பாரம்பரிய இசையுடன் கூடிய ஒரு சடங்கு நடத்துவார்கள். முவாய் அந்து ருவா சடங்கின்போது இருவர் ஒரு கூடையை டாயாக் மக்களின் நீண்ட வீடுகளுக்கு முன்னால் இழுத்துச் செல்வார்கள். ஒவ்வோர் அறையிலிருந்தும் துணி மற்றும் வீட்டுப் பொருள்களைக் கூடையில் போடுவார்கள். அந்தக் கூடையை கெட்ட ஆவியால் தொந்தரவு வரக் கூடாதென்பதற்காக பலியிடுவதுபோல் மண்ணில் புதைத்து விடுவார்கள். சூரியன் மறைந்த பின் விழாத் தலைவர் நல்ல அறுவடைக்காகவும், மறு ஆண்டு மலர்ச்சிக்கும் நல்ல விளைச்சல் தர வேண்டியும் ஒரு கோழியை வெட்டிப் பலி

கொடுப்பார். இரவு விருந்து வழக்கமாக மூங்கில் குழாயில் வேகவைத்த அரிசி, தேங்காய்ப் பாலில் தயாரிக்கப்பட்ட பலகாரங்கள் பரிமாறப்படும். நள்ளிரவுக்குச் சற்று முன்னர் "ஙாலு பெட்டரா " என்ற ஊர்வலம் நடைபெறும். ஊர்வலம் ஏழு முறை சுற்றி நண்பர்களான ஆவி தெய்வங்களை வரவேற்பார்கள். நள்ளிரவில் விழாத் தலைவர் அரிசியால் தயாரிக்கப்பட்ட மதுபானத்தை உயர்த்தி நீண்ட ஆயுள் கொடுப்பதாக என்று கூறிஅருந்துவார். மற்றவர்களும் அவ்வாறே செய்வார்கள். அனைவரும் ஆடியும் பாடியும் மது அருந்தியும் மகிழ்வார்கள். இங்கு இவர்களும் திறந்த இல்ல உபசரிப்பு நடத்துவார்கள்."[5]

கௌல் விழா

மலேசியாவில் வாழும் மெலானவ் இன மீனவர்கள் கௌல் விழாவைக் கொண்டாடுகிறார்கள். மரப் படகுகளில் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதால் அதிக மீன்கள் கிடைப்பதற்கும் பாதுகாப்பிற்கும் ஆவிகளுக்குப் படையல் நடத்துவார்கள். பெரும்பாலான மெலானவ் மக்கள் இசுலாமிய கிறிஸ்துவ மதங்களுக்கு மாறினாலும் தங்களின் பாரம்பரிய நிலையை விட்டுவிடாமல் தொடர்ந்து இவ்விழாவைக் கொண்டாடி வருகிறார்கள்.

சந்திர அனிச்சல் விழா

"சரவாக் மாநிலத்தில் சீனர்கள் இரண்டாவது பெரிய சமூகமாக வாழ்கின்றனர். எனவே சீனர்களின் முக்கிய விழாவான சீனப் புத்தாண்டையும் சந்திர அனிச்சல் விழாவையும் கொண்டாடுகின்றனர்."[6]

சபா மாநில விழாக்கள்

சபா மாநிலத்தில் பல்வகை கலாச்சாரத்தைக் கொண்ட 30 பழங்குடி சமூகத்தினர் வாழ்கின்றனர். ஒவ்வொரு சமூகத்தினருக்கும் தனி கலாச்சாரம்,

5. மலேசிய அரசின் தகவல் இலாகவின் ஆவணங்கள்.

6. மலேசிய அரசுக் கையேடு

மொழி, கலை, கைவினை, பாரம்பரியம் மற்றும் வாழ்வியல் முறைகள் உண்டு. பல சமூகத்தினர்களாக இருந்தாலும் அவர்களை ஒவ்வோர் ஆண்டும் விழாக்களின்போது ஒன்றுபடுத்துகிறது. சபா மாநிலத்தில் நான்கு முக்கிய பழங்குடியினருள் பாஜாவ் சமூகத்தினரும் அடங்குவர். இவர்கள் பெரும்பாலும் சபா மாநிலத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள செம்பூர்ணா வட்டாரத்தில் வசிக்கின்றனர். அங்கே அவர்கள் கடலில் மிதக்கும் வீடுகள் கட்டிக் கொண்டு வாழ்கின்றனர். இவர்கள் நெடுங்காலமாகவே மீன் பிடிக்கும் தொழிலை விடாமல் செய்து வருகின்றனர்.

ரெகாட்டா லெப்பா செம்பூர்ணா

ஆண்டுதோறும் ஏப்ரல் திங்கள் மூன்றாம் வாரத்தில் கொண்டாடப்படும் விழா இதுவாகும். இவர்கள் மீனவர்களாக இருப்பதால் படகு செய்யும் முறைகளை பாரம்பரியமாகக் கற்றுக் கொள்ள நெறிப்படுத்தும் விழாவாக இது அமைகின்றது. இவ்விழா மீனவ வாழ்க்கை முறையை வெளிப்படுத்தும் விழாவாகும். இவ்விழாவிற்காக செம்மரக் கட்டையால் அழகிய பாரம்பரிய படகுகள் செய்யப்படும். அலங்கரிக்கப்பட்டு வண்ணக்கொடிகள் பறக்க விட்டுக் கொண்டு படகைச் செலுத்துவார்கள். சிறந்த அழகிய 'லேப்பா' (படகு) தேர்ந்தெடுக்கப்படுமாகையால் அவரவர்கள் தங்களின் சுயகௌரவத்திற்காகப் போட்டியில் கலந்து வெற்றிபெறும் நோக்கத்தில் படகை சிறப்பாக அலங்கரித்து போட்டியில் கலந்து கொள்வார்கள். படகின் தோற்றம், அலங்காரம், பாரம்பரிய கலாச்சாரம் ஆகியவற்றைப் பார்த்து ஆண்டின் சிறந்த படகைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இதே நேரத்தில் கயிறு இழுக்கும் போட்டி போன்று இரண்டு குழுவினர் படகில் இருந்து கொண்டு படகைச் செலுத்தியவாறு கயிறு இழுக்கும் போட்டி, மற்றும் நீச்சல் போட்டி முதலியவற்றை நடத்துவார்கள். பாஜாவ் மக்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். விழா இரவிலும் கொண்டாடப்படும், படகுகள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுப் கண்கொள்ளாக்

காட்சியாக இவ்விழா நடைபெறும். இவ்விரவில் அவர்களின் பாரம்பரிய நடனம் ஆடப்படும்.

காமாட்டான் விழா - மே திங்கள் 1 – 31

காமாட்டான் விழா என்ற விழா ஒரு தொன்மத் தொடர்புடைய விழாவாகும். இவ்விழாவிற்கான பழங்கதை ஒன்று உண்டு. "கினோயிங்கான் என்னும் படைக்கும் கடவுள், ஊழல் புரிந்து வாழ்ந்த மக்களைத் தண்டிக்க ஏழு பிளேக் நோயை அனுப்பி வைத்தார். இறுதியாக நிலத்தை வறட்சியாக்கி உணவு இல்லாமல் பஞ்சத்தை ஏற்படுத்தினார். இறுதியில் பசியால் துன்புற்ற மக்கள் கினோயிங்கான், அவரின் அழகிய மகள் 'ஹுமினோடுன்' ஆகியோரிடம் சென்று, தங்களைக் காப்பாற்றமாறு கெஞ்சினர். இத்துன்பத்தைப் போக்க, ஹுமினோடுன் இரக்கப்பட்டு மக்களுக்காகத் தான் பலியாவதாக ஒப்புக் கொண்டு பலியானாள். அவளது உடலின் பலபாகங்கள் வயல்களில் விதைக்கப்படும் விதைகளாயின. இதன் காரணமாக மக்கள் பஞ்சம் தீர்ந்து செழிப்புடன் வாழ்ந்தனர். இவள் நெற்பயிரின் ஆவி தேவதையானாள்.

மக்களுக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்த பொனும்புவானை நினைவு கூறும் தினம் ஆண்டுதோறும் மே திங்கள் முதல் வாரத்தில் கொண்டாடப்படுகிறது. இவ்விழா கருதிப் பலவிதமான சடங்குகளும் கொண்டாட்டங்களும் நடத்தப்படுகின்றன. குறிப்பாக "மகவாவ்" நடத்தப்படும். விழாவின் முதல் நாள் தலைமை பூசகர் நெற்பயிரின் ஆவி தேவதையை அழைத்துச் சிறப்பான பூசையை நடத்துவார்.

மே திங்கள் முழுவதும் பல விதமான பாரம்பரிய கலாச்சார விழாக்கள் கொண்டாடப்படும். நெற்பயிர் தேவதைக்கு உணவும் அரிசி மதுபானமும் வைத்துப் படைக்கப்படும்." [7]

---

7. தகவலாளி சித்தி கல்சோம் தகவல், கோலகிள்ளான்.

ரும்பியா விழா - ஜூலை இரண்டாவது வாரம்

சபா மக்கள் சவ்வரிசியை ரும்பியா என்று அழைப்பார்கள். குவாலு பென்யு வட்டாரத்தில் வசிக்கும் பிசாயான் கடசான் சமூகத்தினர்களுக்கு அரிசி உணவோடு சவ்வரிசி உணவும் உண்கின்றனர். சவ்வரிசி மரம் பனைமரம் போன்று இருக்கும். அதன் ஓலைகளை வீட்டிற்குக் கூரையாகப் பயன்படுத்துவார்கள். ரும்பியா விழா மே திங்கள் இரண்டாவது வாரத்தில் வருடாந்திர விழாவாகக் கொண்டாடப்படும். விழாவைக் காண வரும் விருந்தினருக்கும் சுற்றுப் பயணிகளுக்கும் சவ்வரிசியால் செய்யப்பட்ட பலகாரங்களைக் கொடுப்பதோடு அவற்றைச் செய்யும் முறையையும் கற்றுத் தருவார்கள்.

தேங்காய் விழா - செப்டெம்பர் திங்கள் 2ஆம் வாரம்

உலகின் வெப்ப மண்டல நாடுகளில் தேங்காய் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது. சபா மாநிலத்தில் 5000 ஹெக்டர் நிலத்தில் தென்னந்தோப்புகள் விளைந்துள்ளன. உலக தேங்காய் தினமும் இவர்களின் தேங்காய் தினமும் ஒரே நாளில் வருகிறது. சபாவின் கூடாட் பகுதியில் கொண்டாடப்படும் தேங்காய்த் திருவிழா சற்று நகைச்சுவை கலந்த விழாவாகும். போட்டியாளர்களுக்குத் தேங்காய்களே போட்டிக்கான கருவிகளாகும். தேங்காய் காலணியால் நடக்கும் போட்டி, தேங்காய் துருவி பால் எடுக்கும் போட்டி, தேங்காயால் ஆன கைவினைப் பொருள்கள் கண்காட்சி மற்றும் ஆடை அலங்காரப் போட்டிகள் நடக்கும். வருகையாளர்களுக்குத் தேங்காயால் செய்யப்பட்ட உணவுகளைப் பரிமாறுவார்கள். இளநீர் வழங்குவார்கள். தென்னை ஓலையால் பின்னப்பட்ட ஆடைகளை உடுத்திக் கொண்டு கலை நிகழ்ச்சியில் பாரம்பரிய நடனம் ஆடுவார்கள்.

தாமு பெசார் - அக்டோபர் திங்களின் முதல் வாரம்

சபா மாநிலத்தின் தலைநகர் கோத்தா கினாபாலுவிலிருந்து ஒரு மணி நேரப் பயண தூரத்தில் அமைந்துள்ள கோத்தா பிலுட் பகுதி 'இடையர்களின் நிலம்' என்று அழைக்கப்படுகிறது. வருடாந்திர 'தாமு பெசார்' விழாவின்போது

மட்டக் குதிரைகள் விழாவுக்காக வண்ணத் துணிகளால் அலங்கரிக்கப்பட்டு வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கும். இதனைக் காணக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். கோத்தா பிலுட்டில் வாழும் இசுலாமிய பாஜாவ் சமுகத்தினர் கடசான்டூசுன் மற்றும் இரானுன் சமூகத்தினர்களும் கோத்தா பெலுட் பகுதியின் சிறப்பான பாரம்பரிய கலைக்குப் பெயர் பெற்றுத் திகழ்கிறது.

குதிரைகள் மற்றும் சவாரி செய்பவர்களின் திறன்களைக் காட்டுவதற்காகப் பல போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இதனைத் தவிர்த்து மேலும் மேலை நாடுகளில் கால்நடைகளை வளைத்து வழிநடத்தக் குதிரைகளைப் பயன்படுத்துவது போன்று குதிரைக்குப் பதில் எருமையைப் பயன்படுத்தும் காட்சியினைக் காணலாம். திறந்த வெளியில் உள்நாட்டு விளைபொருட்களும், கைவினைப் பொருட்களும் சந்தையில் விற்கப்படுகின்றன.

சோள விழா - நவம்பர் மத்தியில்

கோத்தா கினாபாலுவுக்கு அருகிலிருக்கும் ஒரு சிறிய பட்டணமான கோத்தா மருடுவில் வாழும் மக்களுக்குச் சோளம் முக்கிய உணவு ஆகும். அங்கு வாழும் மக்களின் சோள உணவின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக இவ்விழா கொண்டாடப்படுகிறது. சோள விழாவில் பலவகையான போட்டிகள் நடத்தப்படுகின்றன. சோளம் சமைத்தல், சோளம் நடுதல், கலை நிகழ்ச்சிகள் முதலியவற்றோடு சோளராணி அழகு போட்டியும் இடம் பெறும். இரவில் சோள கூண்டு தீபம் ஏற்றுவார்கள்.

கியுலு என்ற இடத்தில் நடைபெறும் 4எம் சவால் - திசம்பர் தொடக்கம்

"கோத்தா கினாபாலுவுக்கு 40 கி.மீ தூரத்தில் கியூலு பட்டணம் அமைந்துள்ளது. இங்கு 4 எம் சவால் போட்டி நடைபெறும். கடசான் டூசுன் மக்களின் பாரம்பரிய 4 எம் விளையாட்டுப் போட்டிகள் அதாவது நான்கு விளையாட்டுகளின் பெயரின் முதல் எழுத்தைக் கொண்ட போட்டி இதுவாகும். மானாங்குஸ் - ஓடுதல், மாங்கார் - மூங்கில் கட்டுமரம், மானம்பாத்தாவ் -

மூங்கிலால் நீந்துதல், மாமாரம்பானவ் - உயரமான மூங்கில் கழியால் நடத்தல் என்ற நான்கு மலேசிய மொழிச் சொற்களில் உள்ள ஆங்கில முதல் எழுத்தான எம் என்பது நான்கு முறை அடுக்கிய நிலையில் இந்த 4எம் சவால் போட்டி பெயர் பெற்றுள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டியில் மனம், உடல் நலம் ஆகியன கருத்தில் கொண்டு சோதிக்கப்படுகிறது. அடுத்து இயற்கையைக் குறிப்பாக கியூலு நதியைப் பாதுகாப்பதும் நினைவில் கொள்ளப்படுகிறது. முக்கியமாகப் பாரம்பரிய விளையாட்டுகளும் சுற்றுச் சூழலும் பற்றி மக்களிடையே உணர்த்துவதே சவாலாக அமைகிறது."[8] இவ்வாறு மலாய்க்காரர்கள் இசுலாமிய சமயம் சார்ந்தும், இந்து சமயம் சார்ந்தும், பழங்குடி மக்கள் சமயம் சார்ந்தும் பல்வேறு திருவிழாக்களை நடத்தி வருகின்றனர்.

<u>தமிழர் வழிபாட்டு முறைகள்</u>

மலேசியாவில் வாழும் தமிழர்களில் பெரும்பாலோர் இந்து சமயத்தவர்களாவர். சிலர் கிறிஸ்துவ சமயம், இசுலாமிய சமயம், மிகக்குறைந்த எண்ணிக்கையினர் பிற சமயங்களிலும் இருக்கின்றனர். மலேசிய மக்கள் சுதந்திரமாக எந்த மதத்தையும் தழுவ சட்டம் அனுமதிக்கிறது. இந்து சமயத்தைத் தழுவும் தமிழர்கள் கணபதி, முருகன், சிவன், கிருஷ்ணர், இராமர், அனுமன், ஐயப்பன், மாரியம்மன், காளி, துர்க்கை மற்றும் பல சிறு தெய்வங்களை வழிபடுகின்றனர். செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் கோயிலுக்குச் சென்று இறைவனைத் தொழுகின்றனர். விழாக் காலங்களிலும் பண்டிகைக் காலங்களிலும் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். மலேசியத் தமிழர்கள் தமிழ் நாட்டுக் கிராமங்களிலிருந்து வந்தவர்களாதலால் தங்கள் முன்னோர்கள் வழிபட்ட கிராமத் தெய்வங்களையே பெரும்பாலோர் வழிபடுகின்றனர்.

---

8. தகவலாளி ஹசான் பின் இட்ரிஸ் தந்த தகவல், ரெங்கம், ஜோகூர்.

விழாக்கள்

சீனர்கள் தமிழ்ர்கள் போன்றே பல்வேறு விழாக்களை கொண்டாடி வருகிறார்கள். அவை சித்திரைப் புத்தாண்டு, வைகாசி விசாகம், ஆடிப்பூரம், கரகம் பாலித்தல், ஆடிப் பெருக்கு, ஆடி அமாவாசை, மகாளய அமாவாசை, குருபூர்ணிமா, விநாயக சதுர்த்தி, வரலட்சுமி விரதம், நவராத்திரி நோன்பு (கலைத்திருநாள்), தீபாவளி, கந்த சஷ்டி, கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி, பாவை நோன்பு, தைப்பூசம், தைப் பொங்கல், மகா சிவராத்திரி, பங்குனி உத்திரம், திருமுறை ஓதும் விழா போன்றவை ஆகும்.

சித்திரைப் புத்தாண்டு

இந்து சமயத்தைச் சார்ந்த தமிழர்களால் கொண்டாடப்படும் ஒரு விழா இதுவாகும். தமிழர்கள் சித்திரை மாதத்தின் முதல் நாளைப் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர். இது ஒரு சமய விழா. சீனர்களுக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் பறவைகள் மற்றும் விலங்குகளின் பெயர்கள் இருப்பது போல தமிழ் ஆண்டுகள் அறுபதுக்கும் பெயர்கள் உண்டு. ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒரு பெயர் வீதம் அறுபது பெயர்கள் தொடர்ந்து வரும். அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு முதலிலிருந்து ஆண்டுகள் ஒவ்வோர் ஆண்டிற்குரிய பெயர் தொடர்ந்து வரும். சில தமிழ் அமைப்புகள் தமிழ்ப் புத்தாண்டு தை முதல் தேதியான பொங்கல் தினமே தமிழ்ப் புத்தாண்டு எனக் கொண்டாடுகின்றனர். சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுபவர்கள் அதிகாலையில் நீராடி ஆலயம் சென்று இறைவழிபாட்டுக்குப் பின்னர் விருந்துண்டு மகிழ்வார்கள்.

வைகாசி விசாகம்.

முருகக் கடவுள் அவதரித்த நாள் வைகாசி விசாகத் திருநாள் ஆகும். வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திர வேளை இதற்குரிய நாளாகும். விசாகம் ஆறு நட்சத்திரங்கள் ஒன்று கூடியதொன்று. இதனால் முருகனும் ஆறு முகங்களோடு திகழ்பவர் என்பது நம்பிக்கை. உயிர்களுக்கு நேரும் துன்பங்களை நீக்கும் பொருட்டு சிவனின் சக்தியானது, ஆறு முகங்களாய்த்

தோன்றி தம் திருவிளையாடலால் குழந்தையானது இந்நாள். இந்நாளில் மக்கள், பிராணிகள், தாவரங்கள் எல்லாம் ஒருயிராகி இணைக்கப் பட்டிருக்கும் உண்மையை விளக்குதலே இந்நாளின் சிறப்பாகும். சைவ சமயத்தவர்கள் விரதமிருந்து கோயிலுக்குச் சென்று முருகனை வழிபடுவார்கள். புத்த பெருமான் பிறந்ததும் ஞானம் பெற்றதும் இந்த வைகாசி விசாகத் தினத்தில்தான்.

ஆடிப்பூரம்

உலகன்னையான ஆதி பராசக்தி, இவ்வுலகில் தோன்றிய நாளாக ஆடிப்பூரம் கொண்டாடப் பெறுகிறது. வெள்ளிக் கிழமை அன்று வரும் ஆடிப்பூரம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்நாளிலேயே ஆண்டாள் பிறந்ததாகக் கருதப்படுகிறது. அதனால் ஆடிப்பூரத்தன்று மலேசிய வைணவ கோயில்களில் ஆண்டாளுக்குச் சிறப்புப் பூசை நடைபெறும். திருமணமாகாத பெண்கள் இந்நாளில் ஆண்டாளை வழிபட்டால் அவர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும் என்பது நம்பிக்கை. ஆடி மாதத்தில் ஆடிப்பூரத் திருவிழா மாரியம்மனுக்கு மிக விமரிசையாக நடத்தப்படுகின்றது. திருவிழாவின்போது பால் குடம் எடுத்தல், அலகு குத்தல், காவடி எடுத்தல், தீமிதித்தல், கரகம் எடுத்தல் முதலியன நடைபெறும்.

கரகம் பாலித்தல்

ரப்பர், எண்ணெய்ப்பனைத் தோட்டங்களிலும் பட்டணங்களை அடுத்துள்ள கிராமங்களிலும் சிறு தெய்வங்களை வழிபடும் வழிபாட்டு முறை மலேசிய தமிழர்களிடம் காணப்படுகிறது. ஆடி மாதத்தில், அம்மனுக்குக் கரகம் பாலித்தல் என்ற திருவிழா முக்கியமான சிறு தெய்வ வழிபாடாக விளங்குகிறது. காலை அல்லது மதியம் பக்தர்கள் ஆற்றங்கரைக்குச் செல்வார்கள். கோயில் அர்ச்சகர் உடுக்கை அடித்து அம்மனை வேண்டி அழைப்பார். அவர் மீது அல்லது பக்தர்களில் ஒருவர் மீது அம்மன் வந்து அருள்வாக்குக் கூறி உத்தரவு கொடுத்த பின்னர் கரகத்தைத் தூக்கிக் கொண்டு கோயிலுக்குச் செல்வார்கள். பெரிய கரகம் அம்மனாகவும் மற்ற கரகங்கள், மற்ற

சிறு கரகங்கள் மற்ற தெய்வங்களாகவும் அடையாளப்படுத்தப்படும். இவ்விழா மூன்று நாள்கள் திருவிழாவாக விமரிசையாகக் கொண்டாடப்படும்.

இத்திருநாள்களின்போது, தமிழர்களின் வீரத்தைப் பறைசாற்றும் சிலம்பம், பொய்க்கால் குதிரை, கரகாட்டம், இராட்டினம் முதலியன குழுமியிருக்கும் பக்தர்களுக்குப் பொழுதுபோக்காக இடம்பெறும். சில வேளைகளில் நாடகமும் நடைபெறும். வழுக்கு மரம் ஏறுதல். ஏறக்குறைய இருபது அடி உயரமான மரத்தூண் நட்டு, தூண் முழுவதும் எண்ணெய் மற்றும் வழவழப்பான களிம்பும் தடவி, தூணின் உச்சியில் பணமுடிப்பு கட்டப்பட்டு இருக்கும். பண முடிப்பை எடுக்க இளைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு ஏறிச் சறுக்கி விழும் காட்சி பார்ப்போர் அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும். பின்னர் ஒருவர் மேல் ஒருவர் ஏறி இறுதியில் வெற்றியடைவர். உரி அடித்தல் நிகழ்வும் தவறாமல் இடம் பெறும். கண்ணைக் கட்டிக் கொண்டு உரியில்லாத இடத்தில் அடிப்பது நகைப்பை ஏற்படுத்தும். இம்மாதிரியான பொழுதுபோக்கு நிகழ்வுகள் மறைந்து வருகின்றன. இரவில் இரத ஊர்வலம் நடைபெறும். பக்தர்கள் வடம் பிடித்து இரதத்தை இழுத்துச் செல்ல ஒருவரை ஒருவர் முந்துவர். பக்தர்கள் ஆங்காங்கே இரதத்தில் அமர்ந்திருக்கும் தெய்வத்திற்கு ஆராதனை செய்வர். தொடர்ந்து நாதசுவரக் கச்சேரியும் இடையிடையே உருமி மேளக் கச்சேரியும் ஊர்வலம் முடியும் வரை நடைபெறும். ஊர்வலம் நள்ளிரவு வரை நீடிக்கும்.[9]

<u>ஆடிப் பெருக்கு</u>

ஆடி பதினெட்டாம் நாள் நடைபெறும் நிகழ்ச்சி இதுவாகும். ஆறு, குளம், கடல் முதலிய இடங்களுக்குச் சென்று நீராடி இறைவனை வழிபாடு செய்யும் நிலையில் இவ்விழா நடைபெற்றுவருகிறது. புதிதாகத் திருமணம் செய்து கொண்டவர்கள் மாலையை நீரில் போட்டுவிட்டு தாலி பிரித்துப் போடும் சடங்கு செய்வார்கள்.

---

9. தகவலாளி, சிவலிங்கம் குருக்கள் தந்த தகவல், கிள்ளான் சிலாங்கூர்.

ஆடி அமாவாசை

ஆடி அமாவாசை இந்து சமயத்தவர்களுக்கு மிகவும் புனிதமும் சிறப்புமானதுமாகும். ஆடி மாதத்தில் வரும் அமாவாசை ஆடி அமாவாசை விரதம் எனச் சிறப்புப் பெறுகிறது. இத்தினத்தில் அதிகாலையில் நீராடி பின்னர் சிவாலய தரிசனம் செய்து, இறந்த தமது முன்னோர்களுக்குப் பிதுர் தர்ப்பணம், அன்னதானம் செய்து இந்நாள்விழா நடைபெறுகிறது. முன்னோர்களைச் சிரத்தையோடு வழிபாடு செய்து சிரார்த்தம் செய்வதால் முன்னோர்கள் தோஷங்களிலிருந்து நீக்கமுறலாம் என்பது இந்துக்களின் நம்பிக்கை[10].

மகாளய அமாவாசை

அமாவாசையில் முன்னோர்களுக்கு எள்ளும் தண்ணீரும் இரைத்துத் தர்ப்பணம் செய்து அவர்கள் தாகத்திற்குத் தண்ணீர் தரும் நிலையில் இது நடத்தப்படுகிறது. மகாளய பட்சத்தில் எல்லா பித்ருத் தேவதைகளையும் திருப்தி செய்யவே மாளய சிரார்த்தம் செய்யப்படுகிறது. திருவள்ளுவர்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங்கு

ஐம்புலத்தா றோம்பல் தலை."[11]

என்று முன்னோர்களை வணங்கும் முறையைக் காட்டியுள்ளார். அவ்வழியில் இது நடப்பதாகக் கொள்ளலாம்.

குருபூர்ணிமா

அன்பை ஊட்டுபவர் அன்னை. உடலைக் காப்பவர் தந்தை. அறிவை ஊட்டுபவர் குரு. இவ்வகையில் குருவை நினைவு கூரும் விழாவாக இவ்விழா நடைபெறுகிறது. குரு பூர்ணிமா ஆடி மாதத்தில் (ஜூன் - ஜூலை) வரும் முழு நிலவு அன்று சீடர்கள் தங்களுக்கு ஆன்மீகக் கல்வி கற்றுக் கொடுத்த குருமார்களைப் போற்றும் நாள் என்ற நிலையில் இவ்விழா

10. மேலது

11 திருவள்ளுவர், திருக்குறள்: இல்லற இயல் - 53

கொண்டாடப்படுகிறது. சீடர்கள் தங்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்த குருவை வழிபடுவதுடன், தட்சணாமூர்த்தி, பகவத்கீதை அருளிய கிருஷ்ணர், வேதங்களைத் தொகுத்த வியாசர், உபநிடதங்களுக்கு விளக்கம் எழுதிய ஆதிசங்கரர், மற்றும் இராமானுஜர் போன்றவர்களையும் குரு பூர்ணிமா நாளில் வழிபட்டு குருவின் திருவருள் பெறுவர்.

விநாயக சதுர்த்தி

ஆவணி மாதம் (ஆகஸ்டு/செப்டம்பர்) சதுர்த்தி நாளை விநாயகர் சதுர்த்தியாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்தியாவில் உள்ள இந்துக்கள், வீட்டில் விநாயகரின் விக்கிரகங்கள், படங்கள் இருந்தாலும் விநாயகர் சதுர்த்திக்காக களிமண்ணால் பெரிதும் சிறிதுமான சிலைகள் செய்து விழாவின் முடிவில் தற்காலிக விநாயகர் சிலையை கடல் நீரில் கரைப்பது போன்று மலேசியாவில் செய்யப்படுவதில்லை. கோயில்களில் சிறப்பாகப் பூசை செய்து ஔவையார் அருளிச் செய்த விநாயகர் அகவல் பாடப்படுகின்றது. விநாயகருக்குப் பிடித்தமான கொழுக்கட்டை, மோதகம் முதலிய இனிப்புப் பலகாரங்கள் விநாயகருக்குப் படைக்கப்படுகின்றன.

வரலட்சுமி விரதம்

ஆவணி மாதத்தில் பெண்கள் பின்பற்றும் முக்கியமான பண்டிகை வரலட்சுமி விரதம். மணமான பெண்மணி தலை நோன்பு நோற்பது பிரத்தியேக வைபவமாகும். கலசத்தில் வரலட்சுமியை ஆவாகனம் (அமரச்) செய்து வீட்டின் நடையிலிருந்து அழைத்துவந்து அமர்த்தி கணவனின் நலனைக் கருதி செய்யும் பூசை மாங்கல்யம் உறுதியாக - நிலைத்து இருக்கவும், வீட்டில் எப்போதும் சுபிட்சம் நிலவும் இலட்சுமியின் அருள் வேண்டியும் செய்யப்படும் பூசை இது. இந்த நோன்பு மணமான பெண்களுக்கே உரித்தானது. இல் வாழ்க்கையின் நலனை உத்தேசித்துச் செய்யப்படுகிறது. பூசை செய்தபின் ஆரத்தி எடுத்த பின்பு அக்கலசத்தை அரிசி பானையில் வைப்பதன் பொருள், எப்போதும் வீட்டில் அன்னலட்சுமியின் அனுக்கிரகம் இருக்க வேண்டும் என்பதுதான்.

வரலட்சுமியின் அம்சமாக இருப்பது அன்பு, புகழ், அமைதி, சுகம், வலிமை ஆகியவையாகும்.

மனிதனுக்கு ஆக்கம், அன்பு, செல்வம், இன்ப இல்வாழ்க்கை இவை மகாலட்சுமியின் அருளால் ஏற்படும் என்பார்கள். இப்பூசை மணமான பெண்கள் மட்டுமின்றிக் கன்னிப் பெண்களும் பின்பு ஏற்படவிருக்கும் மனமொத்தக் குடும்ப வாழ்க்கை என்ற பெரும் பலனுக்காகச் செய்கின்றனர். ஆடவர்களும் இந்த நோன்பினை நோற்று நோயற்ற வாழ்க்கையைப் பெறலாம் என்பார்கள்.

நவராத்திரி நோன்பு (கலைத்திருநாள்)

கலையழகை வெளிப்படுத்தும் விழா பொம்மைகளைக் கொலுவாக வைக்கும் நவராத்திரி விழாவாகும். இவ்விழா சக்தியை நோக்கி அனுட்டிக்கப்படும் விரத விழாவும் ஆகும். இவ்விழா புரட்டாசி மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாள் கொண்டாடப் படுகிறது.

மகாச் சங்கார (பேரழிவு) காலத்தின் முடிவில், இறைவன் உலகத்தை உண்டாக்க விரும்பினபோது இச்சை என்ற சக்தியும், அது எவ்வாறு தோன்றியது என்று அறிந்த போது ஞான சக்தியும் தோன்றியது. ''பின் கிரியா சக்தியினால் இறைவன் உலகைப் படைத்தான் என்ற கருத்தே நவராத்திரி விழாவில் விளக்கப்படுகின்றது. (இச்சை= விருப்பம், ஞானம் = அறிவு, கிரியா = செய்தல், ஆக்கல்)."[12] ''நவராத்திரியில் முதல் மூன்று நாள்களும் இச்சா சக்தியின் தோற்றமான துர்க்கையின் ஆட்சிக் காலம். இதில் இறைவன் உலகத்தை வாழ்விக்க விரும்புகின்றான்.

நடுவில் உள்ள மூன்று நாள்களும் ஞான சக்தியின் தோற்றமான இலக்குமியின் ஆட்சிக் காலம். இதில் இறைவன் ஆன்மாக்களுக்குக் கரண, புவன யோகங்களைக் கொடுக்கும் முறையை அறிகின்றான். இறுதி மூன்று நாள்களும் கிரியா சக்தியின் தோற்றமான சரஸ்வதியின் ஆட்சிக் காலம். இதில்

12. . தகவலாளி, சிவலிங்கம் குருக்கள் தந்த தகவல், கிள்ளான் சிலாங்கூர்.

இறைவன் முன் அறிந்தவாறு அருள் வழங்குகின்றான் என்பது சிவாகமத்தின் உள்ளுறையாகும்.

பத்தாம் நாள் விஜயதசமி விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. நவராத்திரியில் துர்க்கா தேவி மகிஷா சூரனுடன் எட்டு நாள்கள் போர் செய்து ஒன்பதாம் நாள் போரின்போது மகிஷா சூரனை வதம் செய்தாள் என்றும் இது நவமியில் நிகழ்ந்ததாகவும் மறுநாள் தசமியில் தேவர்கள் வெற்றியை ஆயுத பூசைசெய்து கொண்டாடியபடியால், விஜயதசமி என்றும் வழங்கலாயிற்று என்று சொல்வது உண்டு. நவராத்திரி விரத காலங்களில் அபிராமி அந்தாதி, துர்க்கா அஷ்டகம், சகலகலாவல்லி மாலை, சரஸ்வதி அந்தாதி, ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம்ம் முதலிய தோத்திரப் பாடல்கள் பாடுவது வழக்கம்."[13]

<u>தீபாவளி</u>

தமிழர்கள் தீபாவளிப் பெருநாளை பெரிய அளவில் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவர். அதிகாலையில் கங்கைக் குளியல் முடித்து புத்தாடை அணிந்து கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்துவிட்டு இல்லம் திரும்புவர். பட்டாசு, மத்தாப்பு கொளுத்தி சிறுவர்களும் பெரியவர்களும் மகிழ்ச்சியை வெளிப்படுத்த இயலாமல் இருக்கின்றனர். மலேசிய அரசாங்கம் இவற்றிற்குத் தடை விதித்துள்ளது. பொது விடுமுறையாதலால் அக்கம் பக்கத்திலுள்ள பிற இன மக்கள் குறிப்பாக சீனர்களும், மலாய்காரர்களும் தீபாவளி வாழ்த்துக் கூற தமிழர் வீடுகளுக்கு வருவார்கள். மலேசிய நாட்டு அரசாங்கத்தில் பங்கு பெற்றுள்ள இந்திய சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் தீபாவளிக்கு திறந்த இல்ல உபசரிப்பு நடத்துவார்கள். உபசரிப்பில் மலாய், சீன சமூகத்தினரும் கலந்து சிறப்பிப்பார்கள். மலேசியாவில் நமது பலகாரங்களுக்கு நல்ல வரவேற்பு உண்டு. குறிப்பாக

13. . தகவலாளி பெயர்: சரவணன் குருக்கள், ஸ்ரீ மகா காளியம்மன் கோவில் பூச்சோங், சிலாங்கூர்.

முறுக்கு, ஓமப்பொடி ஆகியவற்றை உருசித்துச் சாப்பிடுவார்கள். தோசை, இட்லி, இடியாப்பம் விரும்பி உண்பர். இடியாப்பம் மலாய் மொழியில் புட்டுமாயம் என்று அழைப்பர். சீனர்களும் மலாய்க்காரர்களும் இடியாப்பத்தை மிகவும் விரும்பி உண்பர். அவர்களைப் போன்றே தமிழர்களும் நோன்புப் பெருநாளுக்கு மலாய்க்காரர்கள் வீட்டிற்கும், சீனப்புத்தாண்டிற்கு சீனர்கள் வீட்டிற்கும் சென்று வாழ்த்துக் கூறி விருந்துண்பர். இவ்வாறு பல இன மக்களோடு கூடி உறவாடுவதன் மூலம் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு ஒற்றுமையுடன் வாழமுடிகிறது.

கந்த சஷ்டி

கந்த சஷ்டி என்பது முருகப் பெருமான் சூரனை வதம் செய்த பெருமையைச் சைவ சமயத்தவர்கள் கொண்டாடும் விழாவாகும். சஷ்டி என்றால் ஆறு ஆகும். ஐப்பசி மாதம் சுக்கிலபட்ச பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாட்களும் கந்த சஷ்டி காலமாகும். இந்த ஆறு நாள்களையும் சைவ சமயத்தவர்கள் விரத நாள்களாகக் கருதுவர். அதிகாலையில் எழுந்து நீராடி விளக்கேற்றி வழிபாடு செய்வார்கள். பகற் பொழுதில் உண்ணா விரதமிருந்து இரவில் பால், பழம் மட்டும் அருந்தி ஏழாம் நாள் விரதத்தை நிறைவேற்றுவர். பலர் கோயிலுக்குச் சென்று முருகன் புகழ்பாடி குறிப்பாகக் கந்த சஷ்டி பாடலைப்பாடி வேண்டுவார்கள்.

கார்த்திகை தீபம்

தமிழ் நாட்டில் திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் வைத்துச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு, மலேசியாவிலுள்ள முருகன் ஆலயங்கள் மற்றும் சிவாலயங்களில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. கோயில் முழுதும் ஆயிரக்கணக்கான விளக்குகளை ஏற்றி இறைவனின் ஜோதி வடிவை மக்கள் வணங்குவர்.

வைகுண்ட ஏகாதசி

மலேசியாவிலும் மார்கழி மாத வளர்பிறை பதினோராம் நாள் இந்துக்களால் வைகுண்ட ஏகாதசி எனக் கொண்டாடப்படுகிறது. வைணவர்கள் தாம் வழிபடும் திருமாலின் இருப்பிடமாகக் கொள்ளும் வைகுண்டத்தின் கதவுகள் அன்று திறக்கப்படுவதாக நம்புகின்றனர். இந்நாளில் முன்னிரவில் உறங்காது இருந்து திருமாலின் புகழ்பாடி கோயிலுக்குச் செல்வர். விடியற் காலையில் பெருமாள் கோயில்களில் பொதுவாக வட திசையில் என்றும் மூடப்பட்டிருந்து அன்று மட்டுமே திறக்கும் "சொர்க்கவாயில்" என்று அழைக்கப்படும் வாயில் வழியே சென்று இறைவனை வழிபடுவர்.

பாவை நோன்பு

''பாவை நோன்பு என்பது மார்கழி மாதத் திருவாதிரை நட்சத்திரத்திற்கு ஒன்பது நாட்களுக்கு முன் தொடங்கி கடைப்பிடிக்கப்படும் நோன்பு ஆகும். இது வைணவ, சைவக் கோயில்களில் விரதமாக ஏற்று அனுசரிக்கப்பெறுகிறது. வைணவக் கோயில்களில் ஆண்டானை முன்வைத்துத் திருப்பாவைப் பாடல்கள் பாடப்படுகின்றன. சைவக் கோயில்களில் மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை. திருப்பள்ளி எழுச்சி ஆகியன பாடப்படுகின்றன.

இந்நாட்களில் அதிகாலையில் எழுந்து நீராடி சுத்தமான ஆடை அணிந்து கோயிலுக்குச் சென்று நடராஜப் பெருமானைக் கண்டு நடைபெறும் வழிபாட்டில் பங்கு பெறுவர். இந்நோன்பினை பெரும்பாலும் கன்னிப் பெண்களே கடைப்பிடிப்பார்கள். அதிகாலையில் எழுந்து தோழியர்களையும் அழைத்துக் கொண்டு நீராடி கோயிலுக்குச் சென்று மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை 21 பாடல்களையும் பாடி நடராஜப் பெருமானை வழிபடுவார்கள். திருவெம்பாவை பூசைக்குரிய நைவேத்தியமாக பிட்டு படைக்கப்படுகின்றது. இதனால் "பிட்டுப் பூசை" எனவும் அழைக்கப்படுகிறது. திருவெம்பாவை வழிபாட்டிற்குரிய பத்து தினங்களின் இறுதி நாளாகவும் மார்கழி திருவாதிரை அமைகின்றது. சிவனுக்குரிய நட்சத்திரம் திருவாதிரை (ஆருத்திரா - ஆதிரை) ஆகும். இந்நாள் சிவனுக்கு மிகவும் உகந்தது. இதனை

ஒட்டியே சிவபெருமானை ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் கூறுவர். மார்கழி மாதம் திருவாதிரை நாளன்று நடராஜருக்குச் சிறப்பு பூசைகள் நடைபெறும். இதை 'ஆருத்ரா தரிசனம்' என்பர். ஆருத்தரா தரிசனம் காண பக்தர்கள் கோயிலுக்குச் செல்வர். தில்லையிலுள்ள சிதம்பரம் பஞ்ச பூதத் தலங்களில் ஆகாயம் என்றும் நடராஜப் பெருமானை தரிசிக்க முக்தி கிடைப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் காலத்திற்கு முன்பிருந்தே திருவாதிரை நாள் ஆருத்ரா தரிசனம் நடைபெற்று வந்துள்ளது. "[14]

ஊர்திரை வேலை யுலாவு முயாமயிலைக்

கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்

கார்தரு சோலைக் கபாலீச் சரமர்ந்தான்

ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்ற பாடல் மூலம் அறியத் தெரிகின்றது.[15]

<u>தைப்பூசம்</u>

முருகக் கடவுளுக்கு உகந்த நாள் தைப்பூசம் ஆகும். இந்துப் பெருமக்கள் கொண்டாடும் தைப்பூசத் திருநாள் மலேசிய நாட்டில் பிரசித்திப் பெற்றதாகும். தைப்பூசம் கோலாலும்பூருக்கு அருகில் இருக்கும் பத்துமலை, பினாங்கு, தண்ணீர் மலை, ஈப்போ கல்லுமலை ஆகிய பெரிய பட்டணங்களில் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. இலட்சக்கணக்கான பக்தர்கள் இவ்விழாவுக்குப் பெருந்திரளாகக் கூடுவர். முருகன் கோயில்கள் உள்ள மற்ற பட்டணங்களிலும் தைப்பூசம் கொண்டாடப்படும். கோலாலும்பூருக்கு அருகிலிருக்கும் பத்துமலை முருகன் தைப்பூச விழாவிற்கு சுமார் பத்து இலட்சம் பேருக்கு மேல் கூடுவர். தமிழ் நாட்டைப் போலவே மலேசியாவிலும் பன்னீர் காவடி, பூக் காவடி, பால்

[14]. தகவலாளி திருமதி. செல்வவதி தந்த தகவல், கோத்தாதிங்கி, ஜோகூர்

[15]. வி.சா.குருசாமி தேசிகர் (பதிப்பு ஆசிரியர்) இரண்டாம் திருமுறை

காவடி, கரும்புக் காவடி, பக்தர்களின் கற்பனைக்கு ஏற்றவாறு கண்ணைக் கவரும் வகையில் காவடிகள் அலங்கரிக்கப்படும். வேல்! வேல்! என்ற கோஷத்தோடு செல்லும் காவடிகளைப் பார்க்கையில் பக்திப் பரவசம் ஏற்படும்.

இவ்விழாவில் முடிக் காணிக்கை செலுத்திய பக்தர்கள் தலையில் சந்தனம் பூசிக் கொண்டிருப்பர். தற்போது நீண்ட அலகு குத்துதல் ஆலய நிர்வாகத்தால் தடை செய்யப்பட்டுள்ளதால் நீளம் குறைந்த ஏறக் குறைய மூன்றடி நீளமுள்ள அலகுகளைக் குத்திக் கொண்டு செல்கின்றனர். இவ்விழாவின்போது, பால் குடம் எடுப்போர் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். இவ்விழாவில் சீனர்களுள் சிலர் அலகு குத்திக் கொண்டும், காவடி எடுத்தும் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர். மலேசிய நாட்டுக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தைப்பூசத் திருவிழாவைக் காணத் தவறுவதில்லை. தைப்பூசத் திருவிழாவுக்கு சில மாநிலங்களில் பொது விடுமுறை வழங்கப்படுகிறது.

தைப் பொங்கல்

மலேசியாவில் பொங்கல் திருநாளாம் உழவர் திருநாள் தை முதல் நாள் அளவில் தமிழகம் போலவே கொண்டாடப்படுகிறது. தமிழர் தம் வீடுகளிலும் ஆலயங்களிலும் பொங்கல் வைத்து இந்நாளைக் கொண்டாடுகின்றனர். பொங்கல் விழா நாட்டின் பிற இன மக்களிடையேயும் செல்வாக்குடன் கொண்டாடப்படுகிறது.

மகா சிவராத்திரி

மகா சிவராத்திரி இந்துக்களால் கொண்டாடப்படும் சிவனுக்குரிய விரதமாகும். இவ்விழா ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் தேய்பிறை (கிருஷ்ணபட்சம்) சதுர்த்தி திதியில் இரவில் கொண்டாடப்படும். ‘‘சிவராத்திரி விரதம் ஐந்து வகைப்படும். அவை 1.நித்திய சிவராத்திரி, 2.மாத சிவராத்திரி, 3.பட்ச சிராத்திரி, 4.யோக சிவராத்திரி, 5.மகா சிவராத்திரி”[16] என்பனவாகும்.

[16]. தகவலாளி கு. சின்னையா தந்த தகவல், தமான் இண்டா, பூச்சோங்

மாசிமாதம் தேய்பிறை சதுர்த்தியன்று நடைபெறும் மகாசிவராத்திரி பிரத்தியேகமானதாகும். அன்றைய தினம் சிவபெருமானை வழிபட்டால் கவலைகள் அனைத்தும் நீங்கும், காரிய சித்தி ஏற்படும் என்று நம்பப்படுகிறது. "சிவாய நம" என்று சிந்தித்திருந்தால் அபாயம் நமக்கில்லை என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அந்தப் புனிதமான நாளில் விரதமிருந்தால் புண்ணியம் கூடும். பொருளாதார நிலை உயரும். நாள் முழுவதும் ஆறு கால பூசையிலும் கலந்து சிவனை நினைத்து வழிபட்டு சிவாலயங்களில் சிவன் சன்னிதியில் அமர்ந்து சிவன் பெயரை உச்சரித்து வந்தால் ஒரே நாளில் ஓர் ஆண்டிற்கான பலனும் நமக்குக் கிடைக்கும். அதனால்தான் சிவராத்திர் விரதம் சிறந்த பலனைக் கொடுக்கும் எனச் சைவ சமயத்தவர்கள் நம்புகின்றனர்,

<u>பங்குனி உத்திரம்</u>

பங்குனி உத்திரம் என்பது சைவக் கடவுளாகிய முருகனுக்குரிய சிறப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது. தமிழ் மாதங்களில் 12ஆம் மாதம் பங்குனி. நட்சத்திரங்களில் 12ஆம் நட்சத்திரம் உத்தரம். எனவே 12 கை வேலவனுக்கு இந்நாள் சிறப்பான தினமாகக் கொண்டாடப்படுகிறது. முருகன் கோயில்களில் இத்தினத்தில் வருடாந்திர திருவிழாக்கள் நடைபெறும். முருகன் கோயில்களில் பக்தர்கள் கூட்டம் அதிகமாகவே இருக்கும். சில கோயில்களில் முருகனுக்குக் காவடி எடுத்துத் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள்.

<u>திருமுறை ஓதும் விழா</u>

மலேசிய இந்து சங்கத்தின் ஆன்மீகச் செயல்பாடுகளில் ஆண்டுதோறும் நடைபெறும் திருமுறை ஓதும் விழா முக்கியமான ஒன்றாகத் திகழ்கிறது. போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமுறைப் பாடல்களை மனனம் செய்து பண்ணோடு பாட வேண்டும். "சிறுவர் முதல் பெரியோர் வரை நான்கு பிரிவுகளாகப் பிரித்து அந்தந்த பிரிவுக்கான பாடல்கள் நான்கு மாதங்களுக்கு முன்னதாகப் பாடல்களும் ஒலிநாடாவும் கொடுக்கப்படும். போட்டியாளர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பாடல்களை நன்கு பயிற்சி செய்து குறிப்பிட்ட

போட்டி நாளன்று போட்டியாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பிட்டப் பாடல்களில் சிலவற்றைப் பாடக் கேட்டு வெற்றியாளர்களை நீதிபதிகள் தேர்ந்தெடுப்பார்கள். போட்டிகள் முதலில் வட்டார ரீதியில் நடத்தப்பட்டு, வெற்றியாளர்கள் மாநிலத்தில் நடைபெறும் போட்டிக்குத் தகுதி பெறுவர். பின்னர் மாநில வாரியாக நடத்தப்பட்டு வெற்றியாளர்கள் தேசியத்தில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்வர். தேசிய அளவில் நடைபெறும் போட்டியில் வென்றவர்களுக்கு பெரும் மதிப்பிலான பரிசுகள் வழங்கப்படும். திருமுறை ஓதும் போட்டி போன்று பஞ்சபுராணம் ஓதும் போட்டி, நாலாயிரம் திவ்யப் பிரபந்தம், திருப்புகழ். பகவத் கீதை முதலியன ஓதும் போட்டிகளும் நடைபெறும். போட்டியாளர்கள் தங்களுக்கு விருப்பமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து போட்டியில் கலந்து கொள்ளலாம்." [17]

பாடல்கள் ஓதும் போட்டிகளைத் தவிர்த்து ஆன்மீகம் சம்பந்தமான பேச்சுப் போட்டி, புதிர் போட்டி, நன்னெறி போட்டி முதலியன இவ்விழாவில் இடம் பெறும். மேலும் கோலம் போடுதல், பூக்கட்டுதல், மாலை கட்டுதல், தென்னங் குருத்தோலையால் கூந்தல் பின்னுதல் போன்ற தமிழர் கலாச்சார சம்பந்தமான போட்டிகள் நடைபெறும்.

மலேசிய சீனர்களின் விழாக்கள்

சீனர்கள் மலேசிய தங்களின் பாரம்பரிய கிராமிய சமயங்கள், கான்பூசியம், தாவோசியம், ஆகிய சமயங்களைத் தழுவி வருகின்றனர். அதிகமானோர் புத்த சமயத்தவர்களாவர். புத்த மதமும் தாவோ மதமும் கலந்த 'சீன மதமும்' பின்பற்றுகின்றனர். இவர்கள் புத்த சமயம் சார்ந்த விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர்.

---

17. தகவலாளி கு. சின்னையா தந்த தகவல், தமான் இண்டா, பூச்சோங்

விழாக்கள்

சீனப் புத்தாண்டு

சீனர்கள் தமக்குள் பல உட்பிரிவு சார்ந்த சமயத்தவர்களாக இருப்பினும் அனைவரும் சமய வேறுபாடுகளின்றிச் சீனப் புத்தாண்டைக் கொண்டாடுகின்றனர். புத்தாண்டிற்கு முதல்நாள் இரவு உறவினர்கள் ஒன்றிணையும் இரவு விருந்து நடக்கும். வெளியூரிலிருக்கும் எல்லா உறவினர்களும் ஒன்று கூடுவர். இது ஒரு விழாவாக அன்றி ஒன்று கூடுவதற்கு வாக்குறுதியளிக்கும் நாளாக இந்நாளைக் கருதுகிறார்கள். இவ்விருந்து பெரும்பாலும் பெற்றோர் வீட்டில் அல்லது மூத்த உறவினர் வீட்டில் நடைபெறும். விருந்தில் இன்றியமையாததாக மீன்- உணவு சமைக்கப்படும். இதன் காரணமாக வருடம் முழுதும் மிகுந்த வளம் கிடைக்கும் என்று சீனர்கள் எண்ணுகிறார்கள்

“சீனர்கள் சூரியசந்திர நாள்காட்டியைப் (பஞ்சாங்கம்) பின்பற்றித் தங்களின் பாரம்பரிய விழாக்களைக் கணக்கிடுகின்றனர். சூரியசந்திர நாள் காட்டி முறையைச் சீனா, கிழக்காசியா மற்றும் உலகின் இதர நாடுகளிலுள்ள சீனர்கள் பின்பற்றுகின்றனர். தங்களின் வணிகம் மற்றும் இதர அலுவல்களுக்கு உலகளாவிய ஆங்கில நாள்காட்டியைப் பின்பற்றினாலும் அவர்களின் பாரம்பரிய விழாக்களை நிர்ணயம் செய்ய சீன சூரியசந்திர பஞ்சாங்கத்தையே அவர்கள் பின்பற்றுகின்றனர். ஜாதகம் கணித்தல், திருமணம், புதுமனை புகுவிழா முதலியவற்றிற்கு நல்ல நாள்கள், சவ அடக்கம் முதலியவற்றிற்கும் சூரியசந்திர நாள்காட்டியைப் பயன்படுத்துகின்றனர். சீனப் புத்தாண்டு அல்லது வசந்த விழாத் திகதிகள் ஒவ்வோர் ஆண்டும் மாறுபடும். ஜனவரி 21க்கும் பெப்ரவரி 20க்கும் இடையில் அமாவாசையை அடுத்து வரும் புதிய நிலவு தோன்றும் நாளன்று சீனப்புத்தாண்டுத் தொடங்குகிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் பன்னிரண்டு விலங்குகள், பறவைகள் பெயர்களைக் கொண்டிருக்கும். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மறுபடியும் அதே விலங்குகள், பறவைகள் பெயர்கள் சுழற்சிமுறையில் வருகின்றன.

பெரும்பாலான சீன மக்கள் ஜோசியத்தையும் சீனப்புத்தாண்டின் பழைய மூட நம்பிக்கைகளையும் நம்புகின்றனர். புத்தாண்டில் அவர்கள் பழையனவற்றில் திருத்தம் அல்லது மாற்றம் காணுதல், மக்களிடம் பகைமையை நீக்கி நட்பு பாராட்டுதல், பழைய தொடர்பினைப் புதுப்பித்தல், குற்றங்கள் தவிர்த்தல் ஆகிய நற்பண்புகளை மேற்கொள்ள உறுதி கொள்கின்றனர்.

வீட்டைத் தூய்மைப்படுத்துவர். புத்தாடை வாங்கி உடுத்துகின்றனர். முதியோர்களுக்கும் சிறுவர்களுக்கும் பரிசுப் பொருட்கள் அல்லது சிவப்பு உறையில் பணம் வைத்து வழங்குகின்றனர். உலக ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் சீனப்புத்தாண்டு கொண்டாடுகின்றனர். சீனப்புத்தாண்டின் போது உலகின் நான்கு விழுக்காட்டு மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். சீனப்புத்தாண்டின் தொடக்க நாள் நள்ளிரவு பட்டாசு வெடிப்பது பாரம்பரிய வழக்கமாகக் கொண்டுள்ளனர். உலக முழுதும் "டன்" கணக்கான பட்டாசுகள் இந்நிகழ்ச்சி கருதி வெடிக்கப்படுகின்றன."[18]

சீனப்புத்தாண்டைப் பதினைந்து நாள்களுக்குக் கொண்டாடுவர். இந்தப் பதினைந்து நாள்களும் பொருள் பொதிந்த நிலையில் கொண்டாடப் படுகிறது.

<u>முதலாம் நாள்</u>

முதல்நாளில் பெரியோர்களை மதித்து மரியாதை செய்வர். தெருக்களில் பட்டாசு வெடித்து சிங்க நடனம் ஆடுவர். சிறுவர்களுக்கு இனிப்புப் பலகாரமும் அன்பளிப்பாகச் சிவப்பு உறையில் பணம் வைத்தும் வழங்குவர்.

<u>இரண்டாம் நாள்</u>

அதிகாரப்பூர்வமாகச் சீனப்புத்தாண்டு தொடங்குகிறது. இன்று செல்வத்திற்கான கடவுளின் பிறந்த நாளாக் கொண்டு கொண்டாடப்படுகிறது.

---

18. தகவலாளி லீ ஓங்குன் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

மூன்றாம் நாள்

சீனப்புத்தாண்டின் மூன்றாம் நாள் விரும்பத்தக்க நாளன்று. அன்றைய தினத்தில் நண்பர்களையும் உறவினர்களையும் பார்க்கச் செல்ல மாட்டார்கள். பெரும்பாலும் இந்நாளில் சீனர்கள் வீட்டிலேயே இருப்பார்கள். அல்லது கோயிலுக்குச் சென்று தங்களின் நல்வாய்ப்பினை அறிய ஜோதிடம் பார்ப்பார்கள்.

நான்காம் நாள்

இன்னும் பதினொரு நாள்களுக்கு விழா இருந்தாலும் நான்காம் நாளில் அவரவர் தம் தொழிலில் ஈடுபடத் தொடங்குவர். இருப்பினும் தொழிற்கூடங்களில் உள்ள தம் ஊழியர்களுக்கு விருந்து அல்லது சமூக நிகழ்ச்சிகளை நடத்தி ஊழியர்களை மகிழ்விப்பார்கள். இதன் மூலம் தொழிலாளி முதலாளி உறவு மேம்பாடு அடையும், உற்பத்தியும் பெருகும்.

ஐந்தாம் நாள்

இந்நாளில் சீனர்கள் சுவையான சீன உணவு தயாரிப்பதிலும் உண்பதிலும் கவனம் செலுத்துவர். கொழுக்கட்டை போன்ற ஆவியில் வேகவைத்த பலகாரம். இதுவாகும். சீனர்கள் இறைச்சி, காய்கறி மற்றும் வெள்ளம் கலந்த சிவப்புப்பருப்பு மாவு முதலியவற்றை மாவில் வைத்து ஆவியில் வேகவைப்பார்கள். இந்நாளில் மேசையிலுள்ள பீங்கான் தட்டுகளில் இவ்வகை கொழுக்கட்டைகள் நிறைந்திருக்கும். மேலும் இந்நாளில் பட்டாசு வெடித்துக் கொண்டாடுவர். விருந்தினர்களை அழைத்து அவர்களுக்கு விருந்தளித்து மகிழ்வர்.

ஆறாம் நாள்

இந்நாளும் முந்தின நாள் போன்றதே. ஒளிக்கூண்டு குறிப்பாகச் சிறுவர்கள் கையில் ஏந்திச் செல்வர். இம்முறை தற்காலத்தில் அருகி வருகிறது. பட்டாசு வெடித்துக் கொண்டாடுவர்.

ஏழாம் நாள்

ஓர் ஆண்டு வயது கூடுதலாக வளர்ந்து விட்டோம் என்பதை நினைவூட்டும் நாள் இதுவாகும். பௌத்த சீனர்கள் அசைவம் சாப்பிடமாட்டார்கள். ஏனைய சீனச்சமூகத்தினர் கருவாட்டுடன் இலையமுது அல்லது பச்சடி செய்து உண்பர்.

எட்டாம் நாள்

சீனப் புத்தாண்டின் எட்டாம் நாள் பச்சைமணி கல் பேரரசரின் பிறந்த நாளுக்கு முந்தைய நாளாகும். சொர்க்கத்தின் ஆளுநரான இவருக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு, சுவையான மாமிச உணவு சமைத்து விளக்கு ஏற்றுவர். சிறுவர்கள் சிவப்பு நிற கூண்டு விளக்கு ஏந்தி இந்நாளைக் கொண்டாடுவர்.

ஒன்பதாம் நாள்

மலேசியா, சிங்கப்பூரில் வாழும் சீன ஹொக்கியான் சமூகத்தினருக்கு இந்நாள் முக்கியமான நாளாகும். சொர்க்கத்தின் ஆளநரான பச்சை மணி (மரகதக்கல்) கல் பேரரசரின் பிறந்த நாள் இதுவெனக் கொண்டாடப்படுகிறது. இது மிக முக்கிய நாளாகக் கருதப்படுகிறது. இந்நாளில் ஊதுபத்தி கொளுத்தி பிரார்த்தனை செய்வார்கள்.

பத்தாம் நாள்

பத்தாம் நாளில் பச்சைமணி கல் பேரரசர் இருக்கிறார் என்ற மெய்மையை உணர்ந்து படையலிட்டுத் தொடர்ந்து பிரார்த்தனை செய்து வழிபடுவர்.

பதினோராம் நாளும் பன்னிரண்டாம் நாளும்

இவ்விரண்டு நாள்களும் இனிமை தரும் நாட்களாகும். இந்நாட்களில் அதிக நிகழ்வுகள் இரா. ஆனால் சில சீனர்கள் பழைய சம்பிரதாயப்படி விளக்கேற்றலும் கூண்டுவிளக்கு ஏற்றலும் நடைபெறும்.

பதின்மூன்றாம் நாள்

பத்து முதல் பன்னிரண்டு நாள்கள் தொடர்ந்து அசைவம் சாப்பிட்டு வந்தவர்கள் பதின்மூன்றாம் நாள் சைவ உணவு உண்பர். இந்த நாளைப் போர் தேவனுக்காக அர்ப்பணித்துக் கொள்வர்.

பதினான்காம் நாள்

கூண்டு விளக்கு விழாவிற்கு விளக்குத் தயார் செய்வதில் பதினான்காம் நாள் கழியும் இதுவே சீனப்புத்தாண்டின் கடைசி நிகழ்வாகும்.

பதினைந்தாவது நாள்

பதினைந்தாம் நாள் 'அன்பர்கள்' தினம் ஆகும். இது சீனப் புத்தாண்டின் கடைசி தினமுமாகும். வான வேடிக்கை, சீனப் பண்பாட்டு நிகழ்வுகள் மற்றும் 'சாப் கோ மே' நடைபெறும். 'சாப் கோ மே' சிங்க நடனம், கடல்நாக நடனம், கூண்டு விளக்குப் பூசை ஆகியவற்றுடன் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்ந்து முடித்துக் கொள்வார்கள்.

இவ்வாறு சீனப்புத்தாண்டு பதினைந்து நாள்கள் நடத்தப்பெறும் பெருவிழாவாக சீனர்களால் கொண்டாடப்படுகிறது. மற்ற இனத்தவர்களும் இந்நாள்களில் கலந்து கொள்கின்றனர்.

விசாகத் தினம்

சீனச் சமூகத்தினர்களில் புத்த சமயத்தைச் சார்ந்தவர்கள் விசாக தினத்தைக் கொண்டாடுகின்றனர். புத்த பௌர்ணமி தினம், புத்த தினம் என்றும் கூறுவர். மே அல்லது ஜூன் மாதத்தில் வரும் விசாகத் திருநாள், இந்துக்களின் வைகாசி விசாகத் திருநாளும் சில சமயங்களில் ஒரே நாளில் வருவதுண்டு. சீனர்கள் சீனப் புத்தாண்டுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் விசாகத் தினத்திற்குக் கொடுப்பதில்லை. புத்த சமயத்தைப் பின்பற்றுவோர் புத்த ஆலயங்களுக்குச் சென்று மெழுகுவர்த்தி ஏற்றி, தியானம் செய்வர். புத்த சமயப் பாடல்களைப் பாடுவார்கள். கோலாலும்பூர் போன்ற பெரிய தகரங்களில்,

இரவில் புத்தப் பெருமானை இரதத்தில் வைத்து ஊர்வலமாக வருவார்கள். இவ்விழாவில் சீனர்களும் இந்துப் பெருமக்களும் அதிகமாகக் கலந்து கொள்வார்கள். கையில் மெழுகுவர்த்தி ஏந்திச் செல்வர்.

"விசாகத் தினத்தில் பக்தர்கள் புத்தர் சிலையைக் குளிப்பாட்டுவார்கள் (திருமஞ்சனம்). பேறு குறைந்தவர்களுக்கு நன்கொடை வழங்குதல், புலால் உண்ணாதிருத்தல், சைவ உணவு உண்ணல், தியானம் செய்தல், எட்டு குருமார்களை வணங்குதல், உயிர் வாழும் ஜீவராசிகளைக் கொல்லாமை, கள்ளாமை (மது அருந்தாமை), முறையற்ற பேச்சைத் தவிர்த்தல், ஆடம்பரமான படுக்கையைத் தவிர்த்தல் முதலியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்."[19] பக்தர்கள் புத்த சந்நியாசிகளின் உரையைச் செவிமடுப்பார்கள். நூற்றுக் கணக்கான பறவைகளைச் சுதந்திரமாகப் பறக்க விடுவார்கள்.

<u>பசிகொண்ட ஆவித் திருவிழா</u>

பசிப் பேய்த் திருவிழா சந்திர மாதங்களில் வரும் ஏழாவது மாதத்தில் கொண்டாடப்படும். "இக்காலத்தில் கீழ் உலகத்திலுள்ள வாயில்கள் திறக்கப்படும். இவ்வளவு நாள்களும் பேய்களும் ஆவிகளும் அடைக்கப்பட்டு அவை பசியோடு இருந்திருக்கும் ஆதலால் ஆவிகளும் பேய்களும் உலகத்தில் உள்ளோர் படைக்கும் உணவு மற்றும் இதர படைப்புகளுக்காக வருகின்றன என்று நம்புகின்றனர். உலகத்திலுள்ளோர் இறந்தவர்களை மறந்து விட்டதால் அவை பேயாகவும் ஆவியாகவும் கீழ் உலகத்தில் (நரகம்) அமைதியின்றி பட்டினியாக அடைபட்டுக் கிடப்பதாக நம்புகின்றனர். பொதுவாக வீட்டின் முன் சீனர்கள், பெரியதான ஊதுபத்தி, பழங்கள், பலகாரங்கள், உணவு, காகிதத்தால் செய்யப்பட்ட ஊர்திகள், கைப்பேசி, துணிமணிகள், போலி பணம் மற்றும் மனிதர்கள் சொகுசு வாழ்க்கைக்குத் தேவையானவற்றை எல்லாம் (மாதிரி - போலியானவை) படைத்து அவற்றை எரிப்பார்கள். தங்கள் முன்னோர்கள் அவற்றைப் பேய், ஆவி உலகத்தில் பயன்படுத்தி மகிழ்வார்கள் என்பது அவர்கள் நம்பிக்கை. குடியிருப்புப்

19. தகவலாளி லீ ஓங்குன் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

பகுதிகளில் தற்காலிக மேடை அமைத்து நடனம், இசை போன்ற கலை நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். செலவுக்காகும் பணத்தை அங்குக் குடியிருப்போர்கள் தந்து உதவுவார்கள். மேடையின் முன்புறம் போடப்பட்டுள்ள சிவப்பு நாற்காலிகள் பேய்களும் ஆவிகளும் அமர்வதற்காகப் போடப்பட்டிருக்கும். மனிதர்கள் யாராவது உட்கார்ந்தால் கெட்டது நடக்கும் என்றும் உடல் நலம் கெடும் என்றும் நம்புகின்றனர். இவ்விழாவின்போது மக்கள் வெளியிடங்களுக்குச் செல்வதைக் குறைத்துக் கொள்வார்கள்."[20]

சந்திர அனிச்சல் விழா

இலையுதிர் காலத்தில் சந்திர அனிச்சல் விழா கொண்டாடப்படுகிறது. இது சந்திர விழா, அறுவடைச் சந்திர விழா, விளக்கு விழா எனவும் அழைக்கப்படுகிறது. இவ்விழா மலேசியா, சிங்கப்பூர், புரூணை, வியட்னாம், தைவான், சீனா,அங்காங், போன்ற நாடுகளில் கொண்டாடப்படுகிறது. திருவிழாவின்போது ஒன்று கூடுதல், நன்றி செலுத்துதல், வழிபாடு செய்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

சீனர்களின் எட்டாவது சந்திர மாதத்தின் பதினைந்தாம் நாளில் இவ்விழா பாரம்பரியமாக கொண்டாடப்படுகிறது. இலையுதிர் கால மத்தியில் விளைவிக்கப்பட்ட பயிர்களின் அறுவடை மகிழ்ச்சி தருவதாக இருப்பதால் சந்திரனுக்கு நன்றி செலுத்தும் நோக்கில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

"இவ்விழாவின்போது உயரமான கோபுரங்களில் வண்ண விளக்குகளை ஏற்றுவர். சீனர்களின் பாரம்பரியப்படி விளக்கானது கருவுறுதலின் சின்னமாகும். மேலும் விளக்கு பழையன கழிந்து புதியனவற்றை வரவேற்பதாகத் தெரிவிக்கிறது.அலங்காரத்திற்காகவும் ஏற்றப்படுகிறது. சிறுவர்கள் கூண்டு விளக்கு ஏந்திச் செல்வர். இக்கொண்டாட்டத்தில் சிங்க நடனம் மற்றும் டிராகன் நடனம் நடத்தப்படுகிறது. இந்நாளில் கடவுளுக்காகப் போலிப் பணத்தை எரித்தல் நடைபெறும். கொண்டாட்டத்தின்போது கலாச்சார உணவாகச் சந்திர அனிச்சல் விளங்குகிறது. இவ்விழாவின்போது வாத்து,

---

[20]. தகவலாளி லீ ஓங்குன் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

நண்டு, சோற்றுடன் விருந்துண்பர். சந்திர அனிச்சல் இல்லாமல் இவ்விழா முற்றுப் பெறாது."[21]

கிங்மிங் விழா - கல்லறை துப்புரவு நாள்

முன்னோர்களின் கல்லறைகளை துப்பரவு செய்து தூய்மைப்படுத்தும் நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் முதல் வாரத்தில் சீனமக்களால் நடத்தப்படுகிறது. இந்நாளைப் பரிசுத்த பிரகாச நாள் எனவும் அழைப்பர். இறந்த முன்னோர்களின் கல்லறையைச் சுற்றியுள்ள புல், பூண்டுகளைக் களைந்து தூய்மையாக்குவர். சேதமாகியுள்ள கல்லறையைப் பழுதுபார்ப்பதும் நடைபெறுகிறது. முன்னோர்களை மறக்காமல் நினைவு கூர்ந்து அவர்கள் விரும்பி உண்ணும் உணவு மற்றும் திராட்சை ரசம் வைத்துப் படைப்பார்கள். போலிப் பணத்தையும் எரிப்பார்கள். இதனால் அவர்கள் வாழும் கீழ் உலகில் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று நம்புகின்றனர். இப்போது நகரங்களில் தகனம் செய்யப்பட்டு அஸ்தி சாடியில் வைக்கப்பட்டு தகனம் செய்யும் இடத்திலேயே அலமாரியில் வைக்கப்பட்டு அடையாளங்கள் வழங்கப்படுகின்றன. இங்கே துப்புரவு பணிகளுக்கு வேலையில்லை. பூங்கொத்து மட்டும் கொண்டுபோய் வைத்து நினைவு கூறுகின்றனர். எப்படி இருந்தாலும் இறந்தவர்களுக்கு நல்ல மரியாதையும் நல்ல பிரார்த்தனையும் கிடைக்கின்றன.

லாபா விழா - அரிசிக் கஞ்சி விழா

சீனர்களின் 12 ஆவது சந்திர மாதத்தின் எட்டாம் நாளில் வருகிறது இந்த விழா.12 ஆவது சந்திர மாதத்தைச் சீன மொழியில் "லா" என்றும் 12 ஆவது மாதத்தின் எட்டாம் நாளை "பா" என்றும் வழங்கப்படும் நிலையில் இவற்றைச் சேர்த்து இவ்விழாவிற்கு லாபா என்று பெயரிடப்பெற்றுள்ளது.

---

21. தகவலாளி கிம் சூன் மா தந்த தகவல், கோத்தா திங்கி, ஜோகூர்.

அரிசிக் கஞ்சி விழா பற்றி சீனர்களிடையே பாரம்பரியமாக ஒரு கதை கூறப்பட்டு வருகின்றது. பழமை வாய்ந்த இந்தியாவின் வடக்கில் ஆண்ட மன்னரின் மகன் ஒருவன் மக்கள் படும் துன்பத்துக்கு விடை காண அரச வாழ்க்கையைத் துறந்து காட்டில் தவமிருந்து போதி மரத்தடியில் ஞானம் பெற்றார். புத்தமத உண்மையை உணர்ந்தார். அவர் ஞானம் பெற்றது 12 ஆவது சந்திர மாதத்தின் எட்டாம் நாள். காட்டிலிருந்த ஆறு ஆண்டுகளும் அவர் அரிசிக் கஞ்சியை மட்டுமே உணவாகக் கொண்டார் என நம்புகின்றனர். அதன்படி சீனர்கள் ஆண்டுதோறும் குறிப்பிட்ட அந்த நாளில் அவர் நினைவாக அரிசிக் கஞ்சி உண்டால் வாழ்க்கை வளம் பெறும் என்று நம்புகின்றனர்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகச் சீன மக்கள் அரிசிக் கஞ்சி உண்டு வருகின்றனர். தானிய விளைச்சலுக்கு முக்கியத்துவம் தரும் நிலையில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. ஆண்டு முழுதும் கடின உழைப்புக்குப் பின்னர் நல்ல மகசூலைப் பெற்று அரிசிக் கஞ்சியைச் சமைப்பதன் மூலம், சீனர்கள் தங்கள் முன்னோர்களுக்கும் சொர்க்கத்திற்கும் பூமிக்கும் நன்றி பாராட்டுகின்றனர். கஞ்சியில், மாவுப் பசையுள்ள அரிசி, சோளம், சோயா பீன்ஸ், நிலக் கடலை, பாதாம் பருப்பு, தாமரை விதை, இறைச்சி, பல வகையான தானியங்கள் மற்றும் சர்க்கரைக் கலந்து சமைக்கப்படும் இந்தக் கஞ்சி மிகவும் சத்து நிறைந்ததாகும். இந்நாளில் மேற்படி உணவினைக் குடும்பத்தோடும் உறவினர்களோடும் உண்டு மகிழ்வார்கள்.

ஒன்பது பேரரசர் தெய்வங்கள்

ஒன்பது பேரரசர் தெய்வங்களின் விழா ஒன்பதாவது சந்திர மாதத்தின் முதல் தேதியிலிருந்து ஒன்பதாவது தேதி வரை கொண்டாடப்படுகிறது. மலேசியா உட்பட தென்கிழக்காசியா நாடுகளிலுள்ள சீனர்கள் தெய்வங்களைக் கோயிலுக்குள் அழைக்கும் நிகழ்ச்சியோடு இவ்விழா தொடங்குகிறது. இத்தெய்வங்கள் நட்சத்திரங்களில் இருப்பதாக நம்புகின்றனர். ஒன்பது நாள்களும் தெய்வங்களை வழிபடுவார்கள். ஒன்பதாவது நாள் வந்த தெய்வங்களை அனுப்பி வைக்கும் நிகழ்ச்சியோடு முடிவடையும். பினாங்கு

மாநிலத்தில் பட்டர்வொர்த் என்னும் இடத்தில் அமைந்துள்ள தோ பூ கோங் மலேசிய நாட்டிலுள்ள பெரிய கோயில்களில் ஒன்றாகும். ஒன்பது பேரரசர் தெய்வங்களின் கோயில் தாவோ சமய நெறிமுறைகளுக்கு ஏற்ப அமைந்துள்ளது. இவ்விழா தை பூச விழா போன்றதாகும். விழாவின்போது பக்தர்கள் ஒன்பது நாள்களும் சைவ உணவு மட்டுமே உண்பார்கள். பக்தர்கள் பாரம்பரிய வெள்ளை உடை அணிந்து கைகளில் ஊதுவத்தி, மெழுகுவர்த்தி ஆகியவற்றை ஏந்தி ஒன்பது தெய்வங்களின் வருகைக்காகக் காத்திருப்பார்கள். இவ்விழா பின்வரும் நிகழ்வுகள் கொண்டுநடத்தப்படுகிறது.

வரவேற்புச் சடங்கு

முதல்நாள் தெரு ஊர்வலம் கோயிலில் தொடங்கி பக்கத்திலுள்ள ஆறு அல்லது கடற்கரை வரை நடக்கும். அங்குதான் ஒன்பது தெய்வங்களை வரவேற்பார்கள். ஊர்வலத்தில் சிங்க நடனமும் டிரகன் - கடல்நாக நடனமும் இடம் பெறும். "பக்தர்கள் பல்லக்கில் ஒன்பது தெய்வங்களைத் தூக்கி வருவார்கள். மற்ற பக்தர்கள் உயரமான பெரிய ஜாடியில் இறந்தவர்களின் அஸ்தியைக் கொண்டு வருவார்கள். பல்லக்குத் தூக்குபவர்கள் வெள்ளை ஆடை அணிந்திருப்பர். அவர்கள் சற்று முரட்டுத்தனமாக ஊசலாட்டத்துடன் வருவார்கள். இதன் மூலம் ஒன்பதுத் தெய்வங்களும் பிரசன்னமாகி இருப்பதாக நம்புகின்றனர். ஊர்வலத்தில் ஆவியுடன் பேசுபவர் உடன் வருவார். அவர் கெட்ட ஆவிகள் மறைந்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டுவார். அவ்விடங்களைத் தாவோ சமய பூசகர் புனித நீரால் புனிதப்படுத்துவார். ஆற்றங்கரை அல்லது கடற்கரையில் ஊர்வலம் அடைந்தவுடன் பூசகர் மறைந்திருக்கும் ஒன்பது பேரரசர் தெய்வங்களின் ஆவியை வரவேற்பதற்காகப் பக்தர்கள் கொண்டுவந்த அஸ்தி இருக்கும் ஜாடியில் இறங்குமாறு இறைஞ்சுவார். அஸ்தியிருக்கும் ஜாடி நன்றாக எரியுமானால் தெய்வங்கள் வந்து விட்டன என்று பக்தர்கள் மகிழ்வார்கள். சடங்குக்குப் பின் ஜாடிகள் திரும்பவும் கோயிலுக்குக் கொண்டு சென்று மற்றவர் கண்களுக்குப் படாமல் வைப்பார்கள்.பக்தர்கள் கன்னத்திலும் நாக்கிலும் அலகு குத்திக் கொள்வார்கள். சில அலகுகள் ஒன்பது தெய்வங்களின் நினைவாக ஒன்பது மீட்டர்

நீளமுள்ளதாக இருக்கும். இதன்போது தீமிதி நிகழ்ச்சியும் நடக்கும்.[22]" தற்காலத்தில் இந்நிகழ்வு குறைந்து கொண்டு வருகின்றது.

<u>தெய்வங்களைத் திருப்பி அனுப்பும் சடங்கு</u>

விழாவின் உச்சக் கட்டமான ஒன்பது தெய்வங்களைத் திருப்பி அனுப்பும் நிகழ்ச்சியானது ஒன்பதாவது நாள் நடைபெறும். ஒன்பது பேரரசர் தெய்வங்களை அவர்கள் இல்லத்திற்கு அனுப்பி வைக்கத் தெருக்களில் ஊர்வலமாக மறுபடியும் ஆற்றங்கரை அல்லது கடற்கரைக்குச் செல்வார்கள். ஊர்வலத்தில் சிங்க நடனமும் டிரகன் நடனமும் இடம் பெறும். உயரமான தூண்கள் போன்ற கோல்களில் கால்களைக் கட்டிக் கொண்டு நடந்து வருவார்கள். பாரம்பரிய இசை பேரிகை, தாளம் முதலிய இசைக்கருவிகளின் பெருத்த சத்தத்துடன் ஒலிக்கும். பக்தர்கள் பேருந்து, மகிழுந்து, சுமையுந்து மற்றும் வாடகை வண்டிகளில் வருவார்கள். தாவோ பூசகர் ஒன்பது தெய்வங்களையும் அனுப்பி வைக்கும் சடங்குகளைச் செய்வார். எரிந்து கொண்டிருக்கும் அஸ்தி வைத்துள்ள ஜாடியுடன் கோயில் நிர்வாகிகள் நீண்ட மரப் படகில் ஏறி ஆற்றின் நடுப்பகுதிக்குச் செல்வர். இது ஒன்பது தெய்வங்களின் விடைபெறும் நிகழ்ச்சியாக இருக்கும். தெய்வங்கள் விடைபெறும் நிகழ்ச்சியோடு விழா ஒரு முடிவுக்கு வரும்.

ஒன்பது நாட்களும் பக்தர்கள் பூசைக்கான பொருட்களும் பழங்களும் கொண்டு வந்து வழிபட்டு தங்களை ஆசீர்வதிக்குமாறு வேண்டுவார்கள். வரும் பக்தர்களுக்கு மஞ்சள் நிற மெல்லிய மந்திரக் கயிறு கட்டிவிடப்படும். இவ்விழா சீன வைதீகச் சமயத்தவர்களும் தாவோ சமயத்தவர்களும் கொண்டாடுகின்றனர். இவ்விழா எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி நடப்பதில்லை. சிறு சிறு மாற்றங்களுடன் நடைபெறும்.

---

[22]. தகவலாளி லீ வா கூ தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்.

இரட்டை ஏழு (77) திருவிழா

இரட்டை ஏழு திருவிழா சீனர்களின் "அன்பர்கள்" தினம் ஏழாவது சந்திர மாதத்தில் ஏழாம் நாள் கொண்டாடப்படுகிறது. இரண்டு ஏழு எண்கள் இதனுடன் தொடர்பு படுத்தப்பெற்றுள்ளன. மாதம் ஏழு, திகதியும் ஏழு என்ற நிலையில் இரட்டை ஏழு திருவிழா கொண்டாடப்படுகிறது.

இளம் பெண்களுக்கு இது முக்கியமான விழாவாகையால் "இளம் பெண்கள் விழா" என்றும் அழைக்கப்படுகிறது. இளம் பெண்கள் துணி தைப்பதற்கு வலிமையான கைகள் கொடுக்குமாறு "ஃசிநூ" தெய்வத்தை வழிபாடு செய்வார்கள். விழாவின் மற்றொரு நிகழ்ச்சி மாலை நேரத்தில் இளம் பெண்கள் ஆடை அல்லது வேறு ஏதாவது பயன்படுத்தும் அழகான ஒன்றைத் தைத்துப் போட்டியில் பங்கு பெறுதலாகும். பெண்கள் சுவையான பழங்கள், சுவையான உணவு முதலியவற்றைத் தயாரித்து தெய்வத்தை வழிபட்டால் தாங்கள் தையல் துறையில் திறமை பெற்று விளங்கலாம் என்பது நம்பிக்கை. தையல் திறமைக்காக மட்டுமின்றி சிறந்த அன்புக்காகவும் (கணவர் கிடைக்க) வழிபாடு செய்கின்றனர்.

இரட்டை ஒன்பது விழா

இரட்டை ஒன்பது விழாவை சேஷாங்யாங் என்றும் அழைப்பர். இது ஒன்பதாவது சந்திர மாதத்தின் ஒன்பதாம் நாளில் வரும் விழாவாகும். மேலும் முதியவர்கள் விழா என்றும் இது கூறப்படுகிறது. "ஈ ஜிங் புராதன நூலின் ஆவணப்படி எண் 6 "இன்" எனப்படும் எழுத்தாகும். எண் 9 "யாங்" எழுத்தாகும். ஒன்பதாவது சந்திர மாதத்தின் இரண்டு எண்களும் 6 ம் 9 ம் திகதி கொண்ட நாள்கள். ஆகையினால் ஒன்பதாவது சந்திர மாதத்தின் ஒன்பதாவது நாள் இரட்டை ஒன்பது விழா எனப்படுகிறது."[23] பண்டைக் காலத்து சீனர்கள் இரட்டை ஒன்பது விழா கொண்டாடுவது மதிப்புள்ளதெனக் கருதினர்.

23. தகவலாளி மைக்கல் ஓங் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

அன்றைய தினம் முதியோர் பாரம்பரியமாக மலை ஏறுவதால் இதை “சேஷாங்யாங்” விழா என்கின்றனர். இவ்விழாவைச் சாமந்தி விழா எனவும் கூறுவர். அன்று சீனர்கள் சாமந்தி மதுபானம் அருந்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இரட்டை ஒன்பது “என்றென்றும்” என்ற பொருள் கொண்டது. இவ்விழாவின்போது முன்னோர்களையும் வழிபடுவார்கள்.

தொகுப்புரை

மலேசியாவில் பல இன மக்கள் வாழ்கின்றனர். மக்கள் அவரவர் சமயத்தைப் பின்பற்றுவதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. முக்கிய சமயங்களாக இசுலாம் சமயம், கிறிஸ்துவ சமயம், புத்த சமயம், தாவோமற்றும் சீன வைதீக சமயம், இந்து சமயம் முதலியன முக்கிய சமயங்களாக இருந்து வருகின்றன. மக்கள் பெருக்கத்திற்கேற்ப வழிபாட்டுத் தலங்கள் ஆங்காங்கே கட்டப்பட்டுள்ளன. அவரவர் நம்பிக்கைக்கு ஏற்ப இவ்வழிபாட்டுத் தலங்கள் சிறிதும் பெரிதுமாகக் கட்டப்பட்டுள்ளன. வழிபாட்டிற்காக இசுலாமியர் வெள்ளிக் கிழமைகளிலும், கிறிசுதுவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளிலும் இந்துக்கள் வெள்ளிக் கிழமைகளிலும் அதிகமாகச் செல்கின்றனர். மற்ற நாள்களில் குறைந்த எண்ணிக்கையானோர் காணப்படுகின்றனர்.

பண்டிகைகளும் விழாக்களும் அவரவர் சமய நம்பிக்கைப்படி கொண்டாடப்படுகின்றன. கொண்டாட்டங்கள் பிற சமய மக்களோடு சேர்ந்து கொண்டாடப்படுவதை மலேசியாவில் காணலாம். பிற சமய மக்களைத் தங்கள் வீட்டிற்கு விருந்துக்கு அழைத்து நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்கின்றனர். மேலும் தங்களின் பலகாரங்களைக் கொடுத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். மக்களின் சமய புரிந்துணர்வும் மக்களிடையே ஒற்றுமையையும் வளர்க்கின்றது. எடுத்துக் காட்டாகப் பொங்கல் பண்டிகை, பிற இன மக்களுடன் ஒன்றிணைந்து பொங்கல் வைத்துக் கொண்டாடப்படும் நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன.

முக்கிய பண்டிகைகளான நோன்புப் பெருநாள், சீனப்புத்தாண்டு, தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும் விசாகப் பெருநாள்களுக்குப் பொது விடுமுறையாதலால் ஒவ்வொரு பண்டிகையின்போதும் எல்லாச் சமயத்தவர்களும் சேர்ந்து கொண்டாடப்படும் பண்டிகைகளாகத் தோற்றமளிக்கின்றது.

சான்றெண் விளக்கம்

1. கு.சுந்தரமூர்த்தி, சங்க இலக்கியங்களில் சமயநோக்கு, ப. 4
2. மலேசிய அரசு ஆவணம் தரும் தகவல்கள்
3. தகவலாளி கல்சோம் பிந்தி அகமட் தந்த தகவல், சிப்பாங், சிலாங்கூர்.
4. சுவாமி சத்தியானந்தா, மலாயா சரித்திரம், பக் 41-43
5. மலேசிய அரசின் தகவல் இலாகவின் ஆவணங்கள்.
6. மலேசிய அரசுக் கையேடு
7. தகவலாளி சித்தி கல்சோம் தகவல், கோலகிள்ளான்.
8. தகவலாளி ஹசான் பின் இட்ரிஸ் தந்த தகவல், ரெங்கம், ஜோகூர்.
9. தகவலாளி, சிவலிங்கம் குருக்கள் தந்த தகவல், கிள்ளான் சிலாங்கூர்.
10. மேலது
11. திருவள்ளுவர், திருக்குறள்: இல்லற இயல் - 53 ப.59
12. தகவலாளி, சிவலிங்கம் குருக்கள் தந்த தகவல், கிள்ளான் சிலாங்கூர்.
13. தகவலாளி பெயர்: சரவணன் குருக்கள், ஸ்ரீ மகாகாளியம்மன் கோவில் பூச்சோங், சிலாங்கூர்.
14. தகவலாளி திருமதி. செல்வவதி தந்த தகவல், கோத்தாதிங்கி, ஜோகூர்
15. வி.சா.குருசாமி தேசிகர் (பதிப்பு ஆசிரியர்)
    இரண்டாம் திருமுறை ப. 202
16. தகவலாளி கு. சின்னையா தந்த தகவல், தமான் இண்டா, பூச்சோங்
17. மேலது

18. தகவலாளி லீ ஓங்குன் தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

19. மேலது

20. மேலது

21. தகவலாளி கிம் சூன் மா தந்த தகவல், கோத்தா திங்கி, ஜோகூர்.

22. தகவலாளி லீ வா கூ தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்.

23. தகவலாளி மைக்கல் ஓங் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

இயல் 4

மூத்தோர் குல மரபும் நம்பிக்கைகளும்

மக்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவர்களுக்குத் தனிப்பட்ட நாகரிகம், மொழி, கலாச்சாரம், பண்பாடு மற்றும் நம்பிக்கைகள் கொண்டவர்களாக இருக்கின்றனர். இவற்றில் சில கால ஓட்டத்தில் சிறு சிறு மாற்றங்கள் அடைவதுண்டு, சில மறைந்து போவதும் உண்டு. ஆனால் மூத்தோர் குல மரபுகள் பெரும்பாலும் ஒரு தலைமுறையில் இருந்து மற்றத் தலைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றன. சில மரபுகள் புதிய வடிவம் கொள்கின்றன. சில மரபுகள் மறைகின்றன. அவ்வாறே நம்பிக்கைகளும் வழி வழி நம்பப்பட்டு வருகின்றன. நம்பிக்கைகள் சில அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட முடியாத ஒன்றாய் இருந்தாலும் மக்கள் மனத்தில் அவை ஆலமரமாக வேரூன்றி நிலைத்து விடுகின்றன. சில நம்பிக்கைகள் நம்ப முடியாதனவாகவும் நகைப்பை ஏற்படுத்துவனவாகவும் இருக்கின்றன. அவற்றையும் மக்கள் நம்பி வருகின்றனர்.

மரபு என்பது எழுதப்படாத சட்டம். இதனை சமூகம் உள்ள ஒருமைப்பாட்டால் உருவாக்குகிறது. இதுவரையிலும் உருவாக்கப்பட்ட மரபுகள் சமுதாய நலன் கருதி ஏற்பட்டவையே ஆகும். மரபு என்பது வழக்கமாக தலைமுறை தலைமுறையாக பின்பற்றப்படுவது என பொருள்படும். மரபோடு பின்னிப்பிணைந்தது நம்பிக்கை. ஒவ்வொரு சமுதாயமும் தனக்கென சில தனித்த மரபுகளைக் கொண்டுள்ளது. ஒரு சமுதாயத்தின் மரபினை பிரிதொரு சமுதாயத்தின் மரபு கட்டுப்படுத்துவதில்லை. கட்டுப்படுத்தவும் கூடாது. "மரபுகள் சமுதாயம்தோறும் மாறுபடினும் அவை அச்சமுதாயத்தின் சிறப்பியல்புகளை காக்க வல்லவையாக இருப்பதால் மானுட சமுதாயம் இன்றும் அவைகளை போற்றிப் பாதுகாத்து வருகின்றது."[1] என்கிறார் முனைவர் க. காந்தி மலேசியாவில் மூவினத்தவராகிய மலாய், தமிழர், மற்றும் சீனர் ஆகியோர் தங்களுக்கென நம்பிக்கை சார்ந்த நிலைகளில் பிறப்பு முதல் இறப்பு வரை சடங்குகளாய் முன்னிருத்தி வாழ்ந்து வருகின்றனர்.

1. முனைவர் க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.15

மலாய் இனத்தவரின் நம்பிக்கைகள்

மலேசியாவில் இசுலாம் சமயம் 15ஆம் நூற்றாண்டில் பரவத் தொடங்கியது. இதற்கு முன்னால் மலேசியாவில் இந்து, புத்த சமய ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. இங்கு வாழ்ந்த மக்களும் இந்து கலாச்சாரம், பண்பாடு, சடங்கு முறைகள், நம்பிக்கைகள் முதலியவற்றைப் பின்பற்றி வந்தனர். மூத்தோர் குல மரபுகளில் பெரும்பாலும் இப்போதும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

மனித சமுதாயம் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றி வரும் செயல்கள் மரபு எனும் பெயரால் சுட்டப்பெறும். அத்தகு மரபுகளைச் சமுதாய நன்மை கருதி உருவாக்கப்பட்ட எழுதாச் சட்டங்கள் எனலாம். தம் வாழ்க்கை முறைகளில் சில மரபுகளைக் காலங்காலமாகத் தொடர்ந்து பின்பற்றினர். கடவுளின் அனுக்கிரகத்தால் குழந்தை பிறப்பதாக மலாய்க்காரர்கள் நம்புகின்றனர். பிறந்து இரண்டு நாள்களான குழந்தைக்குத் தலையிலிருந்து கால் கட்டை விரல் வரை தேங்காய் எண்ணெய் தடவி மெதுவாக நீவி விடுவார்கள். பிறந்த குழந்தையின் உடல் தளர்ச்சியின்றி இறுக்கமாக இருக்கும் ஆதலால் தடவி, நீவி விடுகின்றனர். குழந்தை நன்றாக உறங்கும் பொருட்டு கை கால்களைச் சேர்த்து மல்லாக்க வைத்து துணியால் சுற்றி வைப்பார்கள்.

தலைமுடி நீக்குதல்

குழந்தை பிறந்த நாற்பத்து நான்காம் நாளுக்குப் பிறகு முதல் முடி நீக்கும் சடங்கு நடைபெறும். நெருங்கிய உறவினர்கள் புடைசூழ இந்தச் சடங்கு மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படும். "நீக்கப்பட்ட தலைமுடியின் எடைக்கு ஈடான பணத்தை நன்கொடையாக வழங்குவர் அல்லது மண்ணில் புதைத்துவிடுவார்கள்."[2]

தொட்டிலில் போடுதல்

வழக்கமாகக் குழந்தையின் முடி நீக்கிய பின்னர் தொட்டிலில் போடுவார்கள். "குழந்தையின் பாட்டி அல்லது மூத்த பெண்மணி ஒருவர் தொட்டிலை ஆட்டி விடுவார்.

2. தகவாளி ஒய் கே லீ தந்த தகவல், பூச்சோங்.

குழந்தைக்குத் தீய சக்திகள் அணுகாமலிருக்கப் புதிதாக வெட்டப்பட்ட சிறிய பச்சைக் கம்பு ஒன்றைத் தொட்டிலில் வைப்பார்கள்."[3]

மிருக பலி கொடுத்தல்

குழந்தை பிறந்த 7, 14, 21ஆம் நாள் அல்லது அதன் பிறகு இந்தச் சடங்கு நடைபெறும். இச்சடங்கு குழந்தை பிறந்ததை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவிப்பதற்காக நடத்தப்படுகிறது. பலி கொடுத்த மிருகத்தைச் சமைத்து விருந்து கொடுப்பார்கள். விருந்தினர்களுக்கு மட்டுமின்றி ஏழை எளியவர்களுக்கும் விருந்து வழங்கி மகிழ்ச்சியில் பங்குபெறச் செய்வர்.

காது குத்துதல்

இது மலாயர்களுக்கும் பாரம்பரிய சடங்காகும். வழக்கமாக ஐந்து அல்லது பத்து வயது பெண்களுக்குக் காதுகுத்தும் சடங்கு நடத்தப்படும். குர்ஆனின் புனித வாசகங்கள் ஓதப்படும். விருந்து நெய்ச் சோற்றுடன் கோழிக்கறி, ஆட்டுக் கறி பரிமாறப்படும்.

சுன்னத்து அல்லது சுன்னா

இசுலாமியர்கள் ஒரு நாளைக்கு ஐந்து வேளைத் தொழ வேண்டும். தொழுகைக்கு முன் சுத்தம் அனுசரிக்கப்பட வேண்டும். முக்கியமாக உடலின் மறைவிடம் சுத்தமாக இருக்க வேண்டும். சிறுநீர் தங்கி நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு. மல சலம் கழித்த பின்னரும் நீரால் சுத்தப்படுத்துவது கட்டாயமாகும். இதற்கு அதிக நேரம் தேவைப்படாது.

"ஒரு சிறுவனுக்கு ஐந்திலிருந்து பத்து வயதுக்குள் சுன்னத்து செய்யத் திகதியை நிச்சயம் செய்து கொள்வார்கள். நெருங்கிய உறவினர்கள், நண்பர்களுக்கு அழைப்பு அனுப்புவார்கள். மலாய்க் கிராமங்களில் முன்பு சில சிறுவர்கள் கொண்ட குழுவினருக்கு ஒரே சமயத்தில் இந்தச் சடங்கைச் செய்து சிறு விழாவாகக் கொண்டாடப்பட்டது. இப்பொழுது சற்று எளிமையாக நடத்தப்படுகிறது. முதல்

3. தகவாளி லீ சின்மோய், தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

நாள் சுன்னத்து செய்து கொள்ளவிருக்கும் சிறுவனை மணமகன் போன்று அலங்கரிப்பார்கள். பட்டாலான பாரம்பரிய மலாய் ஆடையும் இடுப்பில் சிறு கைலி கட்டி குல்லாயும் அணிவித்து ஊர்வலமாக அழைத்துச் செல்வர். இந்தச் சடங்குக்காக பிரத்தியேக சிறுமேடை மணவறை போன்று அமைக்கப்பட்டிருக்கும். இந்நிகழ்வுக்கு முன் நீண்ட வெள்ளைத்துணி, உயிருள்ள ஒரு சேவல், பெரிய ஜாடி நிறையத் தண்ணீர், வெற்றிலைப் பெட்டி அல்லது வெற்றிலை வைத்த தட்டுஇ நீண்ட வாழையிலை, சடங்கு நடத்தும் 'தோக் முடினுக்கு' அவரது சேவைக்காக சிறிதளவு பணம் ஆகியவற்றைத் தயாராக வைத்திருப்பார்கள்.

மறுநாள் அதிகாலையிலேயே சடங்கு தொடங்கும். தோக் என்பவர் இந்தச் சடங்கு செய்வதில் திறமை மிக்கவர். அவர் வந்தவுடன் குர்ஆன் புனித வாசகங்கள் ஓதப்பட்டு சடங்குக்குரிய சிறுவனை, வைத்திருக்கும் ஜாடியிலுள்ள நீரால் குளிப்பாட்டுவார்கள். பின்னர் ஒரு கைலியை(லுங்கி)அணிந்து கொண்டு வந்து. வாழையிலையில் கால்களை அகற்றி அமரச் செய்வர். சுன்னத் எனப்படுவது ஆண் குறியின் முன் தோலை நீக்கும் சடங்கு. இச்சடங்கு மின்னல் வேகத்தில் செய்யப்படும். சேவல் இச்சடங்கில் அவனது எதிர்கால குடும்ப வாழ்க்கையை அவன் விரும்பியோ விரும்பாமலோ ஒன்றுக்கு மேற்பட்ட திருமண நிகழ்வு நடைபெறும் என்று நம்புகின்றனர். தற்காலத்திற்கு இது பொருந்தாது. காயத்துக்கு மருந்து கட்டியதாடு சடங்கு ஒரு முடிவுக்கு வரும். வெற்றிலைத்தட்டில் சேவைக்கான பணம் வைத்து தோக் முடினுக்கு வழங்கப்படும்.''[4] இச்சடங்கு பெரும்பாலும் சமய மற்றும் கலாச்சார ரீதியிலும், சுகாதார நோக்கிலும் செய்யப்படுகின்றன. மலாயர் வாழும் கிராமங்களில் அனுபவம் வாய்ந்தவர்களால் செய்யப்படுகிறது. பட்டணங்களில் உள்ளவர்கள் மருத்துவ மனைகளில் செய்து கொள்கின்றனர். சிலர் இந்நிகழ்வைச் சுமாரான திருமண நிகழ்வு போன்று நடத்துகின்றனர்.

மலாய்க்காரர்களின் ஈமச்சடங்கு

"இசுலாமியர் ஒருவர் இறப்பை நெருங்கிக் கொண்டிருக்கும்பொழுது குடும்ப உறுப்பினர்களும் நெருங்கிய நண்பர்களும் பக்கத்தில் இருந்து நம்பிக்கை ஊட்ட வேண்டும். அவரை அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை என்று கூறத் தூண்ட

4. தகவலாளி கோ வூ சூன் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

வேண்டும். அவர் இறந்த பின்னர் திறந்திருக்கும் கண்களையும் தாடையையும் மூட வேண்டும். சுத்தமான துணியால் உடலை மூடவேண்டும். அங்கு இருப்பவர்கள் இறந்தவர் செய்த பாவங்களை மன்னிக்கும்படி பிரார்த்தனை செய்வார்கள்."[5]

நீராட்டல்

ஒருவர் இறந்துவிட்டால் காலம் தாழ்த்தாமல் இசுலாமிய விதிப்படி அடக்கம் செய்யப்பட வேண்டும். பிரேதத்தைத் தகனம் செய்வதில்லை. இறுதிச் சடங்கு வரை பிரேதத்தை மென்மையாகக் கையாள வேண்டும்.

முதலில் நெருங்கிய உறவினர்கள் சவத்தைக் குளிப்பாட்டி தூய்மைப்படுத்த வேண்டும். இறந்தவர் ஆணாக இருந்தால் ஆண்களும் பெண்ணானால் பெண்கள் மட்டுமே நீராட்டலுக்கு உதவ வேண்டும். தூய்மையைக் கருதி மூன்று முறை நீராட்டல் நடத்த வேண்டும். முதலில் உடலின் வலப் பக்கத்தின் மேல் பகுதியும் அடுத்து உடலின் இடப்பக்கத்தின் மேல் பகுதியும் கழுவ வேண்டும். அவ்வாறே உடலின் கீழ்ப்பகுதியும் கழுவ வேண்டும். தலை முடியையும் நன்கு கழுவ வேண்டும். உடலை நீராட்டிய பின்னர் வெள்ளைத் துணியால் மூட வேண்டும்.

"மூன்று உயர்தர வெள்ளைத் துணி ஒன்றின் மீது ஒன்று விரித்து வைத்து உடலை அந்தத் துணியின் மீது வைக்க வேண்டும். இறந்தவர் பெண்ணாக இருந்தால் அவருக்கு முழுக்கை இல்லாததும், முழங்கால் வரை நீண்டதுமான சிறந்த ஆடை அணிவிக்க வேண்டும். தலைப்பகுதியில் முக்காடும் அணிவிக்க வேண்டும். இறந்தவரின் இடக்கை மார்புமீது வைத்து வலக்கையை இடக்கையின் மீது வைக்க வேண்டும். இப்பொழுது விரிக்கப்பட்டத் துணியால் உடல் மீது மடித்துச் சுற்ற வேண்டும். முதலில் வலப்பக்கமும் பின்னர் இடப் பக்கமும் சுற்றி வைக்க வேண்டும். இவ்வாறே மூன்று வெள்ளைத் துணிகளையும் மடித்துச் சுற்ற வேண்டும். சுற்றப்பட்டத் துணிகள் அவிழ்ந்து விடாமலிருக்கக் கயிற்றினால் கட்டப்படும். தலையின் மேல் ஒரு கட்டும், உடலில் இரண்டு கட்டும், இறுதியாக கால்களுக்குக் கீழே ஒரு கட்டும்

5. தகவலாளி சின் ஈ மோய், தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

கட்டுவார்கள்.”[6] மலர்கள், பூ மாலைகள் போடுவது இசுலாமியர்களின் கலாச்சாரமன்று. பன்னீர் போன்ற வாசனைத் திரவியங்கள் தெளிப்பது உண்டு.

பள்ளிவாசலுக்குக் கொண்டு செல்லல்

சவப் பெட்டி இல்லாத பாடை போன்றுள்ளதில் உடலை வைத்து வண்ணத் துணியால் மூடி அருகிலுள்ள பள்ளிவாசலுக்குக் கொண்டு செல்வார்கள். பள்ளிவாசலின் உள்ளே கொண்டு செல்லாமல் அங்குள்ள தனி அறையில் அல்லது பள்ளிவாசலின் முற்றத்தில் வைத்து மலாய் சமூகத்தினர் கூட்டுப் பிரார்த்தனை செய்வர். பிரார்த்தனைக்குப் பின்னர் பிரேத வண்டி மூலம் இசுலாமிய கொல்லைக்குக் கொண்டு செல்வர். மலாயர் பாரம்பரியப்படி ஆண்கள் மட்டுமே இசுலாமியக் கொல்லைக்குச் செல்வர். பெண்கள் இசுலாமிய கொல்லைக்குச் செல்வதில்லை. இருப்பினும் சில மலாயர் சமூகத்தில் பெண்கள் செல்வதைத் தடுப்பதில்லை.

இசுலாமியக் கொல்லையில் அடக்கம் செய்தல்

இசுலாமிய விதிப்படி தகனம் செய்வது தடுக்கப்படுகிறது. “சவத்தைப் புதைக்க வேண்டும். சவக் குழி செங்குத்தாகத் தோண்டப்படும். பாடையிலிருந்து உடலை வெளியே எடுத்து சவக் குழியில் மென்மையாக வைப்பார்கள். உடல் வலப்பக்கம் ஒருக்கணித்து மெக்கா திசையை நோக்கியவாறு இருக்க வைப்பார்கள். அங்கு உள்ளவர்கள் குர்ஆனின் புனித வாசகங்களை ஓதுவார்கள். இலேசான பலகையை உடலின் மீது வைப்பார்கள். குழியை மூடும்போது நேரடியாக மண் உடல்மீது படாமலிருக்க இவ்வாறு செய்யப்படுகிறது. கையளவு மண் உருண்டைகள் தலை, தாடை மற்றும் தோள் பகுதியில் இறந்தவரின் மூத்த வாரிசு வைப்பார். வந்திருப்போர்களும் கையளவு மண்ணை மூன்றுமுறை போடுவார்கள். இப்பொழுது சவக்குழி முழுமையாக மூடப்படும். பின்னர் வந்திருந்தவர்கள் கூட்டுப் பிரார்த்தனை செய்வர். உறவினர் மலர் தூவி வாசனைத் திரவியங்கள் தெளிப்பார்கள். புதைத்த

6. தகவலாளி லிம் கோ கொக் தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.

இடத்தில் ஒரு கல்லை நடுவார்கள்."[7] நினைவுச் சின்னமாகச் சமாதிக்கு சிறிய அளவில் மண்டபமோ அலங்காரக் கல் கட்டுவதோ தடுக்கப்படுகிறது.. இவை இசுலாமிய விதிமுறைகளுக்கு ஏற்புடையதல்ல.

துக்க காலம்

இறந்தவருக்காக அழாமலிருக்க முடியாது என்றாலும் அலறி, கூச்சலிட்டு சத்தமாக அழுவது தவிர்க்கப்படுகிறது. அன்புக்குரியவர்களின் பிரிவுக்காக அமைதியாக அழுவதைத் தடுப்பதில்லை. "இறந்தவரின் மனைவி நான்கு திங்கள் பத்து நாள்கள் விதவைக் கோலம் பூண்டு இருக்க வேண்டும். மற்றவர்கள் மூன்று நாள்கள் துக்கம் அனுசரிப்பார்கள். இந்த மூன்று நாள்களுக்கும் நெருங்கிய உறவினர்கள் அவர்களுக்கு உணவு வழங்கி ஆறுதலாக இருப்பார்கள். இசுலாமிய விதவை நான்கு திங்கள் பத்து நாள்களுக்கு ஆண்களுடனான அனைத்துத் தொடர்புகளும் நீக்கப்பட வேண்டும்."[8] மருத்துவரைப் பார்க்க வேண்டிய ஆபத்து அவசர வேளைகள் விதிவிலக்காகும்.

பிரேதத்தைப் பாதுகாத்தல்

"பிரேதத்தை நறுமணமூட்டி, தைலம் பூசி சிறிது நாள்களுக்குப் பாதுகாத்தல் தவிர்க்கப் படுகிறது. ஆனாலும் அரசு சட்ட விதிகளின்படி தேவைப்பட்டால் பிரேதம் பாதுகாக்கப்படும்."[9] இறந்தவரின் விருப்பப்படி உடல் அவரின் பிறந்த மண் உள்ள நாட்டில் அடக்கம் செய்வதாயிருந்தால் அந்தந்த நாட்டுச் சட்ட விதிகள் அனுமதித்தால் பிரேதம் பாதுகாக்கப்படும்.

மலாய்க்காரர்களின் பண்பாட்டுக் கூறுகள்

மலாய்க்காரர்கள் வீட்டுக்குள் நுழையும்போதும் பள்ளிவாசல் போன்ற புனித இடங்களுக்குள் செல்லும்போதும் காலணியைக் கழற்றி விட்டு உள்ளே செல்வர். சுத்தம் பேணப்பட வேண்டும் என்பதற்காக இந்த பழக்கத்தைப் பின்பற்றுகின்றனர்.

---

7. தகவலாளி சித்தி கல்சோம் தந்த தகவல், கோலகிள்ளான்.

8 . தகவலாளி கல்சோம் பிந்தி அகமட் தந்த தகவல், சிப்பாங், சிலாங்கூர்.

9. தகவலாளி ஹசான் பின் இட்ரிஸ் தந்த தகவல், ரெங்கம், ஜோகூர்.

இசுலாமிய நாடாகையால் பொது இடங்களில் ஆணும் பெண்ணும் கட்டிப்பிடித்துக் கொள்வது குற்றமாகும். ஆண்கள் மட்டும் சந்தித்துக் கொள்ளும்போது ஒருவரை ஒருவர் கட்டி அணைத்துக் கொள்வர். "மலாய்க்காரர்கள் தங்களுக்கிடையே இசுலாம் முறைப்படி வணக்கம் கூறிக்கொள்வர். ஆண்கள் சந்தித்துக் கொள்ளும்போது கை குலுக்கிக் கொள்வர். ஓர் ஆண் பெண்ணுடன் கை குலுக்காமல் இலேசாகத் தலையை ஆட்டிக் கொள்வார். ஒன்றைச் சுட்டிக் காட்டும்போது ஆள்காட்டி விரலைப் பயன்படுத்தாமல் கட்டை விரலால் சுட்டுவர்."[10] ஆள்காட்டி விரல் விரும்பத்தகாதவற்றைச் சுட்டும்போது பயன்படுத்தப்படுகிறது. ஒருவரைப் பயமுறுத்துவதற்கும் ஆள்காட்டி விரலையே பயன்படுத்துகிறோம். எனவே ஒன்றைச் சுட்டும்போது கட்டை விரலைப் பயன்படுத்தப் படுகிறது.

வெற்றிலை

மலாய்க்காரர்களில் முதியவர்கள் குறிப்பாகப் பெண்கள் வெற்றிலை போடும் பழக்கம் உடையவர்கள். "மலாய்க்கார் வெற்றிலை போடும் பழக்கம் உடையவர். இப்பழக்கம் தமிழரிடம் ஒன்றிக் கலந்த பழக்கமாகும். இப்பழக்கம் தமிழரிடமிருந்து மலாய்க்காரருக்குப் பரவியதா? மலாய்க்கார ரிடமிருந்து தமிழர்க்குப் பரவியதா என்பதில் ஐயப்பாடு நிலவி வருகிறது."[11] இப்பழக்கம் தமிழரிடம் ஒன்றிக் கலந்த பழக்கமாகும். வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்குத் தாம்பூலம் வழங்கி உபசரிப்பவர்கள் தமிழர்கள்.

மலாய்க்காரர்கள் இப்பழக்கத்தைத் தமிழர்களிடமிருந்து கற்றுக் கொண்டார்கள் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை என்பதைத் துணிந்து கூறலாம். தற்சமயம் இந்தப் பழக்கம் மலாயரிடையே மறைந்து வருகிறது.

மலாய்க்காரர்களின் நம்பிக்கைகள்

"1. உட்கார்ந்து இருக்கும்போது காலை ஆட்டக் கூடாது. அப்படிச் செய்யின் கடனாளியாகி விடுவார்கள். முறையாக உட்கார வேண்டும் பக்கத்திலுள்ளவர்கள் மீது கால் படக்கூடாது என்பதற்காகவும் இந்த நம்பிக்கை வலியுறுத்தப்படுகிறது.

10. . முரசு நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், ப. 46

11. மேலது, ப. 49

2. வீட்டினுள் குடையை விரித்தால் பாம்பு வரும்.

3. நடக்கும்போது ஒருவர் கைகளை கால்சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு நடந்தால் அவர் முரட்டுத்தனமான மனிதராக இருப்பார் என்பது மலாய்க்காரர்களின் நம்பிக்கை. மனிதன் எப்போதும் பணிவுள்ளவனாக இருக்க வேண்டும். கால் சட்டைப்பையில் கையை வைத்தக் கொண்டு நடந்தால் செருக்கைக் காட்டுவதுபோலத் தோன்றும். பணிவையும் மரியாதையையும் காட்டாது.

4. சோற்றுப் பானையிலிருந்து சோற்றைக் கையாலெடுத்துச் சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு ஏற்படும். கையில் ஒட்டியிருக்கும் கிருமி பரவி சோறு கெட்டுவிடும். கரண்டியால் எடுத்து உண்கலத்தில் போட்டுச் சாப்பிடுவது சுகாதாரமானது என்று வலியுறுத்துகிறது.

5. நடந்து கொண்டே சாப்பிட்டால் வயிற்றுவலி ஏற்படும். அமர்ந்து சாப்பிட்டால் உணவு எளிதில் ஜீரணமாகும். சுத்தத்தையும் உடல் நலத்தையும் வலியுறுத்துகிறது.

6. அணிந்திருக்கும் ஆடையைத் தைக்கக் கூடாது. தைத்தால் பார்வைக் கோளாறு ஏற்படும். உடலில் ஆடை அணிந்திருக்கும்போது தைத்தால் ஆடை அணிந்திருப்பவருக்குக் காயம் ஏற்படலாம்.

7. தலையணை மீது உட்கார்ந்தால் உடல் வீங்கிவிடும். தலை வைத்துப் படுக்கும் தலையணை மீது உட்கார்ந்து அசுத்தப்படுத்த வேண்டாம். ஆடையிலுள்ள அழுக்கும் கிருமியும் படுக்கும்போது நமது முகத்தில் பட்டுத் தீமை ஏற்படுத்துவதைத் தடுக்க, உடல் வீங்கிவிடும் என்று பொய் கூறினால் அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்ற நம்பிக்கை.

8. உணவுக்குப் பின் உடனே உறங்கினால் வயிறு அடைத்துக் கொள்ளும். உணவு உண்ட உடனே உறங்கினால் சாப்பிட்ட உணவு நன்றாகச் சீரணமாகாது. மறைமுகமாக வயிறு அடைத்துக் கொள்ளும் என்று கூறினால் பயத்தால் அப்படிச் செய்யமாட்டார்கள்.

9. இளைஞர்கள் வெப்பத்தைத் தாங்க முடியவில்லை என்று கூறினால் திருமணம் செய்துகொள்ளவிருக்கும் பெண் அவனை விட்டு விலகி விடுவாள். இப்படிக் கூறினால் ஓர் ஆண் வீரனாக பிரச்சனைகளைத் தீர்க்கும் வல்லவனாக ஆகமாட்டார் என்பது நம்பிக்கை.

10. திருமணத்திற்குப் பெண் கேட்டுச் செல்லும் நேரத்தில் பெண் குளித்துக் கொண்டிருந்தால் அவள் பொறுமைசாலியாகவும் இரக்கமுள்ளவளாகவும் இருப்பாள் என்று நம்புகிறார்கள்.

11. அவள் மாவு அரைத்துக் கொண்டிருந்தால் திருமணத்திற்குப் பின்னர் சீக்கிரமே இறந்து விடுவாள் என்று நம்புகின்றனர்.

12. அவள் துணி உலர்த்திக் கொண்டிருந்தால் நல்ல உழைப்பாளி"[12] என்று கருதப்படும்.

பூர்வீகக்குடிகளான மலாய் இனத்தவரிடையே நம்பிக்கைகள் இருந்து வந்தது என்பதை அறியலாம். அவை வாழ்க்கை மரபுகளான நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், நோன்புகள் ஆகியன இவற்றில் அடங்கும்.

<u>தமிழர்கள்</u>

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டநூலாக சங்க இலக்கியம் திகழ்கிறது. சங்க நூல்கள் பெரும்பாலும் உண்மை நிகழ்வுகளை எடுத்துரைப்பதனால், அக்காலத்தில் நடைபெற்றுள்ள அனைத்து நிகழ்வுகளையும் நம்மால் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. அவ்வகையில் சங்ககால மக்கள் வாழ்வின் எல்லா நிகழ்வுகளிலும் குறிப்பாக பிறப்பு முதல் இறப்பு வரை சடங்கு சம்பிரதாயங்களுடன் பின்னிப் பிணைந்தே வாழ்ந்து வந்துள்ளனர்.

பண்பாடு என்பது அக வளர்ச்சியை அடித்தளமாகக் கொண்டது. நாகரிகம் என்பது புறவளர்ச்சியை பெரிதாகக் கருதும் சமூக செயற்பாட்டை அடித்தளமாகக் கொண்டது. பண்பாடு நாகரீகம் இரண்டையும் ஒன்றென உணர்ந்தாலும் இவற்றிற்கிடையே வேறுபாடு உடையது. பண்பாடு என்பது உள்ளத்து உணர்வை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் நாகரீகம் ஒரு மனிதனின் அல்லது சமூகத்தின் பழக்கவழக்கங்களையும் நம்பிக்கைகளையும் இனம் காண உதவுவது ஆகும். "பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் மக்களின் செயல்பாடுகளையும் உள்ளத்து

---

[12] தகவலாளி அப்துல் ரஹ்மான் பின் ரஷீத் தந்த தகவல், கிரிசெம்பிலான்.

உணர்வுகளையும் அறிவிக்க வல்லன"[13] என்கிறார் முனைவர் க.காந்தி. இந்நிலையில் நம்பிக்கைகளை பல்லின மக்களும் கடைபிடித்து வருகின்றனர்.

தமிழர்கள் வாழ்வில் நம்பிக்கைகளின் வாயிலாகவே தோன்றியிருக்க வேண்டும். சங்க இலக்கியங்களுள் ஒன்றான குறுந்தொகை பழந்தமிழ் மக்களின் பல்வேறு விதமான நம்பிக்கைகளை எடுத்துரைக்கிறது.

இதற்குச் சான்றாக, தெய்வத்தின் அருள் பெற்ற ஒருவர், மற்றொருவரின் சிக்கலுக்குத் தீர்வுகூறும் வகையில் அமைவதே குறிசொல்லலாகும். இவ்வாறு குறிசொல்லும் குறமகள் 'கட்டுவிச்சி' அல்லது 'அகவன் மகள்' என அழைக்கப்பட்டாள்.

"அகவன் மகளே! பாடுக பாட்டே
இன்னும் பாடுக! பாட்டே!" (குறுந். பா.எ.,35)

என்ற வரிகளும் அகவன் மகள் கையில் சிறிய கோல் கொண்டிருப்பாள் என்பதை,"வெண்கடைச் சிறுகோல அகவன் மகளிர்"(பொ.வெ.சோமசுந்தரனார் உரை-குறுந். ப.,445) என்ற வரியின் மூலமும் அறிய முடிகிறது.

மனிதனின் நம்பிக்கை அடிப்படையிலிருந்தே பிறக்கின்றன என்பதை "நம்பிக்கைகள் ஒருவகையில் கருத்துவடிவமாகவும், சடங்குகள் ஒருவகையில் செயல் வடிவமாகவும் விளங்குகின்றன. மனிதனின் நம்பிக்கையானது செயல் வடிவம் பெறுகையில், அது நிகழ்த்தப்படும் சடங்காக மாறுகின்றது"[14]ஆகும். சடங்குகள் மனிதனின் நம்பிக்கை அடிப்படையிலிருந்தே பிறக்கின்றன என்பதை நம்பிக்கைகள் ஒருவகையில் கருத்துவடிவமாகவும், சடங்குகள் ஒருவகையில் செயல் வடிவமாகவும் விளங்குகின்றன. மனிதனின் நம்பிக்கையானது செயல் வடிவம் பெறுகையில், அது நிகழ்த்தப்படும் சடங்காக மாறுகின்றது.

மனிதனின் பிறப்பு முதல் இறப்புவரை பல்வேறு சடங்குகள் இன்றளவும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. தொடக்கக் காலத்தில் இயற்கையிலிருந்து சடங்குகளை உண்டாக்கியமனிதன் பின்பு அவற்றை கடவுள் வழிபாட்டுடன் இணைத்து சமயச் சடங்குகளாகமாற்றிக் கொண்டான். இன்று சடங்குகள் அனைத்தும் சமயச் சார்புடையனவாகவே நிகழ்த்தப்படுகின்றன. தொல்காப்பியம் மற்றும் சங்க

---

13. முனைவர் க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.02

14 . ஆ. சிவசுப்பிரமணியன், மந்திரமும் சடங்குகளும், ப. 47

இலக்கியங்களில் காணலாகும் தமிழர் தம் சடங்குமுறைகள் சமயச் சார்பற்றவை என்பதற்கு அந்நூல்களின் சமயச்சார்பின்மையே சான்றாகிறது. இதனால் தொல்காப்பியக் காலம் மற்றும் சங்ககாலச் சடங்குமுறைகள் வாழ்வியல் நடைமுறைகளாக இருந்தனவேயன்றி அவைசமயக் கொள்கைகளாக இருந்ததில்லை என்பது புலனாகிறது.

தமிழர்களின் நம்பிக்கைகள்

நமது முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த நடைமுறைகள், பழக்கவழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றில் பெரும்பாலானவை சில அடிப்படையிலானவை, மற்றும் சில உண்மையான அறிவியல் சார்ந்தவை. பாரம்பரியம் கூட சமூக நடவடிக்கையாக இருந்தது. எடுத்துக்காட்டாக கிருமிநாசினி பற்றி அதிகம் தெரிந்திராதபோது மாட்டுச் சிறுநீரையும், சாணத்தையும் கிருமிநாசினியாகப் பயன்படுத்தி வருகின்றனர். காரணம் இல்லாமல் காரியம் இல்லை. ஒவ்வொன்றுக்கும் அறிவுப் பூர்வமான ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்கள் இருப்பதை உணரலாம்.

சமூகத்திற்காக ஏற்பட்ட சடங்குகள் அந்தச் சமயத்தில் அதன் உண்மைத் தத்துவம் மேலோங்கி இருந்திருக்கும். பல ஆண்டுகள் பின்பற்றப்பட்டு வரும்பொழுது அந்தச் சடங்கின் மெய்ப்பொருள் மறக்கப்படுகின்றன. பெரும்பாலான தமிழர் இந்து சமய சடங்குகளுக்கும் பாரம்பரிய சடங்குகளுக்கும் பின்னால் அறிவியல் உண்மைகள் இருக்கும். அவற்றை நாம் நமது முன்னோர்களிடமிருந்து பெறப்பட்டவையாகும்.

பண்பாட்டுக் கூறுகள்

"பண்பாடு என்றால் என்பது மக்களால் ஆக்கப்பெற்ற கருவி. மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயல்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மம் ஆகும். இது அந்தந்த சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. தலைமுறை தலைமுறையாக மக்கள் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும் பழக்கவழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும்."[15] தமிழர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டால் வணக்கம் கூறிக் கொள்வர். தற்காலத்தில் இந்த மரபு குறைந்து வருகிறது. மேலை நாகரிகத் தாக்கத்தால் 'ஹலோ'

---

15. பண்பாட்டு மானிடவியல், பக்தவத்சல பாரதி, ப.14

என்று கூறுவது, ஆங்கிலத்தில் வணக்கம் கூறுவது அல்லது இலேசாகத் தலையை ஆட்டுவது போன்ற செய்கைகள் மலிந்து விட்டன. பெரியவர்கள் முன்னால் கடந்து செல்ல வேண்டி இருந்தால் சற்றுக் குனிந்து மன்னிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டே கடந்து செல்வார்கள். பொருட்கள் கொடுத்தல், வாங்குவதற்கு வலக்கையைப் பயன்படுத்துகின்றனர். தமிழர்கள் இடக்கையைப் பயன்படுத்துவதை இழிவாகக் கருதுகின்றனர்.

நூல், நாளிதழ், சஞ்சிகை மற்றும் எத்தகைய எழுத்துக்கள் கொண்டவை யானாலும் காலால் மிதிபடுவது விரும்பத் தக்கதன்று. மிதிபட்டால் படிப்பு வராது, அறிவு மழுங்கும், கல்விக்கரசி சரஸ்வதியையே மிதித்து விட்டாய் என்றெல்லாம் கூறுவார்கள். உண்மையில் மிதிக்கப்பட்டவை மறுபடியும் படிக்க நேரிடுமாகையால் அவற்றை மிதித்துப் பயன்படாமல் செய்யக் கூடாது என்பதற்காகவே மேற்கண்டவாறு இலைமறை காயாகக் கூறுகின்றனர்.

<u>தெய்வ வழிபாட்டில் பின்பற்றப்படும் மரபுகள்</u>

இறைவழிபாடு என்பது தமிழரின் வாழ்வியலோடு ஒன்றியதாகும். தமிழர் வாழ்வியல் இயற்கையோடு இயைந்தது. இதனால் இயற்கையை இறையாக வழிபட்டனர். தாம் வாழ்ந்த நிலப்பகுதிகளை அவற்றின் தன்மைக்கு ஏற்ப ஐந்திணைகளாகப் பகுத்தனர். அந்நிலப்பகுதிக்கேற்ற இறைவழிபாட்டு முறைகளை அமைத்தனர். அவ்வகையில் பாலைநிலத் தெய்வமாக கொற்றவை அமைந்தாள். கொற்றவை தொன்மைத் தெய்வமாக விளங்கியதோடு வீரத் தெய்வமாகவும் விளங்கினாள். தெய்வ வழிபாட்டு முறையினை ஆய்கின்றது.

"நிலத்தெய்வ வழிபாட்டில் பாலை நிலக்கொற்றவை குறிப்பிட்டாலும் அக்கொற்றவையை தமிழர் வழிபட்ட முறையும், தொன்மையும் பல்வேறு இலக்கியங்களில் பரவிக் காணப்படுகிறது. தொன்மையைக் காத்து இயம்பும் தொல்காப்பியத்தில்,

"மறக் கடைக்கூட்டிய துடிநிலை சிறந்த

கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே" (தொல் புறத் -1005)

என்று கொற்றவை நிலை என்ற துறையில் கொற்றவைக்குப் பரவுக்கடன் கொடுக்கும் நிலை கூறப்பட்டது. போருக்குச் செல்வோர் அத்தெய்வத்தை வழிபட்டுச்

செல்லுதலே கொற்றவை நிலை என்று கூறப்பட்டது."[16] என நம்பிக்கை சார்ந்த மரபுகள் கடைபிடிக்கப்படுவது உலகம் முழுவதும் உள்ள தமிழர்களிடம் இருந்து வருகிறது.

தமிழர்களின் தெய்வ வழிபாட்டில் மூத்தோர்களுக்கு செய்யக்கூடியதை அடுத்த தலைமுறையினர் கடமைகளாகக் கருதினர். தமிழ் இலக்கியத்தில் மூத்தோர் வழிபாடு என்பது ஆன்றோர் வணக்கம் எனும் பெயரோடு அறியப்படுகிறது. பழங்கால தமிழ்ச் சமூகத்தில் பின்பற்றப்படும் நடுகல் வழிபாடு என்பது வேறு, மூத்தோர் வழிபாடு என்பது வேறு. மூத்தோர் என்பர் பழந்தமிழ் இலக்கியத்தில் குறிக்கப்படும் தென்புலத்தைச் சார்ந்தவர்களே நமது முன்னோர்கள். இவர்களை பிதிரர் என அழைக்கும் மரபு உண்டு. பிதிரர் ஆகிய முன்னோருக்கு ஆற்றப்படும் சடங்கு பிதிர் கடன் எனப்படும். இது முன்னோரின் நினைவாக அவரது சந்ததியினர் இறந்த முன்னோரது ஆவிக்குச் செய்யும் உண்பித்தலும், வழிபாடும் அடங்கிய ஒன்றாகும். "இறந்து போனவர்களின் ஆன்மாவிற்கு ஆற்றல் அதிகம் எனவும் அது ஆக்க சக்தியாகவும், அழிவு சக்தியாகவும் வெளிப்படும் என்பது சங்கத் தமிழரின் நம்பிக்கையாகும்."[17] என்கிறார் முனைவர் க. காந்தி அவற்றுள்,

மகாளய அமாவாசை

ஒரு நாட்டின் தலைவர் காலமானால் அவரை அடக்கம் செய்வதற்கு முன் 21 மரியாதைக் குண்டுகளை வெடிப்பார்கள். அதன் பிறகு அவரை மறந்து விடுவார்கள். நாட்டின் தலைவர் பதவி ஏற்புக்கு அல்லது அதிகாரப் பூர்வ வருகைக்கு இந்தச் சடங்கு நடத்தப்படுகிறது. 21 குண்டுகள் ஏன் வெடிக்கப்படுகின்றன என்பதற்குத் தகுந்த காரணம் கிடையாது. ஆனால் தமிழர்களில் பிராமண சமூகத்தினர் ஒரு வருடத்தில் 96 முறை தங்களின் இறந்த முன்னோர்களுக்கு மரியாதைச் செய்கின்றனர். மரியாதைக் குண்டு வெடிப்புக்குப் பதில் நீர், எள், தர்ப்பைப் புல் ஆகியவற்றைக் கொண்டு நினைவு கூறுகின்றனர். இப்பொழுது ஒரு வருடத்திற்கு 25 முதல் 30 தடவைகளாகச் சுருக்கித் தர்ப்பணம் செய்யப்படுகிறது.

---

16. சாமி, பி.எல்., சங்க இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, ப. 43

17 . முனைவர் க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.250

"இறந்தவரின் ஆன்மா துன்பம் இன்றி அமைதியாக இருக்கவும் இருப்போர் துன்பமின்றி வாழ்வதற்கும் பல சடங்குகள் உள்ளன. அமாவாசை தோறும் இறந்தவர்களுக்கு கொடுப்பதாகக் கருதி அரிசி, தேங்காய், வாழக்காய், எள்ளு, பழம் முதலியவைகளை ஒரு ஏழைப் பார்ப்பனருக்கே கொடுக்கும் நிகழ்ச்சி சடங்காக நிகழும். தமிழ்நாட்டில் இதைத் திவசம் கொடுத்தல் என்று கூறுவர்."[18] பண்டைத் தமிழ் இலக்கியங்கள் முன்னோர்களின் வாழ்வினை பொதுவாக இந்துக்கள் ஒரு வருடத்திற்குக் குறைந்தது ஒரு முறை அல்லது இரு முறை காலமான உறவினர்களுக்கு மரியாதைச் சடங்கை நடத்துகிறார்கள். இச்சடங்கில் தமிழ் வழியாக,

வான் வழி வந்து இங்கே அமருக.
காற்று எங்களுக்கு மகிழ்ச்சி கொண்டு வரட்டும்.
நதிகள் எங்களுக்கு மகிழ்ச்சி கொண்டு வரட்டும்.
மூலிகைகள் எங்களுக்கு மகிழ்ச்சி தரட்டும்.
இரவு பகல் எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கட்டும்
பூமியிலுள்ள தூசிகள் எங்களுக்கு மகிழ்ச்சி தரட்டும்.
சொர்க்கம் எங்களுக்கு மகிழ்ச்சி தரட்டும்.
மரங்களும் எங்களுக்கு மகிழ்ச்சி தரட்டும்.
சூரியன் மகிழ்ச்சியைக் கொட்டட்டும்.
பசுக்கள் மகிழ்ச்சியைத் கொடுக்கட்டும்.

என்று கூறுகின்றன. இறுதியில் நண்பர்கள், நெருங்கிய மற்றும் தூரத்து உறவினர், பெற்றோர் இல்லாதவர்கள் முதலிய அனைத்து ஆன்மாக்களும் இச் சடங்கின் மூலம் சாந்தி அடையட்டும் என்று கூறப்படுகின்றது. இதைத் தர்ப்பணம் அல்லது சிரார்த்தம் என்பார்கள். பண்டைக் காலத்தில் வேள்வி வளர்த்துச் செய்வார்கள். ஆச்சாரமான இந்துக்கள் இச்சடங்குகளைக் கீழ்க்கண்ட நாள்களில் நடத்துவார்கள்,

12 அமாவாசை நாள்கள்.
12 மாதங்களின் முதல் நாள்
12 அஸ்தக நாள்கள்
16 மகாளய பட்ச நாள்கள்

18. தகவலாளி க. இராமன், தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

14 மன்வதி சிரார்த்த நாள்

4 யுக ஆதி சிரார்த்தம்

26 வியாதிபாதஸ்ரீவைதுர்த்தி-விஸ்கம்பம்

மொத்தம் 96 நாள்கள்

இந்தச் சடங்குகள் இந்தியா மட்டுமின்றி இந்துக்கள் வாழும் எல்லா நாடுகளிலும் கடைப்பிடிக்கின்றனர். மலேசியாவில் உள்ள இந்துக்கள் ஒரு வருடத்தில் ஒரு முறை அல்லது இரு முறை இச்சடங்குகளை நிறைவேற்றுகின்றனர். ''இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த தமிழ்ச் சங்க இலக்கியங்களிலும் முன்னோர்கள் வழிபாடு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்துக்கள் நம்மை விட்டுச் சென்ற நமது முன்னோர்கள் ஆன்மாவாகச் சொர்க்கத்திலிருந்து கொண்டு வாழும் உறவினர்களுக்கு ஆசீர்வதித்து உதவி வருவதாக நம்புகின்றனர். நமது முன்னோர்கள் வழிவழியாகப் பின்பற்றி வந்ததை இன்றைய தலைமுறையினரும் கடைப்பிடித்து வருகின்றனர்.''[19] தமிழர்கள் கடைபிடித்து வரும் நம்பிக்கை சார்ந்த மரபு வழிகளுக்கு தகவலாளி சிவஸ்ரீ அ.ப.முத்துகுமார் சிவாச்சாரியார், அவர்கள் தந்த தகவல் அடுத்த தலைமுறைக்கு அடித்தளம் ஆகும்.

நம்பிக்கை

மனித மனத்தின் விழைவால் நம்பிக்கை தோன்றுகின்றது. நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகவே காணப்படுகின்றன. இயற்கையின் விளைவுகளை உணர இயலாதபோதும், மனித வாழ்வில் நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் மனித மனம் சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கின்றது. அவையே நம்பிக்கைகளாகத் தோற்றம் பெறுகின்றன. இந்த நம்பிக்கைகள் என்றைக்குத் தோன்றின என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூறமுடியாத பழைமை கொண்டனவாகும். எனினும் மனிதன் இயற்கையின் மிகுந்த பாதிப்புக்களுக்கு ஆட்பட்டிருந்த அறிவு வளர்ச்சியின் தொடக்ககாலத்தில் நம்பிக்கைகள் தோன்றியிருக்க வேண்டும்.

---

19. தகவலாளி க. இராமன், தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.

நம்பிக்கை-சொற்பொருள் விளக்கம்

தமிழ்மொழியில் 'ஒன்றின்மேல் நம்பிக்கை வைத்தல்' என்று பொருள் தரும் சொல்லாக 'நம்பிக்கை' என்ற சொல்லாட்சி கையாளப்பட்டு வருகின்றது. தொல்காப்பியத்தில் 'நம்பு' என்ற சொல் 'விருப்பம்' என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. இதனை, "நம்பு மேவு நசையா கும்மே"(தொல்.சொல்.நூ.329) என்ற நூற்பாவால் அறியலாம். இதன் படிநிலை வளர்ச்சியாக 'நம்பு' என்ற சொல் 'நம்பிக்கை' என்ற பொருளில் சங்க இலக்கியத்தில் கையாளப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. நம்பு என்பது நம்பிக்கை வைத்தலைக் குறிக்கின்றது. ஆதலால் ஒன்றன்மேல் 'நம்பிக்கை', 'பற்று', 'விருப்பம்' கொள்ளுதலையே நம்பிக்கை என்று பழந்தமிழர் கருதினர். காலப்போக்கில் இச்சொல் நம்பிக்கையை மட்டும் குறிப்பதற்குப் பயன்பட்டு வந்துள்ளதை இன்றைய நடைமுறைமூலம் காணமுடிகின்றது.

வகைகள்

நம்பிக்கைகள் காரண காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டவையாகும். காரண காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கைகள் என்றும், சான்றுகளின் அடிப்படையிலோ அல்லது காரணகாரியத் தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை என்றும் வகைப்படுத்துவர். "ஒரு சமுதாயத்தின் நம்பிக்கை மற்றொரு சமுதாயத்தின் நோக்கில் மூடநம்பிக்கையாகத் தென்படலாம். அதேபோல் ஒரு சமுதாயத்தின் மூடநம்பிக்கை மற்றொரு சமுதாயத்தின் நம்பிக்கையாகவும் அமையலாம். எனவே நம்பிக்கைகளை வகைப்படுத்தும் முறையில் காரண காரியத் தொடர்போடு நிறுவப்படுவன, நிறுவப்படாதன என இருவகையாகப் பகுத்துக் காண்பதே சிறந்ததாகும். அறிவு வளர்ச்சியின் காரணமாக அன்றைய சமுதாயத்தின் பெரும்பாலான நம்பிக்கைள் இன்று மூட நம்பிக்கைகளாகக் கருதப்படுகின்றன."[20] அதேபோல் மூடநம்பிக்கைகளாகக் கருதப்பட்டவை இன்றைய அறிவியல் ஆய்வின் வாயிலாக நம்பிக்கைகளாகவும் மாறியுள்ளதைக் காணமுடிகின்றது.

[20]. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், முனைவர். க. காந்தி, ப.63

இலக்கண, இலக்கியங்களில் நம்பிக்கைகள்

தொல்காப்பியத்தில் இடம்பெறும் "நாளும் புள்ளும் பிறவற்றினிமித்தமும்" என்ற குறிப்பும், தொல்காப்பியக் களவியலில் காதல்வயப்பட்ட தலைவி, தலைவன் பிரிவுத்துயரால் வாடும் நிலைகண்டு அதனை அறியாத அவளுடைய நற்றாய் இவளது துன்பத்திற்குக் காரணம் தெய்வக் குற்றம் என அஞ்சி "வேலன் வெறியாட்டு"(தொல். பொருள். நூ. 1057) என்னும் வெறியாட்டு முறையினை மேற்கொள்வதும், தீய இராசிகள், தீய நாட்கள் ஆகியவற்றின்கண் தலைவன், தலைவியர் புணர்ச்சி கூடாது என்ற குறிப்பும் தொல்காப்பியர் காலத்து மக்களின் நம்பிக்கைகளை வெளிப்படுத்துகின்றன.

இயற்கையின் அச்சம் தரும் செயல்களே மனிதனைக் கடவுள் நெறிக்கு இட்டுச் சென்றது என்பது மானிடவியல் அறிஞர்களின் கருத்தாகும். மனிதன் தன் ஆற்றல் வரம்புக்குட்பட்டதை உணரத் தொடங்கிய நிலையில் கடவுட்கோட்பாடு உருவாகியது. தன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் முறையே புலப்படாத, உட்படாதவற்றின்மீது அச்சத்தின் காரணமாக மனிதன் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினான்.

1. இறப்புச் சடங்குக்குச் சென்று வந்தால் குளித்தல்

இறப்புச் சடங்குக்குச் சென்ற பின்னர் வீட்டிற்குள் நுழையக் கூடாதுஇ மேலும் நீர் அருந்துவதோ உணவு உண்பதோ கூடாது என்று பெரியோர்கள் கூறுவார்கள். வீட்டிற்கு வெளியே குளித்து அணிந்திருந்த ஆடைகளைத் துவைத்த பின்னரே வீட்டிகுள் நுழைய வேண்டும். ''இறப்பு வீட்டிலிருந்து வியாதிக் கிருமிகள் ஏதேனும் ஆடைகளில் அல்லது உடலில் இருப்பின் அவற்றைத் தடுக்கவே குளித்தல் அல்லது ஆடைகளைத் துவைத்தல் அவசியமாகிறது. வழக்கமாகக் கிராமங்களில் இதைக் கடைப்பிடிக்கிறார்கள்."[21] இறப்பு வீட்டிற்கு மக்கள் அதிகமாகக் கூடியிருப்பதால் தூய்மைக் கேடு அடைந்திருக்கும். இதனால் இறப்பு வீட்டிலும் சில நாள்கள் சமைக்க மாட்டார்கள்.

---

[21]. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், க. காந்தி, ப.63

2. அம்மை நோய் வயப்பட்டோர் வீட்டின் வாசலில் வேப்பிலை

அம்மை நோய் போன்ற தொற்று வியாதி கண்ட நபரின் வீடு, தனிமைப் படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கவே இவ்வாறு செய்யப்படுகின்றது. அதுமட்டுமின்றி வேப்பிலை கிருமி நாசினித் தன்மை கொண்டதாகும்.

3. தமிழ்ப் பெண்கள் நெற்றியில் பொட்டு

மனித உடலில் இரு புருவங்களுக்கிடையில் உள்ள பகுதி, முக்கிய நரம்புகளின் சேர்க்கை மையமாகத் திகழ்கிறது. அவ்விடத்தில் பொட்டு வைப்பதன் மூலம் சக்தி விரயமாவதைத் தடுக்கிறது. ''குங்குமப் பொட்டு உடலின் சக்தியை விரயமாக்காமல் தடுத்து நிறுத்துகிறது. மற்ற உடற் பாகங்களின் சக்தியினை நிலைநிறுத்துகிறது. இரண்டு புருவங்களுக்கிடையில் பொட்டு வைக்கும்போது 'ஆக்ஞயா' சக்கரத்தை அறியாமலேயே அழுத்தப்படுகிறது. இதனால் முகத்திலுள்ள சதைகளுக்கு இரத்த ஓட்டம் மிகுதியாகிறது. உடலின் எல்லாப் பாகங்களும் சக்தி மின் அலைபோல் தூண்டப்படுகிறது.''[22] இப்பொழுது தீமை என அறிந்தும் கடைகளில் காணப்படும் நெகிழி ஒட்டுப் பொட்டுகள் மலேசியாவில் பெண்கள் பெரும்பாலும் பயன்படுத்துகின்றனர். ஆனால் கம்போம் என்று சொல்லக்கூடிய கிராமங்களில் இம்முறை குறைவாக உள்ளது.

4. மங்களகரமான நாள்களில் மருதாணி

திருமணம், விழாக்காலங்கள், விசேஷ காலங்கள் போன்ற நாள்களில் பெண்கள் மருதாணி பூசிக் கொள்கின்றனர். மருதாணி தலைமுடி, கைகள் மற்றும் பாதங்களின் மேல் பகுதிகளில் பூசிக் கொள்வர். ''தற்காலத்தில் கண்ணைக் கவரும் விதவிதமான வடிவமைப்பில் மருதாணி பூசிக் கொள்கின்றனர். குறிப்பாக மழைக் காலம் தொடங்கியவுடன் கை, கால்கள் மற்றும் தலையில் மருதாணி பூசிக் கொள்ள வேண்டும் என்று முன்னோர்கள் கூறிச் சென்றனர். மழைக் காலங்களில் கிருமியால் பீடிக்கப்பட்டு நோய் பரவும் ஆபத்து இருக்கும். மருதாணிக்குப் பூஞ்சை எதிர்ப்பு மற்றும் பாக்டீரியா முதலியன கிருமிகளை எதிர்க்கும் தன்மை கொண்டதாகும். மருதாணியைத் தலையில் பூசிக் கொள்வதால் தலையில் பொடுகு ஏற்படாது. நமது

[22]. ஆ. சிவசுப்பிரமணியன், மந்திரமும் சடங்குகளும், ப. 68

முன்னோர்கள் செய்ததை நாம் கடைப்பிடிக்கிறோம், கடைப்பிடிக்க வேண்டும் என்ற கோட்பாட்டில் மூத்தோர் சொல்லிவிட்டுச் சென்றதை செய்கிறோம்."[23]

5. நாணயங்களை நதிகளில் வீசுதல்

பிரயாணம் செய்யும்போதோ சுற்றுப் பயணத்தின்போதோ சிலர் நீர்நிலைகளில் நாணயங்கள் மற்றவர்கள் வீசுகிறார்கள். பொதுவாக நீர்நிலைகளில் நாணயங்களை வீசினால் நல்வாய்ப்பினைப் பெறலாம் என்பது நம்பிக்கை. செல்வத்திற்கு அதிபதியான இலட்சுமி தேவி நம் வீட்டில் குடியிருப்பாள் என்றும் நம்பப்படுகிறது.

''பழங்காலத்தில் நாணயங்கள் செம்பு உலோகத்தால் செய்யப்பட்டன. நம் உடலுக்குச் செம்பு உலோகம் முக்கியமாகப் பயன்படுகிறது. செம்பு உலோகத்தை நீரில் கலந்து அருந்தினால் உடல் நலத்திற்கு நல்லது. முன் காலத்தில் இப்போது உள்ளது போல் குழாய் நீர் இல்லை. ஆற்று நீரே அனைத்துப் பயன்பாட்டுக்கும். ஆற்றில் போடப்பட்ட செம்பு உலோகம் நீரில் கலக்கப்படுகிறது. மக்கள் அந்த நீரைக் குடிக்க வேண்டியிருக்கிறது. செம்பு உலோகம் நம் உடல் நலத்திற்கு நன்மை தரும் என்பதனை மறைமுகமாக நல்வாய்ப்பு நல்கும் மற்றும் செல்வத்திற்கு அதிபதி இலட்சுமி தேவி நம் வீட்டில் குடியிருப்பாள் என்றெல்லாம் கூறி நதி நீரில் செம்பாலான நாணயத்தை வீசச் செய்தனர்.''[24] இந்த நற்காரியத்தை அனைவரும் பின் பற்ற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானோம்.

6. தோப்புக்கரணம்

முன்பெல்லாம் பள்ளியில் தவறு செய்தால் ஆசிரியர் தோப்புக்கரணம் போடச் சொல்வார். காது மடல்களை வலக்கை இடக்கைகளால் குறுக்காக மாற்றிப் பிடித்துக் கொண்டு கால் முட்டிகள் மடங்க உட்கார்ந்து பிறகு எழும்ப வேண்டும். இதையே பல முறை திரும்பத் திரும்பச் செய்வதே தோப்புக் கரணமாகும். ஆலயத்தில் கணேசப் பெருமானை வணங்கும் போது இதைத் தவறாமல் செய்கிறோம். கணேசப் பெருமானை மகிழ்ச்சியுறச் செய்வதற்காக இப்படிச் செய்யப்படுவதாக நம்பிக்கை.

---

23. தகவலாளி திருமதி. சுப்பம்மாள் தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்.

24. மேலது

"தோப்புக்கரணம் போடுவதால் நமது மூளையின் வல, இடப் பக்க நினைவகக் கலங்களுக்கு இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்கிறது. மன இறுக்கம் குறைகிறது, மனத்திற்கு அமைதி ஏற்படுகிறது, அறிவுக் கூர்மை ஏற்படச் செய்கிறது மற்றும் கற்றல் திறன் ஏற்படுகிறது. அமெரிக்கர்கள் தோப்புக்கரணத்தை மிக உயர்வான மூளை யோகாப்பியாசம் என்கின்றனர்."[25]

7. ஆடி மாதத்தில் திருமணங்கள் தவிர்த்தலும் அனுப்பி வைத்தலும்

பருவக்காற்று மழைக் காலங்களில் எளிதாக நோய் ஏற்பட வாய்ப்பு அதிகமாக இருக்கும். காலநிலை மாற்றம் நோய் வரக் காரணமாகும். பருவ மழைக் காலங்களில் நீரினாலும் காற்றினாலும் நோய்கள் வேகமாகப் பரவும். இதனால்தான் திருமணம், குடும்ப விழாக்கள், சமூகக் கொண்டாட்டங்கள் முதலியன நடத்தப்படுவதில்லை. இந்த நடைமுறை பரம்பரையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. "இந்நவீன காலத்திலும் பாரம்பரியப்படி மக்கள் பின்பற்றப்படுவதை நாம் கவனிக்க வேண்டும். ஆடி மாதம் அமங்கலமான மாதம் என்று நமது முன்னோர்கள் கூறிச் சென்றுள்ளனர். ஆடி மாதத்தில் திருமணம் நடத்தப்படாததற்குரிய உண்மையான காரணம் யாதெனில், ஆடிமாதத்தில் பெண் கருவுற்றால் சித்திரை மாதத்தில் (மே மாத மத்தியில்) குழந்தை பிறக்கும். இம்மாதம் ஆண்டின் மிக வெப்பமான நாள்களாகும். இம்மாதத்தில் குழந்தை பிறந்தால் குழந்தைக்கும் தாய்க்கும் உடல்நலக் குறைவு ஏற்படலாம். இக்காலத்தில் அம்மை, சின்னம்மை போன்ற வியாதிகள் அதிகமாகப் பரவும் காலமாகும். எனவேதான் ஆடி மாதத்தை அமங்கல மாதம் என்கின்றனர் மூத்தோர். இன்னொரு முக்கியக் காரணம், உழவர்கள் அறுவடையில் அதிகக் கவனம் காட்டும் காலமாகும்."[26] மக்கள் ஒருமனதாக விவசாயத்தில் கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். பருவக் காற்று மழையினால் ஆறுகளும் அருவிகளும் நீர் நிறைந்து ஓடும். வேறு நடவடிக்கைகளில் கவனத்தைச் செலுத்தாமல் தங்களின் முக்கிய பணியான விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்.

---

25. . தகவலாளி பெயர்: சரவணன் குருக்கள், ஸ்ரீ மகா காளியம்மன் கோவில் பூச்சோங், சிலாங்கூர்.

26. தகவலாளி திருமதி. காமாட்சி தந்த தகவல், கேர்தாதிங்கி, ஜோகூர்.

8. தலைவிரிக் கோலமாகப் பெண்கள் இருக்கக் கூடாது.

கணவனை இழந்த பெண்களின் கூந்தல் களையப்பட்டது இந்த செய்தி புறநானூற்றின் பல இடங்களில் பதிவாகியுள்ளன. ஆவூர் மூலங்கிழார் என்ற புலவர் பாடிய பாடலில் ஆநிரை மீட்டல் போரில் ஈடுபட்ட தலைவன் தற்பொழுது இறந்து நடுக்கல்லாகிவிட்டான். அழுது தலைமயிரைக் கொண்டு கைம்மை நோன்பை மேற்கொண்டு வருத்தத்துடன் அணிகலன்களை இழந்த அவன் மனைவியைக் போல் அவன் அரண்மனை பொலிவிழந்து காணப்படுகிறது என்று கூறுகிறார்.

"வென்வேல் விடலை இன்மையின் புலம்பிக்
கொய்ம்மழித் தலையொடு மைம்மையுறக் கலக்கிய
கழிகல மகடூஉப் போல
புல்என் றனையால் பல் அணி இழந்தே" (புறம் -261)

இந்நிலையை மறைப்பதற்காக பெண்களிடம் தலைவிரி கோலமாக இருக்கும்போது முடி உதிரும். சமைக்கும்போதும் உணவு பரிமாறும்போதும் தலைமுடி உணவில் கலந்து அருவருப்பை ஏற்படுத்தும். எனவேதான் பெண்கள் தலைவிரி கோலமாக இருக்கக் கூடாது என்கின்றனர்.

9. இரவில் வீடு கூட்டுதல்

பெண்கள் இரவில் வீடு கூட்டுவதைக் கண்டால் நமது பாட்டிமார்கள் உடனே "வீட்டைக் கூட்டாதே சீதேவி போய் மூதேவி வந்துவிடுவாள் என்பார்கள். வீட்டிலுள்ள செல்வம் அனைத்தும் கூட்டி வெளியே தள்ளப்பட்டுவிடும் என்பது அவர்களின் நம்பிக்கை."[27] பாட்டியின் கூற்றில் சற்றேனும் உண்மையில்லை என்பது தெளிவாகும். முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் மின்சாரம் இல்லை. எண்ணெய் விளக்கைப் பயன்படுத்தினர். போதிய வெளிச்சமின்றி மங்கலாக இருந்திருக்கும். விலை மதிப்புள்ள சிறிய ஆபரணங்கள் கண்ணுக்குத் தெரிய வாயப்பில்லை. இரவில் வீடு கூட்டும் பொழுது சிறிய ஆபரணங்களும் குப்பையோடு குப்பையாக வெளியே தள்ளப்படும். இரவில் தள்ளப்பட்டக் குப்பையிலிருக்கும் விலை மதிப்புள்ள நகைகள் மறுநாள் நமக்குக் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. எனவேதான் இரவில் வீடு கூட்டக்கூடாது, 'இலட்சுமி போய் மூதேவி வந்து விடுவாள்' என்று மறைமுகமாகக்

27. மேலது

கூறினர். இன்னொரு உண்மையும் கவனிக்கத்தக்கது. ஒரு குடும்பப் பெண் விளக்கு வைக்கும் வரை விட்டைச் சுத்தம் பண்ணாமல் சோம்பேறியாக இருக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்தப்படுகிறது.

10. மண்வெட்டியைச் சுத்தம் உடல் நலம்

நாள் முழுதும் வேலை செய்த உழவன் சாப்பிட்டுவிட்டு உறங்கச் செல்லும்போது வீட்டிலுள்ள பெரியோர்கள் "வேலைக்குப் பயன்பட்ட மண்வெட்டியைச் சுத்தம் பண்ணிவிட்டு உறங்கச் செல், இல்லாவிட்டால் உடல் அதிகமாக வலிக்கும்"[28] என்பார்கள். உழவர்கள், உடல் நோவுக்குப் பயந்து வேளாண்மைக் கருவிகளைச் சுத்தம் செய்வார்கள். இவர்கள் கூற்று, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போலிருக்கிறது.

வயலில் வேலை செய்த உழவனின் மண்வெட்டியில் சேற்றுமண் ஒட்டிக் காய்ந்திருக்கும். மண்வெட்டியைச் சுத்தம் பண்ணாமல் மறுநாள் வேலை செய்யச் சற்றுக் கடினமாக இருக்கும். வேலைச் சுலபமாக இருக்க ஆயுதங்கள் சுத்தமாக இருக்க வேண்டும் என்று கூறினால் அலட்சியம் காட்டுவார்கள். இதற்காகவே முன்னோர்கள் மறைமுகமாக உடல் வலிக்கும் என்ற பொய்யைக் கூறி ஆயுதங்களைச் சுத்தம் செய்யும்படி செய்கின்றனர்.

11. வீட்டுத் தாழ்ப்பாள்

தாழ்ப்பாளை அடிக்கடி ஆட்டினால் கதவுடன் இணைக்கப்பட்ட தாழ்ப்பாளின் தரம் குறைந்துவிடும். திருடர்கள் எளிதாக வீட்டுக்குள வர ஏதுவாக இருக்கும். நாமே வழி ஏற்படுத்திக் கொடுத்தது போலாகிவிடும். எனவேதான் வீட்டுத் தாழ்ப்பாளை அடிக்கடி லொட்டு லொட்டு என்று ஆட்டக் கூடாது.

12. ஆமை புகுந்த வீடு

ஆமைகளுக்கு இயல்பாகவே திசையறியும் சக்தி இருப்பதால் மீனவர்கள்இ முத்துக் குளிப்பவர்கள் வீட்டில் ஆமையை வளர்த்து வருவார்கள். "தொழிலுக்குச் செல்லும்போது திசையை அறிந்து கொள்ளும் பொருட்டு ஆமையை கொண்டு செல்வார்கள். கடலில் தொழில் செய்பவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை.

28. மேலது

ஆதலால் ஆமை வளர்ப்போர்களுக்குப் பெண் கொடுக்க மாட்டார்கள்."[29] இது ஆமை புகுந்த வீடு விளங்காதென்று ஆகிவிட்டது.

13. நகத்தைக் கடித்தால்

நகத்திலுள்ள கிருமிகள் வாய்வழியாக வயிற்றுக்குள் சென்று பலவித நோய்கள் ஏற்படக் காரணமாகிவிடும். எனவே மறைமுகமாக நகம் கடித்தால் தரித்திரம் என்றனர்.

14. உச்சி வெயிலில் கிணற்றை எட்டிப் பார்க்கக் கூடாது

கிணற்றில் பலவிதமான தீமையை விளைவிக்கும் விஷக்காற்று உற்பத்தியாகும். உச்சி வெயிலில் கிணற்றிலுள்ள காற்று இலேசாகி மேலே வரும். எட்டிப் பார்க்கும்போது அக்காற்றைச் சுவாசித்தால் தீமை ஏற்படும் என்பதற்காகத்தான் உச்சி வெயிலில் கிணற்றை எட்டிப் பார்க்கக் கூடாது என்கின்றனர்.

15. வீட்டில் புறா

புறா வளர்த்தால் குடும்பம் அழிந்து விடும் எற்று பாட்டிமார்கள் கூறுவார்கள். . புறா கழிவுகளின் துர்நாற்றம் பாம்புகளை ஈர்க்கும் தன்மை உடையது. எனவே புறாவைத் தேடி விஷப் பாம்புகள் வரும் வாய்ப்பு உள்ளது. எனவேதான் பூடகமாகப் புறா வளர்த்தால் குடும்பம் அழிந்து விடும் என்றனர்.

16. வீட்டை விட்டுச் செல்லும்போது சகுனம் பார்த்தல்.

பிரயாணத்தைத் தொடங்குவதற்கு முன் சகுனம் பார்த்துப் பின்னர் பிரயாணத்தைத் தொடங்குவது தமிழர்களிடையே தொண்டு தொட்டு இருந்துவரும் வழக்கமாகும். சகுனம் பார்த்துச் சென்றால் அப்பிரயாணம் தடையின்றி வெற்றிகரமாக முடியும் என்பது நம்பிக்கை.

"நல்ல சகுனங்களாக இருப்பவை குடம் நிறையத் தண்ணீர், சுமங்கலிப் பெண், ஒரு நாய், ஓர் அணில், வழியில் பசு குறுக்கே செல்லுதல், கருடன் வானில் பறத்தல், பால், தேன், சலவைத் தொழிலாளி அழுக்கு மூட்டையுடன் செல்லல், குதிரையைக் காணல் மற்றும் ஆலய மணிச் சத்தம். மேற்கண்டவை யாவும் நல்ல சகுனங்களாகக் கருதப்படுகிறது."[30] பிரயாணம் செய்யவிருப்பவர் மேற்கூறப்பட்ட ஏதாவது ஒன்றினைக் கண்டாலும் காரியம் வெற்றிகரமாக முடியும் என நம்பப்படுகிறது.

---

[29]. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், முனைவர். க. காந்தி, ப.58

[30].சுந்தர மூர்த்தி இ., பழந்தமிழ் இலக்கியத்தில் நிமித்தங்கள், ப. 22

17. வாசலில் முருங்கை மரம்

மரங்களில் மென்மையானது முருங்கை மரம். பலமான காற்றில் இலகுவில் ஒடிந்து விழ வாய்ப்பு உண்டு. சிறுவர்களும் ஏறிக் கிளை முறிந்து விபத்து ஏற்படலாம் என்ற உண்மையை மறைமுகமாக வீட்டு வாசலுக்கு முன் முருங்கை மரம் நட்டால் வீட்டிற்கு ஆகாது என்றனர்.

18. வடக்கே தலை வைத்தப் படுத்தல்

பூமியின் காந்த சக்தியானது வடதுருவத்தை நோக்கியிருக்கும். வடதிசையை நோக்கிப் படுக்கும்போது அதன் ஈர்ப்பு சக்தி நமது தலையையும் மூளையையும் தாக்குகிறது. உடல் ஆரோக்கியம் குறைந்து மனநலம் குறையும்.

19.வாழையிலை விருந்து

வாழையிலையில் பினாலிக் என்னும் இயற்கைச் சக்தி உள்ளது. அதனால் தொடர்ந்து வாழையிலையில் சாப்பிடுகிறவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கொண்டு ஆரோக்கியமாக இருக்கலாம்.இதைத் தமிழர்கள் கண்டறிந்து காலங் காலமாக கடைப்பிடித்து வந்திருக்கின்றனர்.

"வாழை மரத்தில் அடி முதல் நுனி வரை அனைத்துமே நமது வாழ்வியலோடு கலந்த பயன்பாடுகள். உணவுச் சங்கிலியில் முதல் உணவே இலைதான். எல்லாத் தாவரங்களும் இலைகளை உடையவையே. இலையில் உள்ள பச்சையம் சூரிய ஆற்றலை உள்வாங்கி அதை உயிர் ஆற்றலாகவும் உணவாகவும் மாற்றுகிறது. வாழை இலையில் உள்ள பாலிபினால் செல்களில் உள்ள டி.என்.ஏ வை கதிர் வீச்சுகளில் இருந்து பாதுகாக்கிறது. சூடான சாப்பாட்டை இலையில் பரிமாறும் போது அந்த இலை லேசாக வெந்து இலையின் பச்சையத்தில் உள்ள பாலிபினால் சாப்பாடோடு கலக்கும். இதன் மூலம் விட்டமின் ஏ, சிட்ரிக் அமிலம், கால்சியம் மற்றும் கரோட்டின் ஆகியவை நம் உடலுக்கு கிடைக்கின்றன."[31]

மூட நம்பிக்கைகள் என்று கருதும் நம்பிக்கைகளுக்குப் பின்னால் நமது முன்னோர்கள் கண்டறிந்த வாழ்வியலும் அறிவியலும் மறைந்திருப்பதை நாம் உணர வேண்டும்.

---

31. அ.கா. பெருமாள், உணவு பொருட்கள், ப. 115

20. செம்பு, வெள்ளிப் பாத்திரங்களில் அருந்துதல்

செம்பு மற்றும் வெள்ளிப் பாத்திரங்களில் தண்ணீர் ஊற்றி சிறிது நேரம் கழித்தோ அல்லது சமைத்து சாப்பிடுவதால் உடம்புக்கு ஆரோக்கியம் மிகும். குறிப்பாக 'செம்பு பாத்திரத்தை விளக்கி செடிக்கு அடியில் ஊற்று' என்னும் பழமொழி தமிழர்களிடம் பரவி இருக்கிறது. இதனுடை பொருள் செம்புப் பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ள நீரை செடிகளுக்கு ஊற்றுவதால் அதை உறிஞ்சி அவற்றின் வழியாக பெறப்படுகின்ற காய்கறிகள், கீரைகள் அதனுடைய சத்தினை மிகுதியாகக் கொண்டு விளங்கும் என்பது பொருளாகும். ஆனால், இதை நேரடியாகவே மனிதன் பயன்படுத்துகின்ற பொழுது அதனுடைய ஊட்டச்சத்தினை முழுமையாகப் பெற தமிழர்கள் வழிவகை செய்தனர். இது மலேசியத் தமிழர்களிடம் பெரும்பாலும் வழக்கத்தில் இருந்து வருகிறது.

நம் வீடுகளுக்கு வரும் விருந்தினர்களுக்குத் தண்ணீர் மற்றும் பானங்களை அருந்தக் கொடுக்கும் பொழுது விலை மதிப்பிலான பாத்திரத்தில் பானம் வழங்கப்படுவதாக எண்ணி பெருமை கொண்டு மகிழ்வார்கள். ஆனால் உலோகம் கிருமிநாசினியாகும். விருந்தினர் ஒருவேளை தொற்றுநோய்க் கிருமிகளைக் கொண்டு வந்திருந்தால் உலோகத்தாலான பாத்திரம் கிருமி நாசினியாக இருந்து நோய்க் கிருமிகளைத் தடுத்துவிடும். எனவேதான் பண்டைக்காலத்திலிருந்து இன்றுவரை மூத்தோர் பினபற்றிவந்த பாரம்பரிய மரபுகளைப் பின்பற்றி வருகிறோம்.

22. அரச மரத்தடியில் தியானம் செய்தல்

"திருமூலர் அரச மரத்தடியில் தியானம் செய்து திருமந்திரம் 3000 பாடல்களுக்கு மேல் எழுதினார். கௌதமபுத்தர் அரச மரத்தடியில் தியானம் செய்து ஞானம் பெற்றார். சித்தர்களில் பெரும்பாலோர் அரச மரத்தடியில்தான் ஞானம் பெற்று அரிய நூல்களை எழுதினர். தமிழ் இந்துப் பெண்கள் அரச மரத்தடியில் பிரதிஷ்டை செய்துள்ள கணேசப் பெருமானையும் மற்ற தெய்வங்களையும் வணங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். பிள்ளைப் பேற்றுக்காகப் பெண்கள் அரச மரத்தைச் சுற்றி வருகின்றனர்.

அரச மரத்தில் அதிக மருத்துவ குணங்கள் உண்டு என்று அறிவியல் ஆய்வாளர்கள் அறிவுப்பூர்வமாகக் கூறுகின்றனர்."[32] பல ஆய்வாளர்கள் தமிழ் முன்னோ வழி வந்தவர்கள் என்றும் கூறுகின்றனர். அக்காலத்தில் வாழ்ந்த பெண்கள் பிள்ளைப் பேற்றுக்காகவும் தாங்கள் விரும்பியதை அடைவதற்காகவும் அரச மரத்தைச் சுற்றி வந்தனர் என்று கூறப்படுகிறது. தூய்மைக் கேட்டுக்கு மாற்று மருந்தாகக் குறிப்பாக நீர் தூய்மைக் கேடு, காற்றுத் தூய்மைக் கேடு மற்றும் ஒலித் தூய்மைக் கேட்டைத் தடுப்பதாக நம்பப்படுகிறது. அரச மரத்தின் அனைத்துப் பாகங்களும் மருத்துகவ குணம் கொண்டதால் தான் சாதாரண குடிமகன் முதல் யோகிகள் வரை அனைவரும் அரச மரத்தினைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

22. தை அமாவாசை

தலைமுறைகள் செழிக்க முன்னோர்களை வழிபடுதல் தை அமாவாசை தினமாகும். பூலோகம் வந்த முன்னோர்கள் மீண்டும் பிதுர்லோகம் செல்லும் தை அமாவாசை நாளில் புனித நீராடி அவர்களுக்கு எள்ளும் நீரும் அளித்தால் மிகுந்த பலன்களும் தலைமுறைக்குப் புண்ணியமும் வந்து சேரும் என்று புராணங்கள் கூறுகின்றன. பூமியில் பிறந்தவர்கள் பாவ புண்ணியத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். பாவங்களில் பித்ரு கர்மாவை நிறைவேற்றாமல் இருப்பது மிகப் பெரிய பாவம் எனச் சொல்லப்படுகிறது. உயிருடன் இருக்கும்போது பெற்றோர்களை, பெரியோர்களை மதிக்காமல் கவனிக்கத் தவறியவர்களை பாவங்கள் பீடிக்கும். இறந்த பின்னர் நம்முடன் வருவது பாவ புண்ணியங்கள் மட்டுமே. நம் முன்னோர்களுக்கு மறவாமல் காரியம் நிறைவேற்ற வேண்டும்.

சூரியன் தெற்கே நகர்ந்தவுடன் வரும் அமாவாசையை ஆடி அமாவாசை என்றும் வடக்கே நகர்ந்தவுடன் தை அமாவாசை என்றும் அழைப்பர். ஆன்மீக முன்னேற்றத்திற்கு முன்னோர்களை வழிபடுவது நன்மையைத் தரும். மனத்திற்குத் தெம்பு, மனோபலம், உடல் பலம் ஆகியவற்றைக் கொடுக்கும். ஆகையால் ஆரோக்கியமான வாழ்வுக்குத் தை அமாவாசையில் முன்னோர்களை வழிபட வேண்டும். "தென்புலத்தார் எனப்படும் முன்னோர்களின் திசை தெற்கு. எனவேதான்

32. முனைவர் தி. மகாலெட்சுமி, திருமந்திரமும் தியானமும், ப.11

தென் திசையில் மயானம் அமைக்கிறார்கள். சூரியனின் தென்திசை பயண காலத்தின் ஆடி அமாவாசையன்று பிதுர்கள்(முன்னோர்கள் பூமிக்கு வரத் தொடங்குகின்றனர்.

புரட்டாசி மாத அமாவாசை (மகாளாய அமாவாசை) ஒன்று கூடுகின்றனர். முன்னோர்களை வழி அனுப்பும் நாள் தை அமாவாசை நாள். அன்று மீண்டும் பிதுர்லோகம் திரும்புகின்றனர். ஆடி அமாவாசைநாள் முன்னோர்களை வரவேற்கும் நாள். தை அமாவாசையன்று விடை கொடுத்து அனுப்பும் நாள் வருடத்தின் 12 அமாவாசைகளும் முன்னோர்களுக்குத் திதி கொடுக்க முடியாத சூழ்நிலையில் இந்த மூன்று அமாவாசைகளிலாவது திதி கொடுக்க முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. முன்னோர்கள் பெரிதாக எதையும் எதிர்பார்க்கவில்லை. எள்ளும் நீரும் போதுமானது. திதி கொடுப்பதால் முன்னோர்களின் பாவமும் நம்முடைய பாவமும் தீரும் என நம்பப்படுகிறது. அன்றைய தினம் அன்னதானம், ஆடை, அரிசி, காய்கறி தானம் செய்ய வேண்டும். இதனால் நமக்குச் செல்வச் செழிப்பு உண்டாகும் என்பது நம்பிக்கை. கடல் சார்ந்த புனிதத் தலங்களில் மறைந்த நம் முன்னோர்களுக்குக்த் திதி கொடுத்து புனித நீராடி வழிபடுவது சிறப்பாகும்."[33]

23. உணவுக்குப் பின்னர் உடனடியாகக் குளிக்கக் கூடாது.

உணவு உண்ட பின் உடனடியாகக் குளிக்கக்கூடாது என்று பெரியவர்கள் கூறுகின்றனர். அவ்வை மூதாட்டியும் , "கூழானாலும் குளித்துக் குடி" என்கிறார். உணவு சீரணமாவதை தாமதப்படுத்துவதால் உணவுக்குப் பின் உடனடியாகக் குளிக்க வேண்டாம் என்கின்றனர். நமது உடலிலுள்ள சில இரசாயன பொருள்களைக் குளிர்ந்த நீர் துரிதமாகச் செயல்படுத்தச் செய்கிறது. இரத்த ஓட்டம் விரைவாக உடலின் தோல் பகுதிகளுக்குச் சென்று அப்பகுதிகளை வெப்பமாக்குகிறது. இதனால் சீரணம் தாமதமாகிறது. எனவே தான் நமது முன்னோர்கள் குளித்த பின் சாப்பிடச் சொல்லுகிறார்கள். குளியல் கை கால்கள், உடல் பகுதிகளுக்கு இரத்தம் அதிகமாகச் செல்ல உதவுகிறது. வயிற்றுப் பகுதிக்கு இரத்தம் குறைகிறது. இதன் காரணமாக வயிற்றில் சீரணம் மெதுவாகிறது.

33. தகவலாளி முருகையா தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்

24. இனிப்புச் சுவை உணவை இறுதியில் உண்ண வேண்டும்.

இனிப்புச் சுவையுள்ள உணவைத் தவிர்த்து மற்ற சுவை உணவை முதலில் தொடங்கி இறுதியாக இனிப்புச் சுவை உணவை உண்ண முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனெனில் இனிப்பைத் தவிர்த்த மற்ற சுவை உணவுகள் கணையத்தில் இரசாயனம் மற்றும் அமிலம் சுரந்து சீரணத்தை எளிதாக்குகிறது. ஆனால் மாவுச் சத்து மற்றும் இனிப்பு உணவுகள் சீரண செயல்முறையைக் குறைக்கிறது. எனவேதான் இனிப்பு உணவு கடைசியில் சாப்பிடும்படி கூறப்படுகிறது.

25. அதிகாலையில் எழுந்திருத்தல் அவசியம்

இரவில் சீக்கிரம் படுத்து அதிகாலையில் சீக்கிரம் கண் விழித்தால் ஒருமனிதனுக்கு உடல் நலம், செல்வம் மற்றும் அறிவுக் கூர்மை கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அவ்வை பிராட்டியார், வைகறையில் துயிலெழு என்கிறார். சூரியன் உதிக்கத் தொடங்குவதற்கு முன் படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டும். இந்த நேரத்தில் இரத்த ஓட்டம் சாதகமாக அமையும். சூரிய உதயத்திற்குப் பின்னர் எழுந்தால் இரத்த ஓட்டம் மந்தமாக ஓடும், பாதகமான விளைவுகளைத் தரலாம். சூரிய உதயத்திற்கு முன் எழுந்தால் கிடைக்கும் நன்மைகள்:

- உடலும் மனமும் சுறுசுறுப்பாக இருக்கும்.
- மலச்சிக்கல் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- நாள் முழுதும் மனம் மகிழ்ச்சியாகவும் வேலை செய்ய ஆர்வமாகவும் இருக்கும்.
- ஒரு நாளைத் திட்டமிட்டு வேலை செய்ய போதிய நேரம் கிடைக்கிறது.
- சக்தியும் அறிவுத் திறனும் பெருகும்.
- நினைவாற்றல் கூர்மையாக இருக்கும்.
- கண் பார்வை நலிவடையாது.

26. வாசலில் மாவிலை, வேப்பிலை கட்டுதல்

வேம்பினது சிறப்பை புறநானூறு, சிலப்பதிகாரம், போன்ற இலக்கியங்கள் சுட்டுகிறது. வேம்பு மருத்துவ குணம் கொண்டது என்பதை தமிழ் கூறும் கிராம வைத்தியங்கள் வெளிப்படுத்தி இருக்கிறது. பண்டை காலத்தில் போரில் புண்பட்ட

வீரர்களின் வீட்டின் இறப்பில் வேப்பந்தலையினைப் பேய்கள் புண்ணை அணுகாது இருக்கவும் பொருட்டுச் செருகி இருந்தமையினை,

"வேம்புசினை யொடிப்பவும் காஞ்சி பாடவும்
நெற்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்
எல்லா மனையுங் கல்லென் றவ்வே"[34] (புற 296: 1-3)

என்ற புறநானூற்றுப் பாடலில் வழி உணர முடிகிறது. இதனை உணர்த்துவதற்காகவும், மலேசிய தமிழ்ச் சமூகம் தன் சிந்தனை சார்ந்த கருத்துக்களை திணித்து வீட்டின் முகப்புகளில் வேம்பு இலைகளை செருகி வைப்பது மரபுப் பழக்கமாகக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

வாசலில் மாவிலை, வேப்பிலை கட்டினால் தீய சக்திகள் வீட்டிற்குள் வரா என்று பொதுவாக நம்பப்படுகிறது. மங்கள நாள்களிலும் பிற விசேஷ நாள்களிலும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். தாவரங்கள் கரியமில வாயுவை உள் இழுத்து பிராண வாயுவை வெளியிடுகின்றன. மனிதர்கள் விடும் கரியமில வாயுவைத் தாவரங்கள் இழுத்துக் கொள்கின்றன. மனிதர்களுக்குத் தேவையான பிராண வாயுவைத் தாவரங்கள் வெளியிடுகின்றன. மற்றத் தாவரங்களை விட மாவிலையும் வேப்பிலையும் இந்தச் செயல்முறையில் ஆற்றல் மிகுந்ததாக இருக்கின்றன. மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும்போது பிராணவாயுவும் அதிகமாக்கப் பட்டு வீட்டின் வெப்பத்தையும் குறைக்க உதவுகின்றன. வேப்பிலை கிருமிநாசினியாகவும் பயன்படுகிறது. வெப்ப நிலையைக் குறைத்து சற்று குளிர்ந்த நிலையை ஏற்படுத்தவே மாவிலையும் வேப்பிலையும் கட்டப் படுகின்றன. இப்பொழுதெல்லாம் மாவிலை மட்டுமே கட்டப்படுகின்றன.

27. திருமஞ்சனம் மறைந்திருக்கும் அறிவியல்

அபிஷேகம் அல்லது திருமஞ்சனம் பற்றி நமது ஆகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கருங்கல் அல்லது பஞ்சலோகத்தால் செய்யப்பட்டுள்ள விக்கிரகங்களுக்கு மூலிகையால் திருமஞ்சனம் செய்யப்படுவதாகும். "தெய்வீகச் சக்தி (இறைவன்) நம்முடன் தொடர்பு கொள்வதற்கான வழி. திருமஞ்சனம். ஏற்கனவே பிரதிஷ்டை செய்யப்பட்ட சக்தியை நீண்ட நாள்களுக்கு நிலைநிறுத்தவும், கருங்கல்

---

[34]. புறநானூறு, கழக வெளியீடு, ப.64.

விக்கிரகத்தைக் குளிர்ச்சியாக்கவும் திருமஞ்சனம் செய்யப்படுகிறது. காற்றை விட நீர் சக்தியை விரைவாகக் கடத்தும் தன்மையது. விக்கிரகத்தின்மீது ஊற்றப்படும் நீரும், பெரும்பாலான பொருள்களும் சாப்பிடக் கூடியவையாகும். விக்கிரகத்தின் அடியில் வைக்கப்பட்ட யந்திரமும் மேலே இருக்கும் கலசமும் செம்பு உலோகத்தால் ஆனது. திருமஞ்சனத்தின்போது இவை நல்ல சக்தி அதிர்வுகளை வெளிப்படுத்துகின்றன. பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களை வெளியேற்றுவதோ நகர்த்துவதோ கூடாது. அதற்குப் பதில் நீர் வழிந்தோட வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மந்திரங்கள் சரியாக உச்சரித்துக் கூறுவதால் ஏற்படும் ஒலி அதிர்வுகள் சக்தி பரிமாற்றங்கள் செய்ய உதவுகின்றன."[35]

28. இரு கை கூப்பி வணக்கம் செலுத்துதல்

தமிழர் கலாசாரப்படி மரியாதையாக வாழ்த்து அல்லது வணக்கம் கூறும்போது இரண்டு உள்ளங்கைகளையும் விரல் நுனிகளையும் ஒன்று சேர்த்து, சற்றுக் குனிந்து வணக்கம் கூற வேண்டும். நெஞ்சின் ஆழத்திலிருந்து வணக்கம் கூறுவதற்கு ஈடாகும். இவ்வாறுதான் பொதுவாகத் தமிழர் கலாச்சாரப்படி வணக்கம் கூறும் முறையாகும். "உள்ளங்கைகள், விரல் நுனிகள் அழுத்தப்படும்போது கண்கள், காதுகள், மனம் ஆகியவற்றிற்கு அழுத்தம் தரப்பட்டு விரைவாகச் செயல்படச் செய்கிறது. இதனால் வணக்கம் கூறப்படும் நபரை நீண்ட நாள்களுக்கு நினைவில் வைத்திருக்கச் செய்கிறது. இரண்டு கைகளின் உள்ளங்கைகள் நெஞ்சுக்கு நேராக வைத்து வணக்கம் கூறுவது ஆழ் மனத்திலிருந்து வெளிப்படும் மரியாதையும் வரவேற்பும் ஆகும். ஒருவருக்கு இவ்வாறு மரியாதை செய்வது இறைவனுக்குச் செய்யும் மரியாதை போன்றது. உன்னில் இறைவனைக் காண்கிறேன் என்று பொருளாகும். ஐந்து விரல்கள் ஐம்பூதங்களைக் காட்டுகின்றன.

கட்டை விரல் - நெருப்பின் சக்தி

ஆள்காட்டி விரல் - காற்று

நடுவிரல் - ஆகாயம் (வான் வெளி)

மோதிர விரல் - மண்

---

35. தகவலாளி முருகையா தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்

சுண்டு விரல் - தண்ணீர்

ஐம்பூதங்களையும் பிரதிநிதிக்கும் விரல்கள் சேர்ந்து இருக்கும்போது வணக்கம் கூறும் நபரிடம் உள்ள எதிர்மறை விளைவுகள் வணக்கத்தை ஏற்றுக் கொள்பவரைப் பாதிக்காது."[36]

29. கண்ணேறு சுற்றி அடுப்பில் போடப்படுதல்

திருஷ்டி என்பது தீய நோக்கத்தோடு பார்க்கும் பார்வை. பொறாமையினால் பார்ப்பது, வெறுப்பினால் நோக்குவது போன்றதாகும். இத்தகைய விரும்பத்தகாத பார்வையால் திருஷ்டி பட்டவருக்குக் காயம் ஏற்படலாம், நோய் ஏற்படலாம், கெட்டது நடக்கலாம், துரதிர்ஷ்டம் ஏற்படலாம் என்றெல்லாம் மக்கள் நம்புகின்றனர். பொதுவாகத் திருஷ்டி பட்டவர் சிரமப்படுவார். எனவே உப்பும் எலுமிச்சையும் திருஷ்டி பட்டவரின் தலையைச் சுற்றுப் போடுவார்கள். உப்பும் உளர்ந்த மிளகாயும் தலையைச் சுற்றி எரியும் நெருப்பில் போடுவார்கள். இவை நோய் எதிர்ப்புக் கிருமிநாசினி. அது மட்டுமின்றி உப்பும் அமிலமும் கொண்டிருக்கும் தன்மையைக் குறைக்கும். இதனால்தான் பாக்டீரியக் கிருமிகளால் பாதிப்பு வராமலிருக்க தலையைச் சுற்றிப் போடுகிறார்கள். பாதிக்கப்பட்டவர் உடல் நலம் சற்றுத் தேறியிருக்கும்.

30. உண்ணா நோன்பு

நமது நேரத்தில் பெரும் பகுதியைச் சமையலுக்கு வேண்டிய பொருள்களைக் கொள்முதல் செய்யவும், சமைக்கவும், உண்ணவும் செலவிடப்படுகிறது. சில உணவுகள் சோம்பலையும் மனக் கிளர்ச்சியையும் ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாக மனிதன் சில வேளைகளில் எளிய உணவை உண்கிறான் அல்லது உணவு உண்ணாமல் இருந்து விடுகிறான். இது தானாக ஏற்படுத்திக் கொள்ளும் கட்டொழுங்கு முறையாகும்.

ஒவ்வொரு கருவிக்கும் ஓய்வு என்பது அத்தியாவசியமானது. ஓர் இயந்திரம் இடைவிடாமல் இயங்கினால் குறிப்பிட்ட காலம் வரைதான் சிறப்பாக இயங்கும். பின்னர் பழுதாகிவிடும். எனவேதான் ஓய்வுக்குப் பின் இயங்கச் செய்வார்கள். இயந்திரமும் நன்கு இயங்கும். அதேபோல நமது ஜீரணக் கருவிகளுக்கும்

---

[36]. முனைவர் தி. மகாலெட்சுமி, திருமந்திரமும் தியானமும், ப.4

இடையிடையே ஓய்வு கொடுப்பது இன்றியமையாதது. இந்த ஓய்வு உண்ணா நோன்பு மூலம் தரப்படுகின்றது. நமது புலன்களுக்கு அதிக ஈடுபாடு கொடுத்தால் அதிக சக்தி விரயமாகிறது. உண்ணா நோன்பு நமது புலன்களை கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள உதவுகிறது. நமது மனம் அமைதியடைகிறது. முக்கியமாக நமது ஜீரண உறுப்புகள் நோன்பு மூலம் இழந்த சக்தியைப் பெற்று உணவு ஜீரணமாக உதவுகிறது.

தமிழர்களின் நம்பிக்கை

நம்பிக்கை - விளக்கம்

நம்புதல் என்னும் வினையடிப்படையில் பிறந்தது நம்பிக்கை என்ற சொல்லாகும். மனித வாழ்வை அடித்தளம் இட்டு ஒழுங்குபடுத்தும் பல்வேறு கூறுகளுள் நம்பிக்கைகள் முதன்மையான இடத்தினைப் பெறுகின்றன. மக்களால் உருவாக்கப்பட்டு சமுதாயத்தால் பாதுகாக்கப்படுவதால் நம்பிக்கைகள் அச்சமூகத்தின் பண்பாட்டுச் சிறப்பினையும் மரபுகளையும் வெளிப்படுத்தும் அடிப்படைச் சான்றுகளாக உள்ளன. மனித சமுதாயத்தில் நம்பிக்கைகள் நாளுக்கு நாள் தோன்றி வளர்ந்துகொண்டே இருப்பதால் அதனுடைய வகைமைப்பாடும் விரிந்து கொண்டே செல்கின்றது. நம்பிக்கைகளே மக்களை இயக்குகின்றன எனவும் கூறப்படுகிறது. காலம் கடந்து நின்று யாவரையும் தன் வயப்படுத்தி வாழ்விற்கு ஓர் ஊன்றுகோல் போலவே அமைந்து, அவ்வாழ்விற்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் தன்மை உடையது நம்பிக்கையாகும். மனித வாழ்வில் ஏற்படும் பலவகையான இன்னல்களில் இருந்து விடுபட்டு மனம் அமைதியுற நம்பிக்கைகள் உதவுகின்றன. எனவே இவை ஆதிகாலம் தொட்டே மக்கள் கடைப்பிடித்து அவர் தம் பழக்க வழக்கங்களில் மேற்கொள்ளப்படுகிறது. மக்களின் உள் உணர்ச்சிகளின் வெளிப்பாடாகவே நம்பிக்கை உள்ளது. மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நம்பிக்கைகள் மிகப் பலவாகும். மனித சமுதாயம் உள்ளவரை நம்பிக்கைகள் வாழ்ந்து கொண்டே இருப்பவை. எனவே சங்ககால மக்கள் பல்வேறு நம்பிக்கைகளின் அடிப்படையிலே தங்களது வாழ்வினை அமைத்துக் கொண்டனர்.

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர்ப் பிறர் கூறும் சொற்களைச் சகுனமாகக் கொள்ளும் வழக்கம் பண்டுதொட்டே நம்மிடையே நிலவுகின்றது. இதனைப் பண்டைத் தமிழ் மக்கள் 'விரிச்சி' எனச் சுட்டியுள்ளனர். விரிச்சி என்பது

வருங்காரியத்தை விரிவாய் முன்னே தெரிவிப்பதாகும் என்று சு.வித்தியானந்தன் தமது தமிழர் சால்பு(ப.196) என்ற நூலில் குறிப்பிடுகின்றார். இதனை 'நற்சொல்' என்றும் கூறுவர். ஒருவர் ஏதேனும் ஒரு செயலைப் பற்றிச் சிந்திக்கவோ அல்லது செயலாற்றவோ நினைக்கும் நேரத்தில் அருகிலிருப்பவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் சொற்கள் தான் சிந்திப்பவற்றிற்கு இயைந்ததாகவோ அல்லது இயையாததாகவோ அமைந்து மேற்கொள்ளப்போகும் செயலின் பயனை நிச்சயிக்கும் என நம்பிக்கை கொள்ளுதலே விரிச்சி எனப்படும். இது நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றுவதாகும்.

விரிச்சி கேட்டல் அகம், புறம் ஆகிய இரு மரபுகளிலும் பயின்று வந்துள்ளது. இதனை 'வாய்ப்புள்'(முல்.17-18) எனவும் சுட்டுவதுண்டு. இது நன்னிமித்தம் உணர்த்தும் பாங்கில் பயின்று வந்துள்ளதைச் சங்கப்பாடல்கள் உணர்த்துகின்றன. நிமித்தக் கூறாகப் பெண்டிரின் சொல்லே நன்னிமித்தமாக அமைந்த திறத்தினைப் பாடல்கள் சுட்டுகின்றன. முல்லைப்பாட்டில் விரிச்சி கேட்கும்முறை சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது(முல்.6-11, 15-22). விரிச்சி கேட்டலில் தெய்வத்தைப் பரவித் தொழுவது வழக்கமாகப் பின்பற்றப்பட்டிருக்கக் காணலாம். இவற்றில் நெல்லும் நீரும் (புற.280:6-7)), நெல்லும் பூவும் (முல்.8-11) தூவி வழிபட்டமை குறிப்பிடத்தக்கது. பகைவர் நாட்டிற் புகுந்து பசுக்கூட்டங்களைக் கவருமுன் வெட்சி மறவர் விரிச்சி கேட்டதாகக் குறுந்தொகை (பா.218) பாடல் கூறுகின்றது. இதனைப் 'பாக்கத்து விரிச்சி' என்று தொல்காப்பியர் சுட்டியுள்ளார். இக்கூற்றின் வழியாக மலேசியத் தமிழர்களும் மரபுசார்ந்த பழக்கங்களைக் கடைப்பிடிக்கின்றனர். அவையாவன,

"1. வீட்டை விட்டு வெளியே புறப்படும்போது. 'எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டால் போகிற காரியம் வெற்றியடையாது என்று நம்புகின்றனர். வெளியில் நடத்தவிருக்கும் வேலை வெற்றிகரமாக நடக்கச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது 'எங்கே போகிறீர்கள்?' என்று கேட்கும்போது அவரது நோக்கத்திலுள்ள குறிக்கோளின் கவனம் குறைந்து, போகிற வேலை வெற்றியடையாது என்று நினைக்கலாம்.

2 . பிரயாணத்தின் போது மயிலைக் கண்டால் காரியம் வெற்றிபெறும். மயில் அகவும் சத்தம் கேட்டால் நல்வாய்ப்பு கிட்டாது. மயில் ஓர் அழகான பறவை. மயிலைக் காண்பது மனத்திற்கு மகிழ்ச்சியளிக்கும். மகிழ்ச்சியோடு செல்லும்போது

நினைத்துச் செல்லும் காரியம் வெற்றி தரும் என்று நம்பப்படுகிறது. மயில் அகவும் ஓசை இனிமை தராது. ஆகவே அவர், போகும் காரியம் வெற்றியைத் தருமா என்று சந்தேகப்படுவார்.

3. புறப்படும்போது யானையைப் பார்த்தால் நல்வாய்ப்பாகும். ஏனெனில் யானை கணேசப் பெருமானை பிராத்திப்பதால் தடைகள் நீங்கி நல்லதே நடக்கும் என்று இந்துக்கள் நம்புகின்றனர்.

4. காகம் கரைந்தால் வீட்டுக்கு விருந்தாளிகள் வருவார்கள். இந்துக்கள் சாப்பிடுவதற்கு முன் காகத்துக்கோ பிற பறவைகளுக்கோ உணவளித்த பின் உண்ண வேண்டும் என்பது மரபு. காகத்துக்கு உணவளிக்க மறந்தபோது காகம் கரையும். காகம் கரைந்தால் விருந்தினர் வருவார்கள் என்று நம்புவதேன்? நல்வாய்ப்பாக சில சமயங்களில் விருந்தினர் வருவதும் உண்டு

5. புதிய வீட்டில் சிட்டுக்குருவி கூடு கட்டினால் நல்வாய்ப்பு என்கின்றனர். புதிய வீட்டில் நாம் குடி போவதற்கு முன்பே மனித நடமாட்டம் இல்லாத போது சிட்டுக் குருவிகள் குடியேறத் திட்டம் போட்டிருக்கலாம். இரண்டு குடியேற்றங்களும் ஒரே சமயத்தில் நடந்ததால் புதிய வீட்டில் சிட்டுக்குருவி கூடு கட்டுவது நல்வாய்ப்பு தரும் என்று நம்புகின்றனர்.

6. பூனையைக் கொன்றுவிட்டால் ஓர் அர்ச்சகருக்குத் தங்கம் வழங்கினால் பாவம் தீரும். பூனைகளைக் காப்பாற்றவே இவ்வாறு செய்யப்படுகிறது. பூனைகள் வீட்டிலுள்ள எலிகளைக் கொல்கின்றன அல்லவா. பூனையைக் கொல்லாமல் இருந்தால் வீட்டில் எலித் தொல்லை இராது. அது மட்டுமின்றி வசதி படைத்தோர் மட்டுமே அர்ச்சகருக்குத் தங்கம் வழங்க முடியும். ஏழைகளால் முடியாது. எனவே பூனையைக் கொல்லாமல் இருப்பதே மேல் என்று இருப்பார்கள்.

7. பிரயாணத்திற்கு முன் திருமணமான புதுத் தம்பதியர்கள் நெல், தானியம், வைக்கோல் முதலியவற்றைக் காண்பது நல்லதே. தம்பதியர்கள் தாங்கள் காணும் நெல், தானியம், வைக்கோல் போன்றவற்றைக் காணும்போது தாங்களின் வேளாண்மையும் செழித்து இருக்க வேண்டுமென்று நினைத்து ஊக்கமுடன் வேலை செய்ய வேண்டுமென்று உறுதி கொள்வார்கள்.

8. இரவில் நகம் வெட்டுதல், வீட்டைக் கூட்டுதல் கூடாது. முற்காலத்தில் மங்கலான வெளிச்சத்தில் அப்படிச் செய்யக் கூடாதுதான். மங்கிய வெளிச்சத்தில் நகம் வெட்டினால் காயம் ஏற்படலாம்.

9. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுப்பதோ வாங்குவதோ கூடாது. இந்துக்களுக்குச் செவ்வாய், வெள்ளிக் கிழமைகள் புனித நாள்களாகும். கோயிலுக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருப்பார்கள். அந்த நேரத்தில் பணம் அல்லது பொருள் கேட்டு வரும்பொழுது அவர்களின் இறைச் சிந்தனை சிதறிவிடும் ஆதலால் கொடுக்கக் கூடாது என்பார்கள். இந்தப் பழக்கத்தால் மற்றவர்கள் பணம், பொருள் ஆகியவற்றைக் குறிப்பிட்டக் கிழமைகளில் கேட்க வரமாட்டார்கள்.

10. குழந்தைகளைப் பாராட்டிப் பேசினால் கண் பட்டுவிடும் என்று திருட்டி சுற்றிப் போடுவர்.

11. புதுவீடு புகுவிழாவின் போது பூசனிக்காய்க்குப் பொட்டு வைத்து வீட்டு நுழை வாயிலில் கட்டித் தொங்கவிடுவார்கள். விழாவுக்கு வருபவர்களின் கண் பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு செய்கின்றனர்.

12. இறப்பு வீட்டுக்குச் சென்றால் போய்வருகிறேன் என்று சொல்லக் கூடாது."[37] இது போன்று மேலும் இறப்புகள் ஏற்பட்டுத் துக்கம் விசாரிக்க வரக்கூடாது என்பதற்காக இவ்வாறு கூறியிருக்கலாம்.

கற்பனை என்றாலும் அக்கற்பனைக்கு அடிப்படையான கடவுளுக்குப் படைத்தல் என்ற நம்பிக்கையினைக் கருத்தில் கொள்ளவேண்டும். இந்நம்பிக்கையின் எச்சங்களைக் மலேசியத்தமிழர்களின் வாழ்க்கையில் காணமுடிகின்றது. இன்னும் பல நம்பிக்கைகள் தமிழர்களிடையே உண்டு. நம்பிக்கைகள் முன்னோர்கள் விட்டுச் சென்றவை. நம்பிக்கைகளைக் கடைப்பிடிக்கும்போது அதன் பொருளறிந்து நிறைவேற்ற வேண்டும்.

---

37. . தகவலாளி ராஜா காசிம், தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்

சடங்குகள்

மக்கள் வழிவழியாக மூத்தோர் கடைப்பிடித்த வந்த சடங்குகளை இக்காலத்தில் உள்ள தலைமுறையினர் பின்பற்றி வருகின்றனர். முன்னோர்கள் மறைந்தாலும் அவர்கள் விட்டுச் சென்ற சடங்கு முறைகள் மறையாமல் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றன. சில சடங்கு முறைகள் காலத்திற்கு ஒவ்வாதவைகளாக இருக்கலாம். அதன் பொருள்கள் என்ன என்று தெரியாததாகவும் இருக்கலாம். ஏன் செய்கிறோம்? அதனால் என்ன பலன் என்பதையும் அறியாதிருக்கலாம். இருப்பினும் சடங்குகள் நிறைவேற்றப்படுகின்றன. மலேசியாவில் பல்லின மக்கள் வாழ்கின்றனர். மலாய்க்காரர்கள், சீனர்கள் மற்றும் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்றனர். மூவினங்களும் அவரவர் தாயகத்தார் பின்பற்றி வரும் சடங்கு முறைகளைத் தற்காலத்திலும் செய்து வருகின்றனர்.

தமிழர் குழந்தைகளுக்கான சடங்குகள்

1. குழந்தைப் பிறப்பு சடங்குகள்

குழந்தைச் செல்வம் குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி, பெற்றோரையும் மற்றோரையும் தம் இனிய மழலைச் சொற்களால் மகிழ்வித்து இன்பம் தருவதே குழந்தை. அதனால் குழந்தைக்குச் சமூகத்தில் முதலிடம் தருகின்றனர்.

"நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே"[38] (பா.கவி)

என்று பாரதிதாசனும் குழந்தைக்குத் தாலாட்டு இசைக்கிறார். குழந்தைப் பிறப்பதற்கு முன் தாயும் தந்தையும் குழந்தைப் பேற்றிற்கான பல்வேறு நிகழ்வுகளை நிகழ்த்துகின்றனர். திருமணத்திற்குப் பின் பவ்வேறு தவங்கள் செய்து தன் குடும்பத்திற்கான வாரிசினைப் பெற்றுத் தருவதில் கண்ணும் கருத்துமாகச் செயல்படுகிறாள் பெண். அதனால் தான் வீரம் செறிந்த தமிழ்ச் சமூகத்தினை வெளிப்படுத்தும் புறநானூற்றுப் பாடல் ஒன்று "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே" என்று குழந்தைப் பேற்றினைப் பெண்ணிற்குரிய கடனே என்பதை உறுதியிட்டுத் தாயின் கடமையை நிரல்படுத்தியுள்ளது. கணவனும் மனைவியும் நோன்பிருந்து குழந்தைச் செல்வத்தைப் பெற்றுள்ளனர். என்பதை,

38. பாவேந்தர் பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைத் தொகுப்பு, ப.64

“தானா முளச்சலிங்கம்
தவசிருந்து வந்த லிங்கம்
கண்ணுமணி பொன்னுமணி
கந்தரோட வேலுமணி
வேலுமணி வேணுமின்னு கண்ணே
வெகுநாள் தவசிருந்தோம்... (தா. பா)

என்ற தாலாட்டின் வழி தாயும் தந்தையும் குழந்தைக்காகத் தவமிருந்ததை அறியமுடிகிறது.”[39] தன்குடும்பத்தின் மகிழ்ச்சி குழந்தையின் வரவில்தான் உள்ளது என்பதை உணர்ந்த பெண் தவம் செய்து குழந்தைப் பேற்றினைப் பெற்ற நிகழ்வினை எடுத்து மொழிகிறது.

சடங்கு என்பது “சாத்திரமும் வழக்கமும் பற்றிய கிரியை”[40] என்கிறது தமிழ் அகராதி ஒரு குழந்தைப் பிறக்கும் போதும் இத்தகைய சடங்குகள் கடைபிடிக்கப்படுகின்றன. குழந்தையைப் பெற்ற தாய் வாலாமை(தீட்டு) என்பதன் காரணமாக குறிப்பிட்ட கால எல்லைவரை தனித்துப் பிறரைத் தீண்டாமலும் வாழ்வாள் வாலாமைக் காலம் கழிந்த பின்னர் அவள் நீராடி தூய்மை செய்துக் கொண்டு குடும்பத்தில் அனைவருடனும் கலந்து பழகுவாள்.

நெய்யும் குய்யும் ஆடி, மெய்யொடு
மாசு பட்டன்றே கலிங்கமும் தோளும்
திதலை மென் முலைத்தீம் பால்பிலிற்ற
புதல்வற் புல்லிங் புனிநு நானும்மே (நற்றிணை 380.1-4)

என்னும் நற்றிணைப் பாடல் மூலம் வாலாமைப் பற்றி தெளிப்படுத்துகின்றது. தாயின் வாலாமைப் காலம் முடிந்த பிறகு குழந்தைக்கு தெய்வங்களின் துணை வேண்டும் என்பதற்காகக் காப்பு அணிவித்தனர். குழந்தை பிறந்து 21 நாள் கழித்து கோயிலுக்கு எடுத்துச் சென்றனர். ஓராண்டு நிறைவுறும்போது தெய்வ சந்ததியில் முடி களைந்து காது குத்தினர். இவையெல்லாம் தமிழர் மேற்கொண்ட சடங்கு

---

39. சு.சக்திவேல், நாட்டுப்புறவியல், ப.89

40. முனைவர் தி. மகாலெட்சுமி, திருமந்திரமும் தியானமும், ப.39

முறைகளாகும். பெண் குழந்தைப் பருவம் அடைந்து பின் சத்துள்ள உணவு கொடுத்தனர். வீட்டிற்குள் அழைத்துச் செல்லும்போது சடங்குகள் நிறைவேற்றினர்.

பிள்ளைப் பேற்றின் நோன்பு:

திருமணமான பெண்கள் விரைவில் தாய்மை அடைந்து விட வேண்டும் என விரும்புவர். குழந்தை இல்லையெனில் சமுதாயத்தின் தூற்றுதலுக்கு ஆளாக வேண்டுமே என எண்ணினர். குடும்பத்தின் பெயர் சொல்ல வாரிசு வேண்டும் என விரும்பினர். அதற்காகப் பெண்கள் அரச மரத்தைச் சுற்றி வருதல் உண்டு. 'அரச மரத்தைச் சுற்றி வந்து அடிவயிற்றைப் பார்த்தாளாம்' என்ற பழமொழியே வழங்குகிறது. வெள்ளிக் கிழமை நோன்புகளாக உள்ளது.

கண்ணேறு கழித்தல் பற்றிய நம்பிக்கை:

குழந்தைகளுக்குக் கண்ணேறு கழிப்புச் செய்வதுண்டு சில கண்களுக்கு தீமை விளைவிக்கும் சக்தி உண்டு. அத்தகையோரது கண்பட்டால் குழந்தைக்கு நோய் நொடி வரும் என்று நம்புகின்றனர். எனவே தான் கல்லடிபட்டாலும் கண்ணடி படக் கூடாது என்று கூறுவர். கண்ணேறுபட்டதைக் கழிப்பதற்காக சுண்ணாம்பும் மஞ்சளும் கொண்டு சுற்றி வீதியில் எறிவார்கள். இவ்வாறு செய்தால் கண்ணேறு கழிந்து விடுமென மக்கள் நம்புகின்றனர்.

"கண்ணான கண்ணார்க்கு கண்நோக்கும் வாராமல்
சுண்ணாம்பும் மஞ்சளும் சுற்றி எறி கண்ணார்க்கு"

என்ற பாடல் கண்ணேறு கழ்க்கும் முறையைக் கூறுகின்றது. அதனைத் 'திருஷ்டி கழித்தல்' என்றும் கூறுவர்.

இதே போன்று புது வீடு கட்டும்போது பூசணிக் காயில் மனித உருவமிட்டுக் கரும்புள்ளி இடுதலும், விளைந்த நிலத்தில் வைக்கோல், துணி முதலியவற்றால் உருவம் செய்து கரும்புள்ளி இடுதலும் கண்ணேறு கழித்தல் என்ற நம்பிக்கையில் செய்வதாகும்.

தாயின் தாலாட்டு:

தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கின்றது. தாயின் நாவசைவில் தாலாட்டு என்னும் நல்முத்துப் பிறக்கின்றது. எனவே தான் 'தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டு' என்பார் தமிழண்ணல். தாலாட்டு என்ற சொல்லைத் தால் +ஆட்டு எனப் பிரிக்கலாம். தால் என்றால் நாக்கு

என்றும், நாவை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு எனும் பெயர் பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறுவர். தாலாட்டு என்ற சொல் சில இடங்களில் 'ராராட்டு' என வழங்கி வருகிறது. மேலும் தாலாட்டைத் தாராட்டு, தாலேலோ, ஓராட்டு, போராட்டு, ராராட்டு, தொட்டில் பாட்டு, ஓலாட்டு, திருத்தாலாட்டு எனப் பல்வேறு பெயர்கள் இன்றைய உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் வழங்கி வருகின்றன. தமிழில் தாலாட்டு என்று கூறுவது போன்று மலையாளத்தில் 'தாராட்டு' என்றும், தெலுங்கில் 'ஊஞ்சோதி' என்றும், கன்னடத்தில் 'ஜோகுல' என்றும் கூறுவர். 'இருவர் கொள்ளும் காதலைவிட, உடன் பிறந்தார் கொள்ளும் வாஞ்சையைவிட, ஏன் உலகளக்கும் அருளினையும்விட, பிள்ளைப் பாசமே ஆழமானது, வலிமை மிக்கது, உணர்ச்சிமயமானது. இத்தகைய தாயும் சேயும் என்ற உறவுப் பிணைப்பிலே பிறந்த இயற்கைக் கலைதான் தாலாட்டு என்று தமிழண்ணலும், 'தாய் ஆழங்காண முடியாத அன்புக் கடல். அக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு' என்று டாக்டர் ஆறு. அழகப்பனும் கூறுகின்றனர். இத்தகைய தாலாட்டு மனிதகுலத் தொடக்க முதல் தொடர்ந்து வருகின்றது. உலகில் தாய்மையும் சேய்மையும் இருக்கும் வரை, பாசமும் பற்றும் உள்ள வரை, பாடலும் இசையும் நிலவும் வரை மனித சமுதாயத்தில் தாலாட்டுகள் இருக்கும். 'நடையழகில் ஜெயங்கொண்டானையும், இனிமையில் இளங்கோவையும், கற்பனையில் கம்பனையும், சொல்லாட்சியில் மணிவாசகரையும், நாகரிக விளக்கத்தில் சங்கப் புலவர்களையும் ஒப்புவமையாகப் பெற்றுப் பெருமையாக விளங்குகிறது தாலாட்டு' என்பார் தமிழண்ணல். தாலாட்டில் தாய்மையின் தவிப்பும் பூரிப்பும் எதிர்பார்ப்புகளும் வைகறையின் வசந்தங்களும் இறைவனின் இனிய நாமங்களும் வரலாற்றுப் பெட்டகங்களும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

தாலாட்டுப் பாடல்களைக் கருவாகக் கொண்டு எழுந்த இடைக்கால இலக்கியங்களை 'தாலாட்டு' என்றும், பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் 'தாலேலோ' என்றும் குறிப்பிடுகின்றன. தமிழ் மொழியில் முதன் முதலாகத் தாலாட்டுப் பாடியவர் பெரியாழ்வார் ஆவார். தொல்காப்பியத்திலும் தாலாட்டின் கூறு பற்றிக் கூறப்பட்டுள்ளது. 'குழவி மருங்கினும் கிழவதாகும்' (புறத்திணை-82) என்றும், 'கண்படை கண்ணிய கண்படை நிலையும்' என்றும் தொல்காப்பியர் கூறுகின்றார். சங்க இலக்கியமான பரிபாடலில் தாலாட்டு என்ற சொல்லாட்சி காணப்படுகின்றது.

குழந்தை பிறந்த சில நாள்களில் குழந்தையைத் தொட்டிலில் போட்டுப் பெயர் சூட்டப்படுகின்றது. குழந்தையைக் குளிப்பாட்டி புத்தாடை அணிவித்து பூஜை அறையில் குழந்தையின் பெற்றோர் குழந்தையை மடியில் அமர வைத்து காதில் தேர்ந்தெடுக்கப் பட்ட பெயரை மூன்று முறை கூறுவார்கள். குழந்தையைத் தொட்டிலில் போடப்பட்ட பின்னரும் நெருங்கிய உறவினர்கள் குழந்தையின் பெயரை மூன்று முறை கூறுவதும் உண்டு.

குழந்தைக்கு முதல் சோறு ஊட்டுதல்

குழந்தைக்குப் பல் முளைக்கத் தொடங்கியவுடன் சோறு ஊட்டும் சடங்கு நடத்தப்படும். பாலுடன் கலந்த சோறு பெற்றோர்களால் ஊட்டப்படும். இச்சடங்கு கோயிலில் அல்லது வீட்டில் உறவினர் நண்பர்கள் சூழ நடத்தப்படும்.

தலைமுடி நீக்குதல்

குழந்தை பிறந்த சில மாதங்களில் குழந்தையை கோயிலுக்கு அழைத்துச் சென்று மடியில் அமர்த்திக் கொண்டு தலைமுடியை நீக்குவர். தூய்மையான வாழ்க்கையின் மகத்துவத்தை உணர்த்துவதற்காக இந்தச் சடங்கு செய்யப்படுகிறது.

காது குத்தல் பற்றிய நம்பிக்கை

காது குத்தும் வழக்கம் தமிழ்நாடு மட்டுமின்றி ஆசியா, எகிப்து போன்ற நாடுகளிலும் காணப்படுகின்றது. காது குத்தும் போது ஏதேனும் உலோகத்தை அணிவிப்பர். தீமை தரும் ஆவிகள் தலை, வாய் மூக்கு, காது ஆகிய உறுப்புகள் வழியாக எளிதில் புகுந்து விடும் என்ற நம்பிக்கையில் காதில் துளையிட்டுத் தீய ஆவிகளை விரட்டும் சக்தியாக காதில் ஏதேனும் ஓர் உலோகத்தை அணிவித்தால் காது வழியாகத் தீய ஆவி நுழைவதைத் தடுத்து விடலாம் என்ற நம்பிக்கையில் இப்பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. குழந்தை பிறந்த சில மாதங்களில் அல்லது ஓராண்டிற்குப் பிறகு குழந்தையின் காதுகளில் காதணி குத்தப்படும்.

“செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்தில் எல்லாம் தலை” (குறள்: 412)

குழந்தையின் கேட்டல் திறன் வளர்ந்து அறிவுடையோர் வாய்ச் சொல்லைக் கேட்டு நடந்தால் வாழ்க்கை பொன்போல மின்னும் என்பதை உணர்த்துவதற்காக இந்தச் சடங்கு மேற்கொள்ளப்படுகிறது.

கல்வித் தொடக்கம்

குழந்தை மழலை மொழி பேசத் தொடங்கியவுடன் இச்சடங்கு நடத்தப்படும். பெரும்பாலும் நவராத்திரி விழாவின்போது கலைவாணி பூசையன்று அரிசி அல்லது நெல் பரப்பி குழந்தையின் கைகளைப் பிடித்து தமிழின் முதல் எழுத்தான "அ" என்ற எழுத்தை எழுத வைப்பார்கள். அடிப்படையான கல்வியை வீட்டிலே கற்றுத்தர வேண்டும் என்பதை இச்சடங்கு உணர்த்துகிறது.

<u>தமிழ்ப் பெண்ணுக்குப் பூப்பெய்தும் சடங்கு</u>

பருவமடைந்த பெண்ணுக்கு மூன்று அல்லது ஐந்து சுமங்கலிகளால் மலர்கள் கலந்த மஞ்சள் நீரால் நீராட்டப் பெற்று பாரம்பரிய ஆடை அணிவித்து. இரண்டு வாரங்கள் வீட்டிலேயே இருக்கச் செய்வார்கள். தாய்மாமனுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. தாயமாமன் பெண்ணுக்குச் சீர் செய்வார். பண்டைக் காலத்தில் பூப்பெய்தும் சடங்கு எளிமையாக நடத்தப்பட்டது. ஆனால் இக்காலத்தில் மிகைப்படுத்தி ஆடம்பரமாக மேற்கொள்ளப்படுகிறது. சீனர்கள் மற்றும் மலாய்க்காரர்கள் இந்தச் சடங்கைத் தவிர்க்கின்றனர்.

வளைகாப்பு

முதன்முறையாகக் கருவுற்ற பெண்களுக்குச் செய்யப்படும் இந்து சமயச் சடங்கு வளைகாப்பு ஆகும். இச்சடங்கினை சீமந்தம் என்றும் அழைப்பார்கள். "கருவுற்ற பெண்ணுக்கு 5ஆம் மாதம், 7ஆம் மாதம், 9ஆம் மாதம் ஆகிய காலங்களில் ஏதாவது ஒன்றில் அவரவர் குடும்ப வழக்கப்படி வளைகாப்பு செய்வார்கள். மக்கற்பேறடைந்த பெண்களே இவ்விழாவில் பங்கேற்பார்கள். புதியதாகத் தாய்மை எய்தியிருக்கும் பெண்ணை மணப்பெண் போல் அலங்கரித்து கை நிறைய வளையல்களை அடுக்குவார்கள். இரண்டு கைகளிலும் சிவப்பு, பச்சை நிறத்திலான கண்ணாடி வளையல்கள் அணிவிக்கப்படும். எண்ணிக்கை ஒற்றைப்படையிலானதாக இருக்கும்படி பார்த்துக் கொள்வார்கள்.

கருவுற்ற பெண்ணுக்குக் கண் திருஷ்டியாலும் தீய சக்திகளாலும் தீமை ஏதும் ஏற்படாமலிருக்க வளைகாப்பு நடத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. ஆறாம் மாதம் முதல் குழந்தை வெளியுலகை உணரத் தொடங்குவதாகக் கருதப்படுகிறது.

அக்காலத்தில் அதை வரவேற்கும் நிமித்தமாக இந்தச் சடங்கு நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது."[41]

முன்காலத்தில் வளைகாப்பு மிக எளிமையாக நடத்தப்பட்டன. காலம் செல்லச் செல்ல அதிகமானோர் இவ்வழக்கத்தைப் பின்பற்றி வருவதால் மிக ஆடம்பரமாகப் பெரிய விருந்து வேடிக்கையுடன் நடத்தப்படுகிறது. விருந்தினர்கள் பரிசுப் பொருள்கள் தங்க நகைகள் முதலியவற்றை அன்பளிப்பாக வழங்குகின்றனர்.

இறப்புச் சடங்கு

சங்க இலக்கியங்கள் நம் முன்னோர்களின் வாழ்வினைப்பிரதிபலிப்பதாக இன்றும் நம்மிடம் விளங்கிவருகின்றது. பண்பாட்டை அடுத்த தலைமுறையினருக்குக் கடத்துவதாக இலக்கியங்கள் அமைந்துள்ளன. இன்றையச் சூழலில் நாம் பின்பற்றும் சடங்குகள் அமைத்தும் நம் முன்னோர்கள் பின்பற்றியதன் எச்சங்கள் என்றால் மிகையில்லை. இன்று நடைமுறையில் உள்ள அனைத்து சடங்குகளும் எதாவது ஒருவகையில் முன்பு நடைமுறையில் இருந்தது என்பதற்கு இலக்கியச்சான்றுகள் உள்ளன. இறந்தவர்களை எடுத்து செல்லும் முறையும் மாரடித்துப்புலம்பும் பண்பும் இறந்தவர்களின் மீது கோடித்துணி போர்த்தும் பண்பும் இன்றும் நம்மிடம் உள்ளன. இப்பண்புகள் யாவும் நம்மிடம் அன்று தொட்டு இன்று வரை வழக்கமாகவும் பழக்கமாகவும் உள்ளது.

சங்க காலத்தில் இறந்தவர்களைப் பாடையில் கிடத்தி அதன் பின் சுடுகாட்டிற்குக் கொண்டு சென்றுள்ளனர். இம் மரபு இன்றும் நம்மிடம் வழக்கில் உள்ளது. அன்று பாடை என்பதை, கால்வழி கட்டில், வெள்ளில் என்று அழைத்தனர். இதனை, புறநானூறு உணர்த்துகின்றது. புறநானூற்றில், ஔவையார்(286) பாடலில்

'கால்கழி கட்டிலில் கிடப்பி
தூவெள் அறுவை போர்ப்பித்திலதே"

என்பதால் உணரலாம்.

பாடை என்பதை வெள்ளில் என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது. இதனை,

41. தகவலாளி, இராமசாமி தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்.

'கள்ளிபோகிய களரியம் பறந்;தலை

வெள்ளில் நிறுத்த பின்றை"

என்ற தந்து மாறனைச் சங்க வருணர் என்;னும் நாகரியர்(360) பாடிய பாடல் மூலம் உணரலாம். மேலும், ஐயாதிச் சிறுவெண்டேரையார்(363) பாடலில்

'மடங்கல் உண்மை மாயமோ அன்றே

கள்ளி வேய்ந்த முள்ளிஅம் புறங்காட்டு

வெள்ளில் போகிய வியலுள் ஆங்கண்"

என்று குறிப்பிடுகின்றது. இறந்த உடலின் மீது கோடித்துணி போர்த்தும் மரபு அன்றும் இருந்து உள்ளது. அதனுடைய எச்சமாக இன்றும் அம்மரபு தொடர்ந்து வருகின்றது. வெளிமான் இறக்கும் தருவாயில் அவரைச் சந்தித்துப் பெருஞ்சித்திரனார்க்கு அவரின் இறப்பிற்குப்பின் இளவெளிமான் சிறுபொருள் கொடுத்தான் அதனை வாங்காது சென்றுவிட்டார். அவ்வாறு வரும்பொழுது, வெளிமான் இறந்தபொழுது அவனுக்கு உரிமையாகிய மகளிர் முறையாக அறைந்து அழும்பொழுது வளையல்கள் வாழைப்பூப் போன்று சிதறி விழுந்தன, என்று வருந்துவதைக் காணமுடிகின்றது.

ஒருவரின் இறப்பிற்குப் பின் நடைபெறக்கூடிய நம்பிக்கைச் சார்ந்த செயல்கள் இறப்புச் சடங்காக அமைகின்றன. கணவரின் இறப்பிற்குப் பின் உரிமை மகளிரின் நிலை கைம்மை நோன்பினால் அவர்கள் படுகின்ற துன்பம், இறப்புச் செய்தியை அறிவிக்க முரசு முழங்கியமை, இறந்தவரை எரித்தல் அல்லது புதைத்தல், இறந்தவருக்கு நடுகல் நடுதல் அதனை வழிபடுதல் போன்ற சடங்கு முறைகளைப் புறநானூற்று கையறுநிலைப் பாடல்கள் பதிவுச் செய்துள்ளது.

இந்துத் தமிழர்களின் ஈமச்சடங்கு

இந்துக்கள் வழக்கமாக வீட்டில் இறப்பதையே விரும்புகின்றனர். ஒருவர் மரணப் படுக்கையில் இருக்கும்போது, இறப்பு உறுதியானதும் அவரைக் குளிப்பாட்டி அவருக்குப் பிடித்த சுத்தமான ஆடையை அணிவித்து திருநீறு அல்லது திருமண் அணிவிக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் அங்குக் கூடி காய்ச்சி ஆறிய பாலைக் கொஞ்சம் கொஞ்சமாக அவர் வாயில் ஊற்ற வேண்டும். பால் ஊற்றும்போது ஒவ்வொருவரும் தன் பெயரைக் கூற வேண்டும். மாணிக்கவாசகர் அருளிய திருவாசகப் பாடல்கள் குறிப்பாகச் சிவபுராணமும் பாட வேண்டும்.

இறப்புக்குப் பின்னர் செய்ய வேண்டியவை

ஒருவர் இறந்துவிட்டால் பிரார்த்தனைப்பாடல்கள் பாடல்கள் திருவாசக 'அடைக்கலப் பத்து' சிவபுராணம் பாடுவது உகந்தது. வேறு பக்திப் பாடல்களும் பாடலாம். சவத்தை வைக்கவிருக்கும் வரவேற்பறையிலுள்ள மேசை நாற்காலிகள், படங்கள் முதலியவற்றை அப்புறப்படுத்த வேண்டும். படங்களுக்குத் திரை போட்டும் மூடலாம்.

பிரேதத்தைக் குளிப்பாட்டி சுத்தமான பாரம்பரிய ஆடையான வெள்ளை வேட்டிஇ சட்டை அணிவிக்க வேண்டும். பெண்ணாக இருப்பின் சேலை அணிவிக்க வேண்டும். விபூதி, சந்தனம் அல்லது திருநாமம் பூச வேண்டும். தென்திசை எமதர்மனின் திசையாகும். எனவே பிரேதத்தின் தலை தெற்கிலும் கால்கள் வடக்கு நோக்கியும் இருக்குமாறு ஒரு நீண்ட மேசையின் மேல் வெள்ளைத் துணி விரித்து அதன்மேல் கிடத்த வேண்டும். இரு கைகளையும் மடக்கி மார்பில் வைத்து கட்டை விரல்களை வெள்ளைத் துணியல் கட்ட வேண்டும். கால்களுக்குக் காலணி அணிவிக்காமல் இரு பெருவிரல்களையும் சேர்த்துக் கட்டப்பட வேண்டும். வாயைத் துடைத்து வாயில் தாம்பூலம் வைத்து அல்லது துளசிச் சார் பிழிந்து வாயில் இட வேண்டும். தாடையைச் சேர்த்துக் கட்ட வேண்டும். தாம்பூலமும் துளசிச் சாரும் கிருமிநாசினியாக இருந்து துர்நாற்றத்தைப் போக்கும். கண்கள் திறந்திருந்தால் அழுத்தி மூட வேண்டும்.

"பிள்ளைகள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் யாவரும் ஒவ்வொருவராகத் தனது பெயரைக் கூறியவாறு காய்ச்சி ஆறிய பசும்பாலைசிறு கரண்டியால் நெற்றியில் திருநீறு அல்லது திருமண் அணிவித்துப் போர்த்திய உடலின் மீது பூச்சரத்தை அழகாக இடலாம்."[42]

முதல் பூசை

இறந்தவரின் ஆன்மா உடலின் பக்கத்திலிருக்கும் எனச் சொல்லப்படுகிறது. உடலுக்கு அருகில் காமாட்சியம்மன் விளக்கேற்றி கொள்ளி வைப்பவர் தேங்காய் உடைத்து இருபக்கங்களிலும் வைத்து தட்டில் வாழைப்பழங்கள் வைக்க வேண்டும்.

---

42. தகவலாளி பெயர்: சரவணன் குருக்கள், ஸ்ரீ மகா காளியம்மன் கோவில் பூச்சோங், சிலாங்கூர்.

தூபம், தீபம், கற்பூர ஆரத்தி காட்ட வலமிருந்து இடமாகச் சுற்றிக் காட்ட வேண்டும். மற்ற குடும்ப உறுப்பினர்களும் விரும்பினால் தூபம், தீபம், கற்பூர ஆரத்தி காட்டி வணங்கித் திருநீறு பூசிக் கொள்ள வேண்டும். உடலைத் தெய்வமாக நினைத்துப் பூசை செய்து மணங்கமழும் ஊதுபத்திஇ சாம்பிராணி புகை அறை முழுதும் நறுமணம் வீசும்படிச் செய்ய வேண்டும். பன்னீர், இதர வாசனைத் திரவியங்கள் தெளிக்கப்படும். பெரிய மாலை ஒன்று போடப்படும்.

கூட்டுப் பிரார்த்தனை

இறுதிச் சடங்குத் தொடங்குவதற்கு முன் திருமுறை ஓதப்படும். "குறிப்பாக மாணிக்க வாசகர் அருளிச் செய்த சிவபுராணம் மற்றும் அடைக்கலப் பத்துப் பாடல்களை ஓத வேண்டும். பாடத் தெரிந்தவர்கள் அனைவரும் பிரார்த்தனையில் கலந்து கொள்ளலாம். இறந்தவரின் குலதெய்வ மந்திரங்கள் கூறலாம் சுலோகங்கள், மகாமிருத்துஞ்சாய மந்திரம் ஓதலாம். பிரார்த்தனைப் பாடல்கள் இசைக்கும்போது மற்றவர்கள் மாலைகள், பூக்கள், அனுதாப பூ வளையம் ஆகியவற்றைச் செலுத்தலாம்."[43] துக்கம் தாளாமல் கதறி அழுவது, கத்தி அழுவது தவிர்க்கப்பட வேண்டும்.

இறுதியாத்திரை ஏற்பாடுகள்

இறந்த செய்தி உறவினர்கள்இ நண்பர்கள் மற்றும் பொது மக்களுக்கும் போய்ச் சேர ஆவன செய்ய வேண்டும். கீழ்க்கண்டவற்றிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மயானத்தில் புதைக்க அல்லது தகனம் செய்யப் பதிவு செய்து கொள்வர். அனுபவமுள்ள சடங்கு செய்பவரை ஏற்பாடு செய்து கொள்வர். சடங்கு நடத்தும் நேரத்தையும் சோதிடரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டிருப்பர்.

சடங்கு செய்ய உரிமை உள்ளவர்கள்

மகன், பெயரன் (பேரன்), கொள்ளுப்பெயரன், இறந்தவரின் சகோதரன், சகோதரனின் பிள்ளைகள் ஆகியோர் ஈமச் சடங்கு செய்ய உரிமை உடையவர்கள். மகன்கள் பலர் இருப்பின் முத்த மகன் செய்வார். தாய்க்குத் தலைப் பிள்ளையும் தந்தைக்குக் கடைசிப் பிள்ளையும் கொள்ளி வைக்கத் தகுதி உடையவர் என்றும் சிலர் கூறுவார்கள். பாரம்பரியப்படி மூத்த பிள்ளை தந்தைக்குப் பிறகு குடும்பப் பொறுப்பை

---

43. தகவலாளி பெயர்: சரவணன் குருக்கள், ஸ்ரீ மகா காளியம்மன் கோவில் பூச்சோங், சிலாங்கூர்.

ஏற்பார். தந்தையின் சொத்துக்களை பராமரிக்கவும் தேவைப்பட்டால் உடன்பிறந்தோர்களுக்குப் பிரித்துக் கொடுக்கவும்இ தந்தை கடன் பட்டிருந்தால் அதை அடைப்பதற்கும் பொறுப்பேற்பவர் மூத்த பிள்ளையே ஆவார். எனவே ஈமச் சடங்கு செய்யவும் கொள்ளி வைக்கவும் மூத்த பிள்ளையே தகுதியானவர்.

பிள்ளைக்குப் பதிலாக கணவன் தன் மனைவிக்கு ஈமச் சடங்கு செய்வார். திருமணமாகாத பிள்ளைக்கு அவரது தந்தை ஈமச் சடங்கு செய்வார். எரியூட்டும் சடங்குகளைப் பிள்ளை செய்வார். பெயரன் ஈமத் தீயைக் கொளுத்துவார். பொதுவாகப் பெண்கள் ஈமச் சடங்குகளைச் செய்ய அனுமதிப்பதில்லை.

பிரேதத்தை இறந்த அன்றே எடுப்பது நல்லது என்று கூறப்படிகின்றது. 10 மணி நேரத்துக்குள் புதைக்க வேண்டும் அல்லது எரிக்க வேண்டும். 10 மணி நேரத்திற்குப் பிறகு சவம் கெடத் தொடங்கும். சாத்தியப்படாத சூழ்நிலையில் மறுநாள் அடக்கம் செய்யப்படுகிறது. சமய நோக்கில் பார்க்கும்போது 10 மணி நேரத்திற்குள் அடக்கம் செய்யப்பட வேண்டும். எரியூட்டும் ஈமச் சடங்கு ஒரு சமயச் சடங்குக்கு நிகரானது. இறந்தவரின் உடல் அக்னியைத் (ஹோமம்) தழுவுகிறது. அக்னியில் கெட்டுப்போன எந்தப் பொருள்களையும் அக்னித் தேவனுக்குப் (கடவுளுக்கு) படைத்தல் கூடாது. பிரேதம் வீட்டை விட்டுப் புறப்படும் நேரம் நல்ல நேரமாக இருப்பதை உறுதி செய்து கொள்வார்கள்.

கொள்ளிச் சட்டி

விரிவான விளிம்புள்ள மண் சட்டியே கொள்ளிச் சட்டியாகும். தென்னம் மட்டையை மூன்று பிரிவுகளாகப் பிளந்து கொள்ளிச் சட்டியோடு பிணைத்துக் கட்டி அதில் தீ வளர்த்திருப்பார்கள்.

பிரேத வண்டி அலங்காரம்

பிரேத வண்டியின் நாற்புறங்களிலும் வாழைக் கன்றுகள் கட்டப்படும். மங்கள காரியங்களுக்குச் செய்வதுபோன்று மா இலை, தென்னங் குருத்துத் தோரணம் கட்டுவார்கள். இறந்தவரின் படம் ஒன்று வண்டியின் முகப்பில் கட்டியிருப்பர்.

நீர்க்குடம் மற்றும் இறுதியாத்திரை சீர்வரிசை

இறந்தவரின் பிள்ளைகள், மருமகன்கள் நீர்க் குடங்கள் எடுப்பார்கள். இறந்தவர் சுமங்கலியாய் இருப்பின் அவரின் கணவரும் நீர்க் குடம் எடுப்பார். ஒற்றைப்படை எண் வருமாறு 3,5,7,9 பேர் வேட்டி கட்டிக் கொள்ள வேண்டும். மேல் சட்டை

அணியக் கூடாது. கொள்ளி வைப்பவர் நீர்க் குடம் எடுப்பதற்கு முன் துக்கம் அனுஷ்டிக்கும் பொருட்டு முடி இறக்கிக் கொள்ள வேண்டும். "இறுதியாத்திரை குளிப்பாட்டுவதற்குத் தேவையான சீர் வரிசைப் பொருள்கள் கொண்டு செல்லும் பெண்கள் நீர்க் குடம் எடுத்து வருவோருடன் செல்லவேண்டும். இறந்தவர் ஆணாக இருந்தால் அவரது சகோதரிகளும் பெண்ணாக இருந்தால் அவரது மருமகள்களும் மக்களும், நாத்தனார்களும் சீர்வரிசை எடுக்க வேண்டும். ஈமச் சடங்கின் சீர் வரிசையில் அடியிற் காணும் பொருள்கள் இருக்க வேண்டும். வேட்டி அல்லது வெளிர் நிறப் புடவை, ஒரு பூ மாலை, நல்லெண்ணெய், சிகைக்காய், பால், பன்னீர், மஞ்சள் தூள், சந்தனத் தூள், எலுமிச்சை, இளநீர், பழங்கள், வெற்றிலை, பாக்கு வேண்டும். நீர்க்குடம் எடுக்கவிருப்பவர்கள் தாய் மாமனால் குளிப்பாட்டப்படுவார்கள். விபூதி பூசிக் கொள்வார்கள். மல்லிகைச் சரம் பூவால் எளிய மாலை அணிந்து கொள்வார்கள். மேற்கு முகமாக வரிசையாக நின்று கொள்வார்கள். நீர்க்குடங்களுக்கும் விபூதி பூசி குடத்தின் கழுத்தில் மல்லிகைச் சரம் சுற்றுவார்கள். கொஞ்சம் விபூதியும் உதிரிப் பூக்களும் குடத்து நீரில் போடுவார்கள். ஊதுபத்தி கொளுத்தி கற்பூரம் ஏற்றி நீர்க் குடங்களுக்கு ஆரத்தி காட்டுவார்கள்."[44] சடங்கு நடைபெறும்போது பிரார்த்தனைப் பாடல்கள் பாடப்படும்.

நீர்க்குடம் எடுப்பவர்கள் ஒவ்வொருவராக மண்டியிட்டிருப்பர். தாய்மாமன் அவர்களின் இடத்தோலில் நீர்க்குடங்களை வைப்பார். நீர்க்குடங்களைத் தூக்கிச் செல்லும்போது வெள்ளைத் துணியை நீர்க்குடங்களுக்கு மேலே உயர்த்திப் பிடிப்பார்கள். நீரின் தூய்மை கருதியும் நீர்க் குடம் எடுப்பவர்களுக்கு நிழல் தரும் வகையிலும் இவ்வாறு செய்யப்படுகிறது. சீர் வரிசை எடுப்பவர்கள் நீர்க்குடங்களுக்கு முன்னால் செல்வர். வீட்டை அடைந்ததும் பிரேதத்தை வெளியே கொண்டு வந்து குளிப்பாட்டுவதற்கான ஒரு மேசை மீது தலை தெற்கு முகமாக இருக்குமாறு வைப்பார்கள்.

எண்ணெய், சிகைக்காய் சாந்து தடவுதல்

ஒரு தட்டில் நல்லெண்ணெய், சிகைக்காய்த் தூள், வெட்டப்பட்ட எலுமிச்சை பழத் துண்டுகள் கொண்ட தட்டை தலைப்பக்கமாக வைத்திருப்பர். கை கழுவ ஒரு

44. தகவலாளி டி. காளியப்பன் தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.

வாளியில் நீரும், கை துடைக்க ஒரு சிறு துண்டும் வைத்திருப்பர். பிரேதத்தின் தாடை, கை கால்களின் கட்டை நீக்குவர். கொள்ளி வைப்பவரைத் தவிர்த்து பிள்ளைகள், நெருங்கிய உறவினர்கள் எண்ணெய், சிகைக்காய் ஆகியவற்றை இடக்கையின் நடு மூன்று விரல்களால் பிரேதத்தின் இடப்பக்கம் நின்று தலையில் தடவுவார்கள். பின்னர் எலுமிச்சையைப் பிழிந்து விட்ட பின் அருகில் வைத்திருக்கும் நீரில் கை கழுவிய பின் துண்டால் துடைத்துக் கொள்வார்கள். இவ்வாறே மற்றவர்களும் செய்வார்கள்.

இந்து சமய நெறிப்படி வாழ்ந்தவர்களுக்கு கீழ்க் கண்டவற்றால் தெய்வத்திற்குச் செய்யும் திருமஞ்சனம் போன்று செய்யப்படுகிறது. மஞ்சள் தூள், பால், ஆரஞ்சு அல்லது எலுமிச்சைப் பழச் சாறு, இளநீர், சந்தனம், பன்னீர், இப்பொழுது அனைவருக்கும் இவ்வாறு செய்யப்படுகிறது. தற்கால சூழ்நிலையில் பெரும்பாலும் ஏற்கனவே பிரேதத்தை மருத்துவ மனையிலோ விட்டிலோ குளிப்பாட்டி சுத்தம் செய்திருப்பார்கள். மறுடியும் குளிப்பாட்டத் தேவையிருக்காது ஆகையால் நீர்க்குடத்திலுள்ள நீரைப் பிரேதத்தின் மீது தெளிப்பார்கள். சில வேளைகளில் குளிப்பாட்டித்தான் ஆக வேண்டும் என்ற சூழ்நிலையில் பிரேதத்தைச் சுற்றிலும் வேட்டி அல்லது புடவையால் மறைப்பு ஏற்படுத்திக் குளிப்பாட்டி புத்தாடை அணிவிப்பார்கள்.

பிரேதத்தின் அடியில் தர்ப்பைப்புல் அல்லது துளசி வைக்கப்படுகிறது. குளிப்பாட்டிய பிரேதத்திற்குப் பூக்களால் அலங்காரம் செய்யப்படுகிறது. இறந்தவர் சுமங்கலியாய் இருப்பின் கணவர் பெரிய மாலை ஒன்றை அணிவிப்பார். முன்பு ஏற்றியிருந்த காமாட்சியம்மன் விளக்கு, தட்டில் பழங்கள், வெற்றிலை, பாக்கு வைத்து தேங்காய் உடைத்து ஒரு மூடியில் வெற்றிலை பாக்கு, பழங்கள் வைத்து (காளாஞ்சி) தூப தீபம், கற்பூர ஆரத்தி காட்டி ஆன்மா சாந்தியடைய மனமார வேண்டிக் கொள்வார்கள். மருமகள் அல்லது அவர் போன்ற உறவினர் காமாட்சியம்மன் விளக்கை வீட்டுக்குள் எடுத்துச் சென்று பிரேதம் இருந்த இடத்தில் கருமாதி வரை எரியவிட வேண்டும்.

அணி நீக்குதல்

கைம்மை மகளிர் தங்களின் வளை, தொடி போன்ற அணிகலன்களை நீக்கி வாழ்ந்துள்ளனர். கரிகாலன் இறந்ததால் மெல்லிய இயல்புடைய உரிமை மகளிரும் அருங்கல அணி முதலான அணிகளை நீக்கினர் என்பதனை, “மெல்இயல் மகளிரும்

இழை களைந்தனரே" (புறம்.224:17) என்ற பாடல் வரி விளக்குகின்றது. வெளிமானின் இறப்பிற்குப் பின் அவரின் உரிமை மகளிர்தம் வளையல்களை நீக்கி அறைந்து அழுதனர். பரிசிலரும் வருந்தி அழ சுடுகாட்டுள் சென்று சேர்ந்தான் வெளிமான். இதனை (புறம்.237:10-14)என்ற கையறுநிலைப் பாடலில் பெருஞ்சித்தனார் பாடியுள்ளார். இத்தகைய கருத்தமைய(புறம்.238) பாடலிலும் கூறிச் செல்கிறார். கைம்மை நோன்புடைய பெண்டிர் வளை, தொடி, பூவணிதல் ஆகியவற்றை நீக்கியிருந்தனர். கணவன் இறக்கக் கைம்மை பூண்ட மகளிர் கூந்தல் மழிக்கப்பட்டது. இதனைக் கல்லாடனார், பாண்டியன் நெடுஞ்செழியன் கைம்மை கூரும் மகளிர்க்காக இரங்கிப் போர் தவிர்த்த நிலையால் காட்டிச் செல்கின்றார். கூந்தல் கொய்தலாகிய பழக்கம் பற்றி மா.இராசமணிக்கனார் "மொட்டையடிக்கும் பழக்கம் கணவற்கென வாழ்ந்த மகளிர் பிற ஆடவர்க்குத்தம் எழிலை விளங்கத் தோன்ற விரும்பாராதலின் உண்டான பழக்கமாகலாம் என்ற கருத்தினைத் தெரிவிப்பார். வளை, தொடி, பூவணிதல் ஆகியவற்றை நீக்கும் நிலைக்கும் இக்கருத்தே அடிப்படையாகலாம்."[45] என்ற உரையின் மூலம் சங்ககால கைம்மை நோன்பின் நிலைக்கான காரணத்தினை முன்வைக்கிறார். ஆய் அண்டிரனின் இறப்பின் போது அவரின் உரிமை மகளிரும் அவனுடன் சேர்ந்து உடன்கட்டை ஏறினார். இதனை,

"கோடுஏந்து அல்குல், குறுந்தொடி மகளிரொடு
காலன் என்னும் கண்ணிலி உய்ப்ப
மேலோர் உலகம் எய்தினன் எனாஅ" (புறம்.240:4-6)

என்ற பாடலினால் அறிவுறுத்தப் படுகிறது. பண்டை கால கைம்பெண்கள் கணவன் மீது பற்றும் பாசமும் கொண்டு தங்களுக்கென்று ஒரு அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்துள்ளனர். கணவனை இழந்த கைம்பெண்ணின் நிலை கவலைக்குரியதாகவே சங்க பாக்களில் காட்டப்பட்டுள்ளன.ஓல்லையூர் கிழார் மகன் பெருஞ்சாத்தன் இறந்ததால் அவ்வூரில் இளைய வீரர்கள், இளமகளிர், பாணன், பாடினி என்று எவரும் பூச்சூடிக் கொள்ளவில்லை என்பதனை, (புறம்.242:1-5) என்ற செய்யுள்வழி குடவாயிற் கீரத்தனார் அறிவுறுத்துகிறார். இதுபோன்று பாணரும் விறலியரும் பூச்சூடிக் கொள்ளாத நிலையை (புறம்.244) என்ற பாடல் கூறுகிறது.

---

45. மா.இராசமணிக்கனார், தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், பக்.97,98

இறந்த அன்றே தாலி கழற்றுவதாயிருந்தால் மனைவி கணவனின் தலைமாட்டில் இடப்பக்கமாக அமர்ந்து கணவனை நோக்கியவாறு அமர வேண்டும். உறவினரும் மனைவியும் ஒரு தட்டில் காமாட்சியம்மன் விளக்கு, மஞ்சள் துண்டு, ஒரு கிண்ணத்தில் பால், குங்குமம், தொடுத்த பூச்சரம் வைத்திருக்க வேண்டும். முதிர்ந்த உறவினருடன் மனைவி, இறந்த கணவனின் உடலுக்கு வெற்றிலை பாக்கு, தேங்காய், மாலை ஆகியவற்றை மாற்றிக் கொள்ள வேண்டும். பின்னர் இறந்த கணவனின் கையை தாலிக்கயிற்றுக்குக் கொண்டு வந்து, கணவனை இழந்த மற்றொரு பெண் தாலியைக் கழற்றி தட்டிலிருக்கும் பால் பாத்திரத்தில் போடுவார். தாலி கழற்றுவது அமங்கலமான ஒரு நிகழ்வாதலால் சுமங்கலிப் பெண்கள் இக்காட்சியைக் காணாமல் திரும்பிக் கொள்வர். அல்லது மறைப்புக்குத் திரையிடுவார்கள். காமாட்சியம்மன் விளக்கை வைத்திருப்பவர் விளக்கை வீட்டிற்குள் எடுத்துச் சென்று பிரேதம் இருந்த இடத்தில் வைப்பார். பின்னர் மனைவியை மூத்த மருமகள் அல்லது நாத்தனார் மனைவியின் தலையை முக்காடிட்டு வீட்டிற்குள் அழைத்துச் சென்று புடவையை மாற்றிக் கொண்டு அழைத்துவருவார். சிலர் சவ அடக்கத்தின்போது செய்யாமல் கருமாதியன்று இவ்வாறானச் சடங்கு நடத்துவர்.

கோடி போடுதல்

இறந்தவர்களுக்குக் கோடித் துணி போடுவது வழக்கம். இறந்தவர் ஆணாக இருந்தால் வேட்டியும், பெண்ணாக இருந்தால் வெளிர் நிறப் புடவையும் கொடுப்பார்கள். சில சமூகத்தினர் எந்த உறவினர் கொடுத்தார் என்பதைத் தெரிவிப்பார்கள். சம்பந்திகள் நாத்தனார், மாமன் அத்தை முதலியோர் கோடித் துணித் தருவார்கள்.

வாய்க்கரிசி போடுதல்.

பெரும்பாலும் ஆண்கள் மயானத்தில் வாய்க்கரிசி போடுவார்கள். “பெண்கள் மயானத்திற்கு வரமாட்டார்களாதலால் வீட்டுச் சடங்கின்போது வாய்க்கரிசி போடுவார்கள். 12 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு வாய்க்கரிசி போடுவதில்லை. பிரேதத்தின் நெஞ்சுப் பகுதியில் வெள்ளைத்துணி விரிக்கப்பட்டு தட்டில் வைக்கப்பட்ட அரிசியைக் கொஞ்சம் கையிலெடுத்து சவப் பெட்டியின் இடப் பக்கமாக நின்று மூன்று முறை இறந்தவர் வாயில் காட்டி நெஞ்சில் வைக்கப்பட்டுள்ள துணியில் போட வேண்டும். வாய்க்கரிசியோடு பணமும் போடுவதுண்டு. அந்தப் பணம் சடங்கு

செய்பவருக்கு வெகுமதியாக இருக்கலாம்."[46] பாத்திரத்திலுள்ள நீரில் கையைக் கழுவி துண்டால் துடைத்துக் கொள்ளப்படும்.

நெய்ப்பந்தம்

இறந்தவரின் பெயரன்கள் மற்றும் பெயர்த்திகள் சவத்திற்கு நெய்ப்பந்தம் பிடிப்பார்கள். சிறு குச்சியில் துணியைச் சுற்றி நெய்யில் தோய்த்து நெய்ப்பந்தம் கொளுத்தி பிரேதத்தை வலமிருந்து இடமாக மூன்று முறை சுற்றி வருவார்கள். நெய்ப்பந்தங்களை கொள்ளிச் சட்டியில் வைத்துக் கரி, சந்தனக் கட்டை ஆகியவற்றுடன் தணல் மூட்டப் பயன்படுத்துவர். சவத்தைச் சுற்றிலும் தரையில் குறிப்பிட்ட இடைவெளிக்கு ஒன்றாகத் துண்டாக வெட்டப்பட்ட வாழை மட்டையை வைத்த கற்பூரம் ஏற்றுவர். பின்னர் இறந்தவரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனைப் பாடல்கள்இ திருமுறைப் பாடல்கள் குறிப்பாகச் சிவபுராணமும் யாத்திரைப் பத்தும் பாடப்படும். பிரேதத்திற்கு விபூதியும் பூக்களும் போட்ட பின்னர் சவப் பெட்டியை மூடுவார்கள்.

சவப் பெட்டியைப் பிரேத வண்டியில் வைத்தல்.

சவப் பெட்டியைக் கவனமாக பிரேத வண்டிக்குக் கொண்டு சென்று முகம் வீட்டைப் பார்ப்பது போலிருக்கத் தலைப்பாகத்தை முதலில் நுழைய வைப்பார்கள். சவப் பெட்டியின் அடியில் பச்சை தென்னை ஓலையால் பின்னப்பட்ட தென்னங் கீற்று வைக்கப்படும். பிரேத வண்டிகள் இல்லாத முற்காலத்தில் சவத்தைப் பாடையில் வைத்துத் தூக்கிக் கொண்டு மயானத்திற்குச் செல்வார்கள். அந்த வழக்கப்படி இக்காலத்தில் தென்னங் கீற்றினை சவப் பெட்டியின் அடியில் வைக்கின்றனர். சங்கு ஊதி, சேகண்டி ஒலி எழுப்பப்படும்.

பெண்களின் இறுதி மரியாதை

துக்கத்திலிருக்கும் பெண்கள் பிரேத வண்டியிலிருக்கும் சவப் பெட்டியை வலமிருந்து இடமாக மூன்று முறை சுற்றுவர். கொள்ளி வைப்பவர் தணல் இருக்கும் கொள்ளிச் சட்டியுடன் வண்டியின் முன் இருக்கையில் அமர்வார். இன்னொருவர் வறுத்த நெல் பொறியையும் எள்ளும் கொண்டு வண்டியின் பின் இருக்கையில்

[46] .தகவாலாளி பி. முருகேசு தந்த தகவல், கிள்ளான், சிலாங்கூர்.

அமர்வார். பிரேத வண்டி புறப்படுவதற்கு முன் இறுதியாகக் கற்பூரம் ஏற்றி பெண்கள் வீழ்ந்து வணங்கி இறுதி மரியாதைச் செய்வர். பிரேத வண்டி புறப்படத் தொடங்கும்போது, இறந்தவர் திருமணம் ஆகியிருந்தால் மனைவியின் தலையில் புடவையால் மூடி வீட்டினுள் அழைத்துச் செல்வார்கள்.

பெண்கள் மயானத்திற்குச் செல்லும் வழக்கம் இல்லை

முற்காலத்தில் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. இப்போது அந்த வழக்கம் அறவே இல்லை என்று கூறலாம். எரியூட்டப்பட்ட கணவனின் உடலைப்பார்த்த மனைவி துக்கம் தாளாமல் எரியும் நெருப்பில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் விழ நேரிடும் என்பதற்காகப் பெண்களை மயானத்திற்குப் போக அனுமதிப்பதில்லை.

பிரேத ஊர்வலம்

பிரேத வண்டி செல்லும்போது வண்டியின் பின் இருக்கையில் அமர்ந்திருப்பவர் எள்ளையும் நெற்பொரியையும் கலந்து வழிநெடுக போட்டுக் கொண்டே வருவார். பிள்ளைகளும் பெயரக் குழந்தைகளும் பிரேத வண்டிக்கு முன்னால் செல்வர். மற்றவர்கள் பிரேத வண்டியின் பின்னால் சென்று மயானத்தை அடைவர்.

விடைபெறுதல்

உறவினர்களும் நண்பர்களும் தத்தம் இல்லம் திரும்பும்போது இறப்பு வீட்டாரிடம் போய் வருகிறேன் என்று சொல்லாமல் தலையை ஆட்டியோ கையால் சைகைக் காட்டியோ விடைபெறுவார்கள். போய் வருகிறேன் என்றால் மறுபடியும் ஓர் இறப்புக்கு வருவேன் என்ற பொருளாகுமாகையால் அப்படிக் கூறுவதில்லை.

வீட்டைச் சுத்தம் செய்தல்

பிரேத வண்டி சென்றவுடன் வீட்டைச் சுத்தம் செய்தல் நடைபெறும். வீட்டைக் கழுவும்போது கொஞ்சம் மஞ்சள் தூள் தண்ணீரில் கலந்து கழுவுவார்கள். வீடு மண்தரையாயிருந்தால் கோமயத்தால் மெழுகி கோசலம் தெளிப்பார்கள். கோமயமும் கோசலமும் கிருமி நாசினியாகப் பயன்படுகிறது. மலேசியாவில் இவ்வாறு செய்யத் தேவையில்லாத சூழல் உள்ளது. பெரும்பாலோர் பசு மூத்திரத்தைக் கோமயம் என்கிறார்கள். இறந்தவரின் மனைவி குளித்து வெள்ளைப் புடவையை உடுத்திக் கொள்ள வேண்டும். வெள்ளைப் புடவையை மாமனார் அல்லது அவரது சகோதரர்

புடவையை வழங்குவார். தற்காலத்தில் அதிகக் கவர்ச்சி இல்லாத சாதாரண புடவையை உடுத்துகின்றனர்.

வீட்டைச் சுத்தம் செய்த பின்னர் இறந்தவரை வைத்திருந்த இடத்தில் காமாட்சியம்மன் விளக்கோடு அவருடைய உருவப்படத்தை வைக்க வேண்டும். தூபம்இ தீபம்இ கற்பூர ஆரத்தி வலமிருந்து இடமாகக் காட்ட வேண்டும். விபூதி அணிந்து கொள்ள வேண்டும்.

மயான நுழைவாயில்

மயானத்தை அடைந்த பிரேத வண்டியிலிருக்கும் பிரேதத்தின் கால் பகுதி முன்னும் தலைப் பகுதி பின்னும் இருக்குமாறு மாற்றி தகனம் செய்யும் இடத்திற்கோ புதைக்கும் இடத்திற்கோ கொண்டு செல்ல வேண்டும். இறந்தவர் உலக பந்தங்களை விடுத்து இனி வரும் பிறப்பு வாழ்க்கையை ஏற்றுக் கொள்கிறார் என்பதன் அடையாளமாகக் கொள்ளப்படுகிறது. சிறிய அரிச்சந்திரனுக்குக் கோயில் இருந்தால் பூசை நடத்தி எரியூட்டும் இடம் அல்லது புதைகுழி உள்ள இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

இறந்தோரை எரித்தல்

பழந்தமிழர்களிடையே இறந்தபின் எரிக்கும் வழக்கம் இருந்துள்ளது. வெட்டி எரிக்கப்பட்ட கொல்லை நிலத்தில் குறவனால் துண்டுகள் ஆக்கப்பட்ட மரங்கள் போன்று கரிய புறத்தை உடைய விறகுகள் அதியமானின் உடல்மீது அடுக்கப்பட்டிருந்தன. இனி அந்த ஈமத்தீயானது அவன் உடலைச் சுடாமல் அணைத்தாலும் அணையட்டும் அல்லது வானத்தைத் தொடுமாறு அத்தீயானது மேல் எழுந்தாலும் எழட்டும் என்று அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் பாடியுள்ளதை,

“எரி புனக் குறவன் குறையல் அன்ன
கரிபுற விறகின.....
விசும்புற நீளினும் நீள்க”(புறம்.231:1-4)

என்ற பாடலுக்கு கு.வெ.பாலசுப்பிரமணியன் தரும் உரைவழி விளங்கிக் கொள்ள முடிகிறது. இப்பாடலானது ஈமத்தீயிக்கு தேவையான விறகினை குறவனிடமிருந்து பெற்றிருப்பதையும், அவ்விறகானது அதியமானின் உடல்மிது அடுக்கப்பட்டு எரிக்கப்பட்டதையும் விளம்புகிறது.

“இடுக ஒன்றோ! சுடுக ஒன்றோ!

படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே” (புறம்.231:1-4)

என்னும் பாவானது “பல்வேறு புகழை உடையவனின் தலையை வாளால் பிளந்தாலும், அன்றி தீயில் எரித்தாலும் என்ன? தக்கபடி செய்க” என்று நெடுஞ்செழியனைப் பேரெயின் முறுவலர் பாடியுள்ளதை கு.வெ.பாலசுப்ரமணியன் உரை வழி விளக்கியுள்ளார். இப்பாடலுக்கான வேறொரு கருத்தினை, “இதில் ‘இடுக’ என்பது இறந்தவர்களை ஓர் இடத்தில் இடுவதையும், ‘சுடுக’ என்பது எரியூட்டுதலையும்,‘படுவழிப்படுக’ என்பது இறந்தோரை நேரடியாக ஈமக்குழியில் வைப்பதையும் குறிக்கிறது. இம்மூன்று முறையும் வழக்கில் இருந்தமைக்கான சான்றுகள் குறிப்புகள் உள்ளது. கள்ளி வளர்ந்த பாழிடத்தின் புறத்தே ஒளிபொருந்திய தீச்சுட உடம்பு அழிந்தது பற்றி(புறம்.240:9-10)என்று குட்டுவன் கீரனார் பாடியுள்ளார்.ஆண்களின் இறப்புச் சடங்கினை கூறிச்செல்லும் சங்க இலக்கியங்கள் பெண்கள் இறந்தால் எரிக்கும் வழக்கம் இருந்தமையினையும் எடுத்தியம்புகிறது. இளமையுடைய என் மனைவி படுக்கையாக அடுக்கப்பட்ட தீயினால் கள்ளி செடிகள் முளைத்த சுடுகாட்டில் எரிக்கப்பட்டாள், நான்மட்டும் சாகாமல் இருக்கிறேன் என்று சேரமான் மாக்கோதை, பெருங்கோப்பெண்டு இறந்தக் காலை புலம்புவதை.(புறம்.245:1-6)என்ற பாடல் விளக்கும்.

உடல் முழுதும் குறிப்பாக நெஞ்சுப்பகுதியில் நெய் ஊற்றப்படும். கொள்ளி வைப்பவர் சவத்தின் முகத்தைப் பார்க்காமல் தலைப்பக்கம் மண்டியிட வேண்டும். நீர் நிரப்பப்பட்ட மண்பானையைத் தாய்மாமன் கொள்ளி வைப்பவரின் இடத் தோளில் வைப்பார். பானையை இடக்கையால் பிடித்துக் கொள்வார். வலக்கையில் எரியும் சந்தனக் கட்டையுடன் மூன்று முறை சுற்றி வருவார். முதல் சுற்று தொடங்கும்போது சடங்கு செய்ய உதவுபவர் ஓர் அரிவாளால் மண்பானையில் துளையிடுவார். நீர் துளை வழியே கொட்டும். சடங்கு செய்யும் உதவியாளர் கொட்டும் நீரைத் தன் புறங்கையால் பிரேதத்தின் மீது படுமாறு தட்டிவிடுவார். இவ்வாறே இரண்டாம் சுற்றிலும் செய்து மூன்றாம் சுற்றில் முன்புபோல் மண்டியிட வேண்டும். கையில் வைத்திருக்கும் எரியும் சந்தனக் கட்டையை பிரேதத்தின் தலைப்பாகத்தில் சிதையில் வைக்க வேண்டும். இது ஈமத் தீ எனப்படும். உதவியாளர் மண் பானையை கீழே போட்டு உடைப்பார். அவர் கையில் வைத்திருந்த அரிவாளைக் கொள்ளிவைத்தவரிடம் கொடுப்பார். தாய்மாமன்

வேட்டியால் கொள்ளி வைத்தவரின் தலையை மூடி அப்பால் கொண்டு செல்வார். கொள்ளி வைத்தவர் வீடு திரும்பும் வரை ஈமத் தீயைப் பார்க்கக் கூடாது. கொள்ளிச் சட்டியையும் சிதையில் போட்டுவிடுவார்கள். மின்சுடலையாக இருந்தால் மேற்கண்ட சடங்குகள் செய்யப்பட வேண்டும். பிரேதத்தை எரிப்பதற்கு விறகுக் கட்டைகள் அடுக்கப்பட்டிருந்தால் சவப் பெட்டியை வலமிருந்து இடமாகச் சுற்ற வேண்டும். பிரேதத்தின் தலை தெற்கு நோக்கி இருக்குமாறு வைக்க வேண்டும். தென்னங் கீற்றை சவப்பெட்டியின் அடியில் இருக்குமாறு பெட்டி வைக்கப்பட வேண்டும். கொள்ளிச் சட்டி தலைப் பாகத்தின் அருகில் வைக்கப்பட வேண்டும். புதைக்கப்படுவதாயிருந்தால் மேற்கூறியவாறு செய்ய வேண்டும்.

ஆண்கள் வாய்க்கரிசி போடுதல்

இறந்த குழந்தைகளுக்கு வாய்க்கரிசி போடும் சடங்கு செய்வதில்லை. இறந்த மற்றவர்களுக்கு வீட்டுச் சடங்கின்போது செய்ததுபோல வாய்க்கரிசி இடவேண்டும்.

அணிகலன்களைக் கழற்றுதல்

இறந்தவர் சுமங்கலியாக இருந்தால் அவர் கணவர் நகைகளைத் தாலி உட்படக் கழற்ற வேண்டும். கழற்றப்பட்ட அணிகலன்கள் மஞ்சள் துணியில் சுற்றி வீட்டிற்கு எடுத்துச் செல்லப்படும். கோடிப் புடவைகள் அல்லது வேட்டிகள் சில வீட்டிற்கு எடுத்துச் சென்று கருமாதி சடங்கிற்குப் பிறகு தருமம் செய்யப்படும்.

இறுதிப் பிரார்த்தனை

பிரேதத்தின் கால்மாட்டில் தலைவாழையிலையில் எண்ணெய் விளக்கேற்றி, வெற்றிலை, பாக்கு, பழங்கள் வைத்து ஊதுபத்தி ஏற்றி வைக்கப்படும். கொள்ளி வைப்பவர் தேங்காய் உடைத்து தூபம், தீபம், கற்பூர ஆரத்தி வலமிருந்து இடமாகச் சுற்ற வேண்டும். இறந்தவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்ய வேண்டும். கொள்ளி வைப்பவர் அணிந்திருக்கும் மாலையைக் கழற்றி சவப் பெட்டியில் வைக்க வேண்டும். நீர்க்குடங்கள் எடுத்தவர்களும் மேற்கூறியவாறு தூபம், தீபம், கற்பூர ஆரத்தி காட்டி அணிந்திருக்கும் மாலைகளை சவப் பெட்டியில் வைக்க வேண்டும். நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் பூசை செய்யலாம். இச்சடங்கின்போது பிரார்த்தனைப் பாடல்கள் ஓதப்படும்.

இறந்தோரைப் புதைத்தல்

இறந்தோரை புதைக்கும் வழக்கம் சங்ககாலங்களில் காணப்படுகின்றது. பிணங்களை தாழியினுள் இட்டு வைத்துள்ளனர். புதைப்பதற்கான இடமாக பருந்துகளும், அண்டங்காக்கைகளும் கோட்டான்களும் பேய்கூட்டத்துடன் விரும்பியவாறு செய்து இயங்குகின்ற சுடுகாடானது அமைந்துள்ளது. இதனை,

"கவிசெந் தாழிக் குவிபுறத்து இருந்த

…….. …….

பாடுநர் கடும்பும் பையென்றனவே"(புறம்.238:1-7)

என்ற பாடல் உறுதிபடுத்துகின்றது. வெளிமானின் இறப்பு குறித்து பெருஞ்சித்தனார் இவ்வாறாக பாடியுள்ளார். "பழந்தமிழர் இறந்தோரை எரித்தலோ அன்றிப் புதைத்தலோ செய்வர். புதைக்கப்பட வேண்டிய பிணங்களைத் தாழியிலிட்டு மண்ணில் புதைப்பர். பிணங்களை விலங்குகள் பற்றியிழுத்தலாகாது என்று கருதி தாழிகளைக் கவிழ்த்துப் புதைப்பர். எனவே 'கவிசெந்தாழி' என்றார்" என்று கு.வெ.பாலசுப்ரமணியன் தரும் உரைவிளக்கம் பிணங்களை புதைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தாழி, இற்தோரைப் புதைப்பதற்கான காரணம் ஆகியவற்றை விளக்குகின்றது. மேற்கூறிய சடங்குகள் செய்த பின்னர் கொள்ளி வைப்பவர் புதைகுழியில் வைத்த பிரேதத்தின் மீது இடப்புறங்கையால் மூன்று முறை மண்ணைத் தள்ள வேண்டும். இவ்வாறே உறவினர்களும் நண்பர்களும் செய்வார்கள். புதை குழி நன்றாக மூடியவுடன் பிரேதத்தை எரியூட்டுவதற்குச் செய்த சடங்குபோல் செய்வார். தாய்மாமன் வேட்டியால் முகத்தை மூடி அழைத்துச் செல்வார்.

பால் தெளித்தல்

புதைகுழிக்கு உடன் பால் தெளிப்பதும் உண்டு. பெரும்பாலும் மூன்றாம் நாள் பால் தெளிப்பார்கள். கொள்ளி வைத்தவர் உடன்பால் தெளித்தல் சடங்கில் கலந்து கொள்ளமாட்டார். ஏனெனில் கொள்ளி வைப்பவர் சடங்குகள் முடிந்தவுடன் தாய்மாமனால் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவார்.

மயான பொது மண்டபத்தில் அறிவிப்பு

மயான மண்டபத்தில் வேட்டியை விரித்து வைப்பார்கள். உறவினர்களும் நண்பர்களும் இறந்த குடும்பத்துக்கு உதவும் பொருட்டு பணம் அளிப்பார்கள். இந்த வழக்கம் மலேசியாவில் குறைந்து விட்டது. உறவினர்களில் ஒருவர் மூன்றாம் நாள்

பால் தெளித்தல் திகதி, நேரம் அறிவிப்பார். சுடலை நீறு (சாம்பல்) எடுக்கும் திகதி, நேரம் தெரிவிப்பார். அடுத்து எட்டாம் நாள் சடங்கு நிகழ்ச்சியும் கருமாதி செய்யும் விவரங்களையும் அனைவருக்கும் தெரிவிப்பார்.

வீட்டு வாயில் சடங்கு

"கொள்ளி வைத்தவர் முதலில் வந்து வேப்பிலையை வாயில் மென்று துப்பிவிட்டு வாயைக் கழுவ வேண்டும். அதே போன்று இறுதியாத்திரையில் கலந்து கொண்ட அனைவரும் இறப்பு வீட்டிற்கு வந்து கைகால் சுத்தம் செய்த பின் வாசலில் போடப்பட்ட உலக்கை அல்லது இரும்புத்தடியைத் தாண்டி வந்து இறந்தவரின் படத்துக்கு அஞ்சலி செய்த பின்னர் தத்தம் வீட்டிற்குச் சென்று குளிப்பார்கள். கசப்பான துக்க நிகழ்விலிருந்து மீள்வதற்காக வேப்பிலையை மெல்லுகிறார்கள். நமது சமய நூலின்படி மயானத்திலுள்ள தீய ஆவிகள் தொடர்ந்து வரும் என்றும் அவை உலக்கை அல்லது இரும்புத் தடியைக் கடக்க மாட்டாமல் மயானத்திற்கே திரும்பிவிடும் என்றும் நம்பப் படுகிறது. வீட்டிற்கு வந்தவர்கள் அனைவரும் குளிக்க வேண்டும்.[47] அனைவருக்கும் வீட்டிற்கு வெளியே சமைத்த சைவ உணவு பரிமாறப்படும்.

துக்க காலம்

இந்து சமயப்படி பிறப்பும் இறப்பும் தூய்மையின்மையை (தீட்டு) உருவாக்குகின்றன. ஒருவர் இறந்தால் அவருடைய பெற்றோர், பிள்ளைகள், பெயரன்கள், மருமகள்கள், சகோதரர்கள், திருமணமாகாத சகோதரிகள் மற்றும் அதே வீட்டிலிருக்கும் குடும்பத்தினர்கள் தீட்டுக் காலத்தை 10 நாள்களுக்கு அனுசரிக்க வேண்டும். மலேசியாவில் வழக்கமாக 16 நாள்கள் அல்லது 31 நாள்கள் துக்க (தீட்டு) காலத்தை அனுசரிக்கின்றனர். விபத்தில் இறந்தவர்கள், கொலையுண்டவர்கள் போன்றவர்களுக்கு துக்க காலம் 31 நாள்கள் அனுசரிக்கப்பட வேண்டும்.

துக்க காலத்தில் வீட்டில் சமைக்கக் கூடாது. துக்கத்தை அனுசரிப்பவர்கள் கேளிக்கை நிகழ்ச்சிகள் மற்றும் சுப காரியங்களில் கலந்துக் கொள்ளக் கூடாது. துக்க காலத்தில் உப்பு, காரம் கலந்த உணவை உண்ணக் கூடாது. ஒரு நாளைக்கு மூன்று

[47] . தகவலாளி இராஜம் முருகேசன் தந்த தகவல், கிள்ளான் சிலாங்கூர்.

முறை குளிக்க வேண்டும். புலால் உண்ணக் கூடாது. இன்றைய சூழ்நிலையில் துக்க காலத்தில் வீட்டில் சமைக்காமல் இருக்க முடியாது. திருமண நாள்களில், பண்டிகை நாள்களில், வேள்வி நாள்களில் ஒருவர் இறந்தால் அங்குத் தீட்டு இல்லை. (கருட புராணம் 11.39.10)

தினசரிப் பிரார்த்தனை

பிரார்த்தனைக்கு ஒரு வழிபாட்டு மேடை அமைத்து, இறுதிச் சடங்கு செய்தபோது வைத்த காமாட்சியம்மன் விளக்கு வைத்து இறந்தவரின் உருவப் படமும் வைக்க வேண்டும். காமாட்சியம்மன் விளக்கு 24 மணி நேரமும் ஒளியுடன் இருக்க வேண்டும். ஆத்மாக்கள் நீரில், கற்களில் மற்றும் ஜோதியில் தங்குவதாக இந்துக்கள் நம்புகிறார்கள். இறந்தவரின் ஆன்மா ஏற்றி வைத்த காமாட்சியம்மன் விளக்கு ஜோதியில் தங்கும். இந்த விளக்கு கருமாதி வரை எரிய வேண்டும். துக்க காலத்தில் பழங்களும், காய்ச்சிய பாலும் மட்டுமே படைக்க வேண்டும். சமைத்த உணவு படைக்கக் கூடாது. ஒவ்வொரு நாள் காலையிலும் பிண்டமும் எள் தர்ப்பணமும் அவர் பெயர் கூறிப் படைக்க வேண்டும். முதல் நாளில் பிண்டம் செய்து படைத்தது போலவே மற்ற நாள்களிலும் பிண்டம் செய்து படைக்க வேண்டும். பிண்டச் சோறு மட்டும் வீட்டில் சமைக்கலாம். பிரார்த்தனைப் பாடல்கள் பாடலாம். வீட்டுத் தினசரி பூசை ஆரவாரமின்றி அமைதியாகச் செய்யலாம். ஒரு சிலர் கருமாதி வரை வீட்டுப் பூசை செய்யக் கூடாது என்று கூறுவார்கள். கருமாதி வரை துக்கத் தீட்டு உள்ளவர்கள் கோயிலுக்குச் செல்லக் கூடாது. புனித மற்றும் சமய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூடாது.

புதைகுழியில் பால் தெளித்தல்

புதைக்கப்பட்ட சடலத்துக்குச் செய்யப்படும் சடங்கு இது. "சடலத்தின் தலைப் பகுதியில் சிறு துவாரம் தோண்டிக் கொள்ள வேண்டும். பக்கத்தில் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்துக் கொள்ள வேண்டும். பாலோடு கலந்த நவதானியங்களைப் புதைகுழியின் மேல் தூவ வேண்டும். நீர்க்குடம் எடுத்தவர்களும் உறவினர்களும் புதை குழியின் இடப் பக்கம் நின்று கொண்டு ஒவ்வொருவராக வலக்கையின் அடியில் இடக்கையை வைத்துக் கொள்ள வேண்டும். கைகள் புதைகுழியின் துவாரத்தை நோக்கி இருக்க ஈமச் சடங்கு உதவியாளர் பாலும் இளநீரும் குழிக்குள் செல்லுமாறு அவர்களின் கைகளின் மேல் ஊற்ற வேண்டும். பின்னர் பாத்திரத்திலுள்ள நீரில்

கைகளைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். மயானத்தில் எலும்புகள் சேகரிக்க உறவினர்களும் நண்பர்களும் செல்வார்கள். இந்தச் சடங்கிற்கு அடியிற் காணும் பொருள்களைக் கொண்டு செல்வார்கள். மலேசியாவில் இச்சடங்கு 3ஆம் நாள் செய்யப்படும். மயானத்தின் குறிப்பிட்ட இடம் வந்தவுடன் நான்கு திசைகளிலும் இருக்கும் ஆவிகளுக்குப் படைப்பதற்காக ஒரு எலுமிச்சை பழத்தை நான்காக வெட்டி நான்கு திசைகளிலும் எறிவார்கள்."[48]

திருமஞ்சனம் (அபிஷேகம்)

எலும்பு கலந்த சாம்பலைப் (அஸ்தி) பால், சந்தனம், தேன், இளநீர், பழச்சாறு, கருப்பஞ்சாறு, பன்னீர் முதலியவற்றால் திருமஞ்சனம் செய்யப்படும். கொள்ளி வைத்தவர், நீர்க்குடம் எடுத்தவர்கள், உறவினர்கள் கைகள் கீழ் நோக்கியிருக்குமாறு இருக்க வேண்டும். சடங்கு செய்யும் உதவியாளர், தலைமுதல் கால்வரை பால் சிதறி சாம்பல் மேல் படுமாறு ஊற்ற வேண்டும். பின்னர் மற்ற திருமஞ்சனப் பொருள்களையும் இவ்வாறே செய்ய வேண்டும்.

கொள்ளி வைத்தவர் நடுவிரலையும் மோதிர விரலையும் கொண்டு ஓர் எலும்புத் துண்டை எடுத்து மண்பானையில் வைக்க வேண்டும். அவ்வாறே மற்றவர்களும் எடுத்து வைக்க வேண்டும். எரியூட்டப்பட்ட இடத்தில் தலையிருந்த பகுதியில் சேகரித்த எலும்புகள் கொண்ட பானையின் முன்னால் தலைவாழை இலை வைத்து ஒரு தேங்காய் உடைக்க வேண்டும். கண் உள்ள முடியில் இரண்டு வெற்றிலை இரண்டு பாக்கு, இரண்டு வாழைப்பழங்கள் காளாஞ்சியாக வைக்க வேண்டும். சமைத்த தட்டைப்பயிரும் அகத்திக் கீரையும் நைவேத்தியமாக வைக்க வேண்டும். பின்பு தூபம், தீபம், கற்பூர ஆரத்தி வலமிருந்து இடமாகக் காட்ட வேண்டும். பூசைக்குப் பின் நைவேத்தியத்தின் ஒரு பகுதியை நான்கு திசைகளிலும் உள்ள ஆவிகளுக்கு எறிய வேண்டும். காளாஞ்சியை மண்பானையின் மேல் வைத்து மஞ்சள் துணியலை மூடி கடற்கரைக்கு அல்லது ஆற்றங்கரைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

---

[48] . மேலது

அஸ்தி (சாம்பல்) கரைத்தல்

கடற்கரை அல்லது ஆற்றங்கரையை அடைந்தவுடன் பானையை மூடியிருந்த துணியை அவிழ்த்து எலும்பும் சாம்பலும் (அஸ்தி) அடங்கிய பானையின் மேல் கற்பூரம் ஏற்ற வேண்டும். கற்பூரம் எரியும்போது பிரார்த்தனைப் பாடல்கள் பாடவேண்டும். கொள்ளி வைத்தவர் மண்டியிட்டு மட்பாணையை இடது தோளில் வாங்கிக் கொண்டு கடலுக்குள் அல்லது ஆற்றின் நீரோட்டத்தின் எதிர்த் திசையில் கழுத்தளவு நீரில் மூழ்கி பானையை மிதக்க விட வேண்டும். மூன்று முறை நீரில் மூழ்கிய பின்னர் திரும்ப வேண்டும். பானை மிதக்கும்போது ஒருவர் பானையை உடைத்துவிட வேண்டும்.

எட்டாம் துக்கம்

ஒருவர் இறந்த எட்டாவது நாள் அவரின் ஆன்மாவிற்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். வழிபாட்டு மேடை அமைத்து இறந்தவரின் உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மேடையை அலங்கரிக்க வேண்டும். சமைத்த உணவு, பழங்கள், இனிப்புகள் முதலியவற்றைப் படைக்க வேண்டும். பெரும்பாலும் அவர் விரும்பி உண்ணும் உணவுகளை வைப்பார்கள். மனநிறைவான உணவை இறந்தவருக்குக் கொடுக்க வேண்டும். இதனால் இறந்தவர் மகிழ்வார். (கருட புராணம் 11.38.6) கொள்ளி வைத்தவர், நீர்க்குடம் எடுத்தவர் மற்றும் உறவினர்கள் தூபம், தீபம், கற்பூர ஆரத்தி காட்டி வணங்குவார்கள்.

பூசைக்குப் பின்னர் உறவினர்களோடு நண்பர்களும் அமர்ந்து இறந்தவரின் ஆன்மா சாந்தியடைய திருமுறை ஓதுவர். மாணிக்கவாசகரின் சிவபுராணம்இ யாத்திரைப் பத்து ஆகிய பாடல்களும் இடம்பெற வேண்டும். சாந்தி மந்திரமும் கூறப்படும்.

கருமாதி - அந்தியேட்டி

இறந்தவர்களுக்குக் கருமாதி-அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதால் ஆன்மா மண்ணுலக அனைத்துப் பிடிப்பிலிருந்தும் விடுபட்டு இயமலோகம் நோக்கிச் செல்வதாக நம்பப்படுகிறது. “துக்க (தீட்டு) கால முடிவில் கருமாதி செய்யப்படுகிறது. இந்தியாவில் உள்ள இந்துத் தமிழர்கள் 10 நாள்கள் (சிலர் 3ஆம் நாள்இ 8ஆம் தாள்) துக்கம் அனுசரித்து 11ஆம் நாள் (கருமாதி செய்வார்கள். ஆனால் மலேசியாவில்

16ஆவது நாள் அல்லது 31ஆவது நாள் கருமாதி நடத்தப்படுகிறது."[49] இரண்டு செங்கற் கற்களை நிறுத்தி கருமாதி நடத்தப்படும். இதைக் கல் நிறுத்தல் என்பார்கள். இறந்தவரின் ஆன்மா பூசை நேரத்தில் விளக்கொளியில் தங்க வைக்க விளிம்புள்ள அகலமான மண் பானையில் விளக்கு ஏற்றுவார்கள். இதை மோட்ச தீபம் என்பார்கள். இறந்தவரின் ஆன்மாவைத் தகுந்த முறையில் அனுப்பி வைக்காதவரை ஆன்மா வீட்டைச் சுற்றிக் கொண்டிருக்கும். கருமாதி வரை ஆன்மா ஏற்றி வைத்த காமாட்சியம்மன் விளக்கில் தங்கியிருக்கும். கருமாதி நாளன்று ஆற்றங்கரையிலோ கடற்கரையிலோ கொண்டு சென்று தக்கச் சடங்குகள் செய்து மண்ணுலகை விட்டுச் செல்லச் செய்ய வேண்டும். உறவினர்களும் நண்பர்களும் சமைத்த சைவ உணவு, பழங்கள், இனிப்புப் பண்டங்கள், பூக்கள் கொண்டு வருவார்கள். இறந்தவருக்குப் பிடித்தமான உணவு இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆன்மா தெய்வத் தன்மையை அடைந்து வருமாதலால் மதுபானமோ புகைக்கும் பொருள்களோ இருக்கக் கூடாது. மனநிறைவுள்ள உணவை இறந்தவருக்குத் தர வேண்டும். இதனால் இறந்தவர் மகிழ்ச்சியடைந்து இயமதூதர்களுடன் செல்வார்.

கருமாதிக்கு முதல் நாள் வீட்டைக் கழுவி பொதுவான இடத்தில் சிறிய வழிபாட்டு மேடை அமைக்க வேண்டும். இறந்தவரின் உருவப்படம் மேடையில் வைக்க வேண்டும். புனிதத் தன்மையைப் புலப்படுத்தும் வகையில் படத்தையும் மேடையையும் அலங்கரிக்க வேண்டும். இறந்தவரின் ஆடை, கண்ணாடி போன்றவற்றை வைக்கலாம். இதுநாள் வரை எரிந்து கொண்டிருக்கும் காமாட்சியம்மன் விளக்கையும் அங்கே வைக்க வேண்டும். தண்ணீர் அல்லது இளநீர் வைக்க வேண்டும். ஒரு காளாஞ்சி (தேங்காய் மூடியில் இரண்டு வெற்றிலை, பாக்கு, இரண்டு வாழைப்பழங்கள் வைக்கப்பட்டவை) இருக்க வேண்டும். கருமாதி பூசை மூன்று கால பூசை நடத்தப்பட வேண்டும்.

மோட்ச தீபம்

அரிசி மாவை வறுத்து (சத்துமாவு) நீர் கலந்து பிசைந்து கொள்ள வேண்டும். பிசைந்த மாவை உருண்டையாக உருட்டி வெள்ளைத் துணியில் வைத்து அதே துணியால் மூடி முகப்பை மெல்லிய கம்பியால் கட்டிக் கொள்ள வேண்டும். சத்து

[49]. தகவலாளி செல்வவதி தந்த தகவல், கோத்தாதிங்கி, ஜோகூர்.

மாவுக்குப் பதிலாக நவதானியங்களை வைத்துக் கட்டலாம். மேற்புறமுள்ள துணி திரிபோல் இருக்க வேண்டும். சுத்தம் செய்த மட்பானைக்கு விபூதி மற்றும் சமய சின்னங்கள் இட்டு அலங்கரிக்கலாம். கட்டப்பட்ட மாவு உருண்டையை மட்பானையில் வைத்து இறந்தவர் உருவப் படத்திற்கு முன்னால் தரையில் வைக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் பூசை தொடங்க வேண்டும். முதல் காலப் பூசை, திருமஞ்சன நிகழ்ச்சி முடிந்தவுடன் கல் நிறுத்தல் நடத்த வேண்டும்.

கல்நிறுத்துதல்

(திருமணமானவர்களுக்கு மட்டும்)

கணபதி, சிவபெருமான் பிரார்த்தனைக்குப் பிறகு இறந்தவரின் பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் கொள்ளி வைத்தவர் மட்பானையில் நிறுத்தப்பட்ட இரண்டு செங்கற் கற்களுக்கும் திருமஞ்சனம் செய்யப்படும். திருமஞ்சனப் பொருள்களான எண்ணெய், சிகைக்காய், எலுமிச்சை அல்லது ஆரஞ்சு, இளநீர், சந்தனம் மற்றும் பன்னீர் ஆகியவற்றால் திருமஞ்சனம் செய்யலாம். திருமஞ்சனத்திற்குப் பிறகு கற்களையும் மட்பானையையும் நீரால் கழுவி சுத்தம் செய்யப்பட வேண்டும். பின்னர் இரண்டு கற்களையும் சேர்த்து கற்களின் நடுப்பாகத்தில் வெள்ளைத்துணியால் சுற்ற வேண்டும். முடிச்சுப் போட்ட தர்ப்பைப் புல்லைக் கற்களின் மேல் வைக்க வேண்டும். கற்களுக்குத் திருநீறு பூசி சந்தனம், குங்குமப் பொட்டிட்டு வழிபாட்டு மேடைக்கு முன் உள்ள இடத்தில் வைக்க வேண்டும்.

பூசை தொடங்குவதற்கு முன் தலைவாழையிலையில் உறவினர்கள், நண்பர்கள் கொண்டு வந்த சமைத்த சைவ உணவில் சிறிதளவு வைக்க வேண்டும். மது, வெண்சுருட்டு போன்ற புகைக்கும் பொருள்கள் வைக்கக் கூடாது. கொள்ளி வைத்தவர், இறந்தவரின் ஆன்மாவை வைக்கப்பட்டுள்ள கற்களில் தங்குமாறு வேண்டிக் கொள்ள வேண்டும். இந்தக் கற்கள் ஆன்மா தங்கும் சிலையாகக் கருதப்படுகிறது. ஒரு தேங்காயை உடைத்து கண்ணுள்ள பகுதியை காளாஞ்சியாகச் செய்து வைத்தபின் கொள்ளி வைத்தவர் தூபம், தீபம், நைவேத்தியம் கற்பூர ஆரத்தி வலமிருந்து இடமாகச் சுற்றிக் காட்ட வேண்டும். அவர் உளமாற இறந்தவரின் ஆன்மா முக்தியடைய வேண்டி கொஞ்சம் பூக்கள் எடுத்து கற்கள் மீதும் உருவப் படத்தின்மீதும் வைக்க வேண்டும். கற்களில் தங்கியிருக்கும் இறந்தவரின் ஆன்மாவைத் தரையில் வீழ்ந்து வணங்கி விபூதி அணிந்து கொள்ள வேண்டும்.

உறவினர்களும் நண்பர்களும் இவ்வாறே செய்வார்கள். இந்தச் சடங்கு நடைபெறும்பொழுது மற்றவர்கள் பிரார்த்தனைப் பாடல்கள், திருமுறைப் பாடல்கள் பாடப்படும். கூட்டுப் பிரார்த்தனையாக இறுதியில் பதினோரு முறை மகா மிருத்யுஞ்ச மந்திரம் கூறப்படும். பின்னர் சாந்தி மந்திரம் கூறுவார்கள். இறந்தவரின் ஆன்மாவுக்கு வலமிருந்து இடமாகக் கற்பூர ஆரத்தி காட்டி அனைவருக்கும் விபூதி பிரசாதம் வழங்கப்படும். பிறகு சைவ உணவு பரிமாறப்படும்.

கடற்கரை அல்லது ஆற்றங்கரைக்குப் புறப்படுதல்

மூன்றாம் கால பூசைக்குப் பிறகு விடியலுக்கு முன்னதாக கொள்ளி வைத்தவர் மோட்ச தீப (தீபம் அவியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்) மட்பானை அல்லது பூசைக்கு வைக்கப்பட்டிருந்த கற்களை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரை அல்லது கடலுக்குச் செல்ல வேண்டும். படைத்த உணவுப் பொருள்கள், அலங்கரிக்கப்பட்டிருந்த பூக்கள், மற்றும் தேவையற்ற அனைத்தையும் ஒரு பையில் போட்டுக் கொள்ள வேண்டும். ஆண்கள் வீட்டைவிட்டு வெளியே வந்தவுடன் வாசலருகில் ஓர் அர்ச்சகர் 'புண்ணியாக வாஜனா' பூசை நடத்துவார். அர்ச்சகர் கொஞ்சம் அரிசியும் காய்கறிகளும் மருமகளிடம் அல்லது தகுதியானவர்களிடம் கொடுத்து சமைக்கச் சொல்வார். சமைத்த உணவு படைப்பதற்கு நைவேத்தியமாகப் பயன்படும். இந்து சமய விதிப்படி கருமாதி பூசைக்குப் பிறகு இறந்தவரின் ஆன்மாவுக்குச் சமைக்கப்படும் உணவு வீட்டில் சமைத்ததாக இருக்க வேண்டும். வீட்டிலுள்ள பெண்கள் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து தாங்களும் குளித்து அர்ச்சகர் அளித்த புனித தீர்த்தத்தை வீடு முழுதும் தெளிக்க வேண்டும்.

ஆற்றங்கரைச் சடங்குகள்

ஆற்றங்கரை அல்லது கடற்கரையை அடைந்ததும் கற்கள் அல்லது மோட்ச தீப மட்பானையைத் தகுந்த இடத்தில் வைத்து கொள்ளி வைத்தவர் மோட்ச தீபம் அல்லது கற்களிலுள்ள ஆன்மாவிற்குத் தூபம், தீபம், நைவேத்தியம் (பழக் காளாஞ்சி) கற்பூர ஆரத்தி வலமிருந்து இடமாகச் சுற்றிக் காட்ட வேண்டும். ஆன்மாவைத் தரையில் வீழ்ந்து வணங்க வேண்டும். பூசைக்குப் பிறகு அவர் மண்டியிடப் பானையை அவரது இடத்தோளில் வைக்க வேண்டும். ஆறு அல்லது கடலில் நீரோட்டத்தின் எதிர்த் திசையில் நீரில் இறங்கி தோள் அளவு நீர் மட்டம் வரை சென்று பானையை விட்டு விட்டு மூன்று முழுக்குப் போட வேண்டும். நீரைச் சிறிதளவு எடுத்துக் குளித்தற்கு

அடையாளமாக்கத் தலையில் தெளித்துக் கொள்ள வேண்டும். நீரில் இறங்கி தோள் மட்டளவு போகும் வரை தீபம் அவிந்து போகாமல் பார்த்துக் கொள்வது முக்கியம். மட்சட்டியை உடைக்கத் தேவையில்லை. பானையின் பாரத்தால் பானை நீரில் மூழ்கி விடும்.

சடங்கு செய்யும் தேர்ச்சி பெற்ற அர்ச்சகர்கள் கடற்கரை அல்லது ஆற்றங்கரையில் நவக்கிரக பூசைகளோடு மற்றச் சடங்குகளையும் நிகழ்த்துவார்கள். துக்க காலம் முடியும் பொருட்டு அங்கேயே முகச்சவரம் செய்து கொள்ளலாம். சிலர் முடி இறக்குவார்கள். இருப்பினும் நீர்க்குடம் எடுப்பதற்கு முன் முடி இறக்குதல் நன்று. தாய்மாமனும் நெருங்கிய உறவினர்களும் வேட்டி, அங்க வஸ்திரம் இ சட்டை வழங்குவார்கள்.

அனைவரும் கோயிலுக்குச் செல்வர். கொள்ளி வைத்தவர் நெய்விளக்கேற்றி ஆன்மாவிற்காக அருச்சனை செய்யப்படும். அர்ச்சகர் கொடுக்கும் காளாஞ்சி, தீர்த்தம் ஆகியவற்றுடன் வீடு திரும்ப வேண்டும். கொள்ளி வைத்தவர் காளாஞ்சி, தீர்த்தம் ஆகியவற்றை வழிபாட்டு மேடையில் வைத்து இறந்தவரின் உருவப் படத்திற்குத் தூபம், தீபம், நைவேத்தியம் கற்பூர ஆரத்தி வலமிருந்து இடமாகச் சுற்றிக் காட்ட வேண்டும். விபூதி அணிந்து கொண்டு வந்த தீர்த்தம் கொஞ்சம் அருந்த வேண்டும். விரும்பினால் மற்றவர்களும் பிரார்த்தனை செய்யலாம். தீர்த்தத்தை வீடெங்கிலும் தெளித்துப் புனிதப்படுத்தப்பட வேண்டும். ஆன்மா தன் பயணத்தைத் தொடர்வதால் இனிமேல் தூபம், தீபம், கற்பூரம் இடமிருந்து வலமாகச் சுற்றலாம்.

தானம்

நமது சமய நூல்கள், இறந்தவர் சார்பாக தகுதியுள்ள அந்தணர்கள் மற்றும் அர்ச்சகர்களுக்கு தானம் தருமாறு கூறுகின்றன. (கருட புராணம் 11.33.12) கருட புராணத்தில் குறிப்பிட்டுள்ள முக்கியமான தானங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும் பின் வருமாறு: இறந்தவரை நினைத்துத் தானமாகக் கொடுக்கப்படும் உணவு ஆன்மாவுக்கு ஊட்டமளிக்கும். ஆடைகளைத் தானமாகக் கொடுத்தால், அழைத்துச் செல்லும் எமதூதர்கள் அந்த ஆன்மாவை அச்சுறுத்த மாட்டார்கள். செல்லும் வழியில் உள்ள கடுமையான வெப்பம் ஆன்மாவைச் சுடும். குடையைத் தானமாகக் கொடுத்தால் இறந்தவர் நிழல் பெறுவதோடு சுகத்தை உணர்வார்.

எந்தவிதத் துன்பங்களுமின்றி கடந்து செல்வார்கள். மற்றவர்கள் சூரிய வெப்பத்தால் அதிகமாகத் துன்பப்படுவார்கள். தண்ணீர் சொம்பைத் தானமாகக் கொடுத்தால் ஆயிரம் கிணறுகள் தோண்டியதன் பலனைப் பெறுவார். பூக்களுடன் வெற்றிலையைத் தானம் செய்தால் யமலோகத்தில் உள்ளவர்களை மகிழ்விக்கும். யமதர்மனின் உதவியாளர்கள் இறந்தவரைத் துன்புறுத்த மாட்டார்கள். தானங்கள் அளித்த பிறகு மதியம் வீட்டில் சமைத்த சைவ உணவு படைத்துப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அனைவருக்கும் உணவு பரிமாற வேண்டும். உணவில் பாகற்காய், அகத்திக் கீரை அல்லது வேறு கீரை இருக்க வேண்டும்.

கருமாதிக்கு மறுநாள்

இயற்கையாக இறந்திருந்தால் உறவினர்கள் குறிப்பாக சம்பந்தி வீட்டார், மைத்துனர்கள் கருமாதி முடிந்த மறுநாள் விருந்து வைப்பார்கள். இறந்தவரின் குடும்பத்தாருக்கு இவ்வாறு விருந்து வைப்பதன் வழி அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்புவர். விருந்து எளிமையாகவும் சைவ உணவாகவும் இருக்க வேண்டும். ஆனால் தற்போது இறந்தவரின் குடும்பத்தாருக்கு அசைவ உணவு விருந்து அளிப்பது வழக்கமாகி வருகிறது. நமது சமய நெறிகளைத் தெரிந்திராதவர்கள் இவ்வாறு செய்து வருவது வருத்தமளிக்கும் செயலாகும்.

திவசப் பூசை

திவசப் பூசை கோயில்களில் நிகழ்த்தப்படுவதில்லை. தெய்வீக ஒளி வீசும் கோயில் வளாகத்தில் நடைபெறும் திவசப் பூசையில் ஆன்மாக்கள் பங்கு கொள்ள இயலாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆற்றங்கரை அல்லது கடற்கரையில் நடத்தலாம். திவசப் பூசை ஒவ்வொரு குடும்பத் தலைவனும் அவர்களின் மூதாதையர்களுக்காகச் சிரத்தையுடன் செய்யப்பட வேண்டிய முக்கிய கடமையாகும். திவசம் இறப்புக்குப் பின்னும் அதனைத் தொடர்ந்தும் செய்யப்படும் பூசை முன்னோர்களுக்குச் செய்யப்படுவதாகும்.

திவசப் பூசை இறந்தவர்களின் சந்ததியினர் முன்னோர்களுக்குச் சிரத்தையுடனும் உண்மையாகவும் செய்யப்பட வேண்டும். இந்தப் பூசை மூன்று தலைமுறை மூதாதையர்களுக்கு அதாவது தந்தை, பாட்டன், பூட்டன் ஆகிய மூவரின் நன்மைக்காகச் செய்யப்படுகிறது. சமய நூல்கள், சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது போலக் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட திகதியில், குறிப்பிட்ட நேரத்தில்

சடங்குகளை நிறைவேற்ற வேண்டும். பிண்டம் அளிப்பதுடன் காலையில் தர்ப்பணம் (எள் கலந்த நீரை ஊற்றுதல்) இந்த பூசைச் சடங்கில் அடங்கும்.

தலைமுடி நீக்குதல் (தலைமுடிக் காணிக்கை)

இந்துக்கள் மேற்கொள்ள வேண்டிய சடங்குகளில் முடி நீக்குதலும் ஒன்று. பெரும்பாலும் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே முடி நீக்கப்படுகின்றன. முடி நீக்குதலை ஆன்மீகத்தோடுத் தொடர்புப்படுத்தி உள்ளனர். தைப்பூசம் போன்ற திருநாட்களிலும் குலதெய்வ கோயில்களிலும் முடி நீக்குவார்கள். இதை முடிக் காணிக்கை செலுத்துதல் என்றும் அழைப்பார்கள்.

முடி நீக்குதல் மனிதர்களின் கடந்தகால கெட்ட எண்ணங்கள், தீய சிந்தனைகள், தீய உணர்ச்சிகள் போன்றவற்றை நீக்குதல் ஆகும். எனவே, தலைமுடியை நீக்குவது கடந்த காலத்தில் அவன் அனுபவித்தத் துன்பங்கள், வேதனைகள், வலிகள் போன்ற அத்தனையையும் தன்னுடைய நினைவிலிருந்து நீக்குவதை-அழித்துவிடுவதைக் குறிக்கின்றது. பழைய துன்பங்களை ஒருவன் நினைவில் வைத்திருப்பது ஒருவனைப் பலவீனப்படுத்துகின்றது. எனவே அதனை நினைவிலிருந்து நீக்கிவிட்டு நல்ல நினைவுகள் மட்டும் மனத்தில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். அவனுள் இருக்கும் தீய குணங்களால் ஏற்படும் வெறுப்புணர்ச்சிகள், பகைமை, அறியாமை, சினம், வஞ்சகம் போன்ற அனைத்தையும் இறைவனின் சன்னிதியில் நீக்கிக் கொண்டு "மற்றவர் எனக்குச் செய்த தீமைகளையெல்லாம் நான் மறந்துவிட்டேன். என் நினைவில் இனி வெறுப்பு, பகைமை, சினம், பழிவாங்குதல் போன்ற எண்ணங்கள் இல்லை"[50] என்ற எண்ணம் மலர வேண்டும்.

பழந்தமிழரிடையே இறந்தோர் வழிபாடாக நடுகல் வழிபாடு, உணவு படைத்து வழிபடுதல் வழக்கத்தில் இருந்து வந்தமையை புறநானூற்றில் கையறுநிலைப் பாடல்கள் பதிவுச் செய்துள்ளன. தென்புலத்தார் கடன் இறந்தவர்களுக்கு அவர்களது மகன் செய்யும் கடமையே தென்புலத்தார் கடன் என்பர் இதனைப் பிதிர்கடன் என்று வடநூலார் கூறுவர். பிண்டோதக் கிரியை என்றும் கூறுவர். வடவர் வடதிசையை

[50] . தகவலாளி பி. குணசேகரன் தந்த தகவல், ரெங்கம், ஜோகூர்.

புண்ணிய திசை என்றும், தென்திசையை கூற்றுவன் திசை என்றும் கூறியுள்ளனர். இறந்தோர் தென்திசையைக் கண்ணயர்ந்தோர் தனியுலகில் ஆவி வடிவில் இருப்பதாக நம்புகின்றனர். பண்டைய காலம்தொட்டு இன்றைய காலம் வரையில் தமிழர்கள் வாழ்வில் சடங்குகளுக்கு மிக முக்கிய இடம் கொடுத்து வந்துள்ளனர். சடங்குமுறைகளையும் நம்பிக்கைகளையும்இன்று உள்ள மக்களும் ஒரளவு கடைப்பிடித்து வருகின்றனர்.

சீனர்களின் சடங்கு முறைகள்

பல இன மக்கள் வாழும் மலேசியாவிலுள்ள சீனர்களின் சடங்கு முறைகள் மற்ற இனச் சடங்கு முறைகளிலிருந்து சற்று மாறுபட்டவைகளாக இருக்கின்றன. சீன சமூகத்தினரும் தங்கள் தாயகத்தின் கலாச்சாரத்தைப் பின்பற்றுகின்றனர். தற்கால இளைஞர் சமுதாயம் சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கொண்டிராவிட்டாலும் முன்னோர்கள் வழிவகுத்த சம்பிரதாயங்களுக்கு ஓரளவு மதிப்பளிக்கிறார்கள்.

பூமி வழிபாடு

பாரம்பரியமாகச் சீனர்கள் பூமி கடவுளை (பூமா தேவியை) வழிபடும் பழக்கத்தைப் பின்பற்றி வருகின்றனர். பூமா தேவி மனிதர்களுக்கு ஆசீர்வாதம் வழங்குவதாக நம்புகின்றனர். சூரியன், சந்திரன், மற்ற கிரகங்கள், நட்சத்திரங்கள் முதலியவற்றையும் வணங்கி வருகின்றனர். தமிழ்களிடையே இத்தகைய வழிபாடுகள் இப்பொழுதும் இருந்து வருகின்றன.

முன்னோர் வழிபாடு

முன்னோர்களுக்கும் இப்போது உள்ள குடும்பத்துக்கும் தொடர்பு இருப்பதாக நம்புகின்றனர். ஆன்மா மறு உலகத்திற்குப் போவதற்கு முன் சிறிது காலம் தங்கும் மாளிகையாக முன்னோர் கோயில் விளங்குகிறது என்று நம்புகின்றனர். சமூகத்தில் மிகமுக்கிய பிரமுகர்களுக்கு தனிக் கோயில் மாளிகைக் கட்டுவார்கள். சாதாரண மக்கள் சிறிய கோயில்களை தங்கள் வீட்டில் சிறிய இடத்தை ஒதுக்கிக் கட்டிக் கொள்கின்றனர். முன்னோர்களை வழிபட்டு வருவதால் வழிபடுபவர்களின் வளமான வாழ்க்கைக்கு உதவுவதாக நம்புகின்றனர்."[51]

---

[51] . தகவலாளி பாங் ஜீ வா தந்த தகவல், செகூடாய் ஜோகூர்.

பழங்கால சந்நியாசிகள், குரு மகான்கள் வழிபாடு

கனஃபசியஸ் போன்ற மதகுருமார்களுக்கு மரியாதை செலுத்தும் நோக்கத்தோடு அவர்களை வணங்கி வந்தனர். இப்போதைய தலைமுறையினர் முன்னோர்களைப் பின்பற்றி பெரியோர்களையும் குரு மார்களையும் வணங்கி வழிபாடு செய்கின்றனர்.

கர்ப்பிணிப் பெண்களுக்கான சில விதி முறைகள்

கர்ப்பிணிப் பெண்கள் உடல் நலத்துடன் தன் வயிற்றிலிருக்கும் குழந்தையின் நலத்தையும் கருத்தில் கொண்டு நன்றாக உறங்க வேண்டும் . நல்ல சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும். நல்ல நூல்களைப் படிக்க வேண்டும். அழகான காட்சிகளைக் காண வேண்டும். "கர்ப்ப காலத்தில் வீட்டை இடித்துப் புதுப்பித்தல் போன்ற நடவடிக்கைகளைத் தவிர்க்கச் சொல்லுகிறார்கள். ஆழமாக மண்ணைத் தோண்டுதல், அடித்து நொறுக்குதல் போன்ற வேலைகளைத் தவிர்க்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள். இவை கர்ப்பிணிப் பெண்ணுக்கு விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும் என்று நம்புகின்றனர். சினம் கொள்ளுதல், நெடுநேரம் கூர்ந்து பார்த்தல் போன்ற செய்கைகளைத் தவிர்க்க வேண்டும்."[52] கர்ப்பிணிப் பெண்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஒரு மருத்துவர் கூறுவது போன்று பாரம்பரியமாக ஒரு தலைமுறையினர் அடுத்தத் தலைமுறையினருக்கு சொல்லி வந்ததை அப்படியே எதிர் கால சந்ததியினரும் பின்பற்றி வருகின்றனர்.

குழந்தை பிறந்தவுடன் முடி இறக்குதல்

குழந்தை பிறந்த 29ஆம் நாள் முடி இறக்கும் சடங்கு நடைபெறும். வெட்டப்பட்ட முடியை சிவப்புத் துணியால் கட்டித் தலையணையின் பக்கத்தில் 100 நாள்களுக்குத் தொங்க விடுவார்கள். பின்னர் முடியை ஆற்றில் எறிந்து விடுவார்கள். குழந்தை பெரியவரானதும் வீரமுள்ளவனாக இருப்பான் என்று நம்புகின்றனர். ஒரு மாதத்திற்குப் பின்னர் பௌர்ணமி நாளன்று குழந்தை பிறந்த செய்தியை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறிவிக்கும் பொருட்டு விழா நடத்துவார்கள்.

---

[52] . மேலது

ஆண் பருவமடைதலும் பெண் பூப்பெய்தல் சடங்கும்

ஆண் பிள்ளை வளர்ந்து பெரியவனாகி வாலிப வயதை அடைந்தால் பெரியவனாகிவிட்டான் என்ற அடையாளமாகக் குல்லா அணிவிப்பார்கள். பெண் பிள்ளைகளுக்கு தமிழர்கள் செய்வது போன்ற சடங்கு முறைகள் கிடையா. ஆண்களுக்குச் செய்வது போன்ற சடங்கு நிகழ்ச்சிகளில் இசை முழங்கக் கலந்து கொள்வர். "சீனர்கள் வணக்கம் கூறும் போது ஜப்பானியர்களைப் போல சற்று குனிந்து வணக்கம் கூறுவர். ஆண்கள் கைகுலுக்கிக் கொள்வார்கள். பெண்களுடன் கை குலுக்குவதும் உண்டு. பெரும்பாலும் இலேசாகத் தலையை ஆட்டிக் கொள்வார்கள். சீன வணிகர்களில் சிலர் தமிழர்களைப்போல பொருள்களைக் கொடுக்கும்போது வலக்கையோடு இடக்கையையும் சேர்த்துக் கொடுப்பார்கள் . பணத்தைப் பெறும்போதும் அவ்வாறே செய்கின்றனர்."[53]

நம்பிக்கைகள்

தமிழர், மலாய்க்கார்ர்களைப்போல சீனர்களும் தங்கள் மூதாதையர்கள் பின்பற்றி வந்த நம்பிக்கைகளைக் கடைப்பிடிக்கின்றனர். நாகரிகமடைந்துள்ள இந்நாளில் இளைஞர்கள் பலர் நம்பிக்கைகள் மீது அதிக நாட்டம் கொள்வதில்லை. இருப்பினும் மூதாதையர்கள் செய்து வந்ததை ஏற்றுக் கொள்கின்றனர். சில இனத்தவர்களுக்கு நன்மையளிக்கும் நம்பிக்கைகள் மற்ற இனத்தவர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத நம்பிக்கைகளாக இருக்கின்றன.

"சீனர்கள் முன்னோர்களுக்கு மரியாதை செலுத்தத் தவறுவதில்லை. அவர்கள் பின்பற்றி வந்த கலை கலாச்சாரத்தோடு அவர்கள் நம்பிக்கைகள் உண்மையில் நல்லதாகவும் இருக்கலாம். சில நம்பிக்கைகள் பொருள் இல்லாததாகவும் இருக்கலாம். இருப்பினும் மூதாதையர் பின்பற்றியது என்ற காரணத்திற்காகப் பின்பற்றி வருகின்றனர். நல்லது நடக்கும் என்று முழுமையாக நம்புவதால் அதைப் பற்றிச் சற்றும் சிந்தித்து முடிவுக்கு வராமல் அப்படியே பின்பற்றி வருகின்றனர். இந்த மனப்பான்மை உலகின் எல்லா இனத்தவர்களிடமும் காணப்படுகின்றது."[54] "இதனை,

---

[53] . தகவலாளி மைக்கல் ஓங் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

[54] . தகவலாளி ஒய் கே லீ தந்த தகவல், பூச்சோங்.

1. வாகனத்தின் எண் பட்டை 888, 88, 8 என்றிருந்தால் நல்வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகின்றனர். தமிழர்கள் எட்டு என்ற எண் தீமையளிக்கும் என்று நம்புகின்றனர்.

2. நான்கு என்ற எண்ணை விரும்புவதில்லை. சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் உள்ள சில கட்டடங்களில் நான்காவது மாடி என்பதற்குப் பதில் 3ஏ என்றிருக்கும்.

3. ஆறு நல்வாய்ப்புத் தரும் எண். புனிதம் வாய்ந்தது. ஆகவே புதியத் தொழில்களை இந்நாளில் தொடங்குவர்.

4. சீனக் கலாச்சாரத்தில் ஏழு, பேயைக் குறிக்கும். ஜூலை மாதம் ஏழு ஆகையால் அதைப் பேய் மாதம் என்கின்றனர். பேய் மாதத்தில் நரக வாயில் திறக்கப்படுமாதலால் மனித உலகத்துக்குப் பேய்கள் வருகின்றன என்று நம்புகின்றனர். எனவே சீனர்கள் ஏழாவது எண்ணை விரும்புவதில்லை.

5. ஒன்பது நல்ல எண். நீண்ட, நெடிய என்று உச்சரிக்கப்படுவதால் விரும்புகின்றனர்.

6. சிவப்பு மஞ்சள் நிறங்கள் நல்வாய்ப்பையும் கறுப்பு நிறம் தீமையையும் அளிக்கும் என்று நம்புகின்றனர்.

7. அன்னாசிப் பழம் நல்வாய்ப்பு அளிக்கும் என்று நம்புகின்றனர். தமிழர்கள் மங்கள நிகழ்ச்சிகளுக்குச் சீர் எடுக்கும்போது அன்னாசிப் பழத்தைச் சீர் தட்டில் வைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

8. சீனக் கர்ப்பிணிப் பெண்கள் மகிழ்ச்சியுடன் இருப்பது முக்கியம். ஏனெனில் அவர்களின் எண்ணங்கள் அவள் சுமக்கும் குழந்தையைச் சாரும். அறிவியல் நோக்கில் உண்மை என்பதை அறிகிறோம். அதிக உணர்ச்சி வசப்பட்டால் குழந்தையின் முகம் அழகற்று இருக்குமாம்.

9. தீய ஆவிகளிடமிருந்து குழந்தையைக் காப்பாற்ற கர்ப்பிணிப் பெண்கள் படுக்கைக்கடியில் கத்தியை வைத்துக் கொள்வர். தற்காப்புக்காகக் கத்தி வைத்துக் கொள்வதாக எண்ணத் தோன்றுகிறது.

10. கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காக சவ அடக்கத்திற்கும் திருமண நிகழ்வுக்கும் செல்லக்கூடாது. இது போன்று கர்ப்பிணிகளைப் பற்றி மேலும் சில நம்பிக்கைகளை நம்புகிறார்கள்.

11. வீட்டுக்குள் பேய்கள் நுழையாமல் இருக்க வீட்டு நுழை வாயிலின் மேல் சிறு கண்ணாடியைப் பொருத்தியிருப்பர். கண்ணாடியில் பேய் தன் உருவத்தைப் பார்த்துப் பயந்து ஓடிவிடுமாம். திருடர்கள் போன்ற அந்நியர் வருகையைத் தடுப்பதற்காக இவ்வாறு செய்யப்படுகிறது. பேய் மீது நம்பிக்கை உள்ளவர்கள் பேயை விரட்ட இவ்வாறு கண்ணாடி வைப்பதாக நினைக்கத் தோன்றுகிறது.

12. இரவு வேளைகளில் ஊசி, நூல், இரும்பாலான ஆயுதங்களைக் கொடுப்பதும் வாங்குவதும் தீமையளிக்கும் என நம்புகின்றனர். தமிழர்களும் இதைப் பின்பற்றுகின்றனர்."[55]

அருகி வரும் நம்பிக்கைகள்

1. சமையலறை வழிபாடு

பண்டைய புராணக்கூற்றுப்படி, சமையலறை அடுப்புக் கடவுள் சீன சந்திர 12ஆவது மாதத்தின் 23ஆம் திகதி சொர்க்கத்திற்குச் சென்று மரகதச் சக்கரவர்த்தியிடம் கடந்த ஓராண்டாக குடும்பத்தினர் செய்கைகளைப் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பார். "சீனர்கள் சமையலறையின் நுழைவாயிலில் ஈரடி பாடல் கொண்ட சுவடியை வைப்பார்கள். அந்தச் சுவடியில் "சொர்க்கத்தில் நல்லதைக் கூறுங்கள். பூமியில் அமைதியாய் இருங்கள்" என்று எழுதப்பட்டிருக்கும். இப்படிச் செய்தால் சமையலறைக் கடவுள் சொர்க்கத்திலுள்ள மரகதச் சக்கரவர்த்தியிடம் தங்களைப் பற்றி உயர்வாகக் கூறுவார் என்று நம்புகின்றனர்."[56]

இவர்கள் வைக்கும் படையலில் சர்க்கரை அனிச்சல் பொறிக்கப்பட்ட அப்பம், சோயா பருப்புத் தயிர், சோய சூப்பு முதலியன அடங்கும். இனியவை உண்டு இனியவையே கூறுவார் என்று நம்புகின்றனர். தற்காலத்தில் கிராம இளைஞர்கள் கிராமத்தை விட்டு தொழில் நிமித்தமாகப் பட்டணங்களில் நவீன வீடுகளில் வசிக்கின்றனர். நவீன வீடுகளில் கிராமத்திலுள்ளது போல் சமையலறை அடுப்பு இல்லை. ஆதலால் சமையலறை அடுப்புக்குச் செய்யும் வழிபாடு அருகி வருகிறது.

---

[55]. தகவலாளி லீ சின்மோய் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

[56] . தகவலாளி கோ வூ சூன் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

2. மரபுப்படி நல்ல நாள் தேர்ந்தெடுக்காமல் திருமணம்

சீனர்களின் சந்திர நாள்காட்டியின் 12ஆவது மாதத்தின் 23ஆம் நாளுக்கும் 30ஆம் நாளுக்கும் இடையில் தெய்வங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான தடையேதும் இல்லாதபோது குறிப்பிட்ட இந்நாள்களில் திருமணத்திற்கு நல்ல நாள் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியமில்லை என இளைஞர்கள் கருதுகின்றனர். எனவே வெவ்வேறு பட்டணங்களில் வாழும் இளைஞர்கள் தங்களுக்குக் கிடைக்கும் விடுப்பு நாள்களைப் பயன்படுத்தி அவசர அவசரமாக வந்துத் திருமணத்தை முடித்துக் கொள்கின்றனர். சீனர்களின் வசந்த விழா விடுமுறையையும் பயன்படுத்தி இளைஞர்கள் திருமணம் செய்து கொள்கின்றனர். தோஷம் எனப்படும் தடைகளைப் பற்றிக் கவலை கொள்வதில்லை, நல்ல நாள்களைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அவர்களுக்குக் கிடைத்த விடுப்பு நாள்களையே முக்கியமாக நினைக்கின்றனர்.

3. சீனர்களின் சந்திர நாள்காட்டி

சீனர்களின் பழமொழி ஒன்று'12ஆம் மாதத்தின் 28ஆம் நாளில் மாவை உப்பி வரச் செய்' என்பதாகும். ஒவ்வொரு வீட்டிலும் வசந்த விழாவிற்கு உணவு தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபடத் தொடங்குவார்கள். குறிப்பாக 'பாவ்' எனப்படும் 'பன்' (கொழுக்கட்டையில் பூரணம் வைத்து ஆவியில் அவிப்பது போன்றது) உருண்டையான (மோதகத்தை விடப் பெரிதாக இருக்கும்) மாவின் உள்ளே சிவப்பு பயிறுமாவும் சர்க்கரையும் கலந்த பூரணம் மற்றும் காய்கறி, புலால் முதலியவையும் பூரணமாகப் பயன்படுத்தி ஆவியில் அவிப்பார்கள். இதையும் 'பாவ்' என்று அழைப்பார்கள். பாவ் எனப்படும் பன் போன்ற ரொட்டிக்குச் சிவப்பு, பச்சை நிறப் பொட்டு வைத்து அலங்கரிப்பார்கள். இந்தப் பொட்டுகள் பாவின் உள்ளே இருக்கும் பூரணம் என்ன என்பதின் அடையாளமுமாகும். 12ஆவது மாதம் முடிந்து முதல் மாதத்தில் முதல் தேதிக்கும் ஐந்தாம் தேதிக்கும் இடையில் உணவு தயாரிப்பது கெட்ட நல்வாய்ப்பைத் தரும் என நம்புகின்றனர். எனவே உணவு தயாரிப்புகள் யாவும் 29ஆம் தேதிக்குள் முடித்துக் கொள்வார்கள். இப்பொழுது பாவ் போன்ற உணவுகளை எளிதில் கடைகளில் வாங்கிக் கொள்ள முடிகிறது.

4. வாசல் கதவு திறப்பு பட்டாசு வெடி

சீனர்களின் பாரம்பரியப்படி குடும்பத்தினர் சீனப்புத்தாண்டை வரவேற்க முந்துவர். புத்தாண்டுக்கு முதல்நாள் நள்ளிரவு முடிந்து மறுநாள் அதிகாலை 12.00மணி தொடங்கும்போது பட்டாசு கொளுத்தி வரவேற்பார்கள். பாரம்பரியமாக முதலில் சிறிய பட்டாசை நூலில் இணைத்து பின்னர் மூன்று பெரிய பட்டாசை இணைத்து வெடிக்கச் செய்வார்கள். சிறிய பட்டாசு வெடித்து பழைய ஆண்டு கழிவதாகவும் பெரிய பட்டாசு வெடிக்கும்போது புதிய ஆண்டு பிறப்பதை உணர்த்துவதாக நம்புகின்றனர். மூன்று பெரிய பட்டாசுகளும் உரத்த சத்தம் கொடுத்தால் வாணிபத்திலும் வேளாண்மையிலும் சிறந்து விளங்கும் நல்வாய்ப்புப் பெற்றுத் திகழ்வர் என்பது அவர்களின் நம்பிக்கை. மலேசியாவில் பட்டாசு வெடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் சில இடங்களில் தடையை மீறி பட்டாசு வெடிக்கப்படுகிறது.

5. சீனப்புத்தாண்டு நாளில் துடைப்பம் பயன்படுத்தக் கூடாது

வசந்த கால விழாவான சீனப்புத்தாண்டு தினத்தன்று சீனர்களின் பாரம்பரியப்படி உறவினர்கள், நண்பர்கள் வீட்டிற்குச் சென்று சிவப்பு உறையில் பணம் வைத்து வழங்கும் 'ஆங் பாவ்' நல்வாய்ப்பு பரிசு பெறுவதற்காகச் செல்வார்கள். "விருந்தினர் வருகையின்போது மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தினால் விடு குப்பை மிகுந்து இருக்கும். இருப்பினும் குப்பைகளைக் கூட்டி வெளியில் கொட்டுவது, தண்ணீர் ஊற்றிக் கழுவுவது தவிர்க்கப்படுகிறது. இவ்வாறு செய்வது மறுநாளும் தவிர்க்கப்படுகிறது. "பழைய ஆண்டே போய்வா" என்று அனுப்பி வைத்தபின்னர் புத்தாண்டின் நல்வாய்ப்புத் தன்மையை இழக்க விரும்பாததால் வீட்டைக் கூட்டுவதோ கழுவுவதோ இல்லை."[57]

6. நல்வாய்ப்புத் தேவதைக்குப் படையல் (பலி)

சீன மக்களின் வழக்கப்படி நல்வாய்ப்புத் தேவதைக்கு வசந்த கால புத்தாண்டில் வரும் ஆண்டு நல்வாய்ப்பு ஆண்டாக இருக்க வேண்டும் என்பதற்காகப் படையலிட்டு வணங்குவார்கள். படையலில் முக்கியமாக எண்ணெயில் பொரித்த முழுமையான பன்றி, ஆடு, கோழி, வாத்து, கெண்டை மீன் வைப்பார்கள். நல்வாய்ப்புத் தேவதை

[57] . தகவலாளி சின் ஈ மோய் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

ஐந்து பாதைகளைக் குறிக்கிறது. அவை மத்திய பாதை, தெற்கு, வடக்கு, மேற்கு மற்றும் கிழக்கு ஆகிய திசைகளிலுள்ள பாதைகளைக் குறிக்கும். மனிதன் நடமாடும் இப்பாதைகளின் வழி அவனுடைய வணிகமும் வேளாண்மையும் வளம்பெற நல்வாய்ப்புத் தேவதைக்குப் படையலிட்டு வணங்குகின்றனர்.

7. கருஞ்சிவப்பு நாய் தினம்

வசந்த விழாவின் - புத்தாண்டின் 3ஆம் நாள் துரதிர்ஷ்ட தினம் என்று சீனர்கள் நம்புகின்றனர். அவர்களின் பழங்கதையின்படி கருஞ்சிவப்பு நாய் என்பது கோபத்துக்கான தெய்வமாகும். யாராவது கருஞ்சிவப்பு நாயைச் சந்தித்தால் அவர்களுக்குக் தீமை ஏற்படுமாம். சீனர்களின் நம்பிக்கையின்படி அந்த நாளில் உறவினர், நண்பர்கள் வீட்டிற்குச் செல்வதோ விருந்தினர்களை வரவேற்பதோ கிடையாது. தற்காலத்து இளைஞர்கள் இந்த நம்பிக்கையைத் தகர்த்து மூன்றாம் நாள் நண்பர்களைச் சந்திக்கச் செல்கிறார்கள்.

8. சமையலறை அடுப்பு தெய்வத்தை வரவேற்றல்

பண்டைய புராணக்கூற்றுப்படிஇ சமையலறை அடுப்பு தெய்வத்தை சீன சந்திர 12ஆவது மாதத்தின் 23ஆம் திகதி அனுப்பி வைத்தவர்கள் புத்தாண்டின் 4ஆம் நாள் திரும்ப வருமாறு வரவேற்கிறார்கள். பெரியதான ஊதுபத்தி ஏற்றி, சாதாரண காகிதத்தாலான மாதிரி பணத்தை எரிப்பார்கள். பட்டாசு கொளுத்தி புலால் உணவு, பழங்கள் முதலியவற்றைப் படைத்து வழிபடுவார்கள். சீனர்களின் புராணக் கதையின்படி, சமையலறை அடுப்பு தெய்வமான மரகதச் சக்கரவர்த்தி ஒவ்வொரு குடும்பமும் மரகதச் சக்கரவர்த்தியை வரவேற்கிறார்களா என்பதை அறிந்து கொள்ள வேறொரு தெய்வத்தை அனுப்பி வைப்பார். இதனால்தான் சீனர்கள் புத்தாண்டின் 4ஆம் நாள் எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருப்பார்கள்.

9. ஏழைகளின் தெய்வத்தை அனுப்பி வைத்தல்

சீனர்களின் பழங்கதை, சுவான் யூ மன்னரின் மகன் தான் ஏழைகளின் தெய்வம் என்று கூறுகிறது. அத்தெய்வம் உயரம் குறைந்து குட்டையாக இருப்பார். பழைய கிழிந்த ஆடைகளைஅணிந்திருப்பார். அரிசிக் கஞ்சிதான் அவருடைய உணவு. மக்கள் அவருக்குப் புத்தாடைகளை அனுப்பி வைத்தாலும் முதலில் அவற்றைக் கிழித்து அணிந்து கொள்வார். இதன் காரணமாகவே கிழிந்த ஆடைகளை அணிந்து பூமியில் இருப்பதை விடப் புத்தாண்டின் 6ஆம் நாள் அவரைச் சொர்க்கத்துக்கு அனுப்பி

வைப்பது நல்லது என்று மக்கள் நினைக்கிறார்கள். இந்தச் சடங்கு இப்போது பெரும்பாலும் இல்லாமற் போயிற்று என்று கூறலாம்.

சீனர்களின் இறப்புச் சடங்கு

சீனர் வீட்டில் இறப்பு நடந்தால் அவர்களின் துக்கத்துக்கிடையே உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறிவிக்கத் தவறுவதில்லை. பெற்றோர்களின் சவ அடக்கச் சடங்குகளுக்காக பிள்ளைகள் கடனாளியானாலும் அதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றனர். உடனடியாக அடக்கம் செய்ய வேண்டிய கட்டாயம் எதுவும் இல்லை. சீனர்களிடையே உள்ள சில சமூகத்தினர் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக சவத்தை ஒரு வாரம் வரை கூட வீட்டில் வைத்திருப்பார்கள்.

"1. இறப்புச் செய்தி அறிந்தவுடன் வீட்டின் முன் பதாகைகள் வைக்க ஏற்பாடு செய்வர். வாசலில் வெள்ளைத் துணியைத் தொங்க விடுவார்கள். வாசலுக்கு வெளியே சேகண்டி ஒலிக்கும். இறந்தவர் ஆணாக இருந்தால் வாசலின் இடப்பக்கமும் பெண்ணாக இருந்தால் வலப்பக்கமும் சேகண்டி கட்டப்பட்டிருக்கும். ஒருவர் வீட்டிலேயே இறந்திருந்தால் சவப் பெட்டியை வீட்டினுள் வைத்திருப்பார்கள். வேறு எங்காவது இறந்திருந்தால் சவப் பெட்டியை வீட்டு முற்றத்தில் வைப்பார்கள். உடலின் தலைப் பக்கத்தில் அனுதாபப் பூ வளையம், அன்னாரின் புகைப் படம் மற்றும் பரிசுப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும். உணவு தவறாமல் வைக்கப்பட்டிருக்கும். அவர் பயன்படுத்தியச் சீப்பு இரண்டாக உடைத்து ஒன்று சவப் பெட்டியில் வைக்கப்படும் மற்றொன்று குடும்ப உறுப்பினரிடம் கொடுக்கப்படும்.

2. துக்கத்தில் உள்ள நெருங்கிய உறவினர்கள் வெள்ளைத் துணியுடன் சணல் கலந்த ஆடையை அணிந்து கொள்வார்கள்.

3. பாரம்பரிய முறைப்படி உறவினர்கள் பிரேதத்தின் தலைமுடியை நீக்குவர். நகங்களை வெட்டி விடுவார்கள். பின்னர் குளிப்பாட்டித் தூய்மைப் படுத்துவர். வாசனைத் திரவியங்கள் பூசி, மிகச் சிறந்த உடையைக் கறுப்பு, நீலம் அல்லது பழுப்பு நிறத்தில் அணிவிப்பார்கள். சிவப்பு நிற ஆடை கூடாது. இறந்தவர் பேயாக வருவார் என்று நம்புகின்றனர். அலங்கரிக்கப்பட்ட உடலைச் சவப்பெட்டியில் வைத்து மூடுவார்கள். சீனப் பாரம்பரியப்படி சவப் பெட்டி மூன்று திமில் கொண்ட நீள் உருண்டை வடிவத்தில் அமைந்திருக்கும். தற்காலத்தில் சிலர் மேற்கத்திய சவப்

பெட்டியைப் பயன்படுத்துகின்றனர். இறந்தவரின் மற்ற உடைகள் யாவும் எரிக்கப்படும்.

4. உணவு சமைத்தப் படைப்பார்கள். வீட்டிலுள்ள தெய்வச்சிலைகள் யாவும் சிவப்புத் தாளால் மூடப்பட்டிருக்கும். சவப்பெட்டியை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்காதவாறு வீட்டிலிருக்கும் முகம் பார்க்கும் கண்ணாடியைப் பார்வையிலிருந்து அகற்றப்பட்டிருக்கும். சவப்பெட்டியைக் கண்ணாடியில் பார்த்தால் அவரது குடும்பத்தில் இறப்பு ஏற்படும் என்று நம்புகின்றனர்.

5. சடங்கு செய்பவர்கள், புத்த சமயத்தவர்களாக இருந்தால் புத்த சமய குருமார்களுக்குப் பணம் கொடுத்து இறந்தவர் உடலைச் சமூகத்திலிருந்து வெளியேற்றுவதற்கும் ஆன்மா தன் பயணத்தைத் தொடரவும் செய்ய உதவுமாறு கேட்டுக் கொள்வர். சில சீன சமூகத்தவர்களின் வழிபாடுகளும் சடங்குகளும் இரவில் வெகுநேரம் வரை நீடிக்கும்.

6. சவ அடக்க இசைக்குழுவுக்கு ஏற்பாடு செய்வர். இசைக்குழு சவ அடக்கக் குழுவினருடன் மயானம் வரை இசைத்து ஆன்மா அமைதி பெறச் செய்வார்கள்.

7. சவப் பெட்டி காற்றுப் புகாதபடி மூடி வைக்கப்படும்.

8. பிரேதப் பெட்டியை சவ வண்டியில் வைத்து உறவினர், நண்பர்கள், இசைக் குழுவினர் இசை முழங்க மயானத்திற்கு ஊர்வலமாகச் செல்வர்.

9. சவப் பெட்டியைக் புதை குழியில் வைக்கச் சிறு மேடை அமைத்திருப்பார்கள்.

10. தாவோ மற்றும் புத்தமத சம்பிரதாயப்படி மந்திரங்கள் ஓதி இறுதியாகப் பிரேதத்தை அடக்கம் செய்வார்கள். சீன சமூகத்தினரின் சவ அடக்கம் சிறிய குன்றில் அல்லது மேடான இடத்தில் புதைப்பதை விரும்புவர். உயரமான சிறு குன்று அல்லது மேட்டுப்பகுதியில் புதைத்தால் அந்தக் குடும்பத்தார் மேல் நிலையை அடைவார்கள் என்பது அவர்கள் நம்பிக்கை. சவ அடக்கத்திற்கு வந்தவர்களுக்குச் சிவப்பு உறையில் பணம் வைத்துக் கொடுப்பார்கள். சிறிய வெள்ளைத் துண்டும் கொடுப்பார்கள். பணம் செலவு செய்வதற்கும், துண்டு முகத்தைத் துடைத்துக் கொள்ளவும் பயன்படுத்திக் கொள்ளலாம். சிலர் கை விசிறியும் கொடுப்பார்கள். இறந்தவரின் மூத்த மகன் புதைகுழியிலிருந்து கைப்பிடி அளவு மண் எடுத்துக் கொள்வார்.

அம்மண் இறந்தவருக்கு வீட்டில் பூசை செய்யும்போது பயன்படுத்திக் கொள்வார்கள். இந்நவீன காலத்தில் சூழ்நிலைக்கு ஏற்ப சவத்தைத் தகனம் செய்து அஸ்தியைச் சிறு ஜாடியில்

மயானத்துப் பக்கத்திலுள்ள சிறு அறையில் வைப்பார்கள். உறவினர்கள் ஆண்டுதோறும் அஸ்திக்குச் சடங்கு செய்து பிரார்த்திப்பார்கள்."[58]

சீனச் சமூகத்தினர் பிரேதத்தை வீட்டிற்குக் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் பிரேதத்தை இரண்டொரு நாள்களுக்கு வைத்திருந்து சடங்கு செய்வதற்காகவே உள்ள ஒரு மண்டபத்தில் வைத்திருக்க ஏற்பாடு செய்வார்கள். சீன சமூகத்தில் இறந்தவர்களுக்காக முதல் ஏழு நாள்கள், ஏழு ஏழு (7x7=49) நாற்பத்தொன்பது நாள்கள் மற்றும் நூறு நாள்கள் துக்க தினமாகப் பின்பற்றுகின்றனர்.

முதல் ஏழு நாள்கள்

இறந்தவரின் ஆவி தான் வாழ்ந்த இடத்திற்கு மறுபடியும் உரிமையுடன் வரும் என்று நம்புகின்றனர். இறந்தவரின் ஆவி நாற்பத்தொன்பது நாள்களுக்கு அங்கேயே உலா வரும் என்றும் நம்புகின்றனர். மற்ற நாள்களில் மனிதனாகவோ மிருகமாகவோ மறுபிறவி இன்னும் எடுக்கவில்லை. பசிப்பேயின் கதையில் கண்டபடி பொதுவாக இறந்தவரின் ஆவி முதல் ஏழு நாள்களில் தான் பிறந்து வளர்ந்த இருப்பிடத்திற்கு வருவதாக பொதுவாக சீனர்களில் பெரும்பான்மையினர் நம்புகின்றனர். இறந்தவரின் ஆவிகள் தனியாக அல்லது சங்கிலியால் பிணைக்கப்பட்டு பாதுகாவலருடன் வருவதாகவும் இரவு நேரத்தில் சங்கிலியின் ஒலி கேட்டதாகவும் பிராது கொடுக்கின்றனர்.

முதல் ஏழு நாள்களில் இறந்தவருக்கு மேசையின் மேல் உணவு வைக்கப்படுகிறது. இரவு வழிபாட்டின்போது தரையில் வெள்ளைப் பொடிகளைத் (தூள்) தூவி விட்டு மறுநாள் பார்த்தால் இறந்தவரின் காலடி தடம் பதிந்திருப்பதைக் காணலாம் என்று புராணக் கதைவழி அறியப்படுகிறது.

அடுத்த ஏழு ஏழு நாற்பத்தொன்பது நாள்கள்

சீனர்களில் பெரும்பான்மையினருக்கு ஏழு ஏழு நாற்பத்தொன்பது நாள்கள் எதைப் பிரதிநிதிக்கிறது என்று அறியாமலிருக்கின்றனர். ஏனெனில் இது வழிவழியாக தலைமுறைக்குத் தலைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. ஒரு சிலர் இறந்தவர் ஏழு ஏழு நாற்பத்தொன்பது நாள் மறுபிறவி எடுப்பதாகக் கூறுகின்றனர்.

---

[58] . தகவலாளி லிம் கோ கொக் தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.

நூறு நாள்கள் வழிபாடு

இறந்தவர்களை நினைத்துத் துக்கப்படுவது இயற்கை. சீனர்களில் பெரும்பாலோர் நூறு நாள்கள் துக்க நாளாகக் கடைப்பிடிப்பார்கள். சில சீன சமூகத்தினர் மூன்று ஆண்டுகள் துக்கநாளைக் கடைப்பிடிக்கின்றனர். துக்க நாள்களில் சீனர்கள் மங்களகரமான நிகழ்ச்சிகளிலும் மனமகிழ்ச்சி தரும் திகழ்ச்சிகளிலும் பங்கெடுக்க மாட்டார்கள். மற்ற இனத்தவர்களைப் போன்று குறிப்பாகத் தமிழர்களைப் போலவே சீனர்களும் துக்க நாளில் இறந்தவர்களுக்காக வழிபாடு நடத்துவார்கள். இறந்தவர் வீட்டுக் குடும்பத்தார் இறந்த ஆண்டு வரக்கூடிய சீனப் புத்தாண்டு கொண்டாட்டத்தைத் தவிர்த்து விடுவார்கள். இந்துக்களும் இறந்தவர் வீட்டுக் குடும்பத்தினர் எதிர் வரும் தீபாவளிப் பெருநாளைக் கொண்டாடுவதைத் தவிர்த்துவிடுவார்கள்.

<u>சீனர்களின் நம்பிக்கைகள்</u>

கர்ப்பிணிப் பெண்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய பாரம்பரிய நம்பிக்கைகளாவன,

குழந்தை பிறப்புக்கு முன்

வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களைத் தூக்குவதோ நகர்த்துவதோ தவிர்க்கப்பட வேண்டும். வீட்டைப் புதுப்பிக்கும் வேலைகளையும் தவிர்க்க வேண்டும். மேலும் குழி தோண்டுவது மற்றும் பிராணிகளை உணவுக்காகக் கொல்வது, பலம் கொண்டு அடித்தல், விரும்பத்தகாத காட்சிகளைக் காண்பது போன்ற செயல்பாடுகள் தவிர்க்க வேண்டும். இவற்றால் வயிற்றிலிருக்கும் குழந்தைக்குப் பிரச்சனைகள் ஏற்படலாம். சில உணவுகளைத் தவிர்த்தல் நல்லது. ஆட்டிறைச்சி, நண்டு ஆகியவற்றை உண்ணக்கூடாது. குழந்தைகள் அறிவு குறைபாடுகள் உள்ளவர்களாகப் பிறப்பார்கள்.

“படுக்கையின் மேல் கூர்மையான கத்தி, கத்தரிக்கோல் வைக்கக் கூடாது. பிறக்கும் குழந்தையின் உதடு விகாரமாக இருக்கும். பசை போன்றவற்றைத் தொட்டால் குழந்தையின் உடலில் மச்சம் போன்ற அடையாளங்கள் இருக்கும். மற்றவர்களைத் தரக் குறைவாகப் பேசினால் தரக் குறைவாகப் பேசப்பட்டவரைப் போலவே குழந்தை பிறக்கும்.

சீன சமூகத்தில் சிலர் குழந்தையின் பாதுகாப்பிற்கு வழிபாடு நடத்துவார்கள். போதிசத்வா குவான இன் என்னும் இரக்கமுள்ள

தேவதையை வணங்குவார்கள். இவ்வழிபாட்டால் தாயும் குழந்தையும் நன்றாக இருப்பார்கள் என்பது நம்பிக்கையாகும்."[59]

குழந்தை பிறப்புக்குப் பின்னர்

குழந்தை பிறந்து 30 நாள்களுக்குத் தாய் நல்ல ஓய்வு எடுக்க வேண்டும். கடினமான வேலைகளோ வீட்டு வேலைகளோ செய்யாதிருக்க வேண்டும். சளி போன்ற நோய்கள் வராமலிருக்க உடலைக் குளிர் தால் வெப்பமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஓய்வெடுக்கும் 30 நாள்களில் தலையோடு தாராளமாக நீர் ஊற்றிக் குளிப்பதைத் தவிர்த்தல் வேண்டும். உடல் தசைகள் மெலிந்து உறுதிப்படாமல் இருக்கும் ஆதலால் நீர் இறங்கிச் சளி தொந்தரவு ஏற்பட்டு குழந்தையைப் பாதிக்கும்.

மலேசியாவில் பெரும்பான்மையினராக மலாயர், சீனர், தமிழர் ஆகியோர் கர்ப்பிணிப் பெண்கள் எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்ற வகையில் ஓரளவு ஒத்திருக்கின்றனர். இவர்கள் தங்கள் மூதாதையர் காலங்காலமாகப் பின்பற்றியதை அப்படியே பின்பற்றி வருகின்றனர்.

சீனர்கள் சீனப்புத்தாண்டின்போது தவிர்க்கப்பட வேண்டியவை

"1. புத்தாண்டு நாளில் அனைவரும் மகிழ்ச்சியுடன் குதூகலமும் கொண்டு இருக்கும்போது ஒருவருக்கொருவர் வாதம் செய்தல் கூடாது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைத் தண்டிப்பதோ ஏசுவதோ கூடாது. அப்படிச் செய்தால் எதிர் காலத்தில் பெரியவர்களானதும் அதிகமாக வாதம் புரிபவராக இருப்பார்கள். பெற்றோரானதும் எப்போதும் குழந்தைகளைத் தண்டித்துக் கொண்டும் ஏசிக் கொண்டும் இருப்பார்கள்.

2. பெண்கள் சமையல் அறையில் கத்தி வைத்திருப்பதோ வெட்டிக் கொண்டிருப்பதோ கூடாது. அது தீய சக்தியைக் குறிப்பிடுவதாகும். சினத்தையும் ஆபத்தையும் விளைவித்து நல்வாய்ப்பைத் துண்டித்துவிடும். இதனால்தான் பெண்கள் புத்தாண்டின்போது உணவு சமைக்க மாட்டார்கள். முதல்நாள் சமைத்தவற்றை உண்பார்கள்.

---

[59] . தகவலாளி கோக் வா செங் தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்.

3. சமையல் பாத்திரங்கள் உடைந்தால் தீய வழியில் பணம் வரும் நல்வாய்ப்பு கிட்டும். எனவே உடைந்த பாத்திரங்களைக் குப்பை கொட்டும் தினம் வரை வட்டமான கொள்கலன்களில் போட்டு மூடி வைப்பார்கள்.

4. மணமான பெண்கள் தாய் வீட்டிற்குச் செல்லக் கூடாது. அப்படிச் எய்தால் தாய்வீடு வறுமை நிலைக்கு ஆளாவார்கள்.

5. வீட்டைக் கூட்டுவதும் குப்பையைக் குவித்து வைப்பதும் வீட்டின் செல்வத்தையும் நல்வாய்ப்பையும் குறைக்கும்.

6. மதிய உணவுக்குப் பின்னர் உறங்குவது கூடாது. ஆண்டு முழுவதும் ஒருவரைச் சோம்பேறியாக்கிவிடும்.

7. தலைமுடியைக் கழுவினால் நல்வாய்ப்பு கிட்டாமல் நழுவிவிடும்.

8. நண்பர்களைப் பார்க்கச் செல்லும்போது கறுப்பு அல்லது வெள்ளை ஆடை அணிந்து செல்லக்கூடாது. ஏனெனில் வெள்ளை மற்றும் கறுப்பு நிற ஆடைகள் சீனர்களின் சவ அடக்கத்தின்போது அணியப்படும் ஆடைகளாகும்.

9. சமீபத்தில் குடும்ப உறுப்பினர் இறந்தவர் வீட்டிற்குச் செல்லக் கூடாது.

10. காலை உணவுக்கு அரிசிக் கஞ்சி உண்ணக் கூடாது. ஏனெனில் பணக்காரராக முடியாது. கடந்த காலங்களில் ஏழைகள் மட்டுமே அரிசிக் கஞ்சி உணவு உண்பர்.

11. காலை உணவுக்குப் புலால் உண்ணக்கூடாது. ஏனென்றால் சைவ உணவு உண்ணும் தெய்வங்களில் பல புத்தாண்டு கொண்டாட்டத்திற்குக் காலையில் வருவர்.

12. உறங்குபவர்களைப் பெயர் சொல்லி எழுப்பக் கூடாது. அப்படி எழுப்பினால் தூங்குபவரை வருட முழுதும் மற்றவர்களால் தூண்டப்படுபவராகவே இருப்பார்.

13. தேவையற்ற மருந்துகளை சாப்பிடக் கூடாது. இல்லையெனில் ஆண்டு முழுதும் உடல்நலக் குறைவாக இருப்பார்.

14. புத்தாண்டு தினம் தண்ணீர் கடவுளின் பிறந்தநாள். ஆகவே துணி துவைக்கக் கூடாது.

15. கடன் வாங்கியவர்களிடம் புத்தாண்டு நாளில் பணம் கொடுக்குமாறு கேட்கக் கூடாது. இல்லையெனில் ஆண்டு முழுதும் கேட்க வேண்டியிருக்கும்.

16. புத்தாண்டு நாளில் உங்கள் சட்டைப் பையிலிருந்து பணம் எடுக்க அனுமதிக்கக் கூடாது. அந்த ஆண்டில் உங்கள் பணம் நட்டமாவதற்கு அறிகுறியாகும்."[60]

மனித சமுதாயத்தில் எல்லா இனங்களிடத்தும் பல நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. அவற்றில் பலவும் இன்று வரை நடைமுறையில் பின்பற்றபடுவது வியப்புக்குரியதாகும். நன்மையின் பால் உள்ள ஆர்வமும், தீமையின் பால் உள்ள அச்சமும் பெரும்பான்மையான நம்பிக்கைக்கு அடிப்படைக் காரணமாகும். பழந்தமிழரிடத்து நிலவிய மூட நம்பிக்கைகளும் அவற்றை ஒட்டிப்பிறந்த பழக்க வழக்கங்களும் அப்படியே சங்ககால மக்கள் பின்பற்றி வந்ததை நமக்கு அறிவுறுத்துகின்றன.

[60] . தகவலாளி வான் லீ வா தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்.

தொகுப்புரை

ஒரு தனி மனிதனின் பிறப்பு முதல் அவனுடைய இறப்பு வரையிலும் பல படிநிலைகளைத் தாண்டி வருகிறான். அவ்வாறாகச் செய்யப்படும் காரியங்கள் ஒரு சில வரையறுக்கப்பட்ட பழக்க வழக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டு சமுதாயத்திற்குள்ளாகவே பரவலாகச் செய்யப்படும் பாங்கினையும் காண முடிகின்றது. இவ்வழக்கங்களே காலப்போக்கில் சடங்குகள் என்று பெயர் பெற்றது. சடங்குளை ஒரு சமுதாயத்தின் பண்பாட்டின் அடிப்படையில் பிரிக்க முடியாத ஓர் அங்கம் எனலாம். உலகம் முழுவதும் சடங்குகள் காலத்திற்கேற்ப மாறியோ அல்லது சடங்குகளைச் செய்பவரின் தேவைக்கேற்ப எளிமைப்படுத்தப்பட்டோ, உருமாற்றம்பெற்றோ வளர்ச்சிக்கு வழிவகுத்து இருக்கலாம். ரிணாமத்திற்கு வித்திட்டிருக்கலாம். ஆனால், சடங்குகளை நிச்சயமாக யாராலும் மறக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது. சில இடங்களில் சடங்குகள் பரணாமத்திற்கு உட்படுத்தப்பட்டு விரிவாக்கவும் பட்டிருக்கலாம்.

'நம்பு' என்ற சொல்லாட்சியை 'விருப்பம்' என்ற பொருளிலும் 'நம்பிக்கை' என்ற பொருளிலும் பண்டைத் தமிழர்கள் கையாண்டுள்ளனர். காலப்போக்கில் அது நம்பிக்கையை மட்டுமே குறிப்பதாக நிலைபெற்றுவிட்டது. மனித வாழ்வின் உறுதிப்பாட்டிற்கு உறுதுணையாக நிற்பது நம்பிக்கைகளே எனலாம். நம்பிக்கைகள் உளவியல் சார்ந்ததாகவே அமைகின்றன. நம்பிக்கை என்பது ஒரு பொருளின் உண்மைத் தன்மையையும் நம்பகத்தன்மையையும் மனம் ஏற்றுக்கொள்ளுதலாகும். அறிவு, அச்சம், சந்தேகம் ஆகியன நம்பிக்கைகளோடு தொடர்படையன. மனித அனுபவங்கள், உய்த்துணரும் ஆற்றல் ஆகியனவற்றைப் பொறுத்து அதன் தொடர்புகளும் உறவுகளும் அமையும். ஆதலால் நம்பிக்கையை உளவியல் சார்ந்தது என்றே கொள்ளவேண்டியுள்ளது.

இறைவனிடம் கொண்டுள்ள அச்ச உணர்வும், இயற்கையின் அதீத செயற்பாட்டினால் ஏற்படுகின்ற மழை, இடி, மின்னல், பூகம்பம் பற்றிய தீய விளைவுகளும், மரணத்தைப் பற்றிய அச்சமுமே நம்பிக்கைகள் தோன்றக் காரணங்களாகின்றன. பிறப்பு முதல் இறப்புவரை பண்பாட்டிற்கு ஏற்ப பலதரப்பட்ட

நம்பிக்கைகளைத் தமிழக மக்கள் நடைமுறையில் கடைப்பிடித்து வருகின்றனர் என்பது இலக்கியங்களின்வழி அறியமுடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. முனைவர் க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும்
   நம்பிக்கைகளும், ப.15
2. தகவாளி ஒய் கே லீ தந்த தகவல், பூச்சோங்.
3. தகவாளி லீ சின்மோய், தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.
4. தகவலாளி கோ வூ சூன் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.
5. தகவலாளி சின் ஈ மோய், தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.
6. தகவலாளி லிம் கோ கொக் தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.
7. தகவலாளி சித்தி கல்சோம் தந்த தகவல், கோலகிள்ளான்.
8. தகவலாளி கல்சோம் பிந்தி அகமட் தந்த தகவல், சிப்பாங், சிலாங்கூர்.
9. தகவலாளி ஹசான் பின் இட்ரிஸ் தந்த தகவல், ரெங்கம், ஜோகூர்.
10. முரசு நெடுமாறன், மலேசியத் தமிழ்க் கவிதைக்
    களஞ்சியம், ப.46
11. மேலது, ப. 49
12. தகவலாளி அப்துல் ரஹ்மான் பின் ரஷீத் தந்த தகவல், கிரிசெம்பிலான்
13. முனைவர் க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும்
    நம்பிக்கைகளும், ப.02
14. ஆ. சிவசுப்பிரமணியன், மந்திரமும் சடங்குகளும், ப. 47
15. **பண்பாட்டு மானிடவியல், பக்தவத்சல பாரதி, ப.14**
16. சாமி, பி.எல்., சங்க இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, ப. 43
17. முனைவர் க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும்
    நம்பிக்கைகளும், ப.250
18. தகவலாளி க. இராமன், தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்.
19. மேலது
20. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்,
    முனைவர். க. காந்தி, ப.63

21. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், க. காந்தி, ப.63
22. ஆ. சிவசுப்பிரமணியன், மந்திரமும் சடங்குகளும், ப. 68
23. தகவலாளி திருமதி. சுப்பம்மாள் தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்.
24. மேலது
25. தகவலாளி பெயர்: சரவணன் குருக்கள், ஸ்ரீ மகா காளியம்மன் கோவில் பூச்சோங், சிலாங்கூர்.
26. . தகவலாளி திருமதி. காமாட்சி தந்த தகவல், கேர்தாதிங்கி, ஜோகூர்.
27. மேலது
28. மேலது
29. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், முனைவர். க. காந்தி, ப.58
30. சுந்தர மூர்த்தி இ., பழந்தமிழ் இலக்கியத்தில் நிமித்தங்கள், ப. 22
31. அ.கா. பெருமாள், உணவு பொருட்கள், ப. 115
32. முனைவர் தி. மகாலெட்சுமி, திருமந்திரமும் தியானமும், ப.11
33. தகவலாளி முருகையா தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்
34. புறநானூறு, கழக வெளியீடு, ப.64.
35. தகவலாளி முருகையா தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்
36. முனைவர் தி. மகாலெட்சுமி, திருமந்திரமும் தியானமும், ப.4
37. தகவலாளி ராஜா காசிம், தந்த தகவல், பூச்சோங், சிலாங்கூர்
38. பாவேந்தர் பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைத் தொகுப்பு, ப.64
39. சு.சக்திவேல், நாட்டுப்புறவியல், ப.89
40. முனைவர் தி. மகாலெட்சுமி, திருமந்திரமும் தியானமும், ப.39
41. தகவலாளி, இராமசாமி தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்.
42. தகவலாளி பெயர்: சரவணன் குருக்கள், ஸ்ரீ மகா காளியம்மன் கோவில் பூச்சோங், சிலாங்கூர்.

43. மேலது

44. தகவலாளி டி. காளியப்பன் தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.

45. மா.இராசமணிக்கனார், தமிழர் பழக்க வழக்கங்களும்
நம்பிக்கைகளும், பக்.97,98

46. தகவாலாளி பி. முருகேசு தந்த தகவல், கிள்ளான், சிலாங்கூர்.

47. தகவலாளி இராஜம் முருகேசன் தந்த தகவல், கிள்ளான் சிலாங்கூர்.

48. மேலது

49. தகவலாளி செல்வவதி தந்த தகவல், கோத்தாதிங்கி, ஜோகூர்.

50. . தகவலாளி பி. குணசேகரன் தந்த தகவல், ரெங்கம், ஜோகூர்.

51. தகவலாளி பாங் ஜீ வா தந்த தகவல், செகூடாய் ஜோகூர்

52. மேலது

53. தகவலாளி மைக்கல் ஓங் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

54. தகவலாளி ஒய் கே லீ தந்த தகவல், பூச்சோங்.

55. தகவலாளி லீ சின்மோய் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

56. தகவலாளி கோ வூ சூன் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

57. தகவலாளி சின் ஈ மோய் தந்த தகவல், செகூடாய், ஜோகூர்.

58. தகவலாளி லிம் கோ கொக் தந்த தகவல், குளுவாங், ஜோகூர்.

59. தகவலாளி கோக் வா செங் தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்.

60. தகவலாளி வான் லீ வா தந்த தகவல், ஜோகூர் பாரு, ஜோகூர்.

முடிவுரை

மலேசிய நாட்டில் பெரும்பான்மையினராக வாழும் மலாயர், சீனர் மற்றும் தமிழர்கள் புலம் பெயர்ந்தவர்களாவர். இவர்கள் புலம் பெயந்த காலம் ஓரினத்திற்கு ஓரினம் மாறுபடுகிறது. இவர்களின் மொழி,கலை, கலாச்சாரம், பண்பாட்டுக் கூறுகள் இப்பொருண்மையைக் கொண்டுள்ளது. இவர்கள் புலம் பெயர்ந்தவர்கள் ஆதலால் தங்கள் முன்னோர்கள் வாழ்ந்த நாட்டின் மொழி, கலை கலாச்சாரத்தை இயல்பாகவே கொண்டு புலம்பெயர்ந்த நாடுகளிலும் கடைப்பிடித்து வாழ்ந்து வருவது தவிர்க்க முடியாதது.

விழாக்காலங்களிலும் பண்டிகை நாள்களிலும் பல்லின மக்கள் வாழும் மலேசியாவில் அவரவர் பாரம்பரிய உடை அணிந்து கொண்டாடுவது மலேசியாவில் காணப்பெறும் காட்சியாகும். ஓர் இனத்தாரின் உணவை மற்ற இனத்தவர் உண்டு சுவைத்து அவ்வுணவை சமைக்கவும் கற்றுக் கொள்கின்றனர். பாரம்பரிய நடன நிகழ்வுகள் காணக் கண்களுக்கு விருந்தாக அமைகிறது. சீனர்களின் சிங்க நடனமும், கடல்நாக நடனமும் உள்நாட்டவரை மட்டுமின்றி சுற்றுலாப் பயணிகளையும் கவரும் தன்மையது. தமிழர்களின் பரத நாட்டியம், மலாயர்களின் பாரம்பரிய நடனங்களும் ஒருசேரக் காணக்கூடிய இடம் மலேசியா ஆகும்.

உலகின் பலபாகங்களுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் தங்களின் கலை கலாச்சாரத்தை மறந்து குடியேறிய நாட்டின் கலை, கலாச்சாரத்தையே பின்பற்றி வருவதைக் காணலாம். ஆனால் மலேசியாவில் புலம் பெயர்ந்த மக்களின் பரம்பரையினர் தங்கள் கலைஇ கலாச்சாரம்இ பண்பாட்டுக் கூறுகளை மறந்து விடாமல் கட்டிக் காத்து வருவது மலேசியாவில் மட்டுமே.

பல்லின மக்கள் பல சமயங்களைப் பின்பற்றுபவர்களாக இருக்கின்றனர். நாட்டில் ஒவ்வொருவரும் தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்றுவதற்கு அரசு வழிபாட்டுச் சுதந்திரம் அனுமதித்துள்ளது.

மக்கள் வெவ்வேறு மொழி கலை, கலாச்சாரத்தைப் பின்பற்றினாலும் மற்ற இனங்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து வாழ்ந்து வருவது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கின்றது.

பல்லாண்டு காலமாக மக்களிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு, மற்றவர்களின் சமயத்தையும் கலாச்சாரத்தையும் மதித்தல் முதலியன நீடித்து வருவதால் நாட்டில் அமைதி, சுபிட்சம் காணும்போது மக்களின் நல்லெண்ணம் வெளிப்படுகிறது.

மலேசியாவில் பெரும்பான்மையினர் இனமான மலாயர், சீனர் தமிழர்களின் மரபுகளும் நம்பிக்கைகளும் பலவாறாக ஒற்றுமையைக் காணலாம். குழந்தை பிறந்தால் தொட்டிலில் போடுதல், பெயர் சூட்டுதல், முடியிறக்குதல் ஆகியன மூவினங்களிலும் உண்டு. இறப்புச் சடங்கின்போது ஆன்மாவின் சாந்திக்காகப் பிரார்த்தனை செய்கின்றனர். சீனர்களும் தமிழர்களும் இறந்தவர்களுக்கு முன்னோர்களுக்குப் பிரார்த்தனை நடத்துகின்றனர். மூவினத்தவர்களும் பேய் உண்டு என்ற நம்பிக்கையில் வாழ்கிறார்கள். பல்லினங்கள் வாழும் மலேசியாவில் வேற்றுமையில் ஒற்றுமையைக் காண முடிகின்றது.

துணைநூற் பட்டியல்

1. இராமசாமி. பி. டாக்டர். - மலேசியத் தோட்டத் தொழிலாளர் வாழ்வும் போராட்டங்களும், செம்பருத்தி பதிப்பகம், கோலாலம்பூர். முதற்பதிப்பு 1999.

2. குறிஞ்சி வேந்தன் .இரா. - மலாயா தமிழர் சரித்திரம், பாவை பிரிண்டர்ஸ், சென்னை. முதற்பதிப்பு 2013.

3. சந்தியா நடராஜன் .அ - மதுரைத் தமிழ்ப் பேரகராதி, சந்தியா பதிப்பகம், எண்: 77, 53வது தெரு, இந்திரா காலணி, அசோக் நகர், சென்னை - 83. முதற்பதிப்பு - 2002.

4. சாமி, பி.எல்., - தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை -2. இரண்டாம் பதிப்பு 1976.

5. சிவசுப்பிரமணியன். ஆ. - மந்திரமும் சடங்குகளும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் 001. முதற்பதிப்பு 1988

6. சுந்தர மூர்த்தி இ. - Annals of Oriental Research, Vol.XXIV, part - II, பழந்தமிழ் இலக்கியத்தில் நிமித்தங்கள், 1973.

7. சுவாமி. சத்தியானந்தா - மலாயா சரித்திரம், உமா பதிப்பகம், கோலாலம்பூர். முதற்பதிப்பு 1949.

8. நக்கீரன்.அ (ப.ஆ.) - தமிழ்நாட்டு விளையாட்டுகள், தமிழ்மண் பதிப்பகம், சென்னை முதற்பதிப்பு 1954.

9. நடராஜன். வீ - சோழன் வென்ற கடாராம் - பூஜாங் பள்ளத்தாக்கு, Kuan Press Sdn Bhd, Selangor, Malaysia. மூன்றாம் பதிப்பு 2013.

10. நீலகண்ட சாஸ்திரி - சோழர்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், அம்பத்தூர், சென்னை - 098. முதற்பதிப்பு - 1989.

11. நெடுமாறன். முரசு (தொ.ஆ.)- மலேசியத் தமிழ் கவிதைக் களஞ்சியம், அருள்மதியம் பதிப்பகம், சிலாங்கூர், மலேசியா. முதற்பதிப்பு 1997.

12. புலியூர் கேசிகன் (உ.ஆ.) - கலிங்கத்துப்பரணி,
பாரி நிலையம்,
சென்னை.
பதின்மூன்றாம் பதிப்பு 2001.

13. புலியூர் தேசிகன் (உ. ஆ) - பட்டினப்பாலை,
பாரி நிலையம்,
சென்னை.
பனிரெண்டாம் பதிப்பு - 2002.

14. பெருமாள். ஆ. கா - உணவுப் பண்பாடு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்,சென்னை,-2
முதற் பதிப்பு 2012.

15. மறைமலைஅடிகள் - பட்டினப்பாலை,
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை.
பதிப்பு டிசம்பர் 1998.

16. முருகன். ப. - திருக்குறள் உரை,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)
லிமிடெட்,
அம்பத்தூர்,
சென்னை - 098.
முதற்பதிப்பு 2009.புறநானூறு,
கழக வெளியீடு, ப.64.

17. முனைவர் க. காந்தி - தமிழர் பழக்க வழக்கங்களும்
நம்பிக்கைகளும்,
உலகத் தமிழ் ஆராய்ச்சி
நிறுவனம்,
சென்னை 113.
முதற்பதிப்பு 1981.

18. மைக்கேல் ஸ்டென்சன் - புலம் பெயர்ந்த தமிழர்கள் -
மலேசியா ஒரு மார்க்கசிய ஆய்வு,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை.
முதற்பதிப்பு 2013.

19. வீரப்பன். ந - மலாய தமிழர்கள்,
மனோன்மணி புத்தக விலாஸ்,
54, ஜலான் துங்கு அப்துல்
ரஹ்மான்,
கோலாலம்பூர்,
முதற்பதிப்பு 1990

20. ஜானகிராமன் மாணிக்கம் - மலேசிய இந்தியர்களின்
இக்கட்டான நிலை,
மனித மேம்பாட்டு ஆய்வு மையம்,
சிலாங்கூர், மலேசியா.
இரண்டாம் பதிப்பு 2007.

ஆங்கில நூல்கள்

1. Janakey Raman Manickam - Forgotten History of the colonial era,
Raden Kreatif (M) Sdn. Bhd.
Kuala Lumpur.
First Edition, 2016.

நாளிதழ்

1. இந்தியா பற்றிய ஆய்வுச் சஞ்சிகை
2. எட்டாவது உலக தமிழ் மாநாட்டு மலர்
3. மலேசியா நண்பன்

பின்னிணைப்பு தகவலாளி விவரம்

வ.எண்	பெயர் மற்றும் வயது	இனம்	முகவரி
1.	அப்துல் ரஹ்மான் பின் ரஷீத், 71.	மலாயர்	28, ஜாலா கஸ்தூரி, கம்பௌன்துன் ரஸாக், சிரம்பான், கிரிசெம்பிலான்.
2.	ஸ்கந்தர்பின் ரஹீம், 67.	மலாயர்	9, ஜாலான் மஜிடி, தாமான் மஜிடி, ஜோகூர் பாரு, ஜோகூர்.
3.	இப்ராகிம் பின் சுலைமான், 70.	மலாயர்	29, ஜாலாக் ஹங்துவா, கம்போங் பாரு ரெங்கம், ரெங்கம், ஜோகூர்.
4.	அலியாஸ் பின் ரகிம், 65.	மலாயர்	61, ஜாலான் மஸ்ஜித், தாமான் சூரியா 2, ஜோகூர் பாரு, ஜோகூர்.
5.	அகமாட் பின் சாரிங், 57.	மலாயர்	27, ஜாலான் கஸ்தூரி, தாமான் சூத்ரா, குளுவாங், ஜோகூர்.
6.	சுலைமான் பின் நோங்கிக், 71.	மலாயர்	10, ஜாலான் குளம் ஆயர், தாமான் குளம் ஆயர், ஜோகூர் பாரு, ஜோகூர்.
7.	கரிம் பின் அப்துல், 46.	மலாயர்	35, ஜாலான் வீரா 10, தாமான் மஜிடி, ஜோகூர் பாரு, ஜோகூர்.

8.	அப்துல் ரஷீட் பின் சாலே, 55.	மலாயர்	12, ஜாலான் 3/10, தாமான் பெர்தாமா, குளுவாங், ஜோகூர்.
9.	யூசோப்பின் அகமாட், 50.	மலாயர்	29, ஜாலான் ஆயர்குனிங், தாமான் கம்போங், குளுவாங், ஜோகூர்.
10.	யூனுஸ் பின் அலி, 69.	மலாயர்	26, ஜாலான் உத்தமா 5, தாமான் கைப்பிங் உத்தமா, தைப்பிங், பேராக்.
11.	ரஹ்மான் பின் ரஜிவ், 65.	மலாயர்	40, ஜாலான் ஸ்ரீ பூச்சோங் 6, தாமான் ஸ்ரீ பூச்சோங், பூச்சோங், சிலாங்கூர்.
12.	ராஜா காசிம், 52.	மலாயர்	12, ஜாலான் பிரிமா பூச்சோங், தாமான் பிரிமா பூச்சோங், பூச்சோங், சிலாங்கூர்
13.	ஹசான் பின் இட்ரிஸ், 49.	மலாயர்	25, ஜாலான் யூனுள், கம்போங் பாரு, ரெங்கம், ஜோகூர்.
14.	கல்சோம் பிந்தி அகமட், 66.	மலாயர்	29, ஜாலான் வாமா, கம்போங் படாவி, சிப்பாங், சிலாங்கூர்.
15.	சித்தி கல்சோம், 47	மலாயர்	25, ஜாலான் தெப்பிசுங்கை, கோலகிள்ளான்.
16.	சுலோசனா முருகையா, 55. .	தமிழர்	18, ஜலான் 2/7, தாமான் உத்தாமா, பூச்சோங், சிலாங்கூர்

17.	கு. சின்னையா, 60.	தமிழர்	2, ஜலான் இண்டா 2/9, தாமான் இண்டா, பூச்சோங், சிலாங்கூர்.
18.	க. இராமன், 60.	தமிழர்	30, ஜாலான் 1/5, தாமான் பெர்டானா, பூச்சோங், சிலாங்கூர்.
19.	சுப்பம்மாள், 65.	தமிழர்	35, ஜாலான் மாஜு ஜெயா 5, தாமான் மாஜு ஜெயா, ஜோகூர் பாரு, ஜோகூர்.
20.	இராமசாமி, 58	தமிழர்	25, ஜாலான் தெப்ராவ், தாமான் தெப்ராவ், ஜோகூர் பாரு, ஜோகூர்.
21.	கிருஷ்ணமூர்த்தி, 57	தமிழர்	38, ஜாலான் சுங்கைதிராம், தாமான் சுங்கை திராம், உலுதிராம், ஜோகூர்.
22.	திருமதி. காமாட்சி 58	தமிழர்	46, ஜாலான் 2/10, தாமான் ஜோகூர், கேர்தாதிங்கி, ஜோகூர்.
23.	சரவணன் குருக்கள், 49. .	தமிழர்	5, ஜாலான் 5, தாமான் இண்டஸ்டிரி, பூச்சோங், சிலாங்கூர்.
24.	திருமதி. கண்ணகி, 55.	தமிழர்	8/ A, ஜாலான் கோத்தா, தாமான் கோத்தா ஜெயா, கோத்தா திங்கி, ஜோகூர்.

25.	டி. காளியப்பன், 62.	தமிழர்	18, ஜாலான் குளுவாங், தாமான் சூரியா, குளுவாங், ஜோகூர்.
26.	பி. முருகேசு, 65.	தமிழர்	18, ஜாலான் ரம்புத்தான், தாமான் ஜெயா, கிள்ளான், சிலாங்கூர்.
27.	இராஜம் முருகேசன், 47.	தமிழர்	35, ஜாலான் கெம்பீரா 6, தாமான் கெம்பீரா, கிள்ளான் சிலாங்கூர்.
28.	சிவலிங்கம் குருக்கள், 69.	தமிழர்	39, ஜாலான் 5/12, தாமான் தெப்பி சுங்கை, கிள்ளான் சிலாங்கூர்.
29.	செல்வவதி, 63. .	தமிழர்	40, ஜாலான் 8, தாமான் சுங்கை உலார், கோத்தாதிங்கி, ஜோகூர்
30.	பி. குணசேகரன், 58.	தமிழர்	27, ஜாலான் 2/17, தாமான் கோலீம், ரெங்கம், ஜோகூர்.
31.	வோங்பெங் சூன், 48.	சீனர்	ஜாலான் ஆசோங் 5, தாமான் ஜெயா, பூச்சோங், சிலாங்கூர்.
32.	லீ ஓங்குன், 59.	சீனர்	32, ஜாலான் பூச்சோங்ஜெயா, தாமான் பூச்சோங் ஜெயா, தாமான் பூச்சோங், பூச்சோங், சிலாங்கூர்.

33.	எட்டி சோங், 60. .	சீனர்	ஜாலான் ஸ்ரீ பூச்சோங் 5, தாமான் ஸ்ரீ பூச்சோங், பூச்சோங், சிலாங்கூர்.
34.	தான்கியா ஐக், 55.	சீனர்	47, ஜாலான் 2/12, தாமான் கோத்தா பெசார், கோத்தா திங்கி, ஜோகூர்.
35.	கிம் சூன் மா, 48.	சீனர்	12, ஜாலான் பெசார் 2, தாமான் கோத்தா பெசார், கோத்தா திங்கி, ஜோகூர்.
36.	லீ வா கூ, 70.	சீனர்	36, ஜாலான் சுங்கை 2, தாமான் சூரியா, ஜோகூர் பாரு, ஜோகூர்.
37.	பாங் ஜீ வா, 69.	சீனர்	4, ஜாலான் கோத்தா கிச்சில், கம்போங்பாரு, செகூடாய் ஜோகூர்.
38.	மைக்கல் ஓங், 71.	சீனர்	85, ஜாலான் யூனிவர்சிட்டி 5/10, தாமான் யூனிவர்சிட்டி, செகூடாய், ஜோகூர்.
39.	ஒய் கே லீ, 48.	சீனர்	16, ஜாலான் ஆ சோ, தாமான் பூசாட் ஜெயா, பூச்சோங்.
40.	லீ சின்மோய், 46.	சீனர்	16, ஜாலான் ஸ்ரீ பெண்டகா 3, தாமான் செகூடாய், செகூடாய், ஜோகூர்.

41.	கோ வூ சூன், 72.	சீனர்	16, ஜாலான் யூனிவர்சிட்டி, தாமான் யூனிவர்சிட்டி, செகூடாய், ஜோகூர்.
42.	சின் ஈ மோய், 67.	சீனர்	19, ஜாலான் 3ஃ2, தாமான் செகூடாய், செகூடாய், ஜோகூர்.
43.	லிம் கோ கொக், 61.	சீனர்	16, ஜாலான் 2ஃ12, தாமான் குளுவாங், குளுவாங், ஜோகூர்.
44.	கோக் வா செங், 48.	சீனர்	29, ஜாலான் சூரியா 10, தாமான் சூரியா, ஜோகூர் பாரு, ஜோகூர்.
45.	வான் லீ வா, 45.	சீனர்	39, ஜாலான் சமுத்திரா 5/8, தாமான் மஜிடி, ஜோகூர் பாரு, ஜோகூர்.

மலேசிய வரைபடம்

MALAYSIA
National capital
Regional capital
Town, village
Airport
International boundary
Regional boundary
Main road
Secondary road
Railroad
CAMBODIA
MYANMAR
THAILAND
VIET NAM
PHILIPPINES
Palawan Is
South China Sea
BRUNEI DARUSSALAM
Sabah
Sarawak
MALAYSIA
Borneo Is
Sumatra Is
INDONESIA
SINGAPORE
Phnom Penh
Ho Chi Minh City
Kuala Lumpur
Singapore
Bandar Seri Begawan
Kota Kinabalu
Mount Kinabalu 4,095 m
Gulf of Thailand
Strait of Malacca
INDIAN OCEAN
© Nations Online Project

மலாய் இனத்தவர்

சபா மாநில பெண்களின் பாரம்பரிய உடை

திருமணம்

பூர்வீகக் குடியினர்

மலாய் உணவு வகை

மலாய்க்காரர்களின் நடனம்

மலாயக்காரர்களின் நடனம்

மலாய்க்காரர்களின் திருமணம்

மலாய்க்காரர்களின் கோவில் வழிபாடு

பூஜாங் பள்ளத்தாக்கு அகழ்வாரய்ச்சியில் கிடைத்தவை



தமிழர்கள்

தமிழர்களின் திருமணம்

தமிழர்களின் தெய்வ வழிபாடு



சீனர்கள்

சீனர்களின் திருமணம்

சீனர்களின் நடனம்

சீனர்களின் நடனம்

சீனர்களின் கடல்நாக நடனம் (Chinese drgan dance)

சீனர்களின் பாரம்பரிய உடை

சீனர்களின் ஒளியூட்டுத் திருவிழா

சீனர்களின் உணவு வகைகள்

மலேசிய பல்லின மக்களின்

வாழ்வியல் நெறி

அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (பிஎச்.டி.,)

பட்டத்திற்காகப் பகுதி நிறைவாக அளிக்கப் பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

அ. குப்புசாமி

பதிவு எண்-1293/2015

நெறியாளர்

முனைவர். கரு. முருகன்,

தமிழ் உயராய்வு மையம்,

தமிழ்த்துறை,

ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி.

தேவகோட்டை.

அழகப்பா பல்கலைக்கழகம்

தேசிய நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத்தர

மதிப்பீட்டில் A+(CGPA:3.64) தகுதி பெற்றது.

காரைக்குடி - 630 003

டிசம்பர் - 2018

முடிவுரை

மலேசிய நாட்டில் பெரும்பான்மையினராக வாழும் மலாயர், சீனர் மற்றும் தமிழர்கள் புலம் பெயர்ந்தவர்களாவர். இவர்கள் புலம் பெயந்த காலம் ஓரினத்திற்கு ஓரினம் மாறுபடுகிறது. இவர்களின் மொழி,கலை, கலாச்சாரம், பண்பாட்டுக் கூறுகள் இப்பொருண்மையைக் கொண்டுள்ளது. இவர்கள் புலம் பெயர்ந்தவர்கள் ஆதலால் தங்கள் முன்னோர்கள் வாழ்ந்த நாட்டின் மொழி, கலை கலாச்சாரத்தை இயல்பாகவே கொண்டு புலம்பெயர்ந்த நாடுகளிலும் கடைப்பிடித்து வாழ்ந்து வருவது தவிர்க்க முடியாதது.

விழாக்காலங்களிலும் பண்டிகை நாள்களிலும் பல்லின மக்கள் வாழும் மலேசியாவில் அவரவர் பாரம்பரிய உடை அணிந்து கொண்டாடுவது மலேசியாவில் காணப்பெறும் காட்சியாகும். ஓர் இனத்தாரின் உணவை மற்ற இனத்தவர் உண்டு சுவைத்து அவ்வுணவை சமைக்கவும் கற்றுக் கொள்கின்றனர். பாரம்பரிய நடன நிகழ்வுகள் காணக் கண்களுக்கு விருந்தாக அமைகிறது. சீனர்களின் சிங்க நடனமும், கடல்நாக நடனமும் உள்நாட்டவரை மட்டுமின்றி சுற்றுலாப் பயணிகளையும் கவரும் தன்மையது. தமிழர்களின் பரத நாட்டியம், மலாயர்களின் பாரம்பரிய நடனங்களும் ஒருசேரக் காணக்கூடிய இடம் மலேசியா ஆகும்.

உலகின் பலபாகங்களுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் தங்களின் கலை கலாச்சாரத்தை மறந்து குடியேறிய நாட்டின் கலை, கலாச்சாரத்தையே பின்பற்றி வருவதைக் காணலாம். ஆனால் மலேசியாவில் புலம் பெயர்ந்த மக்களின் பரம்பரையினர் தங்கள் கலைஇ கலாச்சாரம்இ பண்பாட்டுக் கூறுகளை மறந்து விடாமல் கட்டிக் காத்து வருவது மலேசியாவில் மட்டுமே.

பல்லின மக்கள் பல சமயங்களைப் பின்பற்றுபவர்களாக இருக்கின்றனர். நாட்டில் ஒவ்வொருவரும் தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்றுவதற்கு அரசு வழிபாட்டுச் சுதந்திரம் அனுமதித்துள்ளது.

மக்கள் வெவ்வேறு மொழி கலை, கலாச்சாரத்தைப் பின்பற்றினாலும் மற்ற இனங்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து வாழ்ந்து வருவது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கின்றது.

பல்லாண்டு காலமாக மக்களிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு, மற்றவர்களின் சமயத்தையும் கலாச்சாரத்தையும் மதித்தல் முதலியன நீடித்து வருவதால் நாட்டில் அமைதி, சுபிட்சம் காணும்போது மக்களின் நல்லெண்ணம் வெளிப்படுகிறது.

மலேசியாவில் பெரும்பான்மையினர் இனமான மலாயர், சீனர் தமிழர்களின் மரபுகளும் நம்பிக்கைகளும் பலவாறாக ஒற்றுமையைக் காணலாம். குழந்தை பிறந்தால் தொட்டிலில் போடுதல், பெயர் சூட்டுதல், முடியிறக்குதல் ஆகியன மூவினங்களிலும் உண்டு. இறப்புச் சடங்கின்போது ஆன்மாவின் சாந்திக்காகப் பிரார்த்தனை செய்கின்றனர். சீனர்களும் தமிழர்களும் இறந்தவர்களுக்கு முன்னோர்களுக்குப் பிரார்த்தனை நடத்துகின்றனர். மூவினத்தவர்களும் பேய் உண்டு என்ற நம்பிக்கையில் வாழ்கிறார்கள். பல்லினங்கள் வாழும் மலேசியாவில் வேற்றுமையில் ஒற்றுமையைக் காண முடிகின்றது.